ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## பெரியவாச்சான்பிள்ளை

## ஸ்ரீஸூக்திமாலா மலர் 3

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை
அருளிச்செய்த

# திருப்பல்லாண்டு வ்யாக்யானம்

(ப்ரமாணத்திரட்டுடன் கூடியது)



பதிப்பாசிரியர்:

கீர்த்திமூர்த்தி K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி.

ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்.

2596

விலை: ரூ.40/-   தபாற்செலவு தனி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

2596
நாள்: 27.10.09

பெரியவாச்சான்பிள்ளை

ஸ்ரீஸூக்திமாலா [illegible]

பரமகாருணிகரான
பெரியவாச்சான்பிள்ளை
அருளிச்செய்த

# திருப்பல்லாண்டு வ்யாக்யானம்

(ப்ரமாணத்திரட்டுடன் கூடியது)

(அப்பு அரும்பதத்துடனும், உரையுடனும் கூடியது)

பதிப்பாசிரியர்:
கீர்த்திமூர்த்தி K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி.
ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்.

இரண்டாம் பதிப்பு

ப்ரமாதி வருடம் ஆடி மாதம், ரோஹிணி (7-8-99)

பதிப்பித்தவர்கள்:

1. ஸ்ரீ.ரா.ஸ்ரீ.கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளிவருகிறது.

டிரஸ்டிகள்:–
S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A.B.L. அட்வகேட்.
S. ராமய்யங்கார், B.Sc., B.L., அட்வகேட்.

2. ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ
214, கீழ உத்தர வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி -6.

விலை: ரூ.40/– தபால்செலவு தனி

முதற்பதிப்பு: 1949
இரண்டாம் பதிப்பு: 1999

அச்சிட்டோர்:
**ஸ்ரீரங்கநாச்சியார் அச்சகம்,**
214, கீழ உத்தர வீதி,
ஸ்ரீரங்கம்,
திருச்சி - 620 006.

இரண்டாம் பதிப்பு: **ப்ரமாதி** 1999

உபயோகப்படுத்தப்பட்ட : Cream wove 13.7kg
காகிதம் Seshasayee Paper Mills.

விலை: ரூ.40/-.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பொதுத் தனியன்கள்.

---

## மணவாள மாமுனிகள் தனியன்.

அழகிய மணவாளன் அருளிச்செய்தது.

ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் ।
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥

## குருபரம்பரையின் தனியன்.

கூரத்தாழ்வான் அருளிச்செய்தது.

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் ।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

## எம்பெருமானார் தனியன்.

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே ।
அஸ்மத் குரோர் பகவதோ஽ஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

## நம்மாழ்வார் தனியன்.

ஆளவந்தார் அருளிச்செய்தது.

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் ।
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ॥

## ஆழ்வார்கள் தனியன்.

பராஶரபட்டர் அருளிச்செய்தது.

பூதம் †ஸரஶ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் ।
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம் ப்ரணதோ஽ஸ்மி நித்யம் ॥

---

† ஸரஸ்ய என்றும் பாடம்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# * திருப்பல்லாண்டின் தனியன்கள்.

---

## நாதமுனிகள் அருளிச்செய்தது.

1. குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாந் அஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கம் ஆதாதுகாம: ।
ஶ்வஶுரம் அமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

பிள்ளைலோகார்ய ஜீயர் அருளிச்செய்த வ்யாக்யானம்.

அவதாரிகை:— இதுதான் திருப்பல்லாண்டுத் தனியனாயிருக்கும். அந்தத் திருப்பல்லாண்டு பாடுகைக்கடியான பெரியாழ்வார் வைபவத்தைப் பெருக்கப் பேசி, அவரை ப்ரணிபாத நமஸ்காரம் பண்ணும்படி சொல்லுகிறது.

வ்யாக்யானம்:— (குருமுகம் அநதீத்ய) ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனான ஸர்வேஶ்வரனும், "ஸாந்தீபநேஸ் ஸக்ருத் ப்ரோக்தாம் ப்ரம்ஹவித்யாம் ஸவிஸ்தராம்" என்னும்படி, ஸாந்தீபநியிடத்திலேயாய்த்து ஸகல வேதங்களையும் அதிகரித்தது; இவர், அங்ஙன் ஒரு குருகுலவாஸம் பண்ணி தந்முகேந ‡ "நலங்களாய நற்கலைகள்" நாலையும் அதிகரியாதே, புண்டரீகரைப்போலே § துளவத்தொண்டிலே மண்டி, ஸ்ரீமாலாகாரரைப்போலே † சூட்டுநன்மாலைகளைத் தொடுத்து, வடபெருங்கோயிலுடையானுக்குச் சூட்டி அடிமைசெய்து போந்தார்; ஏவம்வித தாஸ்ய ரஸஜ்ஞரான இவர், (நரபதிபரிக்லுப்தம் ஶுல்கம் ஆதாதுகாம:) என்று, ஸ்ரீவல்லபதேவனென்கிற ராஜாவானவன் பரதத்வ நிர்ணய பூர்வகமாகப் புருஷார்த்தலாபத்தை லபிக்கைக்காக அநேகமான அர்த்தத்தை வித்யாஶுல்கமாகக் கல்பித்துக் கல்தோரணத்திலே கட்டிவைக்க; இப்படி நிர்ம்மமான அந்த தநத்தை வடபெருங்கோயிலுடையானுடைய ஆஜ்ஞையாலே ஆஹரித்துக்கொண்டு

---

* இவையே பெரியாழ்வார் திருமொழிக்கும் தனியன்களாகும்.

‡ திரு. சந். விரு. (90). § திருமாலை. (45). † திரு. விரு. (21).

வரவேணுமென்கிற அபேக்ஷையுடையராய், வித்வத்கோஷ்டியிலே சென்று; (அஶேஷாந் வேதாந் ப்ராஹ) "வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்" என்றத்தைச் சொல்லுகிறது. இவர்க்கு அப்போது * வேதப்பிரானை § பீதகவாடைப்பிரானார் தாமே பிரமகுருவாய், § போதில்கமலவன்னெஞ்சம் புகுந்து † நாவினுளானாய், † நாவினுள் நின்று மலரும் ஞானக்கலைகளை இவர்முகேந பேசுவித்தானிறே. a எயிற்றிடை மண்கொண்டவெந்தையான b ஞானப்பிரானைத்து இவரை § ஞானக்கலைகளை ஓதுவித்தது. ஆகையாலே நாட்டார்க்கு ஓதினவிடமொழிந்து ஓதாதவிடம் தெரியாதிருக்கும் இவர்க்கு c மயர்வற மதிநலம் அருளுகையாலே அசேஷவேதங்களும் அருளிச்செய்யும்படி விசதமாய்த்து. அத்தாலே d "வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை விட்டுசித்தன் விரித்தனன்" என்னும்படி பரதத்வ ஸ்தாபநம் பண்ணி அந்த வேததாத்பர்யமான திருப்பல்லாண்டை, e அங்கானைமேல் மங்கலவீதி வருகையிலே மங்களாசாஸநமாக அருளிச்செய்தார். "வேதாந் அஶேஷாந்" என்கிறதுக்குள்ளே இதுவும் அந்தர்பூதம். f "வேதைஶ்ச ஸர்வைர் அஹமேவ வேத்ய:" என்னக்கடவதிறே.

(ஸ்வஸூரம்) அநந்தரம், வித்வான்களை வென்று கிழியறுத்து அந்த தநத்தை ஸ்வாமிஸந்நிதியிலே ஸமர்ப்பித்து, மீளவும் தம் துறையான துளவத்தொண்டிலே மூண்டு நடத்திக்கொண்டுபோர; அக்காலத்திலே ஆண்டாள் இவர்க்குத் திருமகளாகத் திருத்துழாயடியிலே அவதரிக்க; இவரும் g திருமகள்போல வளர்த்துப்போர; அஞ்சுபிராயத்திலே, திருவாய்பாடியில் பஞ்சலக்ஷம் குடியில் பெண்களை அநுகரித்துத் திருப்பாவை பாடி, அதுக்கு மேலே, அவர் h கொடுத்த தாழாய்மலரை, i "வியன்துழாய்க் கற்பென்று சூடுங் கருங்குழல்மேல்" என்கிறபடியே சூடிக்கொடுத்தவளாய், பின்பு ப்ராப்தயௌவனையாய், j மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழாத

* பெரியா-திரு. (5-2-1). § பெரியா-திரு. (5-2-8). † திரு-வாய். (1-9-7 & 8). a பெரியா-திரு. (5-2-3). b திரு-விரு. (99) c திரு-வாய். (1-1-1). d பெரியா-திரு. (4-3-11). e நாச்-திரு. (6-10) f கீதை. (15-15). g பெரியா-திரு. (3-8-4). h திரு-பல்லா. (9) i மூன்றாம் திருவந். (69). j நாச்-திரு. (1-5).

தன்மையளாய், † "தீ முகத்து நாகணை மேல் சேரும் திருவரங்கர்" என்றும் ‡ "பணவாளவரவணைப் பற்பலகாலமும் பள்ளிகொள் மணவாளர்" என்றும் சொல்லப்படுகிற அழகிய மணவாளப் பெருமாளை ப்ரார்த்தித்துத் திருமணம் புணருகையாலே அவர் மணவாளப்பிள்ளை ஆனார். § மறை நான்கு முன்னோதிய பட்டனுக்கிறே * பட்டர்பிரான் கோதையைக் கொடுத்தது. ஆகையாலே, ஔபசாரிகமாக அன்றிக்கே, யதாவாக ரங்கநாதனுக்கு பட்டநாதர் மாமனாரானார். அத்தாலே (அமரவந்த்யம்) என்கிறது. அதாவது, a வடிவுடை வானோர் தலைவனை தன்னை, அவர்கள் அடிவணங்கி ஏத்துமாபோலே, இவர் தம்மையும் அமரர் வந்திக்கும்படியான வரிசை கொடுத்தபடி. b தம்மையே யொக்க அருள் செய்வரிறே. பட்டநாதரான மாத்ரமன்றிக்கே, தேவர்களாலும் ஸ்துத்யராயிருக்குமவர் என்கிறது. c "விரும்புவர் அமரர் மொய்த்து" என்னக்கடவதிறே. அஸ்த்தானே பயசங்கிகளானவர்களையும் இவர் மங்களாசாஸநம் பண்ணுமவராகையாலே, அவர்களும் இவர்க்கு ஸ்துத்யபிவாதநங்களைப் பண்ணுவர்கள். d "பரஸ்பர நீசபாவை:" என்னக்கடவதிறே.

இனி, ரங்கநாதனோடே ஸம்பந்திக்கைக்கீடான பட்டநாத குலத்தைச் சொல்லுகிறது (த்விஜ குல திலகம்) என்று. e வேயர் தங்கள் குலத்துதித்த விட்டுசித்தராகையாலே, f "அந்தணனை யான் கண்டது அணிநீர்த்தென்னரங்கத்தே" என்னும்படி கண்டு கொடுத்தார். த்விஜகுலதிலகராகையாவது: ப்ராஹ்மண குலத்துக்கெல்லாம் முக்யராய், ப்ரஸாவாஹ்யராய், ஶ்ரேஷ்ட்டராய் இருக்கை என்றபடி. (தம் விஷ்ணுசித்தம்) அப்படி ஶ்ரேஷ்ட்டராய், விஷ்ணுவை எப்போதும் சித்தத்திலே உடையரானவரை என்கிறது. g "வில்லாண்டான் தன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல்" என்று அடியிலே தமக்கு நிரூபகமாக ஆழ்வார் தாமே

---

† நாச்-திரு. (11-1). ‡ நாச்-திரு. (10-6). § பெரியா-திருமொழி (7-3-6). * திருப்பாவை (30). a திரு-வாய். (7-2-10). b பெரிய திருமொழி (11-3-5). c திரு-வாய். (3-4-11). d வைகு-ஸ்த. (75). e பெரி-திரு. (5-4-11). f பெரியதிருமொழி (5-6-7). g திரு-பல்லா. (12). h பெரியா-திரு. (1-1-10).

அருளிச்செய்தாரிறே. "விஷ்ணுசித்தம்" என்கையாலே, b "மின்னு நூல் விட்டுசித்தன் விரித்த" என்று பெரியாழ்வார் திருமொழி அடியிலும் * "விட்டுசித்தன் மனத்தே கோயில்கொண்ட கோவலனை" என்று முடிவிலும் அருளிச்செய்கையால், இந்தத் திருநாமத்தாலே அந்த ப்ரபந்த ப்ரவக்தா என்னுமதுவும் ஸூசிதம். அதுக்கும் தனியன் இதுவேயிறே. † "அனந்தன்பாலும் கருடன்பாலும் ஐதுநொய்தாக வைத்து என் மனந்தனுள்ளே வந்து வைகி வாழச் செய்தாய் எம்பிரான்" என்னும்படி இவர் திருவுள்ளத்திலே அத்யபிநிவிஷ்டனாய் இருக்குமாய்த்து. (விஷ்ணுசித்தம்) ‡ விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யராய் இருக்கிறபடி. § "நின் கோயிலில் வாழும் வைட்டணவன்" என்றாரிறே. அவனும் வைஷ்ணவ ஸம்பந்தத்தை அபேக்ஷித்துக் கைப்பற்றினான். (தம் விஷ்ணுசித்தம் நமாமி) அந்த விஷ்ணுசித்தரை || "கிழியறுத்தான் பாதங்கள் யாமுடைய பற்று" என்னும்படி ஸேவிக்கிறேன் என்கிறது. நமஸ்காரமும் ஸேவையும் பர்யாயம். a "ஓம் நமோ விஷ்ணவே" என்னுமது விஷ்ணுசித்தர் விஷயத்திலேயாய்த்து; விசேஷஜ்ஞர்க்கு பகவத் விஷயத்திலே அரைவயிறாய், இங்கேயிறே எல்லாம் பூர்ணமாவது. b நம்பி விட்டுசித்தரிறே. இத்தால், ப்ரதம ப்ரபந்தாநுஸந்தாநதசையில் தத்வக்தாவான ஆழ்வாரை "தம் பூர்வம் அபிவாதயேத்" என்று ப்ரதமம் திருவடி தொழும்படியைச் சொல்லிற்றாய்த்து. 1.

பாண்டிய பட்டர் அருளிச்செய்தவை.

2. மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூர் என்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

வ்யா:— (மின்னார் தடமதிள் சூழ்) தேஜ:ப்ரசுரமான பெரிய [illegible]மதிளாலே சூழப்பட்ட வில்லிபுத்தூர். இத்தால் c செம்பொன் [illegible] மதிளாயிருக்கை. ப்ரதிகூலர்க்குக் கிட்டவொண்ணாத [illegible], அநுகூலர்க்குக் கண்டு வாழும்படியாய் இருக்கை. கல்மதிள்

* பெரியாழ்-திரு. (5-4-11). † பெரியா-திரு. (5-4-8). ‡ விஷ்வக்ஸேந ஸம்ஹிதை. § பெரியா-திரு. (5-1-3). || பெரி-திரு-தனி. (3). a விஷ்ணு ஷடக்ஷரி. b நாச்-திரு. (13-10). c திரு-வாய். (9-10-6).

போலே அத்தலைக்கு அரணாய், மங்களாசாஸநபரரான பெரியாழ்வார் இருக்குமூரில் மதிளிறே; ஏவம்விதமான மதிளாலே சூழப்பட்ட. (வில்லிபுத்தூரென்று ஒருகால் சொன்னார் கழற்கமலம் சூடினோம்) ஒருகாலாகிலும் ஸ்ரீவில்லிபுத்தூரை உச்சரித்த ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸ்ரீபாதகமலங்களை * பைங்கமலத் தண்டெரியலாகத் தலையிலே சூடினோம். † "கோவிந்தன் தன் அடியார்களாகி எண்டிசைக்கும் விளக்காகி நிற்பார் இணையடியென் தலைமேலவே" என்றிறே ஆழ்வாரும் அருளிச்செய்தது. ஸ்ரீவில்லிபுத்தூர்தான், வடபெருங்கோயிலுடையானுக்கும் ஆழ்வார்க்கும் ஆண்டாளுக்கும் நிரூபகமான தேசமாய்த்து. ‡ "வில்லிபுத்தூருறைவான்" § "வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான்" || "அன்னவயல் புதுவையாண்டாள்" a "கோதை பிறந்தவூர்—வில்லிபுத்தூர்" என்னக்கடவதிறே. ப்ரணவம்போலே மூவரும் கூடலாயிருக்கை. இப்படி உத்தேஶ்யமான ஊரை ஒருகால் அநுஸந்திப்பார் எப்போதும் உத்தேஶ்யராகையாலே, அவர்கள் ஸ்ரீபாதங்கள் ஶிரோபூஷணமாக தார்யமென்கிறது: b "அரசமர்ந்தான் அடிசூடுமரசு" என்னுமாபோலே.

பின்னை விரோதிகள் செய்ததென்? என்னில்; (முன்னாள் கிழியறுத்தானென்றுரைத்தோம் கீழ்மையினில் சேரும் வழியறுத்தோம்) முன்னாள் கிழியறுக்கையாவது: முற்காலத்திலே பாண்டியன் வித்யாசுல்கமாகக் கட்டின த்ரவ்யக்கிழியை, அங்கே சென்று, வேதாந்தார்த்த முகேந "விஷ்ணுவே பரதத்த்வம்" என்று விஷ்ணுசித்தரான தாம் வித்வஜ்ஜநங்களை வென்று த்ரவ்யக்கிழியை அறுத்த ஆழ்வாருடைய இந்த அத்யத்புதகர்மத்தை அநுஸந்தித்தோம்; அத்தாலே கீழ்மையினில் சேரும் வழியறுத்தோம். c "ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத: । த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந ॥" என்று க்ருஷ்ணவிஷயத்தில் ஜந்ம கர்மங்கள் ஜந்மஸம்ஸார பந்தத்தை அறுக்குமாப்போலே ஆய்த்து விஷ்ணுசித்தர் ஜந்ம கர்மங்களும். இங்கும், ஸ்ரீவில்லிபுத்தூர் ஜந்மமும், கிழியறுக்கை கர்மமுமாயிருக்கும். கீழ்மையினில் சேரும்

* திருப்பாவை (30). † பெரியாழ்-திரு. (2-9-11). ‡ நாச்-திரு. (5-5). § பெரியாழ்-திரு. (2-2-11). || திரு-பா-தனி. a ஆண்டாள் வாழித் திருநாமம். b பெரு-திரு. (10-7). c கீதை (4-9).

வழியறுக்கையாவது: நிஷித்தக்ருத்யத்தாலே ப்ராபிக்கும் ப்ரதிபந்தகமான மார்க்கத்தைச் சேதித்தோம். * "புறநெறிகளை கட்டு" அவைதிக மார்க்கத்தை அடைகை பாபபலமிறே. † "மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்று, இவர்தாம் ஸந்மார்க்கவர்த்திகளிறே. அன்றிக்கே, "கீழ்மையினில் சேரும் வழி" என்று, அத:பதநத்திலே ப்ராப்தமான மார்க்கமென்று; அர்ச்சிராதி மார்க்கத்துக்குக் கீழாய், புநராவ்ருத்தி லக்ஷணஹேதுவான தூமாதி மார்க்கத்ரயத்தையும் நிரோதித்தோம். (நெஞ்சமே வந்து) ‡ நெறிநின்ற நெஞ்சாய், நீ அநுகூலிக்கையாலே இந்த லாபத்தை லபித்தோம். (வந்து) இவ்வளவும் வந்து; ஆழ்வாரளவும் வந்து. வில்லிபுத்தூர் என்றொருகால் சொன்னோர் கழற்கமலம் சூடினோம்; கீழ்மையினில் சேரும் வழியறுத்தோம்; இதுவன்றோ நீ அநுகூலித்ததத்தால் பெற்ற பேறு; நீ என் வழி வருகையாலே இவையெல்லாம் பெற்றோம். இஷ்டப்ராப்தியோபாதி அநிஷ்டநிவாரணமும் பலமிறே. (நெஞ்சமே வந்து) § "நெஞ்சமே! நல்லைநல்லை உன்னை பெற்றால் என்செய்யோம்? இனி என்ன குறைவினம்?" என்றாப்போலே பெற்ற பேற்றைப்பேசி நெஞ்சோடே ஹர்ஷிக்கும் படியைச் சொல்லுகிறது. "வில்லிபுத்தூரென்று ஒருகால் சொன்னோர்" என்றது || "வண்டு இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்" என்றும், ¶ "மென்னடை அன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூர்" என்றும் பகவத்விஷயத்திலே தமப்பனாரும் மகளாரும் ஒருகால் சொன்னாப்போலே, பாகவத விஷயமாக ஒருகால் சொன்னோர் என்றபடி. ஸப்பந்தாநுஸந்தாநம் ஸக்ருத் என்றபடி. 2.

3. பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்க x மெடுத்தூத—வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

அவ:— (பாண்டியன் கொண்டாட) இதில், ப்ரபந்த வக்தாவான பெரியாழ்வார் திருவடிகளில் உபாய ஸ்வீகாரத்தைச் சொல்லுகிறது.

* திரு-வாய். (1-3-5). † நாச்-திரு. (11-10). ‡ முதல் திருவ. (85). § திருவாய். (1-10-4). || பெரியாழ்-திரு. (2-2-8). ¶ நாச்-திரு. (5-5).
x எடுத்தோத என்றும், அடுத்தூத என்றும் பாடாந்தரம்.

வ்யா:— (பாண்டியன் கொண்டாட) * "தென்னன் கொண்டாடும்" என்னுமாப்போலே, 'நமக்கு பரதத்த்வ நிர்ணயம் பண்ணித் தரும்படி பட்டர்பிரான் வந்தான்' என்று பாண்டியனுன ஸ்ரீவல்லப தேவன் சொல்லிக்கொண்டாட. அத்தசையிலே (ஈண்டிய சங்கம் எடுத்தோத) திரண்டிருக்கிற வித்வத்ஸங்கமானது, ஓரோப்ரதேசங்களிலே ஓதிக்கிடக்கிற ப்ரஹ்மஸாபர வாக்யங்களை எடுத்து ப்ரம்ஹ ருத்ராதிகளைப் போரப்பொலியச் சொல்லி உபந்யஸிக்கவென்னுதல்; (ஈண்டிய சங்கம் மடுத்தூத) என்று, ஜயசங்கங்கள் பலவற்றையும் வாயிலே மடுத்து ஊத என்னுதல். † "பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலி" என்னக்கடவதிறே. (எடுத்தூத) என்றபோது, கிட்டி ஊத என்றபடி.

அதிக்ஷேபித்த வித்வான்கள் வாயடைக்கும்படி (வேண்டிய வேதங்களோதி) a "ஸர்வே வேதா யத்பதம் ஆமநந்தி", b "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" என்கிறபடியே வேதங்கள் எல்லாவற்றிலும் ஆராதந ப்ரகாரத்தையும் ஆராத்ய வஸ்துவையும் சொல்லுகிறதென்று அறுதியிட்டு, பகவத்பரத்வத்தை ஸாதித்து, இனித் தாழ்கைக்கு ஹேதுவென்? என்று திருவடிகளிலே தாழ்ந்த கிழியை, த்வரித்து அருத்தவருடைய; த்ரவ்யக்ரந்தியை அறுத்தவருடைய. (பாதங்கள்) கிழியறுத்த பட்டர்பிரான் பாதங்கள். (யாமுடைய பற்று) 'பட்டர்பிரானடியேன்' என்னும்படி அவர்க்கு சேஷபூதராயிருக்கிற நம்முடைய ரக்ஷை. § "தகையான் சரணம் தமர்கட்கோர் பற்று" என்கிற பொறுவானவனுடைய திருவடிகளன்று, || அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் தாள். (யாமுடைய பற்று) நம்முடைய அரண், புகல், உபாயம், சரண்யம் என்றபடி. (யாமுடைய பற்று) பற்றற்ற நம்முடைய பற்று ‡ "பற்றிலார் பற்ற நின்றான்" என்னக்கடவதிறே.

தனியன்கள் வ்யாக்யானம் முற்றிற்று.

பிள்ளைலோகார்ய ஜீயர் திருவடிகளே சரணம்.

—O—

* நாச்-திரு. (4-2-7). † நாச்-திரு. (9-9). a கடவ. (2-15). b கீதை (15-15). § திருவாய். (10-4-10). || இராமானுச நூற்றந்தாதி (15). ‡ திருவாய். (7-2-7).

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த

# திருப்பல்லாண்டு வ்யாக்யானம்.

---

श्रीमत्कृष्णसमाह्वाय नमो यामुनसूनवे।
यत्कटाक्षैकलक्ष्याणां सुलभः श्रीधरस्सदा॥

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலபஶ் ஸ்ரீதரஸ்ஸதா॥

## அவதாரிகை.

1. "पतिं विश्वस्यात्मेश्वरं" (பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்) என்றும், 2. "तमीश्वराणां परमं महेश्वरं" (தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்) என்றும், ஸர்வஸ்வாமியாகவும், ஸர்வநியந்தாவாகவும், ஸர்வேஶ்வரன் ஸ்வரூபத்தை நிர்ணயித்து, சேதநஸ்வரூபத்தை 3. "यस्यास्मि" (யஸ்யாஸ்மி) என்றும், 4. "परवानस्मि" (பரவாநஸ்மி) என்றும், 5. "दासोऽहं वासुदेवस्य" (தாஸோஹம் வாஸுதேவஸ்ய) என்றும், 6. "दासभूताः स्वतस्सर्वे" (தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே) என்றும் நிரூபித்து, இந்த ஸ்வரூபாநுரூபமான

---

அரு:— பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை, ஸ்வாசார்ய நியமநத்தாலே திருவாய்மொழிக்கு இருபத்துநாலாயிரமாக ஒரு வ்யாக்யாநம் செய்தருளி, பின்புள்ளவையான இருபத்துமூன்று திவ்ய ப்ரபந்தங்களுக்கும் * தெரிய வ்யாக்கியைகள் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, † வேதத்துக்கு ஓமென்னுமதுபோல் உள்ளதுக்கெல்லாம் சுருக்கான திருப்பலலாண்டுக்கு வ்யாக்யாநம் செய்தருளக்கோலி, தத்ருசவைலக்ஷண்ய பூர்வகமாக இப்ப்ரபந்த வைபவத்தைப் பலபடிகளாலும் உபபாதித்துக்கொண்டு, ப்ரதிபாத்ய வைலக்ஷண்யத்தையும் சுருக்க அருளிச்செய்கிறார், "பதிம்விஶ்வஸ்ய" இத்யாதி, "பேலிற் பொருள் பல ஶ்ருதி" என்னுமளவும்.

---

* உபதேச ரத்ன. (46). † உபதேச ரத்ன. (19).

ஜ்ஞாநமும் ஜ்ஞாநாநுரூபமான வ்ருத்தமும் ப்ராப்தமாயிருக்க, அய:பிண்டத்துக்கு அக்நி ஸம்ஸர்கத்தால் வந்த தாதாத்ம்யம்போலே, சேதநர் அசித்ப்ரத்யாஸத்தியாலே, "தேவோऽஹம் மநுஷ்யோऽஹம்" என்று அஹங்கரித்து, புத்ரமித்ராதிகள் பக்கலிலே மமதாபுத்தியைப் பண்ணி, இப்படி ப்ரவாஹரூபேண நித்யமான அஹங்கார மமகாரங்களாலே ஸர்வேஶ்வரகதமான ஸ்வாமித்வ ஸ்வதந்த்ரத்வங்களைத் தங்கள் பக்கலிலே அத்யவஸித்து, ஸ்வத:ப்ராப்தமான பாரதந்த்ர்யத்தில் விமுகராய் அதவே சப்தாதி விஷய ப்ரவணராய், அத்தால் வந்த ராகத்வேஷாதிகளாலே அபிபூதராய்ப்படுகிற து:கபரம்பரைகளை அநுஸந்தித்து, நிருபாதிக சேஷியான ஸர்வேஶ்வரன் "ஶாஸநாச் சாஸ்த்ரம்" என்கிறபடியே தத்த்வ ஹிதங்களை அறிந்து நல்வழி போகைக்குடலாக சாஸ்த்ரத்தை ப்ரகாசிப்பித்தருளினான்; 7. "हर्तुं तमस्सदसती च विवेक्तुमीशो मानं प्रदीपमिव कारुणिको ददाति।" (ஹர்தும் தமஸ் ஸதஸதீ ச விவேக்துமீஶோ மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி) என்னக்கடவதிறே.

இந்த சாஸ்த்ர ப்ரதாநமும் வாஸநாதூஷிதமாகையாலே அகிஞ்சித்கரமாக, இலைப்புறத்திற்செல்லா தேசத்திலே எடுத்து

---

அதில், சேதநோஜ்ஜீவநார்த்தமாகப் பெரியாழ்வாரை ஸர்வேஶ்வரன் அவதரிப்பித்தருளினானென்றருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அதிஷ்டிகையிடுகிறார் (பதிம்விஶ்வஸ்யேத்யாதி). எடுத்த ஶ்ருதிக் கர்த்தம்-(ஸர்வஸ்வாமியாகவும் ஸர்வநியந்தாவாகவும்) என்றது. (ஸ்வரூபாநுரூபமான ஜ்ஞாநமாவது)-ஶேஷபூதனுக்கு ஶேஷிபக்கல் கைங்கர்யமே கர்த்தவ்யமென்கிற ஜ்ஞாநமென்கை. (வ்ருத்தமும்) என்ற வநந்தரம் "தங்களுக்குண்டாம்படி அர்த்திக்க" என்று ஶேஷம். (தாதாத்ம்யமாவது)-அபேதபுத்தி. (சேதநர்) என்றது-கீழும் மேலும் அந்வயிக்கிறது. (அஹங்கார மமகாரங்களாலே) என்றது-(அஹங்காரமமகாரஹேதுவான அசித்ப்ரத்யாஸத்தியாலே என்றபடி. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம் (ஹர்தும் இத்யாதி). (ஸதஸதீ)-நல்லதும் தீயதும்.

"ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு யா புத்திர் பாவிதா ந்ருணாம் । தாமேவ பஜதே ஜந்து: உபதேஶோ நிரர்த்தக:" என்கிற வசநத்தையுட்கொண்டு அருளிச்செய்கிறார் (இந்த ஶாஸ்த்ரப்ரதாநமும் இத்யாதி) (அகிஞ்சித்-

விடும் ராஜாக்களைப்போலே ராமக்ருஷ்ணாதிரூபேண வந்தவதரித்து, 8. "पितुर्वचन निर्देशात् भरद्वाजस्य शासनात् ।" (பிதுர் வசந நிர்தேஶாத் பரத்வாஜஸ்ய ஶாஸநாத்) என்று, பித்ருவசந பரிபாலநாதிகளை ஆசரித்தருளியும், இளையபெருமாளை இடுவித்து, "வகுத்த விஷயத்தில் சேஷவ்ருத்தியே இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபம்" என்னுமிடத்தை பிரகாசிப்பித்தருளியும், 9. "राज्यञ्चाहञ्च रामस्य" (ராஜ்யஞ்சா஽ஹஞ்ச ராமஸ்ய) என்று கொண்டு இந்த வ்ருத்திக்கடியான பாரதந்த்ர்யத்தை ஸ்ரீபரதாழ்வானையிட்டு ப்ரகாசிப்பித்தருளியும், இப்பாரதந்த்ர்ய காஷ்ட்டையை, 10. "गच्छता मातुलकुलं भरतेन — नीतः" (கச்சதா மாதுலகுலம் பரதேந — நீத:) என்று கொண்டு ஸ்ரீசத்ருக்நாழ்வானையிட்டு ப்ரகாசிப்பித்தருளியும், க்ருஷ்ணனாய் வந்தவதரித்து தூத்ய ஸாரத்யங்களை ஆசரித்தருளியும், 11. "यद्यदाचरति श्रेष्ठः" (யத்யதாசரதி ஸ்ரேஷ்ட்ட:) என்று, "ஸ்ரேஷ்ட்ட ஸமாசாரம் கர்த்தவ்யம்" என்று உபதேசித்தருளியும், இப்படி பஹுப்ரகாரத்தாலே ஆத்மாக்களுடைய பாரதந்த்ர்யத்தை ப்ரகாசிப்பித்தருளின இடத்திலும், பெரியவன் தாழநின்று ஆசரித்த இம்மஹாகுணத்திலே 12. "अवजानन्ति मां मूढाः" (அவஜாநந்தி மாம் மூடா:) என்கிறபடியே அநீஸ்வரத்வமாகிற தோஷத்தை ஆவிஷ்கரித்துக் காற்கடைகொள்ளுகையாலே அவையும் கார்யகரமாய்த்தில்லை. "இனி, நாம் பார்வை வைத்து ம்ருகம் பிடிப்பாரைப்போலே ஸஜாதீய முகத்தாலே

---

(...) என்றது - அநேக விஷயங்களில் அகார்யகரமென்றபடி. (...விடுகையாவது)-ஸேநையைத் திரட்டிக்கொண்டு போகை. (...)மாள் ஸாமாந்யதர்மநிஷ்ட்டரென்று தோற்றுகைக்காக (வகுத்த விஷயத்தில்) என்றது. (என்று கொண்டு) என்றது - என்று சொல்லப் (...)கொண்டிருக்கிறவென்றபடி. இளையபெருமாளை வ்யாவர்த்திக்கைக்காக (இந்த வ்ருத்திக்கடியான பாரதந்த்ர்யம்) என்றது. (இந்த வ்ருத்தி) - அசித்தைப்போலேயிருக்கை. ஸ்ரீபரதாழ்வானிலும் ஆதிக்(...)ற (இப்பாரதந்த்ர்ய காஷ்ட்டை) என்றது. (அவஜாநந்தி) (...) குர்வந்தி. இத்தைப்பற்ற (காற்கடை கொள்ளுகையாலே) என்றது. "மூடா:" என்கிறத்தைப்பற்ற (கார்யகரமாய்த்தில்லை) (...). (பார்வை) என்கிறது - ம்ருகம் பிடிக்க ஸாதநமாக வைத்த (...) "பார்வை வைத்து ம்ருகம் பிடிப்பாரைப்போலே" என்கிற

சேதநரை வசீகரிக்கவேணும்” என்று பார்த்தருளி, பெரியாழ்வாரை அவதரிப்பித்தருளினன்.

இவ்வாழ்வார், ஸஹஜதாஸ்யத்தை உடையவராகையாலே “பகவத்விஷயத்திலே கிஞ்சித்கரித்து காலக்ஷேபம் பண்ணவேணும்” என்று பார்த்தருளி, அது செய்யுமிடத்தில் “அவனுகந்த அடிமையே கர்த்தவ்யம்” என்று அநுஸந்தித்து, அவதாரங்களை ஆராய்ந்தவிடத்தில், கம்ஸனுக்குப் பணி செய்து போந்த மாலாகாரர் க்ருஹத்திலே எழுந்தருளிப் பூவை இரந்து, அவன் தான் 18.
“प्रसादपरमौ नाथौ मम गेहमुपागतौ। धन्योऽहमर्चयिष्यामीत्याह माल्योपजीवनः॥” (ப்ரஸாதபரமௌ நாதௌ மம கேஹமுபாகதௌ। தந்யோऽஹம் அர்ச்சயிஷ்யாமீத்யாஹ மால்யோபஜீவந:॥) என்று உகந்து சூட்டச் சூடினபடியை அநுஸந்திக்கையாலே, “இவ்விஷயத்துக்குப் பூவிடுகை ஒழிய வேறு கர்த்தவ்யமில்லை நமக்கு” என்று திருநந்தவநம் செய்கையிலே உத்யோகித்தார் ஒருவரிறே.

இன்னமும், மற்றைய ஆழ்வார்களிற்காட்டில் இவர்க்கு நெடுவாசி உண்டு; அவர்கள், தந்தாமுடைய ஸம்ருத்திகளை த்ருஷ்டாந்தபலத்தாலே, ஆழ்வாருடைய அவதாரம் கார்யகரமென்று தோற்றுகிறது. இத்தால் - சாஸ்த்ரங்களாலும் அவதாரங்களாலும் திருந்தாதாரும் ஆழ்வாராலே திருந்தினார்களென்று வைபவம் சொல்லிற்றாய்த்து.

ஆக, ஸர்வேச்வரன் ஆழ்வாரை அவதரிப்பித்து சேதநரை வசீகரிக்கப்பார்த்தான் என்றார் கீழ், இப்படி ஆழ்வாராலே சேதநர் திருந்துகைக்கு இவ்வாழ்வார்க்குள்ள ஏற்றமென்? என்ன அருளிச்செய்கிறார் (இவ்வாழ்வாரித்யாதி). * “ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்” என்றிருக்கையாலே, (ஸஹஜதாஸ்யத்தையுடையராகையாலே) என்றது. (அவனுகந்த அடிமை) என்கையாலே, ஸ்வார்த்த கைங்கர்யபரரை வ்யாவர்த்திக்கிறார். (அவதாரங்களை) இத்யாதிக்குக் கருத்து - ராமாவதாரத்தில் கிஞ்சித்கரித்து ஸுக்ரீவாதிகள் ஸ்வார்த்தபரராகையாலும், இளையபெருமாள் தாமே பின்றொடருகையாலும், வாமநாவதாரத்தில் மஹாபலி, அவனிரந்தபோது நீர்வார்த்துக்

* பல்லா. (3)

எம்பெருமானாலே பெற நினைத்திருப்பர்கள், இவர், தம்மை அழியமாறி வரும் பகவத் ஸம்ருத்தியையே தமக்குப் புருஷார்த்தமாக நினைத்திருப்பர். அவர்கள், ஈஶ்வரனைக் கடகாகப்பற்றித் தந்தாமுடைய பயநிவ்ருத்தியைப் பண்ணுகிற்பர்கள்; இவர், தாம் கடகாக நின்று "அவனுக்கு என் வருகிறதோ!" என்று பயப்பட்டு அந்த பயநிவ்ருத்தியிலே யத்நம் பண்ணுகிற்பர்.

இப்படி மற்றைய ஆழ்வார்களிற்காட்டில் இவர்க்குண்டான நெடுவாசிபோலே, மற்றை ப்ரபந்தங்களிற்காட்டில் திருப்பல்லாண்டுக்கு நெடுவாசி உண்டு; வேதமென்ன, தத் உபப்ரும்ஹணமான இதிஹாஸ புராணங்களென்ன, இவைபோலே அதிக்ருதாதிகாரமாயிராது; ஸர்வாதிகாரமான திருவாய்மொழியில் உண்டான அருமையும் இதுக்கில்லை; * "அரியயனரனெனும் இவரை" § "ஒன்றநும் மனத்து வைத்து" என்றும், † "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்றும் உபக்ரமம் தொடங்கி உபஸம்ஹாரத்தளவும் செல்ல த்ரிமூர்த்தி ஸாம்யத்தை அருளிச்செய்கையாலே, 14. "मध्ये विरिञ्च

---

கொடுத்து ஔதார்யம் பெற்றுப்போகையாலும், இவ்வபதாநத்தில், அந்யபரனை தன்னை அவனிரக்கத்தானுகந்து பூவிட்டானென்கிறது ஏற்றமிறே என்று பூவிடுகையிலே தாமும் உத்யோகித்தார் என்று.

௩. "தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே" என்கிற மற்றையாழ்வார்களிலும் இவருக்கு ஏற்றமருளிச்செய்கிறார் (இன்னமுமித்யாதி). வாசிதன்னை உபபாதிக்கிறார் (அவர்களித்யாதி). (தந்தாமுடைய ஸம்ருத்திகள்) என்றது - அநுபவ கைங்கர்யங்களால் தங்களுக்குண்டான தழைப்பு. (பகவத்ஸம்ருத்தி) என்றது - மங்களாஶாஸநத்தினுண்டான தழைப்பு. இவ்வாசிதன்னை முகபேதேந விவரிக்கிறார் (அவர்கள் ஈஶ்வரனையித்யாதி). (கடகாக) - பரிசையாக; - ரக்ஷகமாக என்றபடி.

ஆக, வக்த்ருவைலக்ஷண்யத்தை அருளிச்செய்தாராய், இத்தை த்ருஷ்டாந்தமாகக்கொண்டு ப்ரபந்த வைலக்ஷண்யத்தைப் பலபடியாக அருளிச்செய்கிறார் (இப்படி மற்றை இத்யாதி). வாசி எப்படியென்ன

---

* திருவாய். (1-3-6). § திருவாய். (1-3-7). † திருவாய். (10-10-1).
‖ திரு-வாய்- (2-9-4).

गिरिशं प्रथमावतारः" (மத்யே விரிஞ்ச கிரிஶம் ப்ரதமாவதார:) என்று ரகுகுல ஸஜாதீயனும் யதுகுல ஸஜாதீயனும் அவதரித்தாப் போலே, ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே வந்தவதரிக்கையாலே வந்த ஸாம்ய மென்று நிர்வஹிக்கவேண்டும் அருமையாதல், *"நீராய் நிலனாய்" என்று தொடங்கி, *"சிவனாய் அயனானாய்" என்று, சேதநாசேதந வாசி சப்தங்களோடே ஸமாநாதிகரிக்கையாலே, ஸாமாநாதிகரண்யத்துக்கு நிபந்தநம் ஈஶ்வரனோடு சேதநாசேதநங்களுக்குண்டான ப்ருதக்ஸ்த்தித்யுபலப்தி இல்லாத ஸம்பந்தமென்றே நிர்வஹிக்க வேண்டும் அருமையாதல் இல்லை இப்ப்ரபந்தத்துக்கு.

இன்னமும், மஹாபாரதம்போலே பெரும்பரப்பாய், "இன்னது சொல்லிற்று" என்று நிர்ணயிக்க வொண்ணாதாயிருக்கும் குறையு

(வேதமித்யாதி). அதிக்ருதா: - அதிகாரிண:, தேஷாமதிகாரோ யஸ்மிந இதி விக்ரஹ:. ஆனால், ஸர்வாதிகாரமாகத் திருவாய்மொழி உண்டே, இதுக்கு அதிலும் அதிசயமென? என்ன, (ஸர்வேத்யாதி). அதுக்கு அருமை ஏது? என்ன (அரியயன் இத்யாதி). § "ஒன்றும் மனத்து வைத்து" என்றது; § "நன்றெழில் நாரணன் நான்முகனரனென்னுமிவரை" என்றத்தைக் கடாக்ஷித்து. இந்தப் பாசுராந்தரத்தையும் சேர்த்து எடுத்தது, அப்யாஸம் தோற்றுகைக்காக. (த்ரிமூர்த்தி ஸாம்யத்தை அருளிச்செய்கையாலே) என்றது - நிஷேதிக்கைக்கு ப்ரஸக்திரூபேண ஸாம்யம் சொல்லுகையாலே என்றபடி. ‡ "மனப்பட்டதொன்றே" என்றவிடத்திலும் § "இருபசையறுத்து" என்றவிடத்திலும், a "முனியே" என்றவிடத்திலும் ஸாம்யநிஷேதம் அர்த்த ஸித்தமிறே. ‡ "அரியயன்" இத்யாத்யம்ஶத்தில் ஸாம்யப்ரஸக்திக்கு நிர்வாஹம் காட்டுகிறார் (மத்யே விரிஞ்ச கிரிஶம்) என்று. இது முழுச்சொல்லு, அவ்யயம்; "விரிஞ்சகிரிஶயோர்மத்யே" என்றபடி "முனியே நான்முகனே" என்றவிடத்தில் ஸாமாநாதிகரண்யத்துக்கு நிர்வாஹம் காட்டுகிறார் (நீராய் இத்யாதி). (ஸாமாநாதிகரண்யத்துக்கு) "முனியே நான்முகனே" என்றதில் ஸாமாநாதிகரண்யத்துக்கு என்றபடி. (ப்ருதக்ஸ்த்தித்யுபலப்தியாவது) - பிரிந்திருக்கையும், பிரிந்து தோன்றுகையும்.

* திருவாய். (6-9-1). § திருவாய். (1-3-7). ‡ திருவாய். (1-3-6).
a திருவாய். (10-10-1).

மின்றிக்கே, ப்ரணவம்போலே சப்தம் அத்யல்பமாய், ஸகல வேதார்த்த மும் அதுக்குள்ளே காணவேண்டி, அது தெரியாதே தேடவேண்டி வரும் அந்தக் குறையும் இன்றிக்கே, பன்னிரண்டு பாட்டாய் ஐஶ்வர்ய கைவல்யங்களை நீக்கி உத்தம புருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்தை ஸுக்ரஹமாக ப்ரதிபாதிக்கையாலே இதுக்கு நெடுவாசி உண்டு. இன்னமும், இப்ப்ரபந்தம், தன்னை அதிகரித்தவன் கையிலே பரதத்த்வத்தைக் கைப்படுத்த வல்ல சக்தியை உடைத்தாகையாலே வந்த ஏற்றமும் உண்டு; * "பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டு" என்றிறே இதுக்கு பலம்.

---

அதிவிஸ்தர அதிஸங்க்ரஹங்களாகையாலே வந்த துர்ஜ்ஞேய தையும் இதுக்கில்லை, அநதிவிஸ்தர ஸங்க்ரஹமாயிருக்கும் என்கிறார் (இன்னமும் இத்யாதி).(ஐஶ்வர்யகைவல்யங்களை நீக்கி) என்றதுக்கு b "கூழாட்பட்டு நின்றீர்களை-புகுதலொட்டோம்" என்றதிலேநோக்கு. (பகவத்கைங்கர்யத்தை) என்றதுக்கு - b "மண்ணும் மணமும் கொண்மின்" என்றதிலே நோக்கு. உண்டு என்கைக்கு நியாமகம் எங்ஙனேயென்ன, (பரமாத்மனை இத்யாதி).

ஆக ஸர்வாதிகாரமாயும், நிர்வஹிக்கவேண்டும் அருமையு மின்றிக்கே, பன்னிரண்டு பாட்டாகையாலே ஸுக்ரஹமாயும், [illegible]ஶ்யபலப்ரதாநஸமர்த்தமாயுமிருக்கும் என்றருளிச்செய்து; இனி இந்த திவ்யப்ரபந்தம் அவதரித்த ப்ரகாரத்தால் வந்த வைபவத்தை அருளிச்செய்யக் கருதி, தஜ்ஜிஜ்ஞாஸாப்ரஶ்நத்தை அநுவதிக்கிறார் (இப்ப்ரபந்தம் இத்யாதி). இதுக்கு உத்தரமாக முன் கதையை அருளிச்செய்கிறார் (ஸ்ரீவல்லபேத்யாதி). (தார்மிகன் ஆகையாலே) என்ற வநந்தரம், சிறியதைப் பெரியது நலியாதபடி கூடல் என்கிற [illegible]யிலிருந்து ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே, நகரஶோதநார்த்த [illegible] வருகிறவளவிலே, ஒரு ப்ராஹ்மணன் அங்கொரு திண்ணையிலே [illegible]ண்டு, ராஜாவும் அவனை எழுப்பி, "நீ யார்?" என்[illegible] [illegible], அவனும், "நான் ஒரு ப்ராஹ்மணன், கங்கையாடி [illegible]" என்ன; "ஆனால் உனக்குப் போவதுண்டாகில் ஒரு [illegible] சொல்லிக்காணாய்" என்ன; ப்ராஹ்மணனும் ‡ "வர்ஷார்த்தம் [illegible] ப்ரயதேத மாஸாந் நிஶார்த்தமர்த்தம் திவஸம் யதேத

---

[illegible]. (12). b பல்லா. (3). ‡ முக்தகம்.

இப்ப்ரபந்தம் அவதரித்தபடி என் ? என்னில்; ஸ்ரீவல்லபதேவன் என்கிற ராஜா, தார்மிகனுகையாலே, புரோஹிதரான செல்வநம்பியை, "புருஷார்த்த நிர்ணய பூர்வகமாக அத்ருஷ்டஸித்திக்கு வழியென் ?" என்ன; 15. "धर्मज्ञसमयः प्रमाणं" (தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்) என்கிற படியே, வித்வான்களைத் திரட்டி வேதார்த்த நிர்ணயத்தைப் பண்ணி அவ்வழியாலே புருஷார்த்தம் பெறவேணும்" என்று சொல்ல; அவனும் அப்படியே பஹுத்ரவ்யத்தை வித்யாசுல்கமாகக் கட்டி வித்வான்களை ஆஹ்வாநம் பண்ணிச் செல்லுகிறவளவிலே, வடபெருங் கோயிலுடையான், ஆழ்வாரை இடுவித்து லோகத்திலே வேத தாத்பர்யத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக, "நீர் போய் கிழியை அறுத்துக் கொண்டுவாரும்" என்று அருளிச்செய்ய; அது வித்யாசுல்கமாக நிர்மித்ததொன்றன்றோ, கையில் கொட்டுத்தழும்பைக் காட்டிக் கிழியை அறுக்கலாமோ ?" என்ன; "அது உமக்கு பரமோ ? நாமன்றோ வேதார்த்த ப்ரதிபாதநத்துக்குக் கடவோம்" என்று ஆழ்வாரை நிர்பந்தித்தருள; ஆழ்வாரும் பாண்ட்ய வித்வத் கோஷ்டியிலே எழுந்தருளினவளவிலே செல்வநம்பியும் ராஜாவும் அப்யுத்தான ப்ரணாமபூர்வகமாக பஹுமானம் பண்ண, அத்தைக் கண்ட வித்வான்கள், ராஜாவை அதிக்ஷேபிக்க; அவ்வளவிலே செல்வநம்பி ஆழ்வாரைத் தெண்டனிட்டு, "வேதாந்த தாத்பர்யமான புருஷார்த்தத்தை அருளிச்செய்யலாகாதோ ?" என்ன; ஆழ்வாரும் 16. "तत्सर्वं

---

வார்த்தக்ய ஹேதோர் வயஸா நவேந பரத்ரஹேதோர் இஹ ஜந்மநா ச ||" என்கிற ஶ்லோகத்தைச் சொல்ல, ராஜாவும் இத்தைக்கேட்டு, வ்யுத்பந்நனுகையாலே "த்ருஷ்டத்தில் நமக்குக் குறை ஒன்றுமில்லை, அத்ருஷ்ட யத்நம் பண்ணும்படி எங்ஙனே ?" என்று வ்யாகுலாந்த:கரணனாய் என்று இவ்வளவும் கூட்டிக்கொள்வது. (வடபெருங்கோயிலுடையான்) வட[illegible]த்தைப் பெரியகோயிலாக உடையவன். ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்வாமியைச் சொன்னபடி, (ப்ரகாசிப்பிக்கைக்காக) என்ற அநந்தரம் இவருக்கு ஸ்வப்நத்திலே எழுந்தருளி என்று ஶேஷம். (கொட்டுத்தழும்பு) திருக்கைகளில் கிணங்கள். (கொட்டு) களைக் கொட்டு. (கிழியை) முடிப்பை. (ஆழ்வாரும்) என்ற அநந்தரம் இதொரு ஸ்வப்நமிருந்தபடி என்? என்று விஸ்மிதராய் விஶ்வஸித்து என்று ஶேஷம். (ஸ்ரீபாஞ்சஜந்ய ஸ்பர்ஶத்தாலே) என்றவிடத்தில்,

धर्मवीर्येण यथावत्संप्रपश्यति" (தத் ஸர்வம் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ரபஶ்யதி) என்று, ஸ்ரீவால்மீகி பகவான் ஸர்வார்த்தங்களையும் ஸாக்ஷாத்கரித்தாற் போலேயும், ஸ்ரீபாஞ்சஜந்ய ஸ்பர்சத்தாலே த்ருவன் ஸர்வஜ்ஞனைப் போலேயும், பகவத்ப்ரஸாதத்தாலே ஸகல வேதார்த்தங்களையும் ஸாக்ஷாத்கரித்து, வேதாந்த தாத்பர்யமான அர்த்தத்தை ப்ரதிபாதித்தருள; அதிக்ஷேபித்த வித்வான்களோடு அநுவர்த்தித்த ராஜாவோடு வாசியற ஸர்வரும் விஸ்மிதராய்; அநந்தரம், இவரை ஆனையிலே ஏற்றி, ராஜா ஸபரிகரனாய், ஸேவித்துக்கொண்டு நகரி வலம் வருகிற மஹோத்ஸவத்தைக் காண்கைக்காக, புத்ரர்களை ப்ரஹ்மரதம் பண்ணும் ஸமயத்திலே மாதாபிதாக்கள் காண ஆதரித்து வருமாபோலே, பிராட்டியோடே கூட ஸபரிகரனாய்க் கொண்டு ஈஶ்வரன் ஸந்நிஹிதனாக; தத்பரிகரபூதரான ப்ரஹ்மாதி தேவதைகளும் ஆகாசத்திலே நெருங்கி நிற்கிற இத்தை ஸாக்ஷாத்கரித்த ஆழ்வார், ஸ்வஸம்ருத்தியைக் கண்டு இறுமாவாதே, பகவத் ப்ரஸாதத்தாலே நிரவதிக பக்தியைப் பெற்று அவனுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ஸர்வரக்ஷகத்வாதிகளை அநுஸந்திப்பதற்கு முன்னே, முகப்பிலுண்டான ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களைக் கண்டு, "காலாதீதமான தேசத்திலே இருக்கிற வஸ்து, காலம் ஸாம்ராஜ்யம் பண்ணுகிற தேசத்திலே சக்ஷுர் விஷயமாவதே!, இவ்வஸ்துவுக்கு என்ன தீங்கு வருகிறதோ?" என்னும் அதிசங்கையாலே, ஆனைமேலே கிடந்த மணிகளைத் தாளமாகக்கொண்டு, "இந்தி

* "சங்கப்ராந்தேந கோவிந்தஸ் தம் பஸ்பர்ஶ க்ருதாஞ்ஜலிம் । உத்தாநபாததநயம் முநிவர்யம் ஜகத்பதி: ॥ தத: ப்ரஸந்நவதநஸ் தத்க்ஷணாந் ந்ருபநந்தந: । துஷ்டாவ ப்ரணதோ பூத்வா ஹ்ருதயாதாரமவ்யயம் ॥" என்கிற வசநங்கள் அநுஸந்தேயங்கள். (வேதாந்ததாத்பர்யமான அர்த்தமாவது) ஸமஸ்த ஶப்தமூலமான அகாரத்துக்கு வாச்யனான ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரன், ஸர்வகாரணபூதன், முமுக்ஷுபாஸ்யன், மோக்ஷப்ரதனென்கை. (ப்ரதிபாதித்தருள) என்றநந்தரம், கீழ்ழே கிழி தானே அறுந்து விழ என்று ஶேஷம். (வலம்) ப்ரதக்ஷிணம். (ப்ரஹ்மரதம்) தோளுக்கினியான். இறுமாப்பு) கர்வம்.

* வி-பு. (1-12-50 & 51).

ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களுக்குத் தீங்கு வாராதே நித்யமாய்ச் செல்லவேணும்" என்று திருப்பல்லாண்டு பாடுகிறார்.

அவாப்த ஸமஸ்த காமனுகையாலே ஒன்றுமொரு குறையின்றிக்கே ஸர்வநியந்தாவுமான ஈச்வரனைக் கண்டால் தம்முடைய மங்களங்களை அவன் பக்கலிலே ப்ரார்த்திக்க ப்ராப்தமாயிருக்க, தாம் அவனுக்கு மங்களங்களை ஆசாஸிக்கை அஸங்கதமன்றோ? என்னில்; முகப்பிலே சக்ஷுர்விஷயமான ஸௌந்தர்யாதிகளிலே பகவத்ப்ரஸாத லப்தமான பக்திபரவசராய்க் கொண்டு அழுந்தி, அவனுடைய ஸர்வ ரக்ஷகத்வ ஸர்வசக்தித்வத்தையும் ஸ்வஸம்ருத்தியையும் மறக்கையாலே பகவத்ஸம்ருத்தியே தமக்கு ஸம்ருத்தியாகக் கொண்டு மங்களா சாஸநம் பண்ணுகை ஸங்கதம்.

பகவத் ப்ரேமந்தான், தத்ப்ராப்திக்கு ஹேதுவாதல், ததனுபவத்துக்குப் பரிகரமாதலாகையொழிய அறிவுகேட்டைப் பண்ணுமென்னுமிடத்தில் ப்ரமாணமென்? என்னில், அது சிஷ்டாசார ஸித்தம்; 17. "स्त्रियो वृद्धास्तरुण्यश्च सायं प्रातस्समाहिताः। सर्वान् देवान् नमस्यन्ति रामस्याऽर्थे यशस्विनः॥" (ஸ்த்ரியோ வ்ருத்தாஸ் தருண்யச்ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா: । ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந: ॥) என்று, திவாராத்ர விபாகமற, தேவதைகளை ரக்ஷித்துப் புகழ் படைத்துப் போந்த சக்ரவர்த்தித் திருமகனுடைய ஸௌந்தர்யாதி குணங்களுக்கு ரக்ஷகமாக, அயோத்யாவாஸி ஜனங்கள், பெருமாளால் தங்களுக்கு வரும் ஸம்ருத்தியை மறந்து, தேவதைகளின் காலிலே விழுந்தார்களிறே; பிராட்டியைத் திருமணம் புணர்ந்து மீண்டெழுந்தருளா நிற்க, ஸ்ரீபரசுராமாழ்வான் வந்து

---

ஆக, ப்ரபந்தம் அவதரித்தபடியை அருளிச்செய்தார் கீழ், (அவனுடைய ஸர்வஜ்ஞத்வ) இத்யாதி வாக்யத்தை விவரிப்பதாகத் திருப்பல்லாண்டு பாடுகையில், அஸாங்கத்ய சங்கையை அநுவதிக்கிறார் (அவாப்தேத்யாதி). பரிஹரிக்கிறார் (முகப்பிலே இத்யாதி). அழுந்தி-மக்நராய்.

பக்திபாரவச்யத்தாலே ரக்ஷகத்வாதிகளை மறந்தாரென்றுநின்றீர், பக்தி பக்தருக்கு ஸாதகமாகவும், ப்ரபந்நருக்கு அநுபவோப கரணமாகவும் சாஸ்த்ரம் சொல்லா நிற்க, இது அறிவு கேட்டைப் பிறப்பித்து மங்களாசாஸநத்திலே மூட்டுமென்னுமதுக்கு

தோன்றினவளவிலே, தாடகாதாடகேயருடைய நிரஸனங்களைக் கேட்டிருக்கச் செய்தேயும் அஞ்சி, 18. "क्षत्ररोषात्प्रशान्तस्त्वं ब्राह्मणश्च महायशाः। बालानां मम पुत्राणां अभयं दातुमर्हसि॥" (க்ஷத்ரரோஷாத் ப்ரஶாந்தஸ்த்வம் ப்ராஹ்மணஶ்ச மஹாயசா: । பாலாநாம் மம புத்ராணும் அபயம் தாதுமர்ஹஸி ॥) என்று சரணம் புக்கு "அவன் தோற்று மீண்டு போனான்" என்று கேட்ட பின்பு, 19. "पुनर्जातं तदा मेने सुतानात्मानमेव च" (புநர் ஜாதம் ததா மேநே ஸுதாநாத்மாநமேவ ச) என்கிறபடியே, தானும் பிள்ளைகளும் மறு பிறவி பிறந்ததாக நினைத்திருந்தானிறே சக்ரவர்த்தியும். ஸ்ரீகௌஸல்யாரும், 20. "यन्मङ्गलं सुपर्णस्य विनताऽकल्पयत्पुरा। अमृतं प्रार्थयानस्य तत्ते भवतु मङ्गलम्॥" (யந்மங்களம் ஸுபர்ணஸ்ய விநதாऽகல்பயத் புரா । அம்ருதம் ப்ரார்த்தயாநஸ்ய தத்தே பவது மங்களம் ॥) என்று, விஶ்வாமித்ராத்வர தாரணாதிகளால் வந்த ஆண்பிள்ளைத்தனத்தை விஸ்மரித்து மங்களாசாஸனம் பண்ணினாளிறே. ஸ்ரீதண்டகாரண்யவாஸிகளான ருஷிகளும், 21. "ते तं सोममिवोद्यन्तं दृष्ट्वा वै धर्मचारिणः। मङ्गलानि प्रयुञ्जानाः प्रत्यगृह्णन् दृढव्रताः॥" (தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்மசாரிண: । மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா: ॥) என்று தங்கள் ஆபந்நிவ்ருத்திக்கும் அபிமதஸித்திக்கும் இவரே ரக்ஷகரென்று ஸாதநாநுஷ்டானம் பண்ணுகிறவர்கள், இவர் ஸந்நிஹிதரானவாறே அவற்றை மறந்து, இவர் வடிவழகிலே துவக்குண்டு, மங்களாசாஸநம் பண்ணினார்களிறே. கர்மஸ்பர்ஶமின்றிக்கே

---

காரணமென்? என்கிற ஶங்கையை அநுவதிக்கிறார் (பகவத்ப்ரேமம் இத்யாதி). அத்தை நிராகரிக்கிறார் (அது இத்யாதி). ஶிஷ்டாசாரத்தைக் காட்டுகிறார் (ஸ்த்ரிய: இத்யாதி), (தேவகிப்பிராட்டியும்) என்னுமளவும். "யஶஸ்விநோ ராமஸ்ய" என்று அந்வயித்து ஶ்லோகதாத்பர்யம் அருளிச்செய்கிறார் (திவாராத்ரேத்யாதி). "திவாராத்ர விபாகமற தேவதைகளின் காலிலே விழுந்தார்களிறே" என்று அந்வயம். தாடகாதாடகேயாதி நிரஸநமுகேந தேவதைகளை [illegible] என்று ஶேஷம். (ஆண்பிள்ளைத்தனத்தை) ஶௌர்யாதிகளை. (த்ருடவ்ரதா:) என்று த்ருடாத்யவஸாயத்தை நினைத்து, (இவரே ரக்ஷகரென்று) என்றது "தர்மசாரிண:" என்றத்தைப்பற்ற,(ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகிறவர்கள்) என்றது. ரக்ஷகர் என்றறிந்து தத்

தலைநீர்ப்பாட்டிலே இவர் ஏற்றமெல்லாம் அறியும் பிராட்டி, இவர் அழகிலே தோற்று, 22. "**पतिसंमानिता सीता भर्तारमसितेक्षणा। आद्वारमनुवव्राज मङ्गलान्यभिदध्युषी॥**" (பதிஸம்மாநிதா ஸீதா பர்த்தாரமஸிதேக்ஷணா। ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந்யபிதத்யுஷீ॥) என்று தொடங்கி, 23. "**पूर्वां दिशं वज्रधरः**" (பூர்வாம் திசம் வஜ்ரதர:) என்று திக்பாலர்களை இவர்க்கு ரக்ஷகராக அபேக்ஷித்தாளிறே.

இன்னமும் 24."**जातोऽसि देवदेवेश! शङ्खचक्रगदाधर!। दिव्यरूपमिदं देव! प्रसादेनोपसंहर॥**"(ஜாதோऽஸி தேவதேவேஶ! ஶங்கசக்ரகதாதர!। திவ்யரூபமிதம் தேவ! ப்ரஸாதேநோபஸம்ஹர॥) என்று, "அயர் வறும்மரர்களதிபதி அவ்வடிவோடே வந்தவதரித்தான்" என்று இவனுடைய பெருமையை அறிந்திருக்கிற தசையிலேயும், கம்ஸபயத்தாலே "இவ்வடிவை உபஸம்ஹரிக்க வேணும் என்றாரிறே ஸ்ரீவஸுதேவர்; 25. "**उपसंहर सर्वात्मन्! रूपमेतच्चतुर्भुजम्। जानातु माऽवतारन्ते कंसोऽयं दितिजन्मजः॥**" (உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதச்சதுர்புஜம்। ஜாநாது மாऽவதாரந்தே கம்ஸோऽயம் திதிஜந்மஜ:॥) என்று, "ஸர்வாத்மந்" என்று ஸர்வாந்தர்யாமி என்றும், "ஏதச்சதுர்புஜம்" என்று அவனுடைய அஸாதாரண விக்ரஹமென்று அறிந்திருக்கச் செய்தேயும், கம்ஸபயத்தாலே "இவ்வடியை உபஸம்ஹரிக்கவேணும்" என்றாளிறே தேவகிப்பிராட்டியும்.

---

ப்ரீத்யர்த்தமாக என்று ஶேஷம். "ஸோமமிவோத்யந்தம்" என்றத்தைப்பற்ற (இவர் ஸந்நிஹிதரித்யாதி). (அவற்றை) ஆபந்நிவ்ருத்யபிமத ஸித்திகளை. (கர்மஸ்பர்ஶமின்றிக்கே) என்கையாலே, அயோத்யாவாஸிகள், சக்ரவர்த்தி, ஸ்ரீகௌஸல்யையார், தண்டகாரண்ய வாஸிகளான இவர்களை வ்யாவர்த்திக்கிறது. (தலைநீர்ப்பாட்டிலே) என்கையாலே, ஸூரிகளை வ்யாவர்த்திக்கிறது. தலைநீர்ப்பாடு—முதல்மடை. "அநுவவ்ராஜ" என்றிருக்கையாலே அழகுக்குத் தோற்றது அர்த்தஸித்தம்.

ஆக, ஸ்ரீராமாயணத்தில் ஶிஷ்டாசாரத்தைக்காட்டி, க்ருஷ்ண விருத்தாந்தம் காட்டுகிறார் (இன்னமும் ஜாதோஸீத்யாதி).

இப்படி தேடிப்பிடிக்க வேண்டாதே ஸர்வலோக ப்ரஸித்தமான லௌகிகாசாரங்களைக் காட்டுகிறார் (இவ்வர்த்தம் லோகப்ரஸித்தமும் இத்யாதி). (விற்பிடி மாணிக்கம்) "வில்" என்று தேஜிஷ்டமாய்,

இவ்வர்த்தம் லோகப்ரஸித்தமும்; அநேக காலம் தபஸ்ஸு பண்ணிப்பெற்று ப்ரதமஜனாய் அதிஸுந்தரரான புத்ரனளவிலே, ஒரு விரோதமின்றிக்கே இருக்கச்செய்தேயும், செல்லாநின்றதும் வாராநின்றதும் ப்ரேமாந்த்யத்தாலே பயஹேதுவாகக் கடவதிறே மாதாவுக்கு. தன் கைக்கடங்காத விற்பிடிமாணிக்கத்தைப் பெற்றவன், அது ஸுரக்ஷிதமாயிருக்கச் செய்தேயும் "அதுக்கு என்ன விரோதம் வருகிறதோ" என்று காற்றசங்கிலும் பயப்படாநிற்குமிறே. அல்ப தேஜஸ்ஸுக்களான சந்த்ராதித்யர்களுடைய ஸந்நிதியிலே அசித்தான பாஷாணங்கள் உருகாநின்றன. 26. "परञ्ज्योतिरुपसंपद्य" (பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய) என்றும், * "பரஞ்சோதி நீபரமாய்" என்றும் சொல்லுகிறபடியே நிரதிசய ஸௌந்தர்யயுக்தனாய் நிரவதிக தேஜோரூபனான எம்பெருமானைக்கண்டால், பரமசேதநரான ஆழ்வார் கலங்கச்சொல்லவேணுமோ?

ஆகையாலே, ராவணாதிராக்ஷஸ தூர்வர்க்கமயமாய், காலம் ஸாம்ராஜ்யம் பண்ணுகிற தேசத்திலே இவ்விலக்ஷண விஷயத்தைக் கண்டருளி, "இவ்விஷயத்துக்கு எவ்வழியாலே தீங்குவருகிறதோ!" என்று பயப்பட்டு, தத்பரிஹாரார்த்தமாகத் திருப்பல்லாண்டு பாடுகிறார்.

---

பிடியளவும் நீண்டமணிஎன்னுதல், விற்பிடிபோன்ற மணியென்னுதல், விற்பிடி என்று ராஜாவாய், ராஜார்ஹமான மாணிக்கமென்னுதல், கீழ் ப்ரமாணங்காட்டி, உபபத்தியும் காட்டுகிறார் (அல்பதேஜஸ்ஸுக்கள் இத்யாதி).

இப்படி ப்ரஸக்தமான ஶங்காபரிஹாரங்களைப் பண்ணி, ப்ரக்ருத அர்த்தத்தை உபஸம்ஹரிக்கிறார் (ஆகையாலே இத்யாதி).

கீழ்ச் சொன்னவர்கள் மயர்வற மதிநலம் அருளப்பெறுமையாலும், மாநுஷபாவனையாலும், கலங்க ப்ராப்தம்; ஸ்வரூபஜ்ஞானரான இவர் கலங்கி மங்களாஶாஸநம் பண்ணினால் ஸ்வரூப விருத்தம் அன்றோ என்ற ஶங்காநுவாதம் பண்ணுகிறார் (ஸ்வஸ்வரூபேத்யாதி). ஸ்வஸ்வரூப விருத்தமானாலும் விஷயவைலக்ஷண்ய ஜ்ஞாநமடியாகையாலே உபாதேயம் என்று பரிஹரிக்கிறார் (கர்மேத்யாதி).

அநப்யுபகம்ய பரிஹாராந்தரம் (இன்னமும் ஶேஷேத்யாதி).

---

* திருவாய். (3-1-3).

ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை உள்ளபடி அறிந்திருக்கிற இவர், ரக்ஷ்யரக்ஷகபாவத்தை மாறுடி ப்ரதிபத்தி பண்ணுகை விபரீதஜ்ஞாநமன்றோ? என்னில்; கர்மநிபந்தநமான விபரீதஜ்ஞாநமாய்த்து த்யாஜ்யம்; விஷயவைலக்ஷண்யமடியாக வந்ததாகையாலே அவ்வைலக்ஷண்யம் உள்ளவளவும் அநுவர்த்திக்கையாலே ஸ்வரூபப்ராப்தமாகக் கடவது.

இன்னமும், சேஷசேஷிபாவஜ்ஞாந ஸமநந்தரம் சேஷிக்கு அதிசயத்தை விளைக்கை சேஷபூதனுக்கு ஸ்வரூபமாகையாலே, தத்விஷயமாக மங்களாசாஸநம் பண்ணுகை சைதந்யக்ருத்யம்; அந்த சேஷத்வ காஷ்ட்டையாவது:— தன்னை அழியமாறியேயாகிலும் ஸ்வாமிக்கு ஸம்ருத்தியை ஆசாஸிக்கையிறே; வேதாந்த தாத்பர்யமிறே இத்திருப்பல்லாண்டில் ப்ரதிபாதிக்கப்படுகிறது.

இப்ரபந்தத்தில், முன்னிரண்டு பாட்டாலே, தாம் மங்களாசாஸநம் பண்ணுகிறார்; அத்தால் தமக்குப்பர்யாப்தி பிறவாமையாலே, மேல் மூன்று பாட்டாலே, மங்களாசாஸநம் பண்ணுகைக்கு, பகவச்சரணார்த்திகளையும், கேவலரையும், ஐஸ்வர்யார்த்திகளையும் அழைக்கிறார். அதுக்கு மேல் மூன்று பாட்டாலே ஆஹூதரானவர்கள் இவரோடே ஸங்கதராகிறார்கள்; அதுக்கு மேல் மூன்று பாட்டாலே, அவர்களோடே திருப்பல்லாண்டு பாடியருளுகிறார்; மேலிற்பாட்டு பலஸ்ருதி.

அவதாரிகை முற்றிற்று.

---

இது சேஷத்வஜ்ஞாந கார்யமாகையாலே ப்ராப்தமென்று கருத்து. இத்தை உபபாதிக்கிறார் (அந்த சேஷத்வேத்யாதி). ஆக ப்ரபந்த வைலக்ஷண்யத்தை பஹுமுகமாக அருளிச்செய்து, ப்ரஸக்தசங்கா பரிஹாரங்களையும் பண்ணி; இனி ப்ரதிபாத்ய வைலக்ஷண்யம் அருளிச்செய்ய நினைத்து, அந்த வைலக்ஷண்யம் தோற்றும்படி ஈடுபடுகிறார் (வேதாந்தேத்யாதி).

கீழ் "பன்னிரண்டு பாட்டாய்" என்று நின்றீர், பன்னிரு நாமப்பாட்டுக்களைப் போலே, ஒரு நியதி கண்டிலோமே' என்ன, அருளிச்செய்கிறார் (இப்ரபந்தத்தில் இத்யாதி). புத்தி ஸமாதா

1. பல்லாண்டுபல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடிநூறாயிரம்
மல்லாண்டதிண்டோள் மணிவண்ணா! உன்
‡ செவ்வடிசெவ்விதிருக்காப்பு.

பதவுரை:— மல்—சாணூரன் முஷ்டிகன் முதலிய மல்லர்களை, ஆண்ட—அடக்ிக் கொன்ற. திண்—திடமான; மஹா பலம் பொருந்திய. தோள்—திருத் தோள்களை உடைய. மணி—மாணிக்கம் போன்ற. வண்ணா—வர்ணத்தையும், ஸ்வபாவத்தையும் உடையவனே! உன்—உன்னுடைய. செவ்வடி—செம் ‡ அடி; சிவந்த திருவடியின், செவ்வி—அழகுக்கு. பல்லாண்டு—பல(எண்ண முடியாத) வருஷங்கள். (இங்கு ஆண்டு மனுஷ்ய லோகத்தில் ஆண்டைக் குறிக்கும்.) பல்லாண்டு—தேவ வருஷத்தில் எண்ண முடியாத வருஷங்கள், பல்லாயிரத்தாண்டு—பிரஹ்மாவின் வருஷக் கணக்கில் எண்ண முடியாத வருஷங்கள் பலகோடி நூறாயிரம்—எண்ணமுடியாத பிரஹ்மாக்களுடைய கணக்கில்லாத வருஷங்கள்; அதாவது: கால தத்வம் உள்ளவரை. திருக்காப்பு—குறைவற்ற ரக்ஷை உண்டாக வேணும்.)

அவதாரிகை:— † முதற்பாட்டு. ஸௌந்தர்யாதி கல்யாண குணை' பேதமான விக்ரஹத்தோடே வகுத்த சேஷியானவனைக் காலாதீத மான தேசத்திலே காண்கையாலே "இத்தால் இவனுக்கு என்ன தீங்கு வருகிறதோ?" என்று அதிசங்கை பண்ணி, 27. "अनादिर्भगवान् कालो नान्तोऽस्य द्विज विद्यते।" (அநாதிர் பகவாந் காலோ நாऽந்தோஸ்ய த்விஜ வித்யதே) என்கிறபடியே, காலதத்வமுள்ளதனையும் இச் செவ்வி மாறாதே நித்யமாய்ச் செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுகிறார்.

---

...ார்த்தமாக காதாப்ரதிபாத்யங்களை உபந்யஸிக்கிறார் என்னவுமாம். "அடியோமோடும்" என்று பஹுவசநம் உண்டாயிருந்தாலும், அது ஸ்வாமிப்ராயத்தாலேயாகையாலே (தாம் மங்களாசாஸநம் பண்ணுகிறார்) என்கிறார்.(பகவச்சரணார்த்திகள்)தம்மைப்போல்பவர்.

---

† அரும்பதானுகுணமாக "முதற்பாட்டு" என்ற அநந்தரம், (பல்லாண்டுக்கு இத்யாதி) என்று ப்ரதீகதாரணம் இருந்தால் ஸ்வாரஸ்யம். ‡ சேவடி (பாடாந்தரம்).

வ்யாக்யாநம்:—(பல்லாண்டு) அல்லாத அவச்சேதங்களையொழிய ஆயுஸ்ஸுக்குப் பர்யாயமான ஆண்டைக்கொண்டு காலத்தைப் பெருக்குகிறார். ஆயுஸ்ஸை ப்ரார்த்திக்கிறவராகையாலே. 28. "யாமोषधिमिवायुष्मन्" (யாமோஷதிமிவாऽயுஷ்மந்) என்று ஆயுஸ்ஸை ப்ரார்த்தித்தாரிறே பெரியவுடையார். § "வேதநூல்பிராயம் நூறு" என்று ஆயு:பர்யாயமாகச் சொல்லிற்றிறே வத்ஸரத்தை. இந்த பஹு வசநத்துக்கு அஸங்க்யாதத்வமே முக்யார்த்தமாகையாலே, அஸங்க்யாதமான வர்ஷங்கள் இவ்வழகோடே நித்யமாய்ச் செல்லவேணும் என்கிறார்.

"பல்லாண்டு" என்கிற சப்தம் ஸ்வரூப வாசியாயுமிருக்கிறது; உத்க்ருஷ்டனாயிருப்பானொருவனை அபக்ருஷ்டனாயிருப்பானொருவன் கண்டால், அவனுடைய உத்கர்ஷாநுரூபமாகச் சொல்லும் பாசுரமானகயாலே, ஸர்வேஶ்வரனுடைய உத்கர்ஷத்துக்கு அவதி இல்லாமையாலும், அவனைக் குறித்துத் தம்முடைய நிகர்ஷத்துக்கு அவதியில்லாமையாலும், இந்த உத்கர்ஷாऽபகர்ஷரூப வைஷம்யம் ஸ்வரூப

---

(முதற்பாட்டு). பல்லாண்டு இத்யாதி வ்யாக்யாயத இதி ஶேஷ:. "மணிவண்ணா, பல்லாண்டித்யாதி, செவ்வி திருக்காப்பு" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை (ஸௌந்தர்யேத்யாதி). (இத்தால்) இக்காலத்தால். (இச்செவ்வி) கீழ்ச்சொன்ன ஸௌந்தர்யாதிகள்.

நாள் என்னாதே "ஆண்டு" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (அல்லாத இத்யாதி). (அவச்சேதகங்கள்) என்றது விபாகஜனகதயா கால வ்யாவர்த்தகங்களை; அவையாவன:— நிமேஷ கலா காஷ்டாதிகள். இப்படி ஆயுஸ்ஸைப் ப்ரார்த்தித்தார் உண்டோ? என்ன, (யாமோஷதிம் இத்யாதி). ‡ "ப்ராணேப்யோऽபி கரீயஸீம்" என்று பிராட்டியுடைய விஶ்லேஷத்தால் இவர்க்கு என்ன தீங்கு வருகிறதோ? என்று நினைத்திருக்கிற இவர் "ஆயுஷ்மந்" என்று ஸம்போதிக்கையாலே ஆயுஸ்ஸை உடையீராவீர் என்று ப்ரார்த்தித்தார் என்று கருத்து. ஆண்டு என்றால் ஆயுஸ்ஸைக் காட்டுமோ? என்ன, (வேதநூல் இத்யாதி). * "ஶதாயு:" என்ற ஶ்ருதியைப்

§ திருமாலை: (3). ‡ ராமா-கிஷ். (27-31). * யஜு-கா-2-ப்ர. (3-45).

ப்ரயுக்தமாகையாலே "பல்லாண்டு" என்கிற சப்தம் ஸ்வரூபவாசியாகிறது. மேல் பண்ணுகிற மங்களாசாஸநம் ஸ்வரூபப்ரயுக்தம் என்கைக்காகச் சொல்லிற்று. * "ஜிதம்" என்றும், † "நம:" என்றும், ‡ "தோற்றோம்" என்றும், § "போற்றி" என்றும், "பல்லாண்டு" என்றும், இவை பர்யாயம்.

இந்தப் பதங்களுக்கு அர்த்தபேதம் இல்லையோ? என்னில்; ப்ரவ்ருத்திநிமித்த பேதத்தாலே வரும் விசேஷம் உண்டாகிலும் விழுக்காட்டில் ஆத்மஸ்பர்சியாய்த் தலைக்கட்டுகையாலே பர்யாய

பற்ற "வேதநூல்" என்றது. (பிராயம்) வத்ஸரம். (இந்த பஹு வசனத்துக்கு) என்றது, "பல்" என்கிறதுக்கு என்றபடி. (முக்யார்த்தமாகையாலே) என்றது, அஸங்குசிதார்த்தமாகையாலே என்கை. சதாதிகளைச் சொன்னால் ஸங்குசிதம் ஆம் என்று கருத்து. நாள் என்னாதே "ஆண்டு" என்றது, காலதத்வத்தைப் பெருக்கு கிறதுக்கு நியாமகாந்தரம் காட்டுகைக்காக.

அர்த்தாத் ஸ்வரூப போதகமுமாயிருக்கிறது என்கிறார் (பல்லாண்டென்கிறவித்யாதி). அதுக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் (உத்க்ருஷ்டனாயித்யாதி). இத்தை ப்ராக்ருதத்துக்குச் சேர உபபாதிக்கிறார் (ஸர்வேஸ்வரனித்யாதி). உத்கர்ஷாபகர்ஷங்கள் ஸாவதிகங்களானால் ஸோபாதிகங்களாகக் கண்டோமிறே என்று கருத்து. காலத்தைப் பெருக்குகை அன்றோ வேண்டுவது, இவ்வர்த்தம் தோன்றும்படி இந்த சப்தம் ப்ரயோகிப்பானென்? என்ன, (மேல் பண்ணுகிறவித்யாதி). (மேல்) என்றதுக்கு, "திருக்காப்பு" என்கிறதிலே நோக்கு. ஆனாலும் "ஜிதம்" இத்யாதிகளோபாதி இது ஸ்வரூபவாசி ஆமோ? என்ன, (ஜிதமித்யாதி). ஈஸ்வராபிமானி புண்டரீகாக்ஷனை "ஜிதம்" என்கையாலே ஸ்வரூபஜ்ஞனாய்ச் சொன்னதென்று தோன்றுகையாலும், || "தொலை வில்லிமங்கலந்தொழும், என்கையாலே, ஸ்வரூபம் சொல்லிற்று" என்கிறபடியே, மத்யமபதம் ஸ்வரூபவாசகமாகையாலும், ‡ "தோற்றோம் மடநெஞ்சம்" என்று இருளுக்குத் தன் ஸ்வரூபம் சொல்லுகையாலும், § "போற்றி

* ஜிதந்தா. (1-1). † திருமந்த்ரம். ‡ திருவாய். (2-1-7). § திருவாய் (4-5-1). || முமுக்ஷுப்படி (88).

மாகிறது. "ஜிதம்" என்று, அவனாலே தன் அபிமானம் போன படியை இசைந்து, அத்தலையில் வெற்றிக்கு மேலெழுத்திடுமவன் வ்யவஹாரம். இத்தால், ஸ்வரூப ப்ரகாசத்தாலல்லது அபிமானம் போகாமையாலே, இச்சப்தமும், விழுக்காட்டால் ஸ்வரூபவாசியாகிறது. "நம:" என்று எனக்குரியேனல்லேன் என்றபடி. இது நிவ்ருத்தஸ்வாதந்த்ர்யனுடைய வ்யவஹாரம். இதுவும் ஸ்வரூப ப்ரகாசத்தாலல்லது கூடாமையாலே ஸ்வரூப ஸ்பர்சியாகிறது. "தோற்றோம்" என்கிறது, "அத்தலையில் வெற்றியே தனக்கு ப்ரயோஜனம்" என்றிருக்குமவனுடைய வ்யவஹாரம்; இதுவும், அஹங்கார நிவ்ருத்தியிலே அல்லது ஸம்பவியாமையாலே ஸ்வரூப ஸ்பர்சியாகிறது. "போற்றி" என்று, தன்னைப் பேணாதே அத்தலையில் ஸம்ருத்தியையே பேணுமவன் வ்யவஹாரம்; இதுவும் ஸ்வரூபாநுரூபமிறே. "பல்லாண்டு" என்றது, தன்னைப் பாராதே "அத்தலையில் ஸம்ருத்தியே நித்யமாய்ச் செல்லவேணும்" என்றிருக்குமவன் வ்யவஹாரம். ஆக, இச்சப்தங்கள், ஸ்வரூபத்தையும், ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியையும் ப்ரகாசிப்பிக்கையாலே ஸ்வரூபாநுபந்தியே ஆகிறது.

---

என்றே கைகளாரத் தொழுது சொன்மாலைகள்" என்றவிடத்தில் ஸ்வரூபவாசகம் ஆகையாலும், இவற்றோபாதி இதுவும் என்று தாத்பர்யம்.

அர்த்தபேதமிருக்க பர்யாயமென்ன வொண்ணாதே என்கிற சங்காநுவாதம் பண்ணிப் பரிஹரிக்கிறார் (இந்தப் பதங்களுக்கு இத்யாதி). (விழுக்காட்டில்) என்றது, அர்த்தாத் என்றபடி. இந்த சப்தங்களுக்கு ப்ரவ்ருத்தி நிமித்தங்களையும், ஆத்மஸ்பர்சிகளாகிற ப்ரகாரங்களையும் வ்யக்தமாக அருளிச்செய்கிறார் (ஜிதம் என்று இத்யாதி). (வெற்றிக்கு) ஜயத்துக்கு. (மேலெழுத்திடுகை) ஸம்மதிக்கை என்றபடி. (இதுவும்) நமஶ்ஶப்தமும். "ஜிதம்" என்றதுக்கும், "தோற்றோம்" என்றதுக்கும் பேதம் (மேலெழுத்திடும்) என்கையாலும், (தனக்கு ப்ரயோஜனம்) என்கையாலும் கண்டுகொள்வது. அதாவது, "ஜிதம்" என்று ஜயம் அத்தலைக்கும், "தோற்றோம்" என்று ஜயம் இத்தலைக்கும் ப்ரயோஜனம் என்கை. உக்தார்த்த நிகமனம் (ஆக இத்யாதி). * "'அந்தி தொழுஞ்சொல்லு' என்கையாலே பலப்

---

* முமுக்ஷுப்படி (88).

(பல்லாண்டு) மறித்து "பல்லாண்டு" என்கிறதென்? என்னில்; அகவாய் அறியாதவனுக்குத் தெரியாமையாலே பலகால் சொல்ல வேண்டியிருக்கும்; ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாய், எதிர்சூழல்புக்குத் திரிகிற வனுக்கு இருகால் சொல்லவேண்டா, இப் புநருக்திக்குப் பொருளென்? என்னில்; அவனுடைய ஸர்வஜ்ஞத்வத்தில் குறையாலல்ல; "ஒருகால் சொன்னோம்" என்று ஆறி இருக்கமாட்டாத தம்முடைய ஆதராதிசயத்தாலும், பலகால் சொல்லுமத்தாலும் பர்யாப்தி பிறவாத விஷயவைலக்ஷண்யத்தாலும் அருளிச்செய்கிறார். த்ருஷார்த்தனானவன் தண்ணீர் பெறுமளவும் "தண்ணீர்" "தண்ணீர்" என்னுமாபோலே, தம்முடைய பயம் சமிக்குமளவும் "பல்லாண்டு" "பல்லாண்டு" என்ன ப்ராப்தமிறே.

(பல்லாயிரத்தாண்டு) கீழில் பஹுவசனத்திலே, வர்ஷங்களினுடைய அஸங்க்யாதத்த்வம் சொல்லியிருக்க, இதுக்கு உதயமில்லையே?

---

சொல்லிற்று" என்கிறபடியே, மத்யமபதம் போலே இந்த சப்தங்களெல்லாம் என்று திருவுள்ளம் பற்றி, (ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியையும்) என்கிறார்.

ஸர்வஜ்ஞத்வாதிகளை மறந்து, மங்களாசாஸனம் பண்ணுகிற பக்ஷத்திலே சங்காநுவாதம் பண்ணுகிறார் (மறித்து இத்யாதி). (மறித்து) புநரபி. மங்களாசாஸனம் சேஷத்வகார்யமாகச் சொன்ன பக்ஷத்தில் சங்காநுவாதம் பண்ணுகிறார் (அகவாய் இத்யாதி). (எதிர் சூழல் புதுகை) சேதனவஶீகரணார்த்தமாக எதிராகச் சுற்றித்திரிகை; ஆவது, அந்தர்யாமியாய் இருக்கை. த்விதீய சங்காபரிஹாரம் (அவனுடைய இத்யாதி). ப்ரதமசங்காபரிஹாரம் (த்ருஷார்த்தன் இத்யாதி).

(கீழில் பஹுவசனம்) என்றது, "பல்லாண்டு" என்கிறத்தைப் பற்ற. (இதுக்கு) "பல்லாயிரத்தாண்டு" என்றதுக்கு. இது "பலகோடி நூறாயிரம்" என்றதுக்கும் உபலக்ஷணம்; மேல் இதுக்கும் பரிஹாரம் சொல்லுகையாலே. கீழில் "பல்லா † (யிரத்தா)ண்டு" என்கிற இடத்தில் அஸங்க்யாத காலதத்த்வம் சொல்லுகையால், அதிலும் குறைந்து "ஆயிரம்" என்றும், "பலகோடி" என்றும் [illegible]காலத்தை இட்டு மங்களாசாஸனம் பண்ணுமது ஆதர கார்ய

---

† [illegible] பிதம் ப்ரக்ஷிப்தம், அ[illegible]த்தஞ்ச.

என்னில்; அவச்சேதகங்களுக்கு ஸங்க்யை இல்லாமையாலே காலாவச்சேத்யத்துக்குத் தொகை இல்லை; ஆகையாலே அருளிச்செய்கிறார். அவச்சேதகங்களாவன:— ஸூர்யபரிஸ்பந்தாதிகள்; அவச்சேத்யங்களாவன:— க்ஷணலவாதிகள். வர்ஷத்துக்கு அவச்சேதகர் தேவர்கள்; அத்தைப் பற்றச் சொன்னார் கீழ்; பல வர்ஷத்துக்கு அவச்சேதகன் ப்ரஹ்மா; அத்தைப் பற்ற அருளிச்செய்கிறார் (பல்லாயிரத்தாண்டு) என்று.

(பலகோடி நூறாயிரம்) என்று ப்ரஹ்மாக்களுக்குத் தொகை இல்லாமையாலே அருளிச்செய்கிறார். காலக்ருத பரிணாமமில்லாத தேசத்தில் உள்ளார்க்கும் ஸ்வஸத்தை உள்ளவளவும் விஷய வைலக்ஷண்யத்தைப் பற்ற அதிசங்கையும் மங்களாசாஸனமும் நித்யமாய்ச் செல்லா நின்றது; காலக்ருத பரிணாமமுள்ள தேசத்திலே இருக்கிறவர்க்கு அதிசங்கையும், அத்தால் வந்த பயமும், பயநிவ்ருத்திக்காகக் காலத்தைப் பெருக்கி, இக்காலமுள்ளதனையும் இப்படி மங்களாசாஸனம் பண்ணச் சொல்லவேணுமோ?

---

மாகக் கூடாது, ஸமாதிக காலங்களை இட்டு மங்களாசாஸனம் பண்ணும்மதுவே ஆதராதிசயகார்யமாகையாலே என்று இச் சங்கைக்குக் கருத்து, ‡ "யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்" என்கிற ஶ்ருதியில், ஸர்வவிசேஷ்யக ஜ்ஞாநத்வ ரூபேண ஸர்வஜ்ஞாநம் முதல்பதத்துக்கும் ஸர்வப்ரகாரக ஜ்ஞாநத்வரூபேண ஸர்வஜ்ஞாநம் இரண்டாம் பதத்துக்கும் அர்த்தபேதம் சொல்லி, பௌநருக்த்யம் பரிஹரிக்குமாபோலே, "பல்லாண்டு பல்லாண்டு" என்றதுக்கு அஸங்க்யாத தேவவர்ஷத்வேநவும் "பல்லாயிரத்தாண்டு" என்ற இடத்திலே ப்ரஹ்மஸம்பந்த்யஸங்க்யாத வர்ஷத்வேனவும், "பலகோடி நூறாயிரம்" என்ற இடத்தில் அஸங்க்யேய ப்ரஹ்மாக்களுடைய அஸங்க்யாத வர்ஷத்வேநவும், காலதத்வமெல்லாம் அர்த்தமாகச் சொல்லி, பௌநருக்த்யம் பரிஹரிக்கிறார் (அவச்சேதங்களுக்கு இத்யாதி). (அவச்சேதங்களுக்கு) காலவ்யாவர்த்தகங்களுக்கு. (தொகை இல்லை) இயத்தா நிஷ்கர்ஷம் இல்லை. அவச்சேதகங்கள் தான் எவை? என்ன, (வர்ஷத்துக்கித்யாதி). (வர்ஷம்) ஸம்வத்ஸரம்.

---

‡ முண்ட. (1-1).

இப்படி மாறிமாறி பயத்தை விளைத்த காலத்தைப் பெருக்கி இதுவே தமக்கு யாத்ரையாய்ச் செல்லப்புக்கவாறே, 'அவன், "இவருடைய பயத்தைப் பரிஹரிக்க வேணும்" என்று பார்த்து, "புலி கிடந்த தூற்றுக்கஞ்சிக் காவல் தேடுவாரைப் போலே, நீர் நமக்கு அஞ்சக்கடவீரோ! மல்லவர்க்கத்தை நிரஸித்த தோளிருக்கிறபடி பாரீர்!" என்று தோள்வலியைக் காட்டினான்; ராவணநுஜனைக் குறித்து மஹாராஜர்க்குப் பிறந்த பயத்தைப் போக்குகைக்காகத் தம் மிடுக்கைக்காட்ட அவர் பயம் சமிக்கக் காண்கையாலே, "இவ்விஷயத்திலும் பலிக்கும்" என்று மிடுக்கைக் காட்ட, இவர்க்கு இது தானே பயஹேதுவாய்த்து. மஹாராஜர் பயத்தைத் தீர்த்தபடி எங்ஙனே? என்னில் 29. "पिशाचान् दानवान् यक्षान्" (பிஶாசாந் தாநவாந் யக்ஷாந்) கள்ளர், பள்ளிகள், வலையர், என்னுமாபோலே ஹிம்ஸகருடைய அவாந்தர பிதை இருக்கிறபடி. 29. "पृथिव्याञ्चैव राक्षसान्" (ப்ருதிவ்யாஞ்சைவ ராக்ஷஸாந்) லங்கையிலுள்ள ராக்ஷஸரளவன்றிக்கே, பஞ்சாசத் கோடி விஸ்தீர்ணையான பூமியிலுள்ள ராக்ஷஸர்

இப்படி காலத்தைப் பெருக்க வேணுமோ? காலமெல்லாம் என்னலாமே? என்ன, காலக்ருத பரிணாமமுள்ள தேசமென்று ...ற்றுக்காக என்று நின்றுகொண்டு, † "ஸ்நேஹாதஸ்த்தாந ...ர்வ்யஸநிபி:" என்றத்தை உட்கொண்டு, கைமுதிகந்யாயத்தாலே ...க்கிறார் (காலக்ருதேத்யாதி) (மங்களாசாஸனம் பண்ண) என்றது, மங்களாசாஸனம் பண்ணுகையும் என்றபடி.

"மல்லாண்ட திண்டோள்" என்றதுக்கு அவதாரிகை (இப்படி ...யாதி) ‡ ((பார்த்து) என்ற அனர்த்தம், ஸர்வேபூர்வரன் என்று ...ஹார்யம்.) (தூறு) நிகுஞ்ஜம். தோள்வலியைக் காட்டினான் என்று நின்றீர், இது சமிக்கக் கண்டானோ? என்ன, (ராவணநுஜனை ...யாதி). இவ்வாக்யத்தை விவரிக்கிறார் (மஹாராஜரித்யாதி ...ஹேதுவாய்த்து) என்னுமளவும். இந்த சங்கைக்கு (இவ்வார்த்தை) ...ற வாக்யபர்யந்தம் பரிஹாரம். "ஹந்யாம்" என்கையாலே (...ளாலும்) என்றது அர்த்த ஸித்தம். "தாந்" என்கிற ... பஹுவசனத்தாலே எல்லாரையும் கூட்டினதுக்குத்

... பந்ன கோசம். (24). † குண்டலிதம் ப்ரக்ஷிப்தம்.

எல்லாரும் எதிரிகளானாலும், 29. “अङ्गुल्यग्रेण तान् हन्यां” (அங்குல்யக்ரேண தாந் ஹந்யாம்) ஆக, சத்ருவர்க்கங்களெல்லாம் ஒரு கலத்திலே உண்டு எதிரிட்டாலும் இவற்றினுடைய நிரஸனத்துக்கு அஸ்த்ர சஸ்த்ரங்கள் வேணுமோ? க்ஷுத்ர க்ரிமிகளை நிரஸிக்குமோபாதி அங்குல்யக்ரத்தாலே நிரஸிக்க வல்லோம் காணும் என்றார். ஆனால், நம்மை நலிந்த ப்ரதிபக்ஷம் நசியாதே கிடக்கிறதென்? என்னில்; “அழிப்போம்” என்னும் இச்சை இல்லாமை; இச்சை உண்டானால் அழிக்கையில் அருமை இல்லை. அது தனக்கு அடியென்? என்னில்; “உயிரோடே தலைசாய்க்குமானால் அழிக்கிறதென்?” என்னும் இரக்கத்தாலே. இவ்வார்த்தை ராமபாக்யத்தாலே மஹாராஜர் நெஞ்சில் பட்டு பயநிவ்ருத்திக்கு உடலாய்த்து; இவர்க்கு இது தானே பயஹேதுவாய்த்து.

(மல்லாண்ட திண்டோள்) மல்லவர்க்கத்தை ஸ்வாதீனமாகப் பண்ணின திண்ணிய தோள். பிற்பாடரான கம்ஸாதிகளை அனாயாஸேன கொல்லுகையாலே திண்ணிய தோள் என்கிறது. “மல்”

---

தாத்பர்யம் (ஆக இத்யாதி). “இச்சந்” என்றதுக்கு சங்காபரிஹார ரூபேண தாத்பர்யம் (ஆனால் இத்யாதி). (அது தனக்கு) என்றது, இச்சை இல்லாமைக்கு என்றபடி. “யதி வா ராவணஸ் ஸ்வயம்” என்றத்தைப் பற்ற (உயிரோடே இத்யாதி). (இவ்வார்த்தை) இந்த ஶ்லோகம். (ராமபாக்யத்தாலே) என்றதுக்குத் தாத்பர்யம்—மஹாராஜருக்குப் பெருமாளிடத்தில் ப்ரேமாதிக்யத்தாலே இவ்வார்த்தை நெஞ்சிற் படாதே பயஹேதுவாகச் செய்தேயும் விபீஷணபய ஹேதுவான ராமபாக்யத்தாலே என்று. (இது தானே) இந்த பிடுக்குத்தானே. ஆகையாலே மங்களாசாஸனம் பண்ணுகைக்குத் தோள்வலியை இட்டு ஸம்போதிக்கிறார் என்று “மல்லாண்ட திண்டோள்” என்றத்தோடே கூட்டுவது.

(மல்லவர்க்கம்) என்றது, விகட ஸகல தௌஸலப்ரப்ருதிகளை. “ஆண்ட” என்றதின் தாத்பர்யம் (ஸ்வாதீநமாக) என்றது. மல்லரை ஆளும்போது திண்மை அர்த்தஸித்தமன்றோ? “திண்” என்று விசேஷிப்பானென்? என்ன, (பிற்பாடரித்யாதி). “மல்” என்று சக்தி விசேஷமாய், ஆளுகை—உடைமையாய்; திண்மை—

என்று மிடுக்காய், அத்தை அடிமை கொண்ட திண்ணிய தோள் என்கிறதாகவுமாம். இம்மிடுக்கு இவர்க்கு பயமாவது ஆவானென்? என்னில்; சூரனை புத்ரனைக் கண்டால், பெற்றதாய், "இவன் மதியாதே யுத்தத்திலே புகும், என் வருகிறதோ?" என்று பயப்படுமாபோலே பயப்படுகை உக்தம். "மல்லரை அழியச்செய்த தோள்" என்று இவர் அறிந்தபடி என்? என்னில்; காதில் தோடு வாங்கினாலும் "தோடிட்ட காது" என்று அறியுமாபோலே.

(மணிவண்ணா) நீலமணிபோலே இருக்கிற திருநிறத்தை உடையவனே! அதிரமணீயமாய் அத்யுஜ்ஜ்வலமாய் அதிஸுகுமாரமாய் அதிஸுலபமாயிருந்துள்ள வடிவைக் கொண்டு முரட்டஸுரர்களுடைய ஸகாசத்திலே செல்லுவதே!, 30. "क्व यौवनोन्मुखीभूत-सुकुमारतनुर्हरिः। क्व वज्रकठिनाऽभोग शरीरोऽयं महासुरः॥" (க்வ யௌவநோந்முகீபூதஸுகுமாரதநுர் ஹரி:। க்வ வஜ்ரகடிநாऽபோக ஶரீரோऽயம் மஹாஸுர:) என்று, வெண்ணெயமுது செய்து வளர்ந்த சிறுபிள்ளையை, முரட்டு வடிவையுடைய மல்லரோடே ஒக்கப் பொர

---

காடிந்யமாய், மிடுக்கை உடைத்தான திண்ணிய தோள் என்கிறார் (மல் என்று இத்யாதி). (மதியாதே) எண்ணாதே. முதல் அர்த்தத்தைச் சங்கித்துப் பரிஹரிக்கிறார் (மல்லரை இத்யாதி). க்ருஷ்ணாவதாரத்தில் விக்ரஹம் போலே ஸேவை ஸாதிக்கையாலே, அருளிச் செய்கிறார் (காதில் தோடு இத்யாதி). (தோடு) தாடங்கம்.

சப்தார்த்தம் (நீலமணி இத்யாதி). கீழ்ப்பதத்தோடே கூட்டி "மணிவண்ணா" என்றதுக்கு, அர்த்தாந்தரம் (அதிரமணீயம் இத்யாதி). "வண்ணம்"—வடிவு. (ரமணீயம்) மநோஹரம். (உஜ்வலம்) தேஜிஷ்டம். (ஸுகுமாரம்) என்றது, ஸ்நிக்தத்தையாலே. (ஸுலபம்) என்றது, முடிந்தாளலாம் என்றிருக்கையாலே. ஸௌகுமார்யத்துக்கு அஞ்சிக் கூப்பிட்டார்கள் உண்டோ? என்ன; (க்வ யௌவந இத்யாதி). ப்ரலோகார்த்தம் (வெண்ணெய் இத்யாதி). (பொர) யுத்தம் பண்ண. முந்தின (என்று) என்ற பதத்தை "ந ஸமம்" என்றதுக்கு முன்னே கூட்டுவது. (என்று) என்கிற இரண்டு பதத்திலும் சகாரம் அத்யாஹார்யம்—ஸௌலப்யம் பயஹேதுவாகிறபடியை ஶங்காபூர்வகமாக உபபாதிக்கிறார் (ஸௌகுமார்யம் இத்யாதி).

விடுவதே!, 31. "न समं युद्धमित्याहुः" (ந ஸமம் யுத்தமித்யாஹு:) என்று கூப்பிட்டார்களிறே ஸ்ரீமதுரையில் பெண்கள். ஸௌகுமார்யம் பயஹேதுவாகிறது, ஸௌலப்யம் பயஹேதுவோ? என்னில்; அஸுர நிரஸநார்த்தமாக தேவதைகள் சரணாகதியைப் பண்ணின மாத்ரத்திலே, ஸுலபனாய் அஸுரர்களாஸ்யத்திலே புகும் என்னுமத்தாலே பயப்படுகிறார்.

"ஆஸ்ரிதர்க்குத் தஞ்சமான ஸௌலப்யத்தையும் மிடுக்கையும் கண்டால் நீர் இங்ஙனே அஞ்சக்கடவீரோ?" என்ன (உன் செவ்வடி) அது என்றால் வருகிறதன்று. உன் வடிவின் வைலக்ஷண்யத்தாலே வருகிறது. நீதான் உன்னைக் கண்ணாடிப்புறத்திலே கண்டால், ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனான நீயும் கலங்கிப் பரியவேண்டும்படி அன்றோ உன் வடிவு

"மல்லாண்ட" என்கிற பதத்தையும் "மணிவண்ணா" என்கிற பதத்தின் இரண்டாம் அர்த்தத்தையும் அவலம்பித்து, அவதாரிகை (ஆஸ்ரிதர்க்கித்யாதி). நமக்கு உபயுக்தமான என்று கூட்டுவது, ஆஸ்ரிதர்க்கு ஸௌலப்யம், நமக்கு மிடுக்கு என்று யோஜிப்பது. வ்யாவ்ருத்தி பூர்வகமாக "உன்" என்றதுக்குத் தாத்பர்யம் (அதுவித்யாதி). உக்தார்த்தத்தைக் கைமுதிக ந்யாயேந த்ருடீகரிக்கிறார் (நீதானித்யாதி). "அடி" என்றத்தைத் திருமேனிக்கு உபலக்ஷணமாக்கி, "வடிவு" என்றது. மிடுக்கும் ஸௌகுமார்ய ஸௌலப்யங்களும் பயஹேதுவானவோபாதி, ஆர்ஜவ ஸௌந்தர்யங்களும் பயஹேதுக்கள் என்று அருளிச்செய்கிறார் (குடிலேத்யாதி). திருமேனி என்னாதே, "அடி" என்பானென்? என்ன, (சேஷபூதனித்யாதி). ஆஸ்ரயண வேளையிலன்றோ திருவடிகளைப் பற்றுவது; மங்களாசாஸந வேளையில் இப்படி சொல்லுவானென்? என்ன, (ஆஸ்ரயணேத்யாதி). † "அடிக்கீழ்" என்கையாலும், ‡ "பாதபற்புத்தலைசேர்த்து" என்கையாலும். § "அடிபோற்றி" என்கையாலும், எப்போதும் அடிவிடார்களிறே என்று கருத்து. ப்ரமாணகதநபூர்வகமாகத் தாத்பர்யம் (அரும்பினையித்யாதி). அரும்பினையலரை—முகுளமென்னவுமாய் மலரென்னவுமாய் இருக்கை ஸ்வபாவமாகையாலே நித்யயௌவநம் பலிதம்.

† திருவாய். (6-10-10). ‡ திருவாய். (2-9-1). § திருப்பாவை. (24).

இருப்பது. (செவ்வடி) செவ்வியஅடி என்னுதல்; சிவந்த அடி என்னுதல். குடிலஹ்ருதயர்க்கும் செவ்விதாகையும், திருமேனிக்குப் பரபாகமாகையும், இரண்டும் இவர்க்கு பயஸ்த்தானமாகிறதிறே. சேஷபூதன் சேஷிவடிவைக் கண்டால் "திருவடிகள்" என்றிறே வ்யவஹரிப்பது. ஆஶ்ரயண வேளையோடு போக வேளையோடு மங்களா ஶாஸன வேளையோடு வாசியற ஆஶ்ரிதர் இழியும் துறை திருவடிகளிறே. (செவ்வி) * "அரும்பினையலரை" என்னுமாபோலே நித்ய யௌவநமாயிருக்கை.

(திருக்காப்பு) குறைவற்ற ரக்ஷை. உண்டான அமங்களங்கள் போகைக்கும் இல்லாத மங்களங்கள் உண்டாகைக்கும் பண்ணின ரக்ஷை என்கை. ஒரு க்ரியையின்றிக்கே குறைந்திருப்பானென்? என்னில்; தாழ்ந்தாரைக் குறித்து "ரக்ஷை உண்டாயிடுக" என்றும், ஸமரைக் குறித்தும் பரிச்சிந்நமான உத்கர்ஷமுடையாரைக்

"திரு" என்றதுக்கர்த்தம் (குறைவற்ற) என்றது. இத்தை விவரிக்கிறார் (உண்டான இத்யாதி). (உண்டாயிடுக) என்றது, அநுக்ரஹம் தோற்றச் சொல்லுகை. (உண்டாக வேணும்) என்றது, ப்ரார்த்தனை தோற்றச் சொல்லுகை. இப்படிச் சொல்லுகைக்கு நியாமகம் (வேதாந்தேத்யாதி). (நாட்டையடைய) என்றது, நாட்டில் வித்வஜ்ஜநங்களை எல்லாம் என்றபடி. (வென்று) ஜயித்து. (லக்ஷணத்தில் விழ) என்றது, லக்ஷணோபேதமாக என்றபடி.

மேழில், சங்கைக்குப் பரிஹாராந்தரம் (இன்னமுமித்யாதி).

மூன்றும் பரிஹாரம் (எல்லாப் பாட்டுக்குமித்யாதி). (முகவுரை) ஸ்ரீமுகங்களிலே "ஸ்ரீமதே ராமாநுஜாய நம:" என்று மங்களார்த்தமாக முன்னே சொல்லும் பாசுரம். அதில் அர்த்தஸித்தமாகையால் "அஸ்து" என்கிற "க்ரியை" இல்லாதாப்போலே இங்கும் என்று சொல்வது; அதாவது:— ப்ரபந்தாதியில் "ஆசீர்நமஸ்க்ரியா வஸ்து நிர்தேஶோ வாபிதந்முகம்" என்கிற ஸூத்ரந்யாயத்தாலே நமஸ்காராசீஸ்ஸுக்கள் வேண்டுகையால், மங்களார்த்தமாக "காப்பு" என்று பாட்டுக்களுக்கு முன்னே சொல்லப்படும் பாசுரம் என்கையாகையால் இதுக்கு க்ரியை வேண்டாவென்று கருத்து. அன்றிக்கே,

* பெரிய திருமொழி. (7-10-1).

குறித்தும் "ரக்ஷை உண்டாகவேணும்" என்றும் சொல்லக்கடவது; தமக்கும் ஈஶ்வரனுக்கும் உண்டான நிரவதிகமான உத்கர்ஷாபகர்ஷத்தில் பாசுரமில்லாமையாலே குறைந்து கிடக்கிறது; வேதாந்தத்தாலே நாட்டையடைய வென்றிருக்கிற இவர் லக்ஷணத்தில் விழக்கவிபாட மாட்டாமை அன்றிறே.

இன்னமும், இவ்விஷயத்திலே மங்களாஶாஸனம் பண்ண இழிந்தார்க்கு "மங்களாசாஸநம் பண்ணினோம்" என்று கைவாங்க வொண்ணாத அபர்யாப்திக்கு ஸூசகமாயிருக்கிறது.

எல்லாப் பாட்டுக்கும் இதுதான் முகவுரை போலே இருக்கிறது. [மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம், உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு] என்று அந்வயம். 1.

---

2. அடியோமோடும்நின்னோடும் பிரிவின்றியாயிரம்பல்லாண்டு
வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு
வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு
படைபோர்புக்குமுழங்குமப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே.

பதவுரை:— அடியோமோடும்—தாஸரான எங்களோடும், நின்னோடும்—ஸ்வாமியான உன்னோடும், பிரிவின்றி—பிரிவில்லாமல் இருக்கும் ஸம்பந்தம், ஆயிரம் பல்லாண்டு—எந்நாளும் நித்யமாய்ச் செல்லவேண்டும், வடிவாய்—அழகே உருவெடுத்தவளும் ஸர்வாபரண

---

முகவுரையாவது:— ராஜக்ருஹங்களில் கர்ணிகர்கள் ஆய வ்யயங்களை எழுதும் பத்ரிகைகளுக்கு முன்னே இன்னவர்ஷம், இன்னமாஸம், என்று எழுதும் பாசுரம். அதுதான் முதலடியில் ஒருகாலெழுதப்பட்டதாயினும் முடிய அந்வயித்துக் கிடக்குமிறே; அதுபோலே இப்பாட்டும் மேற்பாட்டுக்களுடைய அந்வயிக்கும்போது க்ரியையுண்டாய், நிராகாங்க்ஷமும் ஆகையாலே, மேலோடே அந்விதமாமிறே; ஆகையால், இந்தப் பாட்டில் ஒரு க்ரியை இல்லாமல் இருக்கிறதென்றுமாம். முகவுரை:— வேதாத்யந்தங்களில் ப்ரணவம போலே இந்த காதாத்வயமும் இதிவா. (முகவரை) என்று பாடமாம்போது, நாயகக்கல்லு போலே பாட்டுக்களுக்கெல்லாம் ப்ரகாசகமாய் இருக்கும் என்று அர்த்தவிசேஷம் அருளிச்செய்தார் என்று கருத்து.

பூஷிதையுமான, வலமார்பினில் வாழ்கின்ற—வலத்திருமார்பில் நித்ய வாஸம் பண்ணுகிற, மங்கை—நங்கை; ஸ்த்ரீத்வத்தில் பரிபூர்ண மானவள்; நித்ய யௌவனத்தை உடையவள், ('உம்' என்பதினால் பூமி நீளாதேவிகளும் காப்பிடப்படுகிறார்கள்.) பல்லாண்டு—நித்ய மாகக் கூடி இருக்கவேண்டும், வடிவார் சோதி—பகவானுடைய திவ்ய சரீரத்தையும் சூழும் ஒளியையுடைய, வலத்துறையும்—உன் வலது திருக்கையில் நித்ய வாஸம் பண்ணுகிற, சுடராழி—எதிரிகளை எரிக்கும் சக்கரத்தாழ்வானும், பல்லாண்டு—சாச்வதமாய்ச் சேர்ந்து இருக்கவேண்டும், படை—ஆயுதமாய், போர் புக்கு—போரிலே புகுந்து, முழங்கும்—சப்திக்கும், அப்பாஞ்ச சன்னியமும்—அந்த பாஞ்ச சன்னியம் என்று பெயர் பெற்ற சங்கமும், பல்லாண்டே—நித்யமாய் இருக்கவேண்டும்.

அவ:— இரண்டாம் பாட்டு. கீழ், விக்ரஹயோகத்தையும் [illegible]யோகத்தையும் குறித்து மங்களாசாஸனம் பண்ணினார்; இதில், [illegible]விபூதியோகத்தைக் குறித்து மங்களாசாஸனம் பண்ணுகிறார்.

வ்யா:— (அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றியாயிரம் பல்லாண்டு) (அடியோமோடும்) தம்மைப் பேணாதே மங்களாசாஸனம் பண்ணுகிற இவர், தம்முடைய நித்யதையை ப்ரார்த்திப்பானென்?

---

இரண்டாம் பாட்டு. (அடியோமோடுமித்யாதி). வ்ருத்தாநுவாத பூர்வமாக ஸங்கதி அருளிச்செய்கிறார் (கீழித்யாதி). "அடியோம், [illegible], ஆழி, அப்பாஞ்சசன்னியம்" என்கையாலே, உபயவிபூதி [illegible]கம் சொல்லிற்று.

நாலடியும் நாலு வாக்யங்களென்கைக்காக ப்ரதமோபாதாநம் (அடியோமித்யாதி). ப்ரதிபதார்த்தம் அருளிச்செய்வதாக புந: [illegible]பாதாநம் (அடியோமோடும்) என்றது. பல்லாண்டென்றது, [illegible]பாராதே அத்தலையில் ஸம்ருத்தி நித்யமாய்ச் செல்ல வேணு[illegible]க்குமவன் வ்யவஹாரமென்று நின்றீர்; இங்கே "அடியோ[illegible]" என்று தம்மைப் பேணக்கூடுமோ? என்கிற ஶங்கையை [illegible]த்து, இதுவும் அத்தலைக்காகவே என்று த்ருஷ்டாந்த [illegible]பரிஹரிக்கிறார் (தம்மையித்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே). [illegible]போது பரிவாரில்லையோ? என்ன, (அத்தலைக்கித்யாதி).

என்னில்; ஒரு ஸாத்யத்தைக் குறித்து ஸாதநாநுஷ்டாநம் பண்ணுமவர்கள், 32. " आयुराशास्ते " (ஆயுராசாஸ்தே) என்று ஆயுஸ்ஸை ததங்கமாக ப்ரார்த்தியா நின்றார்களிறே; அதுபோலே, "மங்களாசாஸனத்துக்குத் தாம் வேணும்" என்று தம்மையும் கூட்டிக்கொள்கிறார் அத்தலைக்குப் பரிகைக்குத் தாமல்லது இல்லாமையாலே; தாமில்லாதபோது அத்தலைக்கு அபாயம் ஸித்தமென்றிருக்கிறாரிறே. ஆனால் என்னோடும் என்னாதே "அடியோமோடும்" என்பானென்? என்னில்; தேஹாத்மாபிமாநி, தேஹத்தில் ஆத்மபுத்தி பண்ணும்; மாயாவாதி, அஹங்காரத்தில் ஆத்மபுத்தி பண்ணும்; ஸாங்க்யன், "அஹமர்த்தம் ப்ராக்ருதே:பரம் ஸ்வயப்ப்ரகாஶம் ஸ்வதந்த்ரம்" என்றிருக்கும்; அங்ஙன் கலங்கினவரன்றிறே இவர்; முறை அறியுமவராகையாலே "அடியோமோடும்" என்கிறார். "கர்மௌபாதிகமாக வந்த அவஸ்தைகளெல்லாம் மறைந்தாலும் மறையாத ஸ்வபாவம் தாஸ்யம்" என்றிருக்குமவரிறே இவர். ஆனால் "அடியோம்" என்கிற பஹுவசனத்துக்குக் கருத்தென்? என்னில்; தாம் தமியராய் நின்று மங்களாசாஸனம் பண்ணுமத்தால் பர்யாப்தி பிறவாமையாலும், ஸர்வாத்மாக்களுக்கும் சேஷத்வம் அவிசிஷ்டமாகையாலும், இப்ரதிபத்தி அவர்களுக்கின்றிக்கே இருக்கச்செய்தேயும் ஸ்வாபிப்ராயத்தாலே அருளிச்செய்கிறார். (நின்னோடும்) வ்யாவ்ருத்தமான சேஷித்வம் மங்களாவஹமாகையாலே ஸர்வரும் கூடிப்பரிந்தாலும் போராதபடி

---

வ்யாமோஹத்தாலே என்று கருத்து. மேலே "நின்னோடும்" என்றிருக்கையாலே, அதுக்கநுகுணமாக என்னோடுமென்னாதொழிவானென்? என்கிற ஶங்கையை அநுவதித்து, அது ஸர்வஸாதாரணமாகையாலே விஶேஷிக்க வேணுமென்று பரிஹரிக்கிறார் (ஆனாலித்யாதி ஏழு வாக்யத்தாலே). (அஹங்காரத்திலே) அந்த:கரணத்திலே. (அஹமர்த்தம்) ஆத்மா. (முறை) ஶேஷத்வம். இவர் தெளிந்தவராகைக்கு ஶேஷத்வம் ஸ்வாபாவிகமோவென்ன? (கர்மௌபாதிகமித்யாதி). (ஆனால்) என்றது, இவரொருவருமே தெளிந்தவரானாலென்றபடி. இந்த ஶங்கைக்கு ஹேதுத்வயஸமுச்சயேந பரிஹாரம் (தமியரித்யாதி). (அவிசிஷ்டம்) விசேஷமின்றிக்கே எல்லார்க்கும் ஒத்திருக்கை. "அடியோமோடும்" என்று சேஷபூதரைச் சொல்லி "நின்னோடும்" என்கையாலே தத்ப்ரதிஸம்பந்தித்வேந தாத்பர்யம்

யாயிறே இருப்பது. இத்தால், திவ்யாத்ம ஸ்வரூபத்தைப்பற்றி மங்களாசாஸனம் பண்ணுகிறார். (பிரிவின்றி) இரண்டுதலையும் நித்ய மானவோபாதி, ஸம்பந்தமும் நித்யமாயிறே இருப்பது; அதுவும் தம்முடைய மங்களாசாஸனத்தாலே உண்டாவதாக நினைத்திருக்கிறார். (ஆயிரம் பல்லாண்டு) காலதத்வமுள்ளதனையும் இஸ்ஸம்பந்தம் நித்ய மாய்ச் செல்லவேணுமென்கிறார்.

(வடிவாயித்யாதி) உண்டான அமங்களங்கள் போகைக்கும் இல்லாத மங்களங்கள் உண்டாகைக்கும் தன் கடாக்ஷமே அமைந் திருக்கிற இவள், * "அகலகில்லேன் இறையும்" என்று நம்மைப் பிரியமாட்டாதே இருக்க, நமக்கு வருவதொரு அமங்களமுண்டோ? என்றிய படுகிறீர்? என்ன; தேவரீரும் பிராட்டியுமான சேர்த்தி நித்யமாய்ச் செல்லவேணுமென்று மங்களாசாஸனம் பண்ணுகிறார். (வடிவாய்) "வடிவு" என்று, நிறமாய், இவளோட்டைச் சேர்த்தி யாலே திருமேனிக்குண்டான புகரைச் சொல்லுகிறது. 33. "अप्रमेयं हि तत्तेजो यस्य सा जनकात्मजा" (அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா) என்று, ஸ்ரீஜனகராஜன் திருமகளை எனக்கென்ன இட்டுப்பிறந்த தத்த்வத்தோடே எதிரிட்டு வெல்ல நினைக்கிறாயோ? என்றானிறே மாரீசன். 34. "श्रद्धया देवो देवत्वमश्नुते" (ஶ்ரத்தயா

---

(வ்யாவ்ருத்தேத்யாதி). (வ்யாவ்ருத்தமான ஶேஷித்வம்) நிருபாதிக ஸர்வஶேஷித்வம். நீ மங்களஸம்பாதகனுகையாலே, சேதனரெல்லாம் கூடிப்பரிந்தாலும் போராமையாலே அடியோங்களைப் போலே நீயும் உன்னைப் பரிகைக்கு நித்யமாய்ச் செல்லவேணுமென்று இவ்வாக்யத் துக்குத் தாத்பர்யம். கீழ்ப்பாட்டில், "உன் செவ்வடி" என்று அத் தலைக்கு மங்களாஶாஸனம் பண்ணியிருக்க, புந: "நின்னோடும்" என்பானென்? என்னில், (இத்தாலித்யாதி). (இத்தால்) என்றது, "நின்னோடும்" என்றத்தாலே என்றபடி. (பிரிவின்றி) என்றது, பிரிவின்றிக்கே இருக்கையைச் சொல்லுகிறது. † "ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும் அல்லபுறத்தினுள்ளும் நீக்கமின்றி எங்கும் நின்றாய்!" என்கிறபடியே, ஜீவ பரஸம்பந்தம் நித்யமாயிருக்க, (பிரிவின்றி) என்றதுக்கு ப்ரஸக்தியேது? என்ன அருளிச்செய்கிறார் (இரண்டு தலையுமித்யாதி).

---

* திருவாய். (6-10-10). † திருவாய். (4-7-6).

தேவோ தேவத்வமஶ்நுதே) என்னக்கடவதிறே. ஆனால் இவளாலே அவனுக்கு உத்கர்ஷமாகில் அவனுடைய ஶேஷித்வம் குலையாதோ? என்னில்; மாணிக்கம் ஒளியாலே பெருவிலையனாங்காட்டில் மாணிக்கத்தினுடைய ப்ராதாந்யமழியுமோ? பூ மணத்தாலே பெருவிலையனாங்காட்டில் பூவுக்கு ப்ராதாந்யமழியுமோ? (வடிவாய்) ஸ்ரீகௌஸ்துபாதிகள் போலே ஆபரணபூதையாய், அத்தால் வந்த அழகைச் சொல்லவுமாம். (நின் வலமார்பினில்) ஸர்வாதிகனான உன்னுடைய வலமார்பினில். ஸர்வயஜ்ஞமயமாய் யோகிசிந்த்யமாயிறே வடிவிருப்பது. (வலமார்பினில்) அணைக்கைக்கு அணித்தாயிருக்கை. (வாழ்கின்ற) மார்விலிருப்புத் தானே நித்யமாய் போகரூபமாயிருக்கை. அம்மார்விலே இருக்கச் செய்தேயும் "இறையும்—அகலகில்லேன்" என்று அதிசங்கை பண்ணும்படியாயிறே யோக்யதை இருப்பது. (மங்கையும்) 35. "युवतिश्च कुमारिणी" (யுவதிஶ்ச குமாரிணீ) என்கிற பருவத்தைச்

---

இரண்டாம் பாதத்துக்கு ஶங்காஸமாதாந முகேந பாவம் (உண்டானவித்யாதி). (உண்டான அமங்களங்கள் போகைக்கும் இல்லாத மங்களங்களுண்டாகைக்கும்) என்றது, ஆழ்வாருடைய ப்ரேமஸ்வபாவத்தைப்பற்ற; அன்றிக்கே, லோகத்தார்க்குண்டான அமங்களங்கள் போகைக்கும் என்று கூட்டுவது. "நின்வலமார்பில் வாழ்கின்ற" என்கிற விஶேஷணத்தைக் கடாக்ஷித்து, (தேவரீரும் பிராட்டியுமான சேர்த்தி) என்றது. அவ்வுடைய சேர்த்தி நிறங் கொடுக்கும் என்னுமதுக்கு ப்ரமாணம் (அப்ரமேயமித்யாதி). அப்ரமேயமென்றதுக்கு பாவம் (எதிரிட்டு வெல்ல நினைக்கிறாயோ?) என்றது. ப்ரமாணாந்தரம் (ஶ்ரத்தயா இத்யாதி). (ஶேஷித்வப்) ப்ராதாந்யம். "வடிவாய்" என்றத்தை நிறமுடைத்தாயிருக்கிற என்று திருமார்புக்கு விஶேஷணமாக்கிக் கீழருளிச்செய்து, "மங்கை" என்றதுக்கு விஶேஷணமாக்கி அர்த்தாந்தரம் (ஸ்ரீகௌஸ்துபேத்யாதி). "நின்" என்றதுக்குத் தாத்பர்யம் (ஸர்வேத்யாதி). ஸர்வாதிக்யத்துக்கு ப்ரமாணம்(ஸர்வயஜ்ஞேத்யாதி). இவ்வாக்யத்துக்குக் கருத்து, ஶ்ருதியினுடைய பூர்வோத்தர பாகங்களில் ப்ரதிபாத்யங்களான கர்மோபாஸனங்களுக்கு விஷயமிறே என்று. "மார்பு" என்றதுக்கு வாஸனை (ஸர்வயஜ்ஞேத்யாதி) என்னவுமாம். "வலம்" என்றதுக்கு ஸூசநை (அணைக்கைக்கு

சொல்லுகிறது. 36. “**युवा कुमारः**” (யுவா குமார:) என்று இவ் விரண்டவஸ்தையுமுண்டே அவனுக்கு; இவளுக்கு கௌமாரா வஸ்த்தையால் வந்த மௌக்த்யமே உள்ளது. யுவதியுமாகக்கடவள் எங்ஙனே? என்னில்; போகஸ்ரோதஸ்ஸில் வந்தால் இவள் தளர்த்திக்கு அவன் கைகொடுக்க வேண்டும்படியான மௌக்த்யத்தைச் சொல்லுகிறது. “மங்கையும்” என்கிற சப்தத்தாலே, மஹிஷ்யந் தரத்தைச் சொல்லுதல்; மங்களாவஹையான இவளும் ஆசாஸ்யை என்னுதல். (பல்லாண்டு) காலதத்த்வமுள்ளதனையும் இச்சேர்த்தி நித்யமாய்ச் செல்லவேணும்.

(வடிவார்சோதியித்யாதி) இச்சேர்த்திக்கு ஒருதீங்கு வாராதபடி கல்மதிளிட்டாற்போலே இருக்கிற ஆழ்வார்களைப் பாரீர்! என்ன, அவர்களோட்டைச் சேர்த்திக்கு என்ன தீங்கு வருகிறதோ? என்று மங்களாசாஸனம் பண்ணுகிறார். (வடிவார்சோதி) காளமேகநிபஶ்யாமமான திருமேனி, ஸ்வதேஜஸ்ஸாலே வ்யாப்தமாம்படி இருக்கை. 37. “**पुरुषं कृष्णपिङ्गलं**” (புருஷம் க்ருஷ்ண பிங்களம்) என்னும்படியாயிறேயிருப்பது. தேஜோராசியாயிருக்கும் வடிவை உடையவனென்னவுமாம். (வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு) வலவருகே நித்ய வாஸம் பண்ணுமவனாய், பிறர்க்கு அநபிபவநீயனுயிருக்கிற

---

இத்யாதி). (அணித்து) ஸமீபம், உறைகின்ற என்னாதே “வாழ்கின்ற” எனபானென்? என்ன, (மார்விலிருப்பு இத்யாதி). இதில் வர்த்தமானார்த்தம் (நித்யமாயித்யாதி). போகரூபதையை உபபாதிக்கிறார் (அம்மார்விலேயித்யாதி). எடுத்த ப்ரமாணத்துக்கு வ்யாவ்ருத்தி பூர்வகம் அர்த்தம் (யுவா குமார: இத்யாதி). சகாரத்தை அப்ராதாந்யத்திலேயாக்கி, யுவதியுமாகக் கடவள் என்கிறார் (இவளுக் இத்யாதி). (தளர்த்தி) ஶ்ரமம். அநுக்த ஸமுச்சயமாகவும் சேர்த்தியோடே ஸமுச்சயமாகவும் அருளிச்செய்கிறார் (சப்தத்தாலே இத்யாதி). (ஆஶாஸ்யை) என்றது, மங்களாசாஸநத்துக்கு விஷயபூதை என்றபடி.

மூன்றாமடிக்கு ஶங்காஸமாதானமுகேந தாத்பர்யம் (இச்சேர்த்திக்கித்யாதி). (இச்சேர்த்திக்கு) என்றது, மங்கையும் நானுமான சேர்த்திக்கென்றபடி. (ஆழ்வார்களை) என்ற பஹுவசநம் “மங்கையும்”

ஆழ்வானோட்டைச் சேர்த்தி நித்யமாய்ச் செல்ல வேணுமென்கிறார். "ஆழியும்" என்கிற சமுச்சயத்தாலே, ஆயுதாகாரத்தாலே ரக்ஷகமாகக் காட்ட, ஆபரண புத்தியாலே அவனையும் குறித்து மங்களாசாஸநம் பண்ணுகிறாரென்கை.

(படைபோரித்யாதி) நம் கையை விடாதே, த்வநியாலே எதிரிகளை அழிக்கும் இவனைப் பாரீர்! என்ன; (படைபோர்புக்கு முழங்கும்) ஸேனையையுடைய யுத்தத்திலே புக்கு முழங்குமென்னுதல்; யுத்தத்திலே ஆயுதமாய்ப் புக்கு முழங்குமென்னுதல். (முழங்கும்) 38. "स घोषोधार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत्" (ஸ கோஷோ தார்த்தராஷ்ட்-ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்) என்றும், 39. "यस्य नादेन दैत्यानां बलहानिरजायत" (யஸ்ய நாதேந தைத்யாநாம் டலஹாநிரஜாயத) என்றும் ப்ரதிகூலர் மண்ணுண்ணும்படியும் அநுகூலர் வாழும்படியுமாயிறே த்வநியிருப்பது. இத்வநி இவர்க்கு பயஸ்த்தாநமானபடி என்? என்னில்; த்வநி வழியே நின்று இடங்காட்டிக் கொடுக்குமென்று பயப்படுகிறார். (அப்பாஞ்சசன்னியமும்) முன்னில்லையாயிருக்க

---

என்றவிடத்தில் மஹிஷ்யந்தர ஸமுச்சயமாகச் சொன்னாற்போலே, இங்கும் "ஆழியும்" என்ற சகாரம் நந்தகாதிகளைச் சொல்லிற்றாகவுமொருயோஜனை திருவுள்ளம் பற்றி அருளிச்செய்கிறாரென்று கண்டு கொள்வது. "வடிவு" என்றதுக்கு இரண்டர்த்தம்: எம்பெருமான் திருமேனியாதல், ஆழ்வார் திருமேனியாதல். முதலர்த்தம், (காளமேகேத்யாதி). (ஸ்வதேஜஸ்ஸாலே) என்றது, ஆழ்வாருடைய தேஜஸ்ஸாலே என்றபடி. ஶ்யாமமான திருமேனியை ஆழ்வாருடைய தேஜஸ்ஸு முட்டாக்கிடுகையாலே வந்த பாபாகத்துக்கு ப்ரமாணம் (புருஷமித்யாதி). இரண்டாமர்த்தம் (தேஜோராஶி இத்யாதி) (சோதி-ஆர்-வடிவு) என்று இப்பக்ஷத்தில் அந்வயம். சுடர் பததாத்பர்யம் (பிறர்க்கித்யாதி). ஆக "ஆழியும்" என்ற சகாரத்தாலே சொல்லுகிற நந்தகாதிகளுடைய சேர்த்திக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறாரென்று கருத்து. இந்த சகாரத்தை ப்ராதாந்யபரமாக்கி அர்த்தாந்தரம் அருளிச்செய்கிறார் (ஆழியுமித்யாதி). இப்போது ஆழிபதம் நந்தகாத்யுபலக்ஷணம்.

(நம் கையைவிடாதே) என்கையாலே திருவாழியை வ்யாவர்த்திக்கிறது. "படை" ஸேனையும், ஆயுதமும். முதலர்த்தம் (ஸேனையை

பரோக்ஷநிர்த்தேசம் பண்ணுவானென்? என்னில்; புத்ரனை அலங்கரித்த தாய் "தன் கண் படிலும் கண்ணெச்சிலாம்" என்று பார்க்கக் கூசுமாப்போலே, மங்களாசாஸநம் பண்ணுகிற தம்முடைய கண்களையும் செறித்து முகத்தை மாறவைத்துச் சொல்லுகிறார். அன்று யுத்தத்திற்பிறந்த ப்ரமாதத்துக்கு இன்று மங்களாசாஸநம் பண்ணுகிறாரென்றுமாம்.

இவ்விரண்டு பாட்டும், திருமந்த்ரார்த்தமாயிருக்கிறது. "அடியோமோடும்" என்கிறவிடத்தாலே, ப்ரணவார்த்தத்தைச் சொல்லிற்று; முதற்பாட்டில் "பல்லாண்டு" என்கிற ப்ரதம பதத்தாலே, நமஸ்ஸப்தார்த்தம் சொல்லிற்று; "மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா" என்று, அப்பாட்டில் விக்ரஹயோகத்தையும், சௌர்ய வீர்யாதிகுணயோகத்தையும், இரண்டாம் பாட்டில் விபூதியோகத்தையும் சொல்லுகையாலே, நாராயண சப்தார்த்தம் சொல்லிற்று; "உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு" என்கையாலே, சதுர்த்தியில் ப்ரார்த்திக்கிற அர்த்தத்தைச் சொல்லிற்றாய்த்து. 2.

---

இத்யாதி). இரண்டாமர்த்தம் (யுத்தத்திலேயித்யாதி). இப்பக்ஷத்திலே போரிலே படையாகப்புக்கு என்று அந்வயம். போர்—யுத்தம். (எதிரிகளை அழியச்செய்யும்) என்றதுக்கு ப்ரமாணங்கள் (ஸ கோஷ இத்யாதி). (செறித்து) நெருக்கி; மூடி என்றபடி. முகத்தை மாற வைத்து பரோக்ஷ நிர்த்தேஶம் பண்ணினாரென்றார் கீழ், பூர்வவ்ருத்தாந்தத்தைப் பற்ற தாத்பர்யாந்தரம் (அன்று யுத்தத்திலித்யாதி).

தத்வ ஹித புருஷார்த்த ப்ரதிபாதகமான திருமந்த்ரார்த்தமென்று ப்ரதிஜ்ஞைபண்ணி நின்றுகொண்டு பதங்களிலே ஏறிட்டுக் காட்டுகிறார். (இவ்விரண்டு இத்யாதி அஞ்சுவாக்யத்தாலே). (அடியோமோடுமென்கிற இடத்தாலே) என்றது, இங்கு முதலடியாலே என்றபடி. முதற்பாட்டு வ்யாக்யாநத்திலே "பல்லாண்டு" என்கிற ஶப்தம், ஸ்வரூபத்தையும் ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியையும் ப்ரகாஶிக்குமென்று அருளிச்செய்திருந்தாரேயாகிலும், நமஸ்ஸப்தம்போலே இருப்பதொன்றாகையாலே உபாயத்தைக் காட்டக்கடவதென்று திருவுள்ளம்பற்றி "நமஸ்ஸப்தார்த்தம் சொல்லிற்று" என்கிறார் இங்கே. "அடியோமோடும்" என்ற இடத்தில் ஸ்வரூபமும் "திருக்காப்பு" என்ற இடத்தில் வ்ருத்தியைச் சொல்லுகிறதென்றுமிருக்கையாலே இப்படி கொள்ளவேணும். 2.

3. வாழாள்பட்டுநின்றீருள்ளீரேல்வந்துமண்ணும்மணமும்கொண்மின்
கூழாட்பட்டுநின்றீர்களையெங்கள்குழுவினிற்புகுதலொட்டோம்
ஏழாட்காலும்பழிப்பிலோம்நாங்களிராக்கதர்வாழிலங்கை
பாழாளாகப்படைபொருதானுக்குப்பல்லாண்டுகூறுதுமே.

பதவுரை:—வாழ் ஆள்—கைங்கர்யமாகிற போகத்துக்கு, பட்டு—பொருந்தி, நின்றீர்—நிலைநின்றவர்களாய், உள்ளீரேல்—இருப்பீர்களானால், வந்து—(விரைவாக) வந்து, மண்ணும்—(திருமுளைத் திருநாளைக்குப்) புழுதிமண் சுமக்கையையும், மணமும்—(அந்தக் கலியாணத்திற்கு) அபிமானிகளாய் இருக்கையையும், கொண்மின்—ஸ்வீகரியுங்கள்; கூழ்—சோற்றுக்காக, ஆள் பட்டு—(பிறர்க்கு) அடிமைப்பட்டு, நின்றீர்களை—(எங்கும் பரந்து) நிற்கும் உங்களை, எங்கள்—(அநந்யப்ரயோஜனரான) எங்களுடைய, குழுவினில்—கூட்டத்திலே, புகுதல் ஒட்டோம்—சேரவிடமாட்டோம்; நாங்கள்—நாங்களோவெனில், ஏழ் ஆள் காலும்—முன்னேழ் பின்னேழ் நடுவேழாகிய இருபத்தொரு தலைமுறைகளிலும், பழிப்பு இலோம்—(ஒருவிதமான) குற்றமும் இல்லாதவர்கள்; இராக்கதர்—(ராவணன் முதலிய) ராக்ஷஸர்கள், வாழ்—வாழ்ந்துவந்த, இலங்கை—லங்கையானது, பாழ் ஆள் ஆக—பாழடைந்த ஆளை உடையதாம்படி, படை—யுத்தத்திலே, பொருதானுக்கு—(அன்று) சண்டை செய்தருளிய எம்பிரானுக்கு, பல்லாண்டு கூறுதும்—(இன்றிருந்து) திருப்பல்லாண்டு பாடுமவர்களாயிருக்கிறோம்.

---

மூன்றாம் பாட்டு. (வாழாளித்யாதி) கீழிரண்டு பாட்டுக்கும், மேல் மூன்று பாட்டுக்குமாக, பேடிகாஸங்கதி அருளிச்செய்து கொண்டு, இப்பாட்டில் முதலடியைக் கடாக்ஷித்து, ‡ "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு:" என்கிற ப்ரமாணத்தில், பிற்பட்டவர்கள் முற்பட்டதுக்கு ஹேதுவைச் சொல்லிக்கொண்டு அவதாரிகை (கீழிரண்டு இத்யாதி). ‡ "சதுர்விதா:" என்றதை மூவராகச்சொன்னது, ஆர்த்தனையும், அர்த்தார்த்தியையும் ஒருகோடியாக நினைத்து. அவதாரிகாந்தரம் (ஏக இத்யாதி). மூன்றாமவதாரிகை (அவர்களித்யாதி). மேல் வாக்யத்தில் "காண்கையும், புகுருகையும்" என்று சொல்லுகையாலே, இங்கேயும் அவர்களைக் கண்டு அவர்களோடே

---

‡ கீதை (7-16).

அவ:—மூன்றாம் பாட்டு. (வாழாளித்யாதி) கீழிரண்டு பாட்டாலே தாம் திருப்பல்லாண்டு பாடினார்; இனிமேல், தம்முடைய மங்களா சாஸனத்தாலே தமக்குப் பர்யாப்தி பிறவாமையாலே, 40. "**चतुर्विधा भजन्ते मां**" (சதுர்விதா பஜந்தே மாம்) என்கிறபடியே, ஐஶ்வர்ய பகவச்சரணார்த்திகள் மூவரையும் கூட்டிக்கொள்வாராக நினைத்து, அதில் மங்களாசாஸனத்துக்கு பகவத்ப்ராப்திகாமர் ப்ரத்யாஸந்நராகையாலே அவர்களை அழைக்கிறார். 41. "**एकस्स्वादु न भुञ्जीत**" (ஏகஸ்ஸ்வாது ந புஞ்ஜீத) என்கிற ந்யாயத்தாலே, "இம்மங்களா சாஸன ரஸம் எல்லாரும் புஜிக்கவேணும்" என்னும் நினைவாலே அழைக்கிறாரென்றுமாம்; அவர்களோடே கூட மங்களாசாஸனம் பண்ணுகை தமக்கு தாரகமாகையாலே என்றுமாம். * "அடியார் தங்கள் இன்பமிகுபெருங்குழுவுகண்டு" என்றும், † "அடியார்கள் குழாங்களை—உடன் கூடுவதென்றுகொலோ?" என்றும், கண்ணாலே காண்கையும் அத்திரளிலே புகுருகையும் இவையெல்லாம் உத்தேஶ்யமாயிறே இருப்பது.

வ்யா:—(வாழாள்) என்று, நிரதிசயஸுகரூபமான வ்ருத்தியைச் சொல்லுகிறது. வ்யதிரிக்த விஷயங்களிலடிமை துராராதமாகையாலும், துர்லபமாகையாலும், அத்யல்ப பலமாகையாலும், து:க்கரூபமாயிறேயிருப்பது. 42. "**सर्वं परवशं दुःखं**" (ஸர்வம் பரவசம் து:க்கம்) 43. "**सेवा श्ववृत्तिः**" (ஸேவா ஶ்வவ்ருத்தி:) என்னக்கடவதிறே. இவ்விஷயந்தன்னிலும் ப்ரயோஜநாந்தரபரராயிழிந்தால் பலம் பந்தகமாகையாலும், அநந்யப்ரயோஜநரோபாதி அநவரதபாவனையும் அந்திமப்ரத்யயமும் வேண்டுகையாலும் து:க்கப்ராயமாயிருக்கும்; ஸாதநாந்தர நிஷ்டனுக்கும் கர்த்தவ்ய புத்தியாலே ரஸமில்லை.

கூடவென்று கூட்டுவது. ஆக இவர்களை அழைக்கைக்கு ஹேது மூன்று; அதாவது, அத்தலையில் வைலக்ஷண்யத்தைப் பற்றி வரும் தம்முடைய அபர்யாப்தியாதல், ஸ்வாதுதமமான இதிலுண்டான இவர்களிழவைப்பற்றியாதல், இவர்களோடே கூடாதபோது தம் செல்லாமையைப்பற்றியாதல். மூன்றும் ஹேதுவை ப்ரமாண பூர்வகமாக த்ருடீகரிக்கிறார் (அடியாரித்யாதி). (குழுவு) ஸமூஹம்.

* பெருமாள் திரு. (1-10). † திருவாய் (2-3-10).

இக்குறைகளொன்றுமின்றிக்கே ப்ராப்தவிஷயத்திலே தன்னை பேணாதே பரஸம்ருத்தியை ஆசாஸிக்க, ஸர்வநிரபேக்ஷனான ஈச்வரன் இத்தைக்கண்டு "இதொரு ப்ரேமஸ்வபாவமிருந்தபடியென்?" என்று ப்ரீதனாக, இவனுக்கு அந்த ப்ரீதியே புருஷார்த்தமாயிறே இருப்பது. (பட்டு) என்றது, "உவர்க்கடலில் முத்துப்பட்டது" என்னுமா போலே. "நான்" "எனக்கு" என்றிருக்கிற ஸம்ஸாரத்திலே பகவத்ஸம்ருத்தியை ஆசாஸிக்கும்படி கையொழிந்திருப்பார் சிலரைப் பெறுகையாவது அலப்யலாபம் என்னுமிடம் தோற்ற அருளிச்செய்கிறார். (நின்றீர்) வாயுபரவசமாய்த் திரிகிற த்ருணம் போலே கர்ம பரதந்த்ரனாய்த் திரிகிற ஸம்ஸாரி சேதநனுக்கு பகவத்ஜ்ஞாந பூர்வகமாக தத்ஸம்ருத்தியை ஆசாஸிக்கப் பெற்றாலிறே ஸ்த்திதி உண்டாவது. (உள்ளீரேல்) 44. "स महात्मा सुदुर्लभः" (ஸ மஹாத்மா ஸுதுர்லப:) என்று, அநந்யப்ரயோஜநரைக் கிடையாதென்று ஸர்வேஸ்வரன் கைவிட்ட ஸம்ஸாரமாகையாலே மங்களாசாஸநத்

---

"ஆள்" என்றதுக்கு வாழ்ச்சியை நிரூபகமாகச் சொல்லுமிடத்தில் அவதிசொல்லாமையாலே, வேறு இதில் விஞ்சினதில்லையென்று பலிக்கிறது, அத்தை அருளிச்செய்கிறார் (நிரதிஶயேத்யாதி). இப்படி விசேஷிப்பானென்? உகந்த விஷயத்துக்கு சேஷமாயிருக்கை ஸுகரூபமாகவன்றோ தோற்றுவது? என்ன, (வ்யதிரிக்தேத்யாதி) (துராராதம்) என்றது, துராராத விஷயமென்றபடி. இதரஸேவை து:க்கரூபமாகில் பகவத்விஷயம்தானெல்லார்க்கும் ஸுகரூபமாயிருக்குமோ? என்ன, (இவ்விஷயமித்யாதி). இவ்விஷயம் தன்னிலும் அடிமையென்று ஶேஷம். (அநந்யப்ரயோஜநன்) என்றது, உபாஸகனை. (அந்திம ப்ரத்யயமாவது) அந்திமஸ்ம்ருதி. (ப்ராயம்) என்றது, இதர விஷயங்களை வ்யாவர்த்திக்கைக்காக. (ஸாதநாந்தர நிஷ்டனுக்கும்) என்றது, கீழ் அநந்யப்ரயோஜநனாகச் சொன்ன உபாஸகனுக்கும் என்றபடி. (கர்த்தவ்யபுத்தி) என்றது, சாஸ்த்ர விஹிதமென்கிற நினைவு என்றபடி. ஆக இவ்வளவும் வ்யாவர்த்யங்களை அருளிச்செய்து நிரதிசய ஸுகரூபதையையும் உபபாதிக்கிறார் (இக்குறைகளித்யாதி). (இக்குறைகளொன்றுமின்றிக்கே) என்றதுக்கு, (அந்த ப்ரீதியே புருஷார்த்தமாயிறே இருப்பது) என்றதனோடு அந்வயம். (நிரபேக்ஷனான) என்றது, ஸம்ருத்தியில் ஸர்வஹேது நிரபேக்ஷனான என்றபடி.

துக்கு ஆள்தேட்டமாயிறே இருப்பது. நாகபாசத்தினன்று அடைய மோஹித்துக் கிடக்க, திருவடியும் ஸ்ரீவிபீஷணாழ்வானும் "ப்ராண னுடையாருண்டோ?" என்று தேடினப்போலே, ஸம்ஸாரத்தில் ஸ்வரூபஜ்ஞாநமுடையார் தேட்டமாயிறே இருப்பது. இந்த யதி சப்தத்தாலே, ஸம்ஸாரத்தில் வைஷ்ணவத்வம் துர்லபமென்றதாய்த்து.

அநந்யப்ரயோஜநரான வைஷ்ணவர்களும் "நம்மை விரும்புவார் சிலருண்டாவதே!" என்று ஸந்நிஹிதராக; (வந்து) அவர்களுடைய ஸ்வரூபஸ்வபாவம் ஆராய்வதற்கு முன்பே அவர்களோடே கலந்து கொடு நிற்கவேண்டும்படியான த்வரை சொல்லுகிறது. (மண்ணும் மணமுங்கொண்மின்) என்கிறார். மண்ணுக்கும் மணத்துக்கும் உரியார் அந்தரங்கரான அடியாரிறே. அடிமை விலையோலை எழுதும் போதும் "மண்ணுக்கும் மணத்துக்கும் உரியனாக வேணும்" என்றிறே எழுதுவது. மண்ணுவது:— ஸ்வாமிக்கு ஒரு மங்கள முண்டானால் அங்குரார்ப்பணத்துக்குப் புழுதிமண் சுமக்கை; அந்த

ஆளாகி என்னாமல் "ஆட்பட்டு" என்பானென்? என்னில்; த்ருஷ்டாந்தமுகேந அருளிச்செய்கிறார் (பட்டு என்றது இத்யாதி). போலே இருக்கிறதென்று சேஷம். (உவர்க்கடல்) லவணாப்தி. இத்தை விவரிக்கிறார் (நானெனக்கித்யாதி). (நான்) என்றது, அஹங்காரம். (எனக்கு) என்றது, மமகாரம். இப்போது 'நின்றீர்' என்கையாலே, முன்பு நில்லாமை தோற்றுகிறது; அத்தை விவரிக்கிறார் (வாயு இத்யாதி). "ஏல்" என்கிற யத்யர்த்தத்தை ஸப்ரமாணமாக உபபாதிக்கிறார் (ஸமஹாத்மா இத்யாதி). (அநந்யப்ரயோஜநர்) மங்களாஶாஸநபரர். இதுக்கு த்ருஷ்டாந்தம் (நாகபாஶ இத்யாதி). நாகபாசத்தினன்று அடையமோஹித்ததில்லாமையாலே, (நாகபாஶத்தினன்று) என்றது, ப்ரஹ்மாஸ்த்ர பந்தநத்தினன்று என்றபடி. பலிதம் (இந்த இத்யாதி).

மேலுக்கவதாரிகை (அநந்யேத்யாதி). (உரியார்) ப்ராப்தரானவர். உக்தார்த்தத்தை லோகவ்யவஹாரமுகேந த்ருடீகரிக்கிறார் (அடிமையித்யாதி). (விலையோலை)-க்ரயபத்ரம். (மண்ணுவது) என்றது, மண்கொள்ளுகையாவது என்றபடி. (அந்த ந்யாயத்தாலே) விலையோலை எழுதுகிற ந்யாயத்தாலே என்றபடி. (நம் ஆழ்வார்கள்) என்றது, ஸேனைமுதலியாரையும், திருவாழியாழ்வானையும் அங்குரார்ப்பணத்தினன்றைக்கு "ஆழ்வார் திருநாள்" என்றிறே

ந்பாயத்தாலேயிறே நம் ஆழ்வார்களுக்கு இது க்ருத்யமாகிறது' மணமாவது:— அந்தக் கல்யாணத்துக்குத் தான் அபிமாநியா யிருக்கை. இவ்விரண்டும், ஸர்வ கைங்கர்யத்துக்கும் உபலக்ஷணம். "கொண்மின்" என்றத்தால், அடிமை செய்யுமிடத்தில் கிடந்தானை கண்டேறுகையன்றிக்கே சிலர் தாக்கொள்ளவேணும் என்கையும், தருமவர்களும் "உங்களதான அடிமையை நீங்கள் ஸ்வீகரியுங்கோள்" என்று சீரிதாகக் கொடுக்கக்கடவர்களென்கையுமாகிற சாஸ்த்ரார்த் தத்தை வெளியிடுகிறது.

(கூழாளித்யாதி) ‡ இவர் அழைத்தவாசியறியாதே ப்ரயோஜநாந் தரபரரடையப் புகுரத் தொடங்கிற்று; அவர்களை நிஷேதிக்கிறார். "கூழாள்" என்று, சோற்றுக்காக ஆரேனுக்கும் தன்னை எழுதிக் கொடுக்கை; இது ப்ரயோஜநாந்தரபரர்க்கும் உபலக்ஷணம். தன்னை "பகவத்தாஸ்யைகபோகன்" என்னுமிடமறியாதே, ப்ரயோஜநாந் தரங்களைக் குறித்து அவன்றன்னையே ஆஶ்ரயிக்கிறார்களிறே. "கூழாள்" என்று, அநந்யப்ரயோஜநராயிழிந்து, ப்ரயோஜநாந்தரங் களை வேண்டிக்கொள்ளும் இருகரையரைச் சொல்லுகிறதென்றுமாம்.

---

ப்ரஸித்தி. (மணமாவது) என்றது, மணங்கொள்ளுகையாவது என்றபடி. செய்ம்மின் என்றாதல், வாங்குமின் என்றாதல் சொல்லாதே, "கொண்மின்" என்றதுக்குத் தாத்பர்யம் (கொண்மின் இத்யாதி). இத்தால் கொள்வாரும் கொடுப்பாரும் நிரஹங்காரராய் நிர்மமகாரரா யிருக்கையைச் சொல்லுகிறதென்று கருத்து. (கிடந்தானை கண் டேறுகை) என்றது, படுத்துக்கொண்டிருக்கிற யானையைத் தானே யேறுகை. (சீரியதாக) ஸாதரமாக. † (கொடுக்கக்கடவர்கள்) என்ற அநந்தரம், என்கையும் என்று ஶேஷம். (ஶாஸ்த்ரார்த்தம்) என்றது, தாத்ருத்வத்திலும் ப்ரதிக்ருஹீத்ருத்வத்திலும் மமகாரநிவ்ருத்தியைச் சொல்லுகிற திருமந்த்ரார்த்தமென்றபடி.

"கூழாள்" இத்யாதிகளுக்கு பாவம் (இவ்வார்த்தையித்யாதி). (இவ்வார்த்தை) என்றது, வாழாட்பட்டு என்கிற வார்த்தை. (வாசி யறியாதே) என்றது, தங்களுடைய ப்ரயோஜநாந்தரங்களும்

---

‡ அரும்பதத்துக்கு "இவ்வார்த்தை" என்று பாடம். † குண்டலித அரும்பதாநுகுணமாக வ்யாக்யானத்தில் "என்கையும்" என்ற பாட மில்லை.

"பட்டு" என்கிறது, அகப்பட்டென்றபடி. அதாவது: பந்தகமாகையாலே ஸ்வரூபவிரோதியாய் அநர்த்தத்தைப் பண்ணுமென்னுமத்தாலே சொல்லுகிறது. (நின்றீர்களை) பஹுவசநத்தாலே "உள்ளீரேல்" என்று தேடவேண்டாதே பார்த்த பார்த்தவிடமெங்கும் ப்ரயோஜநாந்தரபரராயிருக்கை. "எங்கள் குழு" என்று இத்திரளுக்குண்டான வ்யாவ்ருத்தி தோற்ற அருளிச்செய்கிறார். தேஹாத்மாபிமாநிகள், தேவதாந்தரப்ரவணர், இவ்விஷயந்தன்னிலே புகுந்து ப்ரயோஜநாந்தரங்களை அபேக்ஷிப்பார், அநந்யப்ரயோஜநராய் ஸாதநாந்தரங்களிலே அந்யபரராயிருப்பாராகிற திரள்களெல்லாவற்றிலும் வ்யாவ்ருத்தமாயன்றோ எங்கள் திரளிருப்பது என்கிறார். (புகுதலொட்டோம்) "ஆரோபுகுவார்" என்று ப்ரார்த்திக்கிற இவர், நிர்த்தயரைப்போலே "புகுரவொட்டோம்" என்பானென்? என்னில்; வஸிஷ்டன் பரமதயாளுவானாலும் சண்டாளனை அக்நிகார்யத்திலே கூட்டிக்கொள்ளானிறே. இத்தால், அநந்யப்ரயோஜநர்க்கு ப்ரயோஜநாந்தரபரரோட்டை ஸஹவாஸம் அஸஹ்யமாயிருக்குமென்றதாய்த்து.

---

வாழ்ச்சியென்று ப்ரமித்து, அநந்யப்ரயோஜநரை அழைத்தாரென்கிற விசேஷமறியாதேயென்றபடி. (இது) என்றது, "சூழ்" என்றத்தை. ஈஶ்வரனுக்கு எழுதிக்கொடுப்பார் அநந்யப்ரயோஜநங்களைக் கேட்பாரோ? என்ன, (தன்னையித்யாதி). இது, வித்தவ்யாக்யாத்ருவாக்யமாதல். ப்ரமித்தவர்களன்றிக்கே அநந்யப்ரயோஜநராயே வந்து ப்ரயோஜநாந்தரங்களைக் கொள்வாரை நிஷேதிக்கிறாரென்று அர்த்தாந்தரம் (சூழாளித்யாதி). "பட்டு" என்றது, கீழும் இங்கும் ஒத்திருக்க, இங்கு (அகப்பட்டு) என்பானென்? என்ன, (பந்தகேத்யாதி). "நாங்கள்" என்று அபஹரிக்கலாமோ? என்ன, (எங்களித்யாதி). வ்யாவ்ருத்தியை உபபாதிக்கிறார் (தேஹேத்யாதி). அவதாரிகையிலே தம்முடைய அபர்யாப்தியாலே சதுர்வித புருஷர்களையும் அழைக்கிறாரென்னாநின்றீர், ஆனால் "புகுதலொட்டோம்" என்னக்கூடுமோ? என்கிற ஶங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் (ஆரோ இத்யாதி). இந்தப் பரிஹாரத்துக்கு, அவர்கள் திருந்தாதே கேவல ப்ரயோஜநாந்தரபரராயிருந்தால் த்யாஜ்யரென்று கருத்து. "புகுதலொட்டோம்" என்றத்தாலே ஸ்வரூபசிக்ஷை செய்தருளுகிறாரென்கிறார். (இத்தாலித்யாதி).

எங்கள் திரளிற்காட்டிலும் உங்கள் திரளுக்கு வாசியென்? என்னில், (ஏழாள் காலும் பழிப்பிலோம் நாங்கள்) என்கிறார். "ஏழாள்" என்று, தமக்குக் கீழே ஒரு மூன்றும், மேலே ஒரு மூன்றும், தாமுமாக ஏழுபடியைச் சொல்லுகிறது. இஸ்ஸமுதாயத்தைப்பற்றி சாஸ்த்ரங்கள் 45. "सप्त सप्तच सप्तच" (ஸப்த ஸப்தச ஸப்தச) என்று, இந்த ஏழையும், இதுக்குக்கீழே ஓரேழையும், இதுக்குமேலே ஓரேழையும், ஆக, இருபத்தொருபடிகாலைச் சொல்லுகிறது. 46. "दशपूर्वान् दशापरान् आत्मानञ्चैक विंशति पङ्क्तिञ्च पुनाति" (தஶபூர்வாந் தஶாபராந் ஆத்மாநஞ்சைக விம்சதிம் பங்க்திஞ்ச புநாதி) என்று முகபேதேந சாஸ்த்ரம் சொல்லிற்று. "ஏழாட்காலும்" என்கிற சப்தம் இவ்வளவை நினைக்கிறது. இத்தால், ஒரு ஸந்தாநத்திலே ஒருவன் அநந்யப்ரயோஜநனானால், அவனைப்பற்றி, பகவத்ப்ரபாவம், ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் செல்லக் கீழும் மேலும் வெள்ளமிடுமென்கிறது. (பழிப்பிலோம்) விஷயாந்தரப்ராவண்யமென்ன, தேவதாந்தரபஜநமென்ன, இவை தூரதோநிரஸ்தமாகையாலே, பதர் கூட்டித் தூற்றவேண்டா; இனி அநந்யப்ரயோஜநராய் அநந்யஸாதநராயிருப்பார்க்குப் பழிப்பாவது, ப்ரயோஜநாந்தரபரதையும் ஸாதநாந்தரபரதையுமிறே; அவற்றை உடையோமல்லோமென்

---

இத்தால் ஏழுதலைமுறையைச் சொல்லுகிறாரென்கிறார் (ஏழாள் இத்யாதி). கந்யகாதாநாதி ஸாமாந்ய தர்மங்களுக்கு இருபத்தொரு தலைமுறைக்கு அதிசயகரத்வம் சொல்லியிருக்க, "ஏழ்படி" என்று பகவத்ப்ரபாவத்தைக் குறையச் சொல்லக்கூடுமோ? என்ன, (இஸ்ஸமுதாயேத்யாதி).(இஸ்ஸமுதாயத்தைப்பற்றி) என்றது, கீழ்ச் சொன்ன ஸப்தகத்தை மத்யமாவதியாக்கி என்றபடி. "ஆள்" என்று புருஷர்களைச் சொல்லுகிறது. "கால்" என்றது, ஸந்ததி.(இவ்வளவை) என்றது, இருபத்தொரு படியை. ஓரேழுக்குச் சொன்னது, மற்றவற்றுக்கும் உபலக்ஷணம். ஸாமாந்யதர்மத்துக்கு இத்தனை உண்டானால் பகவந்நிஷ்டைக்குச் சொல்லவேண்டாவிறே என்று கருத்து. பலிதார்த்தத்தை அருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி). "பழிப்பு" என்பது, தோஷம். இது ஸாமாந்ய ஶப்தமாகையாலே, விஷயாந்தர ப்ராவண்யாதிகளைச் சொன்னாலும், ப்ரயோஜநாந்தர பரரானவர்களுக்கும் த்யாஜ்யமானவை அப்ரஸக்தமென்றுநின்றுகொண்டு, விசேஷபர்யவஸாநம்

கிறார். (நாங்கள்) "எங்கள் குழு" என்றபோதைச் செருக்குப்போலே, பகவத் விஷயீகாரத்தால் வந்த செருக்குத் தோற்றச் சொல்லு கிறாரிறே.

உங்கள் ஸ்வரூபம் நீங்கள் சொன்னவளவிலே விஸ்வஸித்திருக்கு மத்தனையளவுடையோமல்லோம், உங்கள் வ்ருத்தி விசேஷத்தைக் கொண்டு உங்களை அறியவேணுமென்ன; அது நீங்களறியும் புடையல்ல, எங்ஙனே? என்னில்; ஒரு கார்யப்பாடாக உள்ள அமங்களங்கள் போக மங்களாசாஸநம் பண்ணும்படியாதல், இல்லாத மங்களங்களுண்டாக வேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுதல் செய்யுமளவிறே நீங்களறிவது; முன்பு வ்ருத்தமாய்க்கழிந்த செயலுக்கு இன்றிருந்து வயிறுபிடிக்கும் திரள்காண் எங்களது. (இராக்கதர் வாழிலங்கை) துர்வர்க்கம் களித்து வர்த்திக்கும் தேசம், புறம்பே

---

பண்ணுகிறார் (விஷயாந்தரேத்யாதி வாக்யத்ரயத்தாலே). "பழிப்பிலோம்" என்றபோதே நாங்கள் என்று ஸித்தமன்றோ, விசேஷிப்பானென்? என்ன, (எங்களித்யாதி). "எங்கள்" என்ற இடத்தில் வ்யாவ்ருத்தி சொல்லுகையும் செருக்காலேயென்று கண்டுகொள்வது.

மேலுக்கு அவதாரிகை (உங்களித்யாதி). (அளவு) ஜ்ஞாநம். (புடை) ப்ரகாரம். (கார்யப்பாடாக) ப்ரயோஜந நிமித்தமாக. (முன்பு வ்ருத்தமாய்)என்று விஶேஷித்தது, யுகாந்தரவ்யவதாநம்தோற்றுகைக்காக. (எங்களது) என்ற அநந்தரம் என்கிறாரென்று ஶேஷம். "இராக்கதர்"-ராக்ஷஸர். கீழ்வாக்ய விவரணம் (புறப்பேயித்யாதி). (குளவி) கீட விசேஷம். "இலங்கை" என்கையாலே அர்த்தஸித்தம், (கடலையும் மதிளையும் அரணாக்கி) என்றது. "வாழ்" என்றதிலே நோக்காக (அமணக்கூத்து) என்றது; அதாவது, லஜ்ஜையின்றிக்கே நக்நதையோடே கூத்தாடுகை. இலங்கை பாழ் ஆக என்னாதே, "ஆள் பாழ் ஆக" என்பானென்? என்ன, (இலங்கைதானித்யாதி). ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு லங்காதிபத்யம் கடற்கரையிலே கொடுக்கையாலே, அத்தை அழிக்கவொண்ணாதென்று இவ்வாக்யத்துக்குத் தாத்பர்யம். ஆனால் ஆள் பாழாம்படி பண்ணுவானென்? என்ன, (இனி நகமேயமித்யாதி). (அதிக்ரமம்) மர்யாதாதிக்ரமம். (அழியச் செய்து, போம்படி பண்ணினான்) என்று அந்வயம். "படைபொருதா

போய் பரஹிம்ஸை பண்ணி, குளவிக்கூடுபோலே திரண்டு கடலையும் மதிளையும் அரணாக்கி, அமணக்கூத்தடிக்கும் தேசமென்கை. (இலங்கைபாழாளாக) லங்கையில் ஆள் பாழாம்படியாக. இலங்கை தான் விபீஷண விதேயமிறே. இனி 47. "न नमेयं" (ந நமேயம்) என்ற ராவணனையும் அவனுடைய அதிக்ரமத்துக்குத் துணையான ராக்ஷஸரையும் அழியச்செய்து, 48. "श्मशान सदृशी भवेत्" (ஶ்மஶாந ஸத்ருஶீ பவேத்) என்று பிராட்டி அருளிச்செய்தபடியே அவ்வூரை மூலையடியே போம்படி பண்ணினான். (படைபொருதானுக்கு) இப்படி செய்தது ஈஶ்வரத்வப் பிடாரான ஸங்கல்பத்தாலன்றிக்கே, எதிரிகளம்பு மார்விலே தைக்கும்படி பொருதவனுக்கு. (பல்லாண்டு கூறுதுமே) அப்போதை கையும் வில்லுமாய்ச் சீறிச் சிவந்து எதிரிகள் மேலே வ்யாபரிக்கும்போதை ஆகர்ஷகமான வடிவழகுக்கு மங்களா சாஸநம் பண்ணிப் போருவோம் சிலர் காண் நாங்களென்கிறார். 49. "राघवार्थे पराक्रान्ताः — न प्राणे कुरुते दयां" (ராகவார்த்தே பராக்ராந்தா: — ந ப்ராணே குருதே தயாம்) என்கிறபடியே அக்காலத்தில் முதலிகளுக்கு அம்புக்கு இருய்க்கப்பணி போருகையாலே அக்காலத்திலே மங்களாசாஸநம் பண்ணுவாரைப் பெற்றதில்லை; பிராட்டி பிரிந்த

---

னுக்கு" படையிலே பொருதானுக்கு,— யுத்தத்திலே சத்ரு ஸம்ஹாரம் பண்ணினவனுக்கென்றபடி. படை:— யுத்தம்; ஆயுதமாகவுமாம். இப்படி விசேஷித்ததுக்கு வ்யாவர்த்ய பூர்வகமாகத் தாத்பர்யம் (இப்படியித்யாதி). (பிடார்) அஹங்காரம். (ஸங்கல்பத்தாலே) என்றது, "ஹநிஷ்யாமி" என்கிற ஸங்கல்பத்தாலேயென்றபடி. "பொருதானுக்கு" என்றத்தைக் கடாக்ஷித்து பாவம் (அப்போதை இத்யாதி). "கூறுதும்", சொல்லுவோம், இப்படி நீங்கள் கழிந்த காலத்திற்செயல்களுக்கு மங்களாசாஸநம் பண்ணுவானென்? அக்காலத்தில் பரிவரானவர்கள் மங்களாசாஸநம் பண்ணியிரார்களோ? என்ன, (ராகவார்த்தே இத்யாதி). "தயாம் ந குருதே" என்றது அப்ரஸக்த ப்ரதிஷேதமல்லாமையால், ப்ராணன்களிலே தயை பண்ணி இருய்க்கை தோற்றுகையாலும், பராக்ரமித்தது பெருமாளுக்காகவென்கையாலே இதுவே ஸ்வாபாவிகமென்றும், திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் (அக்காலத்திலித்யாதி). (இருய்க்கப் பணிபோருகையாலே) என்றது, பின்வாங்குகையே கார்ய

போதே "நம் குடியிருப்புப் பெற்றோம்" என்கிற ப்ரீதியாலே ப்ரஹ்மாதிகள் அந்யபரரானார்கள்; அக்காலத்தில் மங்களாசாஸநம் பண்ணப்பெறாத குறைதீர இன்று இருந்து மங்களாசாஸநம் பண்ணுவோம் சிலர்காண் நாங்கள்! என்கிறார். 3.

---

4. ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்தெங்கள்குழாம்புகுந்து
கூடுமனமுடையீர்கள்வரம்பொழிவந்தொல்லைக்கூடுமினோ
நாடுநகரமும்நன்கறியநமோநாராயணாயவென்று
பாடுமனமுடைப்பத்தருள்ளீர்வந்துபல்லாண்டுகூறுமினே.

பதவுரை:— ஏடு—பொல்லாங்கான, நிலத்தில்—நிலமாகிய ஶ்மஶானத்தில், இடுவதன் முன்னம்—(உங்களைச்) சேர்ப்பதற்குமுன், வந்து—(உங்கள் திரளிலிருந்து) வந்து, எங்கள் குழாம்—எங்கள் கோஷ்டியிலே, புகுந்து—ப்ரவேசித்து, கூடும் மனம் உடையீர்கள்—கூடுவோம் என்னும் நினைவுள்ளவர்களாகில், வரம்பு ஒழி வந்து—(ஆத்மாவை மட்டும் அநுபவிப்பது என்னும்) வரம்பை விட்டு வந்து, ஒல்லை—விரைவாக, கூடுமினோ—(எங்கள் கோஷ்டியில்) கூடுங்கள்; நாடும்—நாட்டுப்புறங்களிலுள்ள ஸாமாந்யரும், நகரமும்—நகரத்திலுள்ள அறிவாளிகளும், நன்கு அறிய—நன்றாக அறியும்படி, நமோ நாராயணாய என்று—அஷ்டாக்ஷர மந்த்ரத்தை அநுஸந்தித்து, பாடும்—(ப்ரீதிக்குப் போக்கு விட்டுப்) பாடக்கூடிய, மனம் உடை—நினைவுள்ள, பத்தர் உள்ளீர்—பக்தியை உடையவர்களாகில், வந்து பல்லாண்டு கூறுமினே—வந்து திருப்பல்லாண்டு பாடுங்கள்.

அவ:— நாலாம்பாட்டு. (ஏடித்யாதி) கீழே, அநந்யப்ரயோஜநரை அழைத்தார்; அவர்கள் மங்களாசாஸநத்துக்கு ப்ரத்யாஸந்நராகை

மானபடியாலே என்றபடி. ஆனால் ப்ரஹ்மாதிகள் இருந்தார்களே? என்ன, * "ராவணஸ்ய வதார்த்திபி:" என்றதிலே நோக்காக அருளிச்செய்கிறார் (பிராட்டியித்யாதி). (அந்யபரரானார்கள்) என்ற வநந்தரம், ஆகையாலே என்று கூட்டுவது. (சிலர்) என்கையாலே வைலக்ஷண்யம் ஸூசிதம். 3.

---

நாலாம்பாட்டு. (ஏடுநிலத்திலித்யாதி) வ்ருத்தாநுவாத பூர்வகமாக மேற்பாட்டுக்குங்கூட ஸங்கதியருளிச்செய்துகொண்டு, "கூடு

* ராமா-அயோ. (1-7).

யாலே, நீரிலே நீர் சேர்ந்தாற்போலே சேர்ந்திருக்குமிறே. அவ்வளவிலும் பர்யாப்தி பிறவாமையாலே "ஈஶ்வரன் கைபார்த்திருக்குமவர்கள்" என்னுமிவ்வளவைக்கொண்டு, ஆத்மப்ராப்திகாமரையும் ஐஶ்வர்யகாமரையும் அழைக்கக்கோலி, அதில் முந்துற ஆத்மப்ராப்திகாமரை அழைக்கிறார். ஐஶ்வர்யத்திற் காட்டில் ஆத்மப்ராப்தி உத்க்ருஷ்டமென்னும் நினைவாலே அழைக்கிறாரல்லர்; அந்த மோக்ஷத்தை இவர் அநர்த்தமென்றிருக்கையாலே. இனி எத்தாலே முற்பட அழைக்கிறதென்? என்னில்; பகவத்ஸம்பந்தத்துக்கு உபகரணமான சரீர மோக்ஷம் அணித்தாகையாலும், அம்மோக்ஷத்தை ப்ராபித்தால் மீளவொண்ணாமையாலும், ஐஶ்வர்யகாமனுக்குக் காலாந்தரத்திலேயாகிலும் பகவத்ஸம்பந்தம் பண்ண யோக்யதை உண்டாகையாலும், இவனுக்கு அந்த யோக்யதையும் அழிகையாலே துர்க்கதியைக் கண்டு முற்பட அழைக்கிறார். ப்ரயோஜநாந்தரபரர், "மங்களாசாஸநம் பண்ண வாருங்கோள்" என்றால் வருவார்களோ? என்னில்; பகவத்ப்ராப்தியின் உத்கர்ஷத்தையும், அத்தைப் பற்ற கைவல்யத்தினுடைய நிகர்ஷத்தையும் அறிவித்தால், "விட்டுப்பற்ற வேணும்" என்னும் ஆத்மகுணோபேதரையிறே இவரழைக்கிறது.

---

மனமுடையீர்" "பத்தருள்ளீர்" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (கீழே) இத்யாதி, (இவரழைக்கிறது) என்னுமளவும். (சேர்ந்திருக்குமிறே, ஆகையாலே, கீழே அநந்யப்ரயோஜநரை அழைத்தார்) என்று கீழோடே ஸம்பந்தம். அநந்யப்ரயோஜநரோடே கூடி மங்களாஶாஸநம் பண்ணுவதன்றோ வேண்டுவது, இவர்களை அழைப்பானென்? அழைக்க ப்ரஸக்திதானுண்டோ? என்ன, (அவ்வளவிலுமித்யாதி). உத்கர்ஷத்தைப் பற்ற இவர்களை அழைக்கவொண்ணாதென்று நின்றுகொண்டு, முற்படுவானென்? என்கிற ஶங்கையை அநுவதிக்கிறார் (ஐஶ்வர்யத்திலித்யாதி). ஐஶ்வர்யார்த்திகளைப் பற்ற துர்க்கதரென்று முற்பட அழைக்கிறாரென்கிறார் (பகவதித்யாதி). (உபகரணமான ஶரீரம்) என்றது, * "விசித்ரா தேஹஸம்பத்தி:" இத்யாதியைக் கடாக்ஷித்து. (அம்மோக்ஷத்தை) கைவல்யத்தை. இவ்வாக்யம், பகவல்லாபஹேதுவான சரீர பரிக்ரஹத்துக்கும் யோக்யதையில்லாதபடி கைவல்யம் நித்யமாயிருக்கையாலே வந்த துர்க்கதியைச் சொல்லுகிறது. இத்தால், மீளுகையும் வருகையும் போகையுமின்றிக்கே மின்மினி போலேயிருந்து தன்னைத்தானே தின்று கிடக்குமென்றபடி. ஆக, இவர்களைத் தாமே அழைக்கைக்கு

---

* ஸ்ரீவிஷ்ணுதத்வம்.

வ்யா:— (ஏடுநிலத்திலிடுவதன் முன்னம்) ஏடு என்பது, பொல்லாங்கு. "உங்களைப் பொல்லா நிலத்திலே இடுவதற்கு முன்னம்" என்று பிள்ளையமுதனார். "ஏடு" என்கிறது, ஸூக்ஷ்மசரீரத்தை. ஸ்த்தூலசரீரத்திற்காட்டில் ப்ரதாநமாய் அதிலுடைய ப்ரயோஜந ரூபமாய் நிற்கையாலே, "பாலில் ஏடு" என்னுமாபோலே சொல்லுகிறது. (நிலத்திலிடுவதன் முன்னம்) ஸ்வகாரணமான மூலப்ரக்ருதியிலே லயிப்பதற்கு முன்னே. இது நிர்வஹித்துப் போரும்படி:— "ஏடு" என்று, உடம்புக்குப் பேராய், ஸ்த்தூல ஸூக்ஷ்மரூபமான சரீரம், ஸ்வகாரணமான மூலப்ரக்ருதியிலே லயிப்பதற்கு முன் என்னவுமாம். இவ்வாக்யந்தான், அவர்களுடைய அநர்த்தத்தைக் கண்டழைக்கிறாரென்னுமிடம் தோற்ற இருக்கிறதிறே. (வந்து) ஸ்வதந்த்ரராயிருப்பார்க்குத் தம்மளவில் வருமிடத்தில் உண்டான தூரத்தைச் சொல்லுகிறது. (எங்கள் குழாம் புகுந்து) கேவலரும் ஒரு ஸமஷ்டியாயிறே இருப்பது; அது ஸ்வதந்த்ரமாகையாலே அந்யோந்யம் சேர்த்தியற்றிருக்கும். ஒருத்தருடைய ஸம்ருத்தி ஒருத்தரதாயிறே இத்திரளிருப்பது. 50. "**परस्पनीचभावैः**" (பரஸ்பரநீசபாவை:) என்னக்கடவதிறே.

---

ப்ரஸக்தி அருளிச்செய்தார் கீழ்; அவர்தாம் ஸ்வாபீஷ்டங்களை விட்டுவருவார்களோ? என்று ஶங்கித்து, "மனமுடையீர்" என்றத்தைக் கடாக்ஷித்துப் பரிஹரிக்கிறார் (ப்ரயோஜநாந்தரேத்யாதி).

"ஏடு" என்றதுக்கு மூன்றர்த்தம், "நிலம்" என்றதுக்கு இரண்டர்த்தம்; இவற்றைக் காட்டுகிறார் (ஏடென்பது) என்று தொடங்கி, (என்னவுமாம்) என்னுமளவும். (பொல்லாநிலம்) என்றது, ஶ்மசாநபூமி. ஸூக்ஷ்ம சரீரத்தைக்காட்டும் ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் (ஸ்த்தூலேத்யாதி). (ப்ரதாநமாய்) ஆமோக்ஷப்ரளயம் அநுவர்த்தமாநமாகையாலே அதிஶயிதையாய். (ப்ரயோஜநரூபமாய்) என்றது, பலரூபமாயென்றபடி. அதாவது, பூர்வபூர்வ கல்ப ஸ்த்தூல ஶரீரம் கர்மத்வாரா உத்தரோத்தரகல்ப ஸூக்ஷ்மஶரீரத்துக்கு ஹேதுவாகையாலேயென்கை. "வந்து எங்கள் குழாம் புகுந்து" என்னுமிவ்வளவே அமைந்திருக்க, இப்படி இவ்வாக்யம் ப்ரயோகிப்பானென்? என்ன, அருளிச்செய்கிறார் (இவ்வாக்யமித்யாதி). (தோற்ற) என்றது, தோற்றுவிக்க என்றபடி. "மனமுடையீர்கள்" என்று

இத்திரளில் புகுவார்க்கு எவ்வளவதிகாரம் வேணும்? என்னில் (கூடுமனமுடையீர்கள்) "புகுருவோம்" என்னும் நினைவே வேண்டுவது. அவிலக்ஷணங்களான புருஷார்த்தங்களுக்கு புரஶ்சரணங்கள் கனக்கவேண்டியிருக்க, அதில் விலக்ஷணமான இத்திரளிலே புகுருகைக்கு புரஶ்சரணம் வேண்டாதிருப்பதென்? என்னில்; அவை அப்ராப்தபுருஷார்த்தங்களாகையாலே புரஶ்சரணாதிகள் அபேக்ஷிதங்களாயிருக்கிறன; இது ஸ்வரூப ப்ராப்தமாகையாலே வேண்டா.

---

ஸம்போதிக்கச்செய்தே, "வந்து" என்னக்கூடாதே? என்ன, (ஸ்வதந்த்ரரித்யாதி). (ஸ்வதந்த்ரர்) கேவலர். இவர்க்கும், அத்யந்த பாரதந்த்ர்ய ஸ்வரூபாநுரூபமான மங்களாசாஸநபரர்க்குமுண்டான மாநஸஜ்ஞாநவைஷம்ய ப்ரயுக்தமான தூரத்தைச் சொல்லுகிறதென்று இவ்வாக்யத்துக்குத் தாத்பர்யம். "எங்கள் குழாம்" என்பானென்? அவர்களும் குழாங்களாக இரார்களோ? அதுக்கும் இதுக்கும் வாசியேது? என்ன அருளிச்செய்கிறார் (கேவலருமித்யாதி). (சேராச்சேர்த்தி) என்றது, ஸ்வார்த்தபரராகையாலே பரோத்கர்ஷாஸஹிஷ்ணுக்களாயிருக்கை. "ஸர்வஸ்ஸ்வார்த்தம் ஸமீஹதே" அன்றோ, இவர்களிப்படியிரார்களோ? என்ன, (ஒருத்தரித்யாதி). பரஸம்ருத்தியே ப்ரயோஜநமாகையாலே அந்த விரோதமில்லையென்று கருத்து. இப்படி இருப்பார்களென்னுமதுக்கு ப்ரமாணம் (பரஸ்பரேத்யாதி). "நித்யாபிவாஞ்சித பரஸ்பர நீசபாவைர்மத்தைவதை: பரிஜநைஸ் தவ ஸங்கஸீய" இது ஸ்ரீவைகுண்ட ஸ்தவஶ்லோகம்.

மேலுக்கவதாரிகை (இத்திரளிலித்யாதி). "மனமுடையீர்கள்" என்று இவ்வளவைச் சொல்லுகையாலே, வேறொன்று வேண்டாவென்றுதோன்றுகிறது, அத்தைப்பற்ற அருளிச்செய்கிறார்(புகுருவோமித்யாதி). இப்படி ஸாதாரணமாகச் சொல்லுவானென்? என்கிற தடஸ்த்தசங்கையை ஸோபபத்திகமாக சங்கித்துப் பரிஹரிக்கிறார் (அவிலக்ஷணேத்யாதி). (புரஶ்சரணம்) உபாஸநா பூர்வாங்கமான தீர்த்தயாத்ராதி கர்மங்கள். ஸ்வரூபப்ராப்தமாகையாலே வேண்டாவென்றதுக்கு த்ருஷ்டாந்தம் (மாதாபிதேத்யாதி). "உடையீர்கள்" என்கிற மதுப்பு பூமாவிலேயாக்கி அருளிச்செய்கிறார் (இந்த இச்சையித்யாதி). (வைஶ்ரவணன் என்னுமாபோலே) என்றது, தநவான் என்னுமாபோலேயென்றபடி. கீழ்ப்பதத்தோடே "வாய்மொழி"

தமிழ் இணைய ... நூலகம்
வ.எண்: 2596
நாள்: 27.10.09



மாதாபிதாக்களை அநுவர்த்திக்கைக்கு இச்சையேயிறே வேண்டுவது. (உடையீர்கள்) இந்த இச்சையால் வந்த ப்ரயோஜநாதிசயத்தாலே "வைஶ்ரவணன்" என்னுமாபோலே அருளிச்செய்கிறார். கூட நினைப்பார்க்குச் செய்யவேண்டுவது, முன்பு நின்ற சிறுமையைக் குலைத்து வரவேணும். (வரம்பொழிவந்து) "வரம்பொழிய" என்கிறவிது, "வரம்பொழி" என்று கிடக்கிறது. ஸர்வேஶ்வரனுக்கு ப்ரகாரபூதனாய், அவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை அநுபவிக்க இட்டுப்பிறந்தவன், 51. "जरामरणमोक्षाय" (ஜராமரணமோக்ஷாய) என்று ஸ்வாநுபவத்தளவிலே ஒரு வரம்பை இட்டுக்கொண்டானிறே; அத்தையொழிந்து வாருங்கோளென்கிறார். (ஒல்லைக்கூடுமினோ) பற்றுகிற புருஷார்த்தத்தினுடைய வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்தால் பதறிக்கொண்டு வந்து விழவேண்டாவோ? "ஏடுநிலத்தி லிடுவதன் முன்னம்" என்றது, ஶரீரத்தில் அஸ்த்தைர்யத்தைப்பற்ற; இங்கு "ஒல்லை" என்கிறது, பற்றுகிற விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தைப்பற்ற, "கூடுமனமுடையீர்கள்" என்றும்,

என்றதுக்கு அவதாரிகை (கூட நினைப்பார்க்கு இத்யாதி). வரம்பாவது இன்னதென்கிறார் (ஸர்வேஶ்வரனுக்கித்யாதி). (இட்டுக்கொண்டானிறே) என்கையாலே, ஸ்வபுத்தி கல்பிதமானது ஸ்வரூபமன்றென்று தோற்றுகிறது. "ஒல்லை" என்றதுக்கு வாஸனை (பற்றுகிற இத்யாதி). பற்றுகிற புருஷார்த்தமாவது, திருப்பல்லாண்டு பாடுகை. "இடுவதன் முன்னம்" என்றபோதே சைக்ர்யம் தோற்றாநிற்க, "ஒல்லை" என்பானென்? என்ன, விஷயபேதத்தாலே பரிஹரிக்கிறார் (ஏடுநிலத்திலித்யாதி). (ஶரீரத்தில் அஸ்த்தைர்யத்தை) என்றது, பிள்ளையமுதனார் நிர்வாஹத்தைப்பற்ற. வாருங்கோள் என்னாமல், பிரிந்துபோனாரை அழைக்குமாபோலே "கூடுமின்" என்பானென்? என்ன, அருளிச்செய்கிறார் (கூடுமனமித்யாதி). (யோக்யதை) சேஷத்வரூப ஸம்பந்தம். என்னென்றாலும், ஸம்பந்த ஜ்ஞாநமுண்டானால் பிரிந்தாராகத் தோற்றுமோ? என்ன, (அத்தானித்யாதி). (பிறிகதிர் படுகை) கதிர் பிறிபடுகை. (வெளிச்செறித்தக்கால்) ப்ரகாஶித்தால்.

வ்ருத்தாநுவாதம் பண்ணிக்கொண்டு உத்தரார்த்தத்துக்கெல்லாம் அவதாரிகை (இத்திரளித்யாதி). "விஶேஷஜ்ஞரையும் அவிஶேஷஜ்

"கூடுமினோ" என்றும் அருளிச்செய்கிறாரிறே போக்யதையைப் பற்ற. "அத்திரளில் நின்றும் பிறிகதிர்ப்பட்டார் சிலரிவர்கள்" என்று தோற்றுமிறே, ஸ்வரூபம் வெளிச்செறித்தக்கால்.

(நாடுநகரமும் நன்கறிய) இத்திரளிலே புகுருகைக்கு வேண்டுவன அருளிச்செய்தார்; இதுக்கு மேல் மங்களாசாஸநத்துக்கு வேண்டுவன அருளிச்செய்கிறார். "நாடு" என்று, அவிசேஷஜ்ஞரைச் சொல்லுகிறது; "நகரம்" என்று, விசேஷஜ்ஞரைச் சொல்லுகிறது. ராஜாவுக்கு ப்ரத்யாஸந்நரிறே நகரஸ்த்தர்; நாட்டார் தூரஸ்த்தரிறே; ஆகையாலே அருளிச்செய்கிறார். (நன்கறிய) நன்றாகவறி., பகவத்ப்ரத்யாஸத்தியாலே அவிசேஷஜ்ஞர் விடுப்படியாகவும், அது தானே ஹேதுவாக விசேஷஜ்ஞர் பரிக்ரஹிக்கும்படியாகவும். (நன்கறிய) இந்நன்மையை அறியவென்னுமாம். (நமோநாராயணாய வென்று) இவ்வளவும் போராது, தன்ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்து "ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைப் பெறவேணும்" என்று, வைஷ்ணவனாய் வரவேணுமென்று. 52. "**अहमपि न मम भगवत एवाहमस्मि**" (அஹமபி ந மம பகவத ஏவாஹமஸ்மி) என்றிறே நமஶ்ஶப்தத்துக்கு அர்த்தமிருப்பது. ஸ்வாமி பக்கல் பண்ணும் அநுகூலவ்ருத்தியேயிறே புருஷார்த்தமாவது. (பாடுமனமுடைப்

---

ஞரையும் சொல்லுகிறது" என்கைக்கு நியாமகம் (ராஜாவுக்கித்யாதி). (ஆகையாலே) என்றது, விஶேஷஜ்ஞாऽவிஶேஷஜ்ஞ லக்ஷணமாகையாலே என்றபடி. (ஆகையாலே) என்ற அநந்தரம் நாடுநகரமும் என்று என்று சேஷம். இவர்களறியவென்னாமல் "நன்கு" என்று விசேஷிக்கையாலே,நன்மையை விஶதீகரிக்கிறார் (பகவதித்யாதி). இவ் வாக்யாந்தத்தில் அறிய என்று அநுஷங்கித்துக்கொள்வது. "நன்கு" என்றதுக்கு அர்த்தாந்தரம் (இந்நன்மை இத்யாதி). (இவ்வளவு) என்றது, நாடும் நகரமும் நன்கறிகை. நமஶ்ஶப்தத்திலே நோக்காக (தன் ஸ்வரூபத்தை உள்ளபடியறிந்து) என்றது. சதுர்த்தியைப்பற்ற (ஸ்வரூபேத்யாதி). இவ்வாக்யத்தால் பலிதம் (வைஷ்ணவனாய் வர வேணும்) என்றது. நமஶ்ஶப்தம் ஸ்வரூபயாதாத்ம்ய ப்ரதிபாதகமென்றதுக்கு நியாமகமும் கைங்கர்யம் புருஷார்த்தமென்கைக்கு உபபத்தியும் காட்டுகிறார் (அஹமபி இத்யாதி வாக்யத்வயத்தாலே). "மனமுடையீர்கள் பத்தருள்ளீர்" என்று கூட்டித் தாத்பர்யம்

பத்தருள்வீர்) நினைத்திருக்குமவ்வளவு போராது. ப்ரீதிக்குப் போக்கு விட்டுப் பாடுவோமென்னும் நெஞ்சுண்டாப்படியான ப்ரேமத்தை உடையீராகில். (வந்து பல்லாண்டு கூறுமினே) வந்து, திருப்பல்லாண்டு பாடுங்கோள். இத்திரளிலே புகுரவேணுமென்றிருப்பீர்! அத்தைச் செய்யுங்கோள்; அவ்வளவு போராது, உங்களுடைய வ்ருத்தி விசேஷமும் பெறவேணுமென்றிருப்பீர்! திருப்பல்லாண்டு பாடுங்கோளென்று க்ரியையை இரண்டாக்கி நிர்வஹிக்கவுமாம். 4.

---

5. அண்டக்குலத்துக்கதிபதியாகியசுரரிராக்கதரை
இண்டக்குலத்தையெடுத்துக்களைந்தவிருடீகேசன்றனக்குத்
தொண்டக்குலத்திலுள்ளீர்வந்தடிதொழுதாயிரநாமம்சொல்லிப்பண்டைக்குலத்தைத்தவிர்ந்துபல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே.

பதவுரை:— அண்டக் குலத்துக்கு—அண்டங்களின் ஸமூஹத்துக்கு, அதிபதி ஆகி—நியமிப்பவனாகி, அசுரர்—அஸுரர்களும், இராக்கதரை—ராக்ஷஸர்களுமாகிற, இண்டக்குலத்தை—நெருங்கின கூட்டத்தை, எடுத்து—திரட்டி, களைந்த—ஒழித்த, இருடீகேசன் தனக்கு—இந்திரியங்களுக்கு அதிபதியான எம்பெருமானுக்கு, தொண்டக் குலத்தில்—அடிமை செய்பவர்கள் குலத்திலே, உள்ளீர்—உள்ளவர்களான நீங்கள், வந்து—எங்கள் கோஷ்டிக்கு வந்து, அடி—அச்சுதனுடைய திருவடிகளை, தொழுது—ஸேவித்து, ஆயிர நாமம்—அவனுடைய ஆயிரம் பெயர்களையும், சொல்லி—வாயாரச் சொல்லி, பண்டைக் குலத்தை—புருஷோத்தமனிடம் சென்று மற்றொரு பலனைப் பெற்று அகலுபவர்களாயிருந்த பழைய ஜன்மத்தை, தவிர்ந்து—நீக்கி, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மின்—பலகால் மங்களாசாஸனம் செய்யுங்கள்.

---

(நினைத்திருக்குமித்யாதி). "பாடுமனமுடை" என்றதுக்கு வ்யாவ்ருத்தி பூர்வகமாக அர்த்தம் (நினைத்தித்யாதி). "பத்தருள்வீர்" என்றத்தை யத்யர்த்த விவக்ஷையாலே ஏகவிஷயமாக்கிக் கீழருளிச்செய்து, ஸம்போதநவிவக்ஷையாலே பின்னபுருஷவிஷயமாக யோஜநாந்தரம் (இத்திரளிலே இத்யாதி). (அவ்வளவு) கூடுகைமாத்ரம். (க்ரியையை இரண்டாக்கி) என்றது, இரண்டு க்ரியையை இரண்டு அதிகாரி விஷயமாக்கியென்றபடி. 4.

அவ:— அஞ்சாம்பாட்டு. (அண்டமித்யாதி) முற்பட அநந்ய ப்ரயோஜநரை அழைத்தார்; கேவலரும் ஐச்வர்யார்த்திகளும் ப்ரயோஜநாந்தரபரராயிருக்கச்செய்தேயும், கேவலருடைய தூர்க்கதியைக் கண்டு முந்துற அழைத்தார்; இப்பாட்டிலே, ஐச்வர்யார்த்திகளை அழைக்கிறார்.

வ்யா:— (அண்டக்குலத்துக்கதிபதியாகி) தேவதைகளுடைய ஐச்வர்யத்துக்கெல்லாம் மேலான அண்டாதிபத்யமிறே ஐச்வர்யத்துக்கு மேலெல்லை, அந்த ப்ரஹ்மாதிகள் ஈச்வரனை ஆச்ரயிக்கும் ப்ரகாரம் சொல்லுகிறது. "अण्डाधिपतये नमः" (அண்டாதிபதயே நம:) என்றிறே இப்பதப்ராப்திக்கு ஸாதநமான மந்த்ரம். அந்த அண்டைச்வர்ய விசிஷ்டனாகவிறே ஸர்வேச்வரனை அநுஸந்திப்பது. 53. "व्याहरन्मामनुस्मरन्" (வ்யாஹரந் மாமநுஸ்மரந்) என்கிறபடியே இம்மந்த்ரத்தைச் சொல்லவும், நெஞ்சாலே ஐச்வர்யவிசிஷ்டனாக

---

அஞ்சாம்பாட்டு. (அண்டமித்யாதி) கீழ் இரண்டு பாட்டில் ப்ரமேயங்களை அருளிச்செய்துகொண்டு, இப்பாட்டுக்கு ஸங்கதி அருளிச்செய்கிறார் (முற்பட இத்யாதி).

த்ரிலோகாதிபதி என்னாதே இப்படி ப்ரயோகிப்பானென்? என்ன, (தேவதைகளுடைய இத்யாதி). (மேலான) உத்க்ருஷ்டமான. சதுர்த்தசலோகாதிபதி என்னாதே, "அண்டக்குலத்துக்கதிபதி" என்பானென்? என்ன, மந்த்ரலிங்கம் தோற்றுகைக்காக என்கிறார் (அந்த இத்யாதி). (அந்த ப்ரஹ்மா) என்றது, அண்டாதிபத்யத்தையுடைய ப்ரஹ்மாவென்றபடி. சொல்லுகிற ப்ரகாரந்தன்னைக் காட்டுவாராக அதிஷ்டிகை (அண்டாதிபதயேநம:) என்கிற வாக்யத்வயமும். மந்த்ரத்தைச் சொன்னால் போராதோ, ஐச்வர்யவிசிஷ்டனாகவும் அநுஸந்திக்கவேணுமோ? என்கிற சங்கையைப் பரிஹரிக்கிறார் (வ்யாஹரந் இத்யாதி). அன்றிக்கே, * "நமச்சக்ரு:" என்று நமஸ்காரமன்றோ ஆச்ரயணமாவது, சொல்லுகையும் அநுஸந்திக்கையும் ஆச்ரயணமாமோ? என்ன, (வ்யாஹரந் இத்யாதி). ப்ரணவ விஷயமாகச் சொன்ன இந்த ப்ரமாணம் மந்த்ராந்தரங்களுக்கும் துல்யந்யாயேந வருமென்று திருவுள்ளம். ஆச்ரயணத்துக்கு வாசக

* பார-ஆர (192-56).

அநுஸந்திக்கவுமாயிறே ஆஶ்ரயணப்ரகாரமிருப்பது. அண்டக்குலத்துக்கு அதிபதியான ப்ரகாரமேயன்றோ இஶ்லோகத்திலுள்ளது, ஆஶ்ரயணப்ரகாரம் தோற்ற இருந்ததில்லையே? என்னில்; உதாரனாயிருப்பானொருவன் கையிலே எலுமிச்சம்பழமிருந்தால் "இது இருந்த அழகென்!" என்று சொன்னவளவிலே, பாவஜ்ஞனாயிருக்குமவன் "கொள்ளலாகாதோ?" என்று கருத்தறிந்து கொடுக்குமிறே; அப்படியே, அண்டாதிபத்யத்தாலே அபேக்ஷையுண்டென்று தங்களபேக்ஷையை ஆவிஷ்கரிக்கிறார்கள். இத்தால், ப்ரயோஜநாந்தரபரரைக் குறித்து 54. "उदाराः" (உதாரா:) என்னுமவனுடைய ஔதார்யம் ப்ரகாசிக்கிறது. (அண்டக்குலத்துக்கு) 55. "अण्डानान्तु सहस्राणां" (அண்டாநாந்து ஸஹஸ்ராணாம்) என்று தொடங்கி, 55. "कोटिकोटि शतानि च" (கோடிகோடி ஶதாநி ச) என்று அஸங்க்யாதமான அண்டங்களுக்கு நிர்வாஹகனாகையாலே அபேக்ஷித்தாரபேக்ஷித்த அண்டங்களைக் கொடுக்கைக்கு உடைமையைச் சொல்லுகிறது.

---

பதமில்லையே? என்று சங்காநுவாதம் பண்ணிக்கொண்டு, வாசகமில்லாவிட்டாலும் ஸூசகமுண்டென்று, த்ருஷ்டாந்த பூர்வகமாகப் பரிஹரிக்கிறார் (அண்டக்குலத்துக்கித்யாதி வாக்யத்ரயத்தாலே). மந்த்ரத்தாலே ஆவிஷ்கரிக்கிறார்களாகையாலே அண்டக்குலத்துக்கதிபதியாகி என்று அநுவதித்து ஸூசிப்பிக்கிறாரென்று கருத்து. வாசகமான சப்தத்தைச் சொல்லாதே, கொடுக்கைக்குறுப்பாக அபேக்ஷாஸூசக சப்தம் ப்ரயோகிக்கையாலே, ஒரு விஶேஷார்த்தம் பலித்ததென்கிறார் (இத்தால் இத்யாதி). குலபதப்ரயோகதாத்பர்யம் (அண்டாநாம் இத்யாதி). (உடைமை) தேயவஸ்து. பதியென்னாதே, "அதிபதி" என்கையாலே, அதிக:பதி: என்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் (உபயேத்யாதி). இவ்வாக்யம் உபாஸகாபிப்ராயமன்றிக்கே ஆழ்வாருக்குக் கருத்தாக வ்யாக்யாதா அருளிச்செய்கிறாரென்று கண்டுகொள்வது. சில ஸ்ரீகோசங்களிலிந்த பாடமுண்டு, கோஶாந்தரங்களிலே "அதிபதியாகி" என்று எடுத்துக்கூட்டி, "உபயவிபூதிக்கு நாயகனாயிருக்க ஆஶ்ரிதன் தன்னை அநுஸந்தித்த அளவிலேயாயிருக்கை" என்று பாடமுண்டு. இந்த பாடத்தில், உபயவிபூதிக்கு நாயகத்வம் ஸஹஜமாயிருக்க, அண்டமாத்ராதிபதி ஆனான் என்னக்கூடுமோ? என்ன, அருளிச்செய்கிறார் (உபயேத்யாதி) என்று

(அதிபதி) உபயவிபூதிக்கும் நிர்வாஹகனுகை. (ஆகி) ஆஸ்ரிதர் தன்னை அநுஸந்தித்தவளவிலேயாயிருக்கை. ஐஶ்வர்யார்த்தி, ஐஶ்வர்ய விசிஷ்டனுக அநுஸந்தித்தால் அவ்வளவாயிருக்கும்; கைவல்யார்த்தி, அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தனுக அநுஸந்தித்தால் அவ்வளவாயிருக்கும்.

(அசுரரிராக்கதரை) இப்பதத்துக்கு அஸுரர்களாலே வேதாபஹாராத்யாபத்துக்களில் களையறுத்துக் கொடுக்கையும் ரக்ஷகனுக்கு பரமிறே. "ஆர்த்தன்" என்றும், "அர்த்தார்த்தி" என்றும் ஐஶ்வர்ய புருஷார்த்தம் இரண்டு முகமாயிறே இருப்பது. அதில் அர்த்தார்த்தியைக் கீழேசொல்லி, இவ்வம்சத்தாலே ஆர்த்தனைச் சொல்லுகிறது. ஜந்மப்ரப்ருதி பாாநர்த்தமே பண்ணிப்போருவது இரண்டு வர்க்கமிறே. ஸம்பந்தம் ஒத்திருக்க நிரஸநத்திலே இழிகிறது, ஆஶ்ரிதவிரோதிகளென்றிறே. (இண்டக்குலத்தை)

கண்டுகொள்வது. (அநுஸந்தித்தவளவிலே) நினைத்த ஆகாரமாத்ரத்திலே. விவரணம் (ஐஶ்வர்யேத்யாதி வாக்யத்வயம்). (கைவல்யார்த்தி) என்கிற வாக்யத்துக்கு, * "அறவனையாழிப்படையந்தணனை" என்று சுத்திகுணயோகத்தைச் சொல்லுவார்களிறே என்று கருத்து. (அவ்வளவாயிருக்கும்) என்றது, ரக்ஷ்யாபேக்ஷாநுகுணமாகத் தன்னை அமைத்து வைக்குமென்கை.

ப்ரஹ்மா அண்டாதிபத்யத்துக்காக ஆஶ்ரயிக்கிற ப்ரகாரம் சொல்லுகிறவிடத்தில் அஸுரநிரஸநம் சொல்லுவானென்? என்னில், அருளிச்செய்கிருர் (இப்பதத்துக்கித்யாதி). (இப்பதத்துக்கு) என்றது, இந்த அண்டாதிபத்யத்துக்கு என்றபடி. ரக்ஷகனுக்கு பரமானுலும், பூர்வம் ஐஶ்வர்யார்த்தியை அழைக்கிற ப்ரகாணத்துக்கு அது சேருமோ? என்ன, (ஆர்த்தனித்யாதி). இந்த ப்ரஹ்மாவுக்கே ஆபத்து வந்தால் ஆர்த்தியுமுண்டென்று கருத்து. அன்றிக்கே, அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகேஷ்ட ப்ராபணங்கள் ரக்ஷகக்ருத்யமாகை யாலே, இஷ்டப்ராபணத்தில் அநிஷ்டநிவ்ருத்தி ஆநுஷங்கிகமாக வந்ததென்று கீழருளிச்செய்து, ஐஶ்வர்யார்த்திதான் த்விவிதனுகை யாலே, "அசுரரிராக்கதர்" என்றதுக்கு யோஜநாந்தரம் அருளிச்

* திருவாய்மொழி (1-7-1).

மிகவும் நெருங்கின திரளை. "இண்டர்" என்று, சண்டாளர். இவர்களைச் சண்டாளரென்று சொல்லுகிறது, நிஹீனரென்னும் நினைவாலே. உத்கர்ஷத்துக்கெல்லை, பரஸம்ருத்யேக ப்ரயோஜநனாயிருக்கை; நிகர்ஷத்துக்கெல்லை, பராநர்த்தமே யாத்ரையாயிருக்கை. இவ்வாபத்துக்களிலே "असुरशात्रवे नमः" (அஸுரஶாத்ரவே நம:) என்றிறே இவர்களுடைய ஆஶ்ரயண ப்ரகாரமிருப்பது. (எடுத்துக்களைந்த) † "பொல்லா வரக்கனைக் கிள்ளிக்களைந்தானை" என்னுமாபோலே, ஆஶ்ரிதர் பக்கல் அழல் தட்டாதபடி நிரஸிக்கை, "இலங்கை பாழாளாக" என்றதும் விபீஷண பரிக்ரஹத்துக்கு ஒரு நோவு வாராதபடியிறே. விபீஷண க்ருஹத்துக்கு அழல் தட்டாதபடியிறே லங்காதஹநம் பண்ணிற்றுத் திருவடியும். (இருடீகேசன்) ப்ரயோஜநாந்தரபரர்க்கு ஐஶ்வர்யாதிகளிலே கர்மாநுகூலமாக ருசியைப் பிறப்பிக்கும்; தன் பக்கலிலே ந்யஸ்தபரராயிருப்பார்க்கு ஸ்வரூபாநுரூபமாக ருசியைப் பிறப்பிக்கும். ஐஶ்வர்யார்த்தமாக அவன் பக்கலிலே கண் வைக்கும்போதே அவன் வடிவழகிலே உறைக்கவையுங்கோள்; அவன் "மமேதம்" என்கிற அபிஸந்தியைக் குலைத்துத் தன்பக்கலிலே ருசியைப் பிறப்பிக்கும்; அத்தாலே, அபேக்ஷித்த ஐஶ்வர்யத்தை விஸ்மரித்து அவன் றன்னையே பற்றலாம்.

---

செய்கிறார் (ஆர்த்தனித்யாதி) என்னவுமாம். இந்த யோஜனை ஸ்வமோ? என்ன, (ஜந்மேத்யாதி). § "ஸமோऽஹம் ஸர்வபூதேஷு" என்றிருக்குமவன் இவர்களை அழியச்செய்கைக்கு நியாமகமருளிச்செய்கிறார் (ஸம்பந்தமித்யாதி). "இண்டம்" என்றதுக்கு நெருக்கமாதல், சண்டாளரென்றாதல் இரண்டர்த்தம். சண்டாளரென்கிறது எவ்வழியாலே? என்ன, (இவர்களை இத்யாதி). ஹீநரானமையின் எல்லையை ஸப்ரதியோகிகமாக அருளிச்செய்கிறார் (உத்கர்ஷத்துக்கித்யாதி). ஆகையாலே இப்படி பராநர்த்தம் பண்ணுமவர்கள் சண்டாளரென்று கருத்து. இந்த அஸுரநிரஸநாநுஸந்தாநம் ஆஶ்ரயண ப்ரகாரமானமையை அருளிச்செய்கிறார் (இவ்வாபத்துக்களித்யாதி). (இவ்வாபத்துக்கள்) என்றது, இந்த ஆஸுரரால் வந்த ஆபத்துக்களென்றபடி. "களைந்த" என்றால் போராதோ? "எடுத்து"

---

† திருப்பாவை. (13). § கீதை (9-29).

(தனக்குத் தொண்டக்குலத்திலுள்ளீர்) இப்படி ஐஶ்வர்யத்தில் ப்ரேமம்போய் பகவத்ப்ரேம யுக்தருடைய திரளிலே உளரான நீங்கள். "தொண்டக்குலம்" என்று, தனியே ஒரு ஸந்தாநம்போலே காணும். "தேஹமே ஸ்வரூபம்" என்றிருப்பார்க்கும், "சேஷத்வமே ஸ்வரூபம்" என்றிருப்பார்க்கும் இத்தனை வாசியுண்டிறே.

இனி, அநந்யப்ரயோஜநராயிருப்பார்க்குக் க்ருத்யம் இன்னதென்கிறார் மேல். (வந்தடி தொழுது) திருவடிகளே ப்ரயோஜநமாக வந்து அநுகூலவ்ருத்திகளைப்பண்ணி. ஐஶ்வர்யமே ப்ரயோஜநமாய் விஷயாநுபவமே யாத்ரையாயிருக்கை தவிர்ந்து, திருவடிகளே

---

என்பானென்? என்ன, (பொல்லா இத்யாதி). (அழல்) ஔஷ்ண்யம். அப்படி நிரஸித்ததுக்கு உதாஹரணம் (பாழாள் இத்யாதி). (பரிக்ரஹம்) பரிகரமென்றபடி. இவனேயன்றிக்கே இவனைப்பற்றின திருவடியும் இப்படி செய்தானென்கிறார் (விபீஷணேத்யாதி). ஹ்ருஷீகாணாம்-இந்த்ரியாணாம், ஈஶ:-நியாமக: என்றாய், இன்னாருடைய இந்த்ரியங்களென்னாமையாலே யதாதிகாரம் நெஞ்சை மூட்டுமென்று அர்த்தம் அருளிச்செய்கிறார் (ப்ரயோஜநாந்தரபரரித்யாதி). ஆனால் எங்களுக்கு அவனைப்பற்ற வழியேது? என்ன, அருளிச்செய்கிறார், (ஐஶ்வர்யார்த்தமாக இத்யாதி வாக்யத்ரயத்தாலே). வடிவிலே இவன் நெஞ்சு வைத்தால் அதுவும் * பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரி ஆகையாலே வசீகரிக்குமாகையாலே, ப்ரயோஜநாந்தரபரதையைக் குலைக்குமென்று கருத்து.

இருடீகேசனுக்கு என்னாதே, "தனக்கு" என்று விசேஷிக்கையாலே (ஐஶ்வர்யத்தில் ப்ரேமம்போய்) என்றது. "திரள்" என்னாமல் குலம் என்றதுக்கு வாஸநை, (தொண்டக்குலமித்யாதி). "இண்டக்குலத்தையெடுத்துக்களைந்த" என்றும், "தொண்டக்குலத்திலுள்ளீர்" என்றும் சொல்லுகிற பதங்களைக் கடாக்ஷித்து, வ்யாக்யாதா ஈடுபடுகிறார் (தேஹமே ஸ்வரூபமித்யாதி).

மேலுக்கெல்லாம் அவதாரிகை (இனியித்யாதி). "அடிவந்து தொழுது" என்று அந்வயமுகேந அருளிச்செய்கிறார் (திருவடிகளேயித்யாதி). கீழ்வாக்யத்தை வ்யாவர்த்ய கதநமுகேந அருளிச்செய்

---

* ராமா-ஆர (3-29).

ப்ரயோஜநமாய் அநுகூலவ்ருத்தியே யாத்ரையாயிருக்கும்படி பாருங்கோள். (ஆயிரநாமம் சொல்லி) இரண்டு திருநாமத்தையே நிர்பந்திக்க வேண்டுவது "மமேதம்" என்றிருக்குமன்றிறே; "தவேதம்" என்கிற புத்தி பிறந்தால், பகவத்குண சேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களெல்லாம் போக்யமாயிறே இருப்பது; அவற்றை வாயாரச் சொல்லி. (பண்டைக்குலத்தைத் தவிர்ந்து) தொண்டக்குலத்திலே வந்து அந்வயித்தவாறே "மமேதம்" என்றிருந்த காலம் ஜந்மாந்தரமாய்த் தோற்றுமிறே. ஒரு ஜந்மத்திலே த்விஜந்மாவாகிறானிறே; ராஜர்ஷியான விஶ்வாமித்ரன், அந்த ஜந்மத்திலே ப்ரஹ்மர்ஷியானானிறே. அங்கு தபஸ்ஸாலே வர்ணபேதம் பிறந்தது; இங்கு பகவத்ப்ரஸாதத்தாலே ஸ்வரூபபேதம் பிறந்தது. "உனக்கு நான்" என்ற அநந்தரம், முன்பு "நான் எனக்கு" என்றிருந்தவிது வ்யதிரேகமாய்த் தோற்றுமிறே.

(பல்லாண்டு) இப்படி அநந்யப்ரயோஜநரான நீங்கள் மங்களாசாஸநம் பண்ணுங்கோள். "ப்ரயோஜநாந்தரபரனாய்ப் போந்தவன் நமக்கு ஸம்ருத்தியை ஆசாஸிக்குமித்தனை பரிவனாகப்பெற்றோமே!" என்று அவன் குளிர நோக்கும். (பல்லாயிரத்தாண்டென்மின்)

---

கிறார் (ஐஶ்வர்யமேயித்யாதி). ஒன்றிரண்டமையாதோ, ஆயிரம் வேணுமோ? என்ன, அருளிச்செய்கிறார் (இரண்டித்யாதி வாக்யத்ரயத்தாலே). (இரண்டு) என்றது, "அண்டாதிபதயே நம:" "அஸுரரக்ஷத்ரவே நம:" என்றத்தை நினைக்கிறது. (மமேதமென்றிருக்குமன்று) தனக்கொரு புருஷார்த்தம் வேணுமென்றபோது என்றபடி. (தவேதமென்கிற புத்தியாவது) எல்லா நன்மைகளும் அத்தலைக்கு வேணுமென்கிற ப்ரதிபத்தி. "ஆயிரம்" என்றது அநந்தமென்று விவக்ஷித்து, (திருநாமங்களெல்லாம்) என்கிறார். ஆயிரநாமங்களோடே, "பல்லாண்டென்மின்" என்ன அமைந்திருக்க, "சொல்லி" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (வாயாரச் சொல்லி) என்றது. "பண்டைக்குலம்" என்றது, முன்புள்ள குலம் என்றபடியாய் ஜந்மாந்தரமென்றபடி. ஜந்மமொன்றாயிருக்க, ஜந்மாந்தரமாகிறபடி எங்ஙனே? என்ன, (தொண்டக்குலத்திலேயித்யாதி). இதுக்கு உதாஹரண த்வயம் (ஒரு ஜந்மத்திலே இத்யாதி வாக்ய

பின்னை பல்லாயிரத்தாண்டு என்னுங்கோள். அங்நோக்கமுகு நித்ய ஸ்ரீயாய்ச் செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுங்கோள். உங்களுக்கு இம்மாத்ரத்திலே ஸ்வரூபமும், அத்தாலே ஈஶ்வரனுக்கு ஸம்ருத்தியுமுண்டாகப் பெற்றால் ஆறியிருக்கிறதென்? சடக்கென மங்களாசாஸநம் பண்ணுங்கோளென்கிறார். 5.

---

6. எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பனேழ்படிகால்தொடங்கி
வந்துவழிவழியாட்செய்கின்றோம்திருவோணத்திருவிழவில்
அந்தியம்போதிலரியுருவாகியரியையழித்தவனைப்
பந்தனைதீரப்பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்றுபாடுதுமே.

பதவுரை:— எந்தை—நானும் என் தகப்பனும், தந்தை— அவனுடைய தகப்பனும், தந்தை—அவனுடைய தகப்பனும், தந்தை— அவனுடைய தந்தையும், தம் மூத்தப்பன்—அவனுக்குத் தந்தையும், பாட்டனுமாகிய, ஏழ் படி கால் தொடங்கி—ஏழு தலைமுறைகள் தொடங்கி, வந்து—(மங்களாசாஸநம் பண்ணத்தக்க ஸமயங்களிலே) வந்து, வழி வழி—முறை முறையாக, ஆட்செய்கின்றோம்—அடிமை செய்கிறோம், திருவோணத் திருவிழவில்—திருவோணமென்கிற திருநாளிலே, அந்தியம் போதில்—(அஸுரருடைய பலம் வளரும்) அந்திவேளையிலே, அரியுருவாகி—நரஸிம்ஹரூபத்தை உடையவனாய், அரியை—(தன் அடியவனான ப்ரஹ்லாதனுக்கு) சத்துருவான இரணியனை, அழித்தவனை—உருவழித்தவனுக்கு, பந்தனை தீர—

---

த்வயம்). இப்படி ஆகைக்கு ஹேதுவேது? என்ன, (அங்கு இத்யாதி வாக்யத்வயம்). ஸ்வரூப பேதமென்றத்தை உபபாதிக்கிறார் (உனக்கித்யாதி). (வ்யதிரேகமாய்) என்றது, பிங்நமாயென்றபடி.

கீழெல்லாம் கடாக்ஷித்து, "பல்லாண்டு" என்றதுக்குத் தாத்பர்யம் (இப்படியித்யாதி). கீழ் அபதாநத்தைக் கடாக்ஷித்து; "பல்லாயிரத்தாண்டு" என்றதுக்கு அவதாரிகை (ப்ரயோஜநாந்த ரேத்யாதி). இதுக்குத் தாத்பர்யம் (அங்நோக்கு இத்யாதி). "என்மின்" என்றதுக்குத் தாத்பர்யம் (உங்களுக்கித்யாதி). (சடக்கென) சீக்ரமாக. இப்படி உக்திமாத்ரத்திலே இம்மஹாபலம் ஸித்தித்தால் ஆறியிருக்கக் கூடுமோ? என்று கருத்து. 5.

---

(அவனை ஸம்ஹரித்ததினால் உண்டான) ஆயாஸம் தீரும்படியாக, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதும்—காலதத்வமுள்ள வரையில் மங்களாசாஸநம் செய்வோம்.

அவ:— ஆரும்பாட்டு. (எந்தையித்யாதி) அநந்யப்ரயோஜநர்க்கும் ப்ரயோஜநாந்தரபரர்க்கும் உண்டான நெடுவாசி அறிந்திருக்கச் செய்தேயும், அநந்யப்ரயோஜநரை அழைத்த ஸமநந்தரம் இவர்களை அழைக்கைக்கடி, 54. “ उदाराः सर्व एवैते ” (உதாராஸ்ஸர்வ ஏவைதே) என்னுமவன் சீலத்தாலும், அவனோடு இவர்களுக்குண்டான அவர்ஜநீய ஸம்பந்தத்தாலும், இவர்களுக்கும் அவற்றையே நினைத்துத் தேங்காதே புகுரலாம்படியிறே இருப்பது; ஆகையாலே, அநந்ய ப்ரயோஜநரை அழைத்தவோபாதி இவர்களையும் அழைத்தாராய் நின்றார்கீழ்; இதில், வாழாளிலழைத்த அநந்யப்ரயோஜநர், தங்கள் ஸ்வரூபத்தையும் ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியையும் சொல்லிக் கொண்டு வந்து புகுர, அவர்களைக் கூட்டிக்கொள்ளுகிறார். “ ஏழாட் காலும் பழிப்பிலோம் ” என்று ப்ரயோஜநாந்தரபரரைக் குறித்துத் தாமருளிச்செய்த தம்முடைய திறனுக்குண்டான ஏற்றத்தை,

---

ஆரும்பாட்டு:— (எந்தையித்யாதி). மங்களாசாஸநத்தில் தமக்குண்டான அபர்யாப்தியாலும், அதில் ரஸ்யதாநிபந்தநமாக இவர்களிழந்திருக்கிறார்களென்கிற க்ருபாதிசயத்தாலும், திருத்தியாகிலும் இவர்களோடே தாம் மங்களாசாஸநம் பண்ணுகை தமக்கு தாரகமாகையாலும் இவர்கள் அவன் கைபார்த்திருக்கும் யோக்யதாமாத்ரத்தாலும், அழைக்கிறார் என்று கீழருளிச்செய்து, ஆகிலும் அநந்யப்ரயோஜநர் நீரிலே நீர்சேர்ந்தாற்போலே வருவர்கள், ப்ரயோஜநாந்தர பரராகில் ஸ்வநிகர்ஷத்தாலே புகுரார்களென்று, இவர்களுடைய விசேஷமறியும் ஆழ்வார் அழைக்கக்கூடாதே என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார் (அநந்யப்ரயோஜநர்க்கும் இத்யாதி வாக்யத்வயத்தாலே). (அழைக்கைக்கடி, புகுரலாம்படியாயிறே இருப்பது) என்று வாக்யாந்வயம். (தேங்காதே) தயங்காதே; பயப்படாதே என்றபடி. இப்பாட்டில் ஆழ்வார்தம் ஸ்வரூபம் சொல்லுகிறாரென்னக்கூடாது, வாழாட்பட்டிலே சொல்லுகையாலே; இது ப்ரயோஜநாந்தரபரருடைய பாசுரமென்னக்கூடாது, “ ஏழ்படிகால்—ட்செய்கின்றோம் ” என்றிருக்கையாலே; ஆகையால், அநந்ய

புகுருகிறவர்கள், தங்களுக்குண்டாகச் சொல்லிக்கொண்டு வந்து புகுருகிறார்கள். தந்தாமேற்றம் சொல்லிக்கொண்டு வந்து புகுருகை ஸாத்விகர்க்கு யுக்தமோ? என்னில், ஆழ்வாருடைய திருவுள்ளம் பயம் கெடுகைக்காகச் சொல்லுகிறார்களாகையாலே யுக்தம். 56. **“पन्नगाशनमाकाशे पतन्तं पक्षिसेविते । वैनतेयमहं शक्तः परिगन्तुं सहस्रशः ॥”** (பந்நகா'ஶநமாகாஶே பதந்தம் பக்ஷிஸேவிதே । வைநதேயமஹம் ஶக்த: பரிகந்தும் ஸஹஸ்ரஶ: ॥) என்று, திருவடி, ஸ்வசக்தியைச் சொன்னனிறே முதலிகளுடைய பயம் சமிக்கைக்காக.

வ்யா:— (எந்தை) தானும் தமப்பனுமாக இருவர். (தந்தை தந்தை தந்தை) என்று ஒரு மூவர். (தம்மூத்தப்பன்) “தம்” என்று முடிந்தவனை அநுபாஷிக்கிறது. (மூத்தப்பன்) “அப்பன்” என்று தமப்பனார்; “மூத்தப்பன்” என்று பாட்டனார்; ஆகையாலே அங்கே இருவர்; ஆக, எழுவரையும் சொல்லுகிறது. ஆழ்வார் “ஏழாட்காலும் பழிப்பிலோம்” என்று திரள அருளிச்செய்தார்; இவர்களும், (ஏழ்படிகால்) என்று திரளச் சொல்லாநின்றார்கள். பிரித்துச் சொல்லுகிற இதுக்கு பலமென்? என்னில்; ஸ்வஸந்தாநத்தில் மங்களாசாஸநம் பண்ணிப் போந்தவர்கள் பக்கலுண்டான ப்ரீத்யதிசயத்தாலே சொல்லுகிறார்கள். 57. **“स हि विद्यातस्तं जनयति तच्छ्रेष्ठं जन्म”** (ஸ ஹி வித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்ட்டம் ஜந்ம) 58. **“गरीयान् ब्रह्मदः पिता”** (கரீயாந் ப்ரஹ்மத: பிதா) என்று வித்யா

---

ப்ரயோஜநருடைய பாசுரமாக வர்த்திஷ்யமாணத்தை அருளிச்செய்கிறார் (இதிஸித்யாதி). இது இவருக்குப் பாசுரமென்கைக்கு ஸூசகமென்? என்னில், (ஏழாட்காலும் இத்யாதி). ஆத்மப்ரஶம்ஸையாகாதே என்று சங்கித்து, இதுவும் பரார்த்தமாகையாலே கூடுமென்று பரிஹரிக்கிறார் (தந்தாமித்யாதி). (பயம் கெடுகைக்காக) என்றது, ப்ரயோஜநாந்தரபரர்கள் எங்கே வருகிறார்களோ! என்னும் பயமாதல், “உள்ளீரேல்” என்கையாலே, மங்களாஶாஸநத்துக்கு ஆள் கிடையாமல் வந்த பயமாதல். பரார்த்தமாக ஸ்வாதிசயத்தைச் சொன்னவர்களுண்டோ? என்ன, (பந்நகாஶநம் இத்யாதி).

முதற்பதத்திலிருவரும், முடிந்த பதத்திலிருவரும், மத்யே மூவரும், ஆக ஸப்தஸங்க்யையைக் காட்டுகிறார் (எந்தை இத்யாதி). (முடிந்தவனை) என்றது, மூன்றாம் தந்தையை. மேல், “ஏழ்படிகால்”

ஸந்தாநத்தைக் கொண்டாடுமாபோலே, 59. "पितरं मातरं दारान्" (பிதரம் மாதரம் தாராந்) என்று த்யாஜ்யமான யோநிஸந்தாநத்தைக் கொண்டாடுகை யுக்தமோ? என்னில், யுக்தம்; கொண்டாடுகைக்கு ப்ரயோஜகம் பகவத்ஸம்பந்தமாகையாலே. வித்யாஸந்தாநத்திலும் பகவத்விமுகன் த்யாஜ்யனல்லனோ? (ஏழ்படிகால்தொடங்கி) அர்த்த க்ரமத்தாலே ஏழையும் சொல்லச்செய்தேயும் திரளச்சொல்லுகிறது, ஸ்வஸந்தாநத்திலுண்டான ஆதராதிசயத்தாலே. (வந்து) மங்களா சாஸநம் பண்ணுகைக்கு யோக்யமான தசைகளிலே வந்து. (வழிவழி யாட்செய்கின்றோம்) முறைமுறையாகத் தப்பாமே அடிமை செய்கின்றோம். இத்தால், இஸ்ஸந்தாநத்துக்கு மங்களாசாஸந விச்சேதம் பிறந்ததில்லையென்கை. யாஜ்ஞிக ஸந்தாநத்துக்கு த்ரிபுருஷ விச்சித்தியாலே அப்ராஹ்மண்யம் சொல்லுமாபோலே, மங்களாசாஸந விச்சித்தியால் வைஷ்ணவத்வஹாநி சொல்லும் குறை எங்கள் ஸந்தாநத்தில் இல்லை என்கிறார்கள். 60. "यस्य वेदश्च वेदी च विच्छिद्येते त्रिपूरुषम्। स वै दुर्ब्राह्मणो ज्ञेयस्सर्वकर्म बहिष्कृतः॥" (யஸ்ய வேதஶ்ச வேதீச விச்சித்யேதே த்ரிபூருஷம்। ஸ வை துர்ப்ராஹ்மணோ ஜ்ஞேயஸ்

---

என்று சொல்லாநிற்க, "எந்தை தந்தை தந்தை" என்று இப்படி சொல்லி விசேஷிப்பானென்? என்கிற சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் (ஆகவித்யாதி). "எந்தை" இத்யாதியாலே சரீர ஸம்பந்தத்தைக் கொண்டாடக் கூடுமோ, ஶ்ருதி ஸ்ம்ருதிகள் வித்யா ஸந்தாநத்துக்கே ஶ்ரேஷ்டதையையும், இதுக்கு த்யாஜ்யதையையும் சொல்லாநின்றதே என்கிற ஶங்கையை அநுவதித்து, இவ்விரண்டுக்கும் உத்தேஶ்யதாப்ரயோஜகம் பகவத்ஸம்பந்தமென்று பரிஹரிக்கிறார் (ஸஹி இத்யாதி வாக்யத்வயத்தாலே). இத்தை வ்யதிரேக முகேந த்ருடீகரிக்கிறார் (வித்யாஸந்தாநத்திலுமித்யாதி). இவ்விடத்திலே * "ப்ரயோஜகம் பகவத்ஸம்பந்தமும் அஸம்பந்தமும். ப்ராஹ்மண்யம் விலைசெல்லுகிறது வேதாத்யயநாதி முகத்தாலே பகவல்லாபஹேதுவென்று, அதுதானே இழவுக்குறுப்பாகில் த்யாஜ்யமாமிறே" என்கிறபடியை அநுஸந்தித்துக்கொள்வது. "எந்தை தந்தை" என்று பிரித்துச்சொன்னது ஆதரத்தாலேயானால் திரளவும் சொல்லவேணுமோ? என்ன, இதுவுமொரு ப்ரீதியாலே என்கிறார்

---

* ஸ்ரீவசநபூஷணம்.

ஸர்வகர்ம பஹிஷ்க்ருத: ||) என்னக்கடவதிறே. "வழிவழி" என்று, சாஸ்த்ரமார்க்கத்தாலும் சிஷ்டாசாரத்தாலுமென்றுமாம். 61. "शान्तिश्शान्तिश्शान्तिः" (ஶாந்திஶ் ஶாந்திஶ் ஶாந்தி:) என்றும், 62. "पश्येम शरदश्शतं" (பஶ்யேம ஶரதஶ்ஶதம்) என்றும், 17. "सर्वान् देवान् नमस्यन्ति" (ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி) என்றும், 21. "मङ्गलानि प्रयुञ्जानाः" (மங்களாநி ப்ரயுஞ்ஜாநா:) என்றும் சொல்லக்கடவதிறே. (ஆட்செய்கின்றோம்) ஆட்செய்கையாவது, திருப்பல்லாண்டு பாடுகையிறே. மேலே "பந்தனை தீரப்பல்லாண்டு" என்றத்தை வ்ருத்தியாகச் சொல்லுகையாலே.

இதுக்குக்கீழ், தங்களுடைய ஸந்தாநத்திலேற்றம் சொன்னார்களாய், மேல், தங்களுடைய வ்ருத்திவிசேஷம் சொல்லுகிறார்கள். (திருவோணத்திருவிழவில்) விசேஷித்துத்திருநக்ஷத்ரம் சொல்லாதவிடத்துக்கெல்லாம் இதுவே திருநக்ஷத்ரமாகக்கடவது. "திருவோணம்" என்கிறது ஜந்மநக்ஷத்திரமென்னில் உகவாதார றிந்து அபிசரிப்பர்களென்று அஞ்சி, திருவோணமென்கிற

---

(அர்த்தக்ரமேத்யாதி). அர்த்தக்ரமமாவது, எந்தையித்யாதியில் அர்த்தக்ரமமென்றபடி. "வழிவழி" என்கிற வீப்ஸையாலே பலிதம் (தப்பாமே) என்றது. இத்தால் பலித்த தாத்பர்யம் (இத்தாலித்யாதி). விச்சேதம் வந்தால் அதில் குறையேது? என்ன, த்ருஷ்டாந்த பூர்வகமாக அருளிச்செய்கிறார் (யாஜ்ஞிகேத்யாதி). த்ருஷ்டாந்தத்துக்கு ப்ரமாணம் (யஸ்ய இத்யாதி). (வேதீ) யஜ்ஞத்தில் திண்ணை. தலைமுறையாகக் கீழருளிச்செய்து, அர்த்தாந்தரம் அருளிச்செய்கிறார் (ஶாஸ்த்ரேத்யாதி). ஶாஸ்த்ரந்தன்னைக் காட்டுகிறார் (ஶாந்திரித்யாதி). சிஷ்டாசாரத்தைக் காட்டுகிறார் (ஸர்வாந் இத்யாதி). ஆட்செய்கை ஸாமாந்ய ஶப்தமானாலும், ப்ரக்ருதார்த்தாநுகுணமாக விசேஷிக்கிறார் (ஆட்செய்கையாவதித்யாதி). இதுக்கு ஹேது (மேலேயித்யாதி).

மேலுக்கெல்லாம் அவதாரிகை (இதுக்குக் கீழ் இத்யாதி). "அரியுருவாகி" என்று, ந்ருஸிம்ஹாவதாரம் ப்ரஸ்துதமாயிருக்க, ஸ்வாதியென்று சொல்லுகையன்றோ வேண்டுவது? என்ன, விஷ்ணு நக்ஷத்ரமாகையாலே இது எல்லாவற்றுக்கும் ஸாதாரணமென்று பரிஹரிக்கிறார் (விசேஷித்து இத்யாதி). குப்ஜாSSம்ராத்யவதார

திருநாளிலேயென்று மறைத்துச் சொல்லுகிறார். (அந்தியம்போதில்) தேவர்களுக்கு பலம் க்ஷீணமாய் அஸுரர்க்கு பலம் வர்த்திக்கும் ஸமயத்திலே. (அரியுருவாகி) ஒருகாலவிசேஷம் வேண்டாதே ஸர்வ காலமும் மங்களாசாஸநம் பண்ணவேண்டும்படியான வடிவையுடைய னாய். 63. "नारसिंहवपुः श्रीमान्" (நாரஸிம்ஹவபுஶ் ஶ்ரீமாந்) என்றும், * "அழகியான்றானே அரியுருவன்றானே" என்றும், † "நரங்கலந்த சிங்கமாய்" என்றும் சொல்லக்கடவதிறே. (அரியையழித்தவனை) "அரி" என்று, சத்ரு. ஸஹஜசத்ருவான ஹிரண்யனைக் குற்றுயி ராக்கி விடாதே உருவழித்தவனை. ‡ "சுகிர்ந்தெங்கும் சிந்தப்பிளந்த" என்னக்கடவதிறே. அவனை அழியச்செய்தது பயஸ்த்தாநமாகிறது பின்புள்ளார் பகை கொண்டாடுவரென்னுமத்தாலே. (பந்தனைதீர) துஷ்ப்ரக்ருதியான ஹிரண்யனுடலைக் கீண்டு பொகடுகையால் வந்த அனுக்கம்தீர. திருவவதரித்த திவஸத்திலுண்டான அபதாநமாகை யாலே "அனுக்கம்" என்கிறதிறே. (பல்லாண்டு) அநுகூலர் வாயாலே ஒருகால் மங்களாசாஸநம் பண்ண, அவ்வஸ்துவினுடைய அனுக்கம் போய், நித்யமாய்ச் செல்லுமென்றிறே இவர்கள் நினைவு. (பல்லாயிரத் தாண்டென்று பாடுதுமே) ஒருகால் "பல்லாண்டு" என்றதால் பர்யாப்தி பிறவாமையாலே காலதத்வமுள்ளதனையும் நித்யமாய்ச் செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுகையே எங்களுக்கு வ்ருத்தி என்கிறார்கள். 6.

தில் திருநக்ஷத்திரம் சொல்லவில்லையே என்று கருத்து. ஆனால் ஜந்ம நக்ஷத்திரமென்னாதே, "திருவிழவு" என்பானென்? என்னில், (திருவோணம் இத்யாதி). (என்னில்) என்றது, என்று சொன்னால் என்றபடி. அரியுருவானது அந்தியம்போதிலாயிருக்க, அந்தி யென்றதுக்குத் தாத்பர்யம் (தேவர்களுக்கு இத்யாதி). இத்தால் எக்காலமும் பயஹேதுவென்று கருத்து. "அரியுரு" என்றதுக்குத் தாத்பர்யம் (ஒருகாலவித்யாதி). அவ்வடிவுதான் பரியவேண்டி யிருக்குமோ? என்ன, ப்ரமாணங்கள் (நாரஸிம்ஹ இத்யாதி). இவ்விடத்தில், "नारसिंहवपुः — भक्तभयापहः तदपेक्षानुगुणं प्रतिपन्नयथा- कामदिव्यमहानृसिंहसंहननः, अतः परस्परदुर्घटापूर्वविकृतरूपपरिग्रहादपि श्रीमान् — सौन्दर्यलावण्यादिभिः अतिमनोहरदिव्यरूपः" (நாரஸிம்ஹவபு: —

* நான்முகன் திருவ. (22). † இர-திருவ. (84). ‡ மூன்-திருவ. (95).

7. தீயிற்பொலிகின்றசெஞ்சுடராழிதிகழ்திருச்சக்கரத்தின்
கோயிற்பொறியாலேயொற்றுண்டுநின்றுகுடிகுடியாட்செய்கின்றோம்
மாயப்பொருபடைவாணனையாயிரந்தோளும்பொழிகுருதி
பாயச்சுழற்றியவாழிவல்லானுக்குப்பல்லாண்டுகூறுதுமே.

பதவுரை:— *தீயில்—அக்னி, ஸூரியன் முதலிய பொருள்களைக் காட்டிலும், பொலிகின்ற—மிகவும் விளங்குகிற, செம்சுடர்—சிவந்த ஒளியை உடையவனாய், ஆழி—வட்டமாக, திகழ்—பிரகாசிக்கிற, திருச் சக்கரத்தின் கோயில்—ஸ்ரீ ஸுதர்சனாழ்வானுடைய இருப்பிடத்தின், பொறியாலே—சிந்நத்தாலே, ஒற்றுண்டு நின்று—அடையாளம் செய்யப்பட்டவராய் நின்று, குடிகுடி—தலைமுறை தலைமுறையாக, ஆள் செய்கின்றோம்—அடிமை செய்வதற்காக வந்தோம்; மாயப் பொரு படை—வஞ்சனையாகப் போர் செய்யும் ஸேனையை உடைய, வாணனை—பாணாஸுரனுடைய, ஆயிரம் தோளும்—ஆயிரம் தோள்களிலிருந்தும், பொழி குருதி பாய—பொழியாநின்றுள்ள ரத்த வெள்ளம் பாயும்படியாக, சுழற்றிய—சுழற்றப்பெற்ற, ஆழி—திருவாழியாழ்வானை, வல்லானுக்கு—ஏந்தி நிற்க வல்லவனுக்கு, பல்லாண்டு கூறுதும்—திருப்பல்லாண்டு பாடுகிறோம்.*

---

பக்தபயாபஹ: ததபேக்ஷாநுகுணம் ப்ரதிபங்க யதாகாம திவ்யமஹாங்ரு-ஸிம்ஹஸம்ஹநந: , அத: பரஸ்பர துர்க்கடாபூர்வ விக்ருதரூப பரிக்ரஹா-தபி ஸ்ரீமாந் — ஸௌந்தர்ய லாவண்யாதிபி: அதிமநோஹர திவ்யரூப:) என்கிற ஸஹஸ்ரநாம பாஷ்யம் அநுஸந்திப்பது. (நாரம்) மநுஷ்யத்வம். இத்தை நிரூபகமாகச் சொல்லுகையாலே (ஸஹஜ ஶத்ரு) என்கிறார். (குற்றுயிர்) என்கிறது, குறுகின ப்ராணன்; அதாவது, ம்ருதப்ராயன் என்றபடி. அழித்ததுக்கு மூன்றாந் திருவந்தாதியில் பாசுரத்தைக் காட்டுகிறார் (சுகிர்ந்து இத்யாதி). (சுகிர்ந்து) என்றது, பலகூறுசெய்து என்றபடி. அழித்த பின்பு பயப்படுவானென்? என்ன, (அவனையித்யாதி). "பந்தனை" என்றது, அனுக்கம்; அதாவது:— சிசுக்களுக்கு வரும் வ்யாதி. (துஷ்ப்ரக்ருதி) என்றது, அஸ்ப்ருஶ்யதை தோற்றுகைக்காக. "பல்லாண்டு" என்றால் அனுக்கம்போமோ? என்ன, (அநுகூலரித்யாதி). "பாடுதும்" பாடுவோம் என்றபடி. வர்த்தமானத்தாலே இதுவே வ்ருத்தியென்று தோற்றுகிறது; அத்தை அருளிச்செய்கிறார் (ஒருகால் இத்யாதி). 6.

அவ:— ஏழாம்பாட்டு. (தீயிற்பொலிகின்ற) ஏடுநிலத்திலே இவராலே ஆஹூதரான கைவல்யார்த்திகள், தங்கள் ஸ்வபாவத்தைச் சொல்லிக்கொண்டு வர, அவர்களோடே ஸங்கதராகிறார். இவர்களை அழைத்தபோது, "வரம்பொழி வந்தொல்லைக்கூடுமினோ" என்று, நீங்கள் பற்றின புருஷார்த்தத்தை விட்டு வாருங்கோளென்றும், "நமோ நாராயணாய" என்று, அநந்யப்ரயோஜநராய் வாருங்கோளென்றும், "நாடுநகரமும் நன்கறிய" என்று, விசேஷஜ்ஞர் பரிக்ரஹிக்கும்படியாகவும் அவிசேஷஜ்ஞர் உபேக்ஷிக்கும்படியாகவும் வாருங்கோள் என்றுமிறே அவர்களை அழைத்தது. அதில் க்ஷுத்ர புருஷார்த்தத்தை விடுகையும் அநந்யப்ரயோஜநராகையும் நம்முடைய க்ருத்யம். அநுகூலர் பரிக்ரஹிக்கைக்கும் ப்ரதிகூலர் கைவிடுகைக்கும் செய்ய அடுப்பதென்? என்று பார்த்து, வைஷ்ணவ சிந்ஹமான திருவிலச்சினையைத் தரிக்கவே த்யாகோபாதாநங்களிரண்டும் ஸித்திக்குமென்று பார்த்து அத்தைத் தரித்துக்கொண்டு வந்தோம் என்கிறார்கள்.

---

ஏழாம்பாட்டு:— (தீயில் இத்யாதி). திருவிலச்சினையும் தரித்து ஆட்செய்கின்றோம் என்று, இப்போது சொல்லுகையாலே, முன்பு சேஷத்வத்துக்கு இசையாத ஸ்வதந்த்ரரென்று தோன்றுகிறது; அத்தைத் திருவுள்ளம் பற்றி அவதாரிகை (ஏடுநிலத்திலித்யாதி). (தங்கள் ஸ்வபாவம்) என்றது, ஒற்றுண்டு குடிகுடி ஆட்செய்யக் கடவோம் என்கை. அந்தப்பாட்டில் அழைக்கப்பட்டவர்கள் என்னா நின்றீர்; அதில் திருவிலச்சினை தரித்து அடிமை செய்ய வாருங்கோள் என்று அழைத்தாரோ? இதுக்கு ஸூசகமேது? என்னில், ஆழ்வார் அருளிச்செய்த அம்சத்தில் "நாடுநகரமும் நன்கறிய" என்ற இடத்தில் திருவிலச்சினை ஸூசிதமென்று பரிஹரிக்கிறார் (இவர்களை இத்யாதி வாக்யத்ரயத்தாலே). க்ருத்யம் என்றது கர்த்தும் ஶக்யம் என்றபடி. (த்யாகோபாதாநங்கள்) என்றது, ப்ரதிகூலாநுகூல புருஷர்களுடைய த்யாக ஸ்வீகாரங்கள் என்றபடி.

ஆழ்வாரைக் கொண்டாடி வர்ணிக்கைக்கு ஹேதுவேது? என்ன, அருளிச்செய்கிறார் (தீயிற்பொலிகின்ற இத்யாதி). வர்ணோத்கர்ஷ ஸித்யர்த்தமாகத் "தீ" என்கிற இத்தை உபலக்ஷணமாக அருளிச் செய்கிறார் (தீயென்கிறசப்தம் இத்யாதி). (ஆதித்யாதி) என்கிற

வ்யா:— (தீயில்பொலிகின்ற செஞ்சுடராழி) என்று வைஷ்ணவ கோஷ்டியிலே புகுரப்பண்ணின உபகார ஸ்ம்ருதியாலே ஆழ்வானைக் கொண்டாடுகிறார்கள். (தீயிற்பொலிகின்ற) "தீ" என்கிற சப்தம் சந்த்ராதித்யாதி தேஜ:பதார்த்தங்களெல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். † (அதிற்காட்டில் தேஜஸ்ஸு வர்த்திக்கையாகிறது) 64. "**अत्यर्कानलदीप्तं तत्स्थानं**" (அத்யர்க்காநலதீப்தம் தத் ஸ்த்தாநம்) என்கிற பரமபதத்தில் தேஜஸ்ஸு மிக்கிருக்கக்கடவது ஆதித்யாதி தேஜஸ்ஸுக்களிற் காட்டில்; அதிற்காட்டில் அவனுடைய திவ்யமங்கள விக்ரஹ தேஜஸ்ஸு மிக்கிருக்கக்கடவது; அதுக்கும் ப்ரகாசகமாயிறே திருவாழியாழ்வானுடைய தேஜஸ்ஸிருப்பது. "வடிவார் சோதி வலத்துறையும் சுடராழி" என்னக்கடவதிறே. 65. "**तस्य भासा सर्वमिदं विभाति**" (தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி) என்கிறபடியே அவனுடைய தேஜஸ்ஸாலே ஸர்வமும் விளங்காநின்றதென்னாநிற்க, திவ்யமங்கள விக்ரஹத்துக்கு இவன் ப்ரகாசகனானபடியென்? என்னில் (செஞ்சுடர்) காளமேகநிபஶ்யாமமான வடிவுக்கு இருட்டறையில் விளக்கேற்றினாப்போலே பரபாகரூபத்தாலே வந்த ப்ரகாசகத்வத்தைச் சொல்லுகிறது. (ஆழி திகழ்திருச்சக்கரம்) இட்டளத்தில் பெரு

இடத்தில், ஆக்ஷிப்தத்தாலே பரமபதத்தையும் திவ்யமங்கள விக்ரஹத்தையும் சொல்லுகிறது. "பொலிகின்ற" என்றது, மிகுகின்ற என்றபடி. மிகுகையாவது என்? என்னில் என்று கூட்டுவது. இதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் (அத்யர்க்கேத்யாதி வாக்யத்ரயத்தாலே). (அதிற்காட்டில்) என்றது, பரமபதாபேக்ஷயா என்றபடி. "பொலிகின்ற" என்றதில், வர்த்தமாநார்த்தம் அருளிச் செய்கைக்காக பர்வபேதங்களை அருளிச்செய்கிறார், (அத்யர்க்கேத்யாதி) என்னவுமாம். விக்ரஹத்துக்கு ப்ரகாசகன் என்னுமதுக்கு ப்ரமாணம் (வடிவாரித்யாதி). இப்பாசுரத்தில் மூந்தின அர்த்தம் இங்கு வேண்டுவது. திருமேனிதானே எல்லாவற்றுக்கும் ப்ரகாசகமா யிருக்க, அதுக்கிவன் ப்ரகாசகனென்னக்கூடுமோ? என்கிற சங்கையை அநுவதித்துக்கொண்டு, திருமேனி ஶ்யாமமாகையாலே பரபாக ப்ரயுக்தமான ப்ரகாசத்வமென்று பரிஹரிக்கிறார் (தஸ்யேத்யாதி). மேலே "திருச்சக்கரம்" என்னாநிற்க, "ஆழி" என்றால் புநருக்

† குண்டலிதம் அரும்பதத்துக்கு பாடமில்லை.

வெள்ளம்போலே புறப்புபோக்கற்று, தன்னிலே மண்டலாகாரமாய்க் கொண்டு விளங்காநின்றுள்ள திருவாழியாழ்வானென்கை. (சக்கரத்தின்கோயில்) ஆழ்வானெழுந்தருளியிருக்கிற மண்டலாகாரமான வாஸஸ்தாநம். (பொறியாலே ஒற்றுண்டு நின்று) அதாகிறது, சிஹ்நத்தாலே சிஹ்நிதராய் நின்று. திருவிலச்சினையைத் தரித்த பின்பிறே, இவன் ஜந்மாந்தரத்திற் போகாதே மோக்ஷாந்தரத்திற் போகாதே ஸுஸ்த்திரனைப் பெற்றது. பகவதங்கீகாரமும் இதுண்டானவிறே அதிசயிப்பது. ஸ்ரீமத் த்வாரகையில் நின்றும் ஆஸ்ரிதவிரோதி நிரஸநார்த்தமாக எழுந்தருளுகிறபோது திருவாசல் காக்கின்ற முதலிகள், "மீண்டு எழுந்தருளுமளவும் இங்குப் புகுரக்கடவாரார்? அல்லாதாரார்? என்று விண்ணப்பம் செய்ய; 66. "चक्राङ्किताः प्रवेष्टव्याः यावदागमनं मम। नामुद्रिताः प्रवेष्टव्याः यावदागमनं मम॥" (சக்ராங்கிதா: ப்ரவேஷ்டவ்யா: யாவதாகமநம் மம। நாமுத்ரிதா: ப்ரவேஷ்டவ்யா: யாவதாகமநம் மம॥) என்று, இந்த லக்ஷணமுடையார் யாவர் சிலர், அவர்கள் நிஸ்ஸங்கமாகப் புகுரக்கடவர்கள்; அல்லாதாரை பாவபரீக்ஷை பண்ணிப் புகுரவிடக்கடவது என்றானிறே

மன்றோ? என்ன அருளிச்செய்கிறார் (இட்டளத்திலித்யாதி). (இட்டளம்) நெருங்கின ஸ்த்தலம். (தன்னிலே) ஸ்வஸ்மிந்நேவ. "ஆழி" மண்டலம். "திகழ்கை" விளங்குகை. "கோயில்" என்றதுக்கு அர்த்தம் (ஆழ்வானித்யாதி). (ஆழ்வான்) என்றது, ஷோடசபாஹுவான விக்ரஹ விசிஷ்டனை. "பொறி" லாஞ்ச்சநம். "ஒற்றுகை" ஸ்பர்சித்துக் கொள்ளுகை. இத்தால் பலிதார்த்தம் (அதாகிறதித்யாதி). "நின்று" என்ற பதவாஸனை (திருவிலச்சினை இத்யாதி). (ஜந்மாந்தரங்களிலே போகாதே) என்றது, த்ருஷ்டாந்தார்த்தம். யத்வா, *"தாப: புண்ட்ரஸ் ததா நாம மந்த்ரோ யாகஸ்ச பஞ்சம:। அமீ பரமஸம்ஸ்காரா: பாரமைகாந்த்யஹேதவ:॥" என்றிருக்கையாலே, சக்கரத்தின் கோயில் பொறியாலே ஒற்றுண்டு நிற்கையை அஞ்சுக்கும் உபலக்ஷணமாக்கி, பக்திநிஷ்டனுக்கு ஜந்மாந்தர ஸம்பாவனை உண்டாகையாலே தத்வ்யாவ்ருத்யர்த்தமாக (ஜந்மாந்தரத்தில் போகாதே) என்கிறாரென்னவுமாம். (மோக்ஷாந்தரம்) கைவல்யம். ஜந்மாந்தரத்தில் போகாமைக்கும், கைவல்யத்திற்

* பராசரஸ்ம்ருதி.

க்ருஷ்ணன். இதுதான் ஈஶ்வராங்கீகாரத்துக்குமுடலாய், இது தானும் "நாம் அவனுடைமை" என்று நிர்ப்பரனாயிருக்கைக்கு முடலாய், இவன் பண்ணின பாபத்தை அநுஸந்தித்து க்ரூரமாகப் பார்க்கக்கடவ யமாதிகளும் அஞ்சும்படியாயிருப்பதொன்றிறே. 67. "चक्रादि धारणं पुंसां परसंबन्ध वेदनम्। पतिव्रतानिमित्तं हि वलयादिविभूषणम्॥" (சக்ராதி தாரணம் பும்ஸாம் பரஸம்பந்த வேதநம்। பதிவ்ரதா நிமித்தம் ஹி வலயாதி விபூஷணம்॥) என்று பகவத்ஸம்பந்தத்துக்கு ஜ்ஞாபகமாயிறே இருப்பது. (குடிகுடியாட்செய்கின்றோம்) 68. "सपुत्रपौत्रस्सगणः" (ஸபுத்ரபௌத்ரஸ் ஸகண:) என்கிறபடியே ஸந்தாநமாக அடிமை செய்யக்கடவோமாய் வந்தோம். இப்படி அநந்யார்ஹராயிருப்பார் செய்யுமடிமையாவது, திருப்பல்லாண்டு பாடுகையிறே.

---

போகாமைக்கும், சக்ராங்கநம் ஹேதுவாமோ? பகவத்ப்ரஸாதாதிசய மன்றோ ஹேது என்ன, அருளிச்செய்கிறார் (பகவதித்யாதி). இத்தை உபபாதிக்கிறார் (ஸ்ரீமதித்யாதி). (ஆஶ்ரிதவிரோதி) ஸால்வன். "யாவதாகமநம் மம" என்றதுக்குத் தாத்பர்யம் (நிஸ்ஸங்கமாக) என்றது. "சக்ராங்கிதா:" என்றதில் அர்த்தஸித்தமாதல். "சக்ராங்கிதா: ப்ரவேஷ்டவ்யா:" என்றபோதே "அமுத்ரிதா:—ந ப்ரவேஷ்டவ்யா:" என்றது ஸித்தமன்றோ; விசேஷித்துச் சொல்லுவானென்? என்னில்; அவர்கள் துஷ்டஹ்ருதயராகையாலே நான் வருமளவும் புகுரவிடவேண்டா; அவர்களில் சுத்தபாவருண்டாகில், கருத்தறிந்து விடுங்கோளென்று தாத்பர்யமாக அருளிச்செய்கிறார், (அல்லாதாரை இத்யாதி). அமுத்ரிதத்வம் சங்கநீயதா ஹேதுவாகையாலே (பாவபரீக்ஷை) என்றது. உக்தத்தை அநுவதித்து, ஸ்வாஜ்ஞைக்கு ப்ரயோஜநாந்தரத்தையும் காட்டுகிறார், (இதுதானித்யாதி). (இதுதான்) என்றது, சக்ர தாரணந்தான் என்றபடி. (இதுதானும்) என்றது, அங்கீகாரஹேதுவான அந்த சிஹ்நதாரணந்தானும் என்றபடி. அவனுடைமை என்றதுக்கு சக்ராங்கநம் ஸ்வஶேஷித்வ ஸூசகமென்னுமதுக்கு ப்ரமாணம். (சக்ராதீத்யாதி). (நிமித்தம்) சிஹ்நம். "நிமித்தம் ஹேது லக்ஷ்மணோ:" என்று நிகண்டு. "வந்து வழிவழியாட் செய்கின்றோம்" என்ற இடத்தில் போலன்றிக்கே, பவிஷ்யத்தாக கேவலருடைய ஸ்வபாவ

எந்த அபதாநத்துக்கு நீங்கள் மங்களாசாஸநம் பண்ணுகிறது? என்னில், (மாயப்பொருபடை இத்யாதி) எங்களைப் புகுர நிறுத்தின ஆழ்வானுடைய வீரப்ரகாசகமான துறையிலே திருப்பல்லாண்டு பாடக்கடவோம் என்கிறார்கள். (மாயப்பொருபடை வாணனை) ஆஶ்சர்யமாகப் பொரும் ஸேனையையுடைய வாணனென்னுதல்; ஆஶ்சர்யமாகப் பொரும் ஆயுதத்தையுடைய வாணனென்னுதல். "மாயம்" என்று க்ருத்ரிமமாய், க்ருத்ரிமமான யுத்தத்தை உடையவனென்னவுமாம். (ஆயிரந்தோளும் பொழிகுருதிபாய) ஆயிரம் தோள்களாலும் மதகு திறந்தாப்போலே ரத்தவெள்ளம் குதிகொண்டு பூமிப்பரப்படையப் பரம்பும்படி. † (பொழிதல்—சொரிதல்). இதுக்கு இவன் பண்ணின வ்யாபாரத்தளவேது? என்னில், (சுழற்றிய) திருவாழியை வீச வேண்டிற்றில்லை, சுழற்றினவித்தனை. அவன் ஒருகால் திருவாழியைச் சுழற்ற, வாணனுடைய தோள்களாயிரமும் ஒருகாலே மலைக்கொடுமுடிகள் போலே முறிந்து விழுந்தன. வாணனுடைய தலையை அறுதொழிந்தது குற்றம் போராமையன்று, உஷை பித்ருஹீனை ஆகாமைக்காகவும், "தேவதாந்தர பஜநம் பண்ணு

ஹைப் பற்ற அருளிச்செய்கிறார் (ஸபுத்ர இத்யாதி). ப்ரகரணாநுகுணமாக விஶேஷபர்யவஸாநம் (இப்படி இத்யாதி).

மேலுக்கவதாரிகை (எந்த இத்யாதி). "கோயில்பொறியாலே ஒற்றுண்டு நின்று" என்றத்தைக் கடாக்ஷித்து, தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (எங்களை இத்யாதி). (வீரப்ரகாஶகமான) என்றது, வீரஸப்ரகாஶகமான என்றபடி. "மாய" என்றதுக்கு இரண்டர்த்தம்:— ஆஶ்சர்யமாகவும், க்ருத்ரிமமாகவும். "படை" என்றதுக்கு மூன்றர்த்தம்:— ஸேனையும், ஆயுதமும், யுத்தமும் என்று கருத்து. (குருதி) ருதிரம். (குதிகொண்டு) குதித்துக்கொண்டு. "பொழிதல்" சொரிதல்; அதாவது, கிளப்பிக்குதிக்கை. "சுழற்றிய" என்றதுக்கு வாஸனை (இதுக்கு இத்யாதி). "ஆயிரம்" என்றத்தையும், "சுழற்றிய" என்றத்தையும் கடாக்ஷித்து, பலிதம் (அவனொருகாலித்யாதி). (வாணனுடைய) என்றிருக்கையாலே, "வாணனை" என்ற ஐகாரம் அவ்யயமாதல், வேறு விபக்தி மாறாட்டமாதல்;

---

†. குண்டலிதம் ப்ரக்ஷிப்தம், அருப்பதத்தோடு புநருக்தம்.

வார்க்கு பலமிது" என்னுமிடத்துக்கு மச்சமாகவும். அதாவது, *"பரிவின்றி வாணனைக் காத்தும்" என்று ப்ரதிஜ்ஞை பண்ணி, யுத்தத்திலே இவனைக் காட்டிக்கொடுத்து, ஸபரிகரனாய்க்கொண்டு முதுகு காட்டிப்போனான் ரக்ஷகன்; ரக்ஷ்யபூதன் தோள் துணியுண்டான். "உன்னை ரக்ஷிக்கப்புக்கு நான் பட்டதோ! என்றும், "உன்னை ஆஸ்ரயித்து நான் பட்டதோ!" என்றும் இருவரும் கூடக் கட்டிக்கொண்டு கதறுகையிறே பலமாய்விட்டது. (ஆழி வல்லானுக்கு) "வில்வல்லான்" "வாள்வல்லான்" "தோள்வல்லான்" என்னுமாபோலே. 33. "यस्य सा जनकात्मजा" (யஸ்ய ஸா ஜநகாத்மஜா) என்கிறபடியே பிராட்டியை எனக்கென்ன இட்டுப்பிறத்தல், திருவடி தோளிலே நல்தரிக்க விருத்தல், கைபேராமல் திருவாழியைப் பிடித்தல் செய்யுமதாய்த்து ஸர்வாதிகத்வத்துக்கு லக்ஷணம். (பல்லாண்டு கூறுதுமே) அத்தசையிலே அடிமைசெய்த ஆழ்வானுடைய வீரஸ்ரீக்கும், அடிமைகொண்ட க்ருஷ்ணனுடைய வீரஸ்ரீக்கும் மங்களாசாஸநம் பண்ணுவாரைப் பெற்றதில்லை; அவ்விழவு தீர இன்றிருந்து திருப்பல்லாண்டு பாடுகிறோம் என்கிறார்கள். 7.

---

வாணனைக்குறித்துச் சுழற்றிய என்றாய் (வாணனுடைய) என்றது, ஆர்த்திகமாகவுமாம். (கொடுமுடிகள்) சிகரங்கள். தலைதப்பவிட்டதும் கைகழியவிட்டதுமான, இதுக்கு இரண்டுவிதமாக ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் (வாணனுடைய இத்யாதி வாக்யத்வயத்தாலே). (மச்சமாவது) சிலவான வெட்டு. அதாவது, ஆபரணம் பண்ணுமவன் பரீக்ஷார்த்தமாக வெட்டிவைக்கும் பொன்னுக்குப் பேர். அப்படியே தேவதாந்தரபஜநம் பண்ணினதுக்கு அடையாளமாக, எல்லாக்கைகளையும் கழித்து, இரண்டு கையை வைத்தானென்றபடி. இரண்டாம் ப்ரயோஜநத்தை விவரிக்கிறார் (அதாவது இத்யாதி). (அதாவது) என்றது, மச்சமாகையாவது என்றபடி. (பரிவின்றி) வருத்தமற. (காத்தும்) காக்கக்கடவோம். (ரக்ஷகன்) என்றது, வ்யங்க்யம். "துணியுண்டான்" என்ற அநந்தரம், என்று நாட்டாரறிகைக்கு ஹேதுவாக என்று சேஷம். இத்தால் பலிதம் (உன்னை இத்யாதி). (கதறுகை) ப்ரலாபிக்கை. ஆழியான் என்னாமல் "வல்லான்" என்பானென்? என்ன, (வில்வல்லானித்யாதி). இப்படி ப்ரயோகித்

---

* திருவாய். (3-10-4).

8. நெய்யிடைநல்லதோர்சோறும்நியதமுமத்தாணிச்சேவகமும்
கையடைக்காயும்கழுத்துக்குப்பூணொடுகாதுக்குக்குண்டலமும்
மெய்யிடநல்லதோர்சாந்தமும்தந்தென்னைவெள்ளுயிராக்கவல்ல
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப்பல்லாண்டுகூறுவனே.

பதவுரை:— நெய் இடை—நெய்யின் நடுவிலிருக்கும், நல்லது ஓர் சோறும்—பாவசுத்தியுடன் இடப்பட்டதாய், ஒப்பற்ற சுவையை உடையதான ப்ரஸாதத்தையும், நியதமும்—எப்போதும், அத்தாணிச் சேவகமும்—பிரிவில்லாத ஸேவையையும்; கை—(எம்பெருமான் தன்) திருக்கையாலே இட்ட, அடைக் காயும்—வெற்றிலைப் பாக்கையும், கழுத்துக்குப் பூணொடு—கழுத்துக்கு ஆபரணமான குண்டலத்தையும், மெய்யிட—உடம்பிலே பூசத்தக்க, நல்லது ஓர் சாந்தமும்—பரிமளம் நிறைந்த ஒப்பற்ற சந்தனமும், தந்து—கொடுத்து, என்னை—(மிகவும் நிஹீனனான) என்னை, வெள் உயிர் ஆக்கவல்ல—சுத்த ஸ்வபாவனாக ஆக்கவல்ல, பை உடை—படங்களை உடைய, நாகம்—ஸர்ப்பத்துக்கு, பகை—விரோதியான கருடனை, கொடியானுக்கு—கொடியாக உடையவனுக்கு, பல்லாண்டு கூறுவன்—மங்களாசாஸனம் பண்ணக்கடவேன்.

அவ:— எட்டாம்பாட்டு. (நெய்யிடையித்யாதி). அண்டக்குலத்திலே அழைத்த ஐஶ்வர்யார்த்திகள் இசைந்துவர, அவர்களைக் கூட்டிக்கொள்ளுகிறார். வாழாளிலழைத்த அநந்யப்ரயோஜநர் தங்களேற்றத்தைச் சொல்லிக்கொண்டு புகுந்தார்கள் எந்தைதந்தை

---

தால் ஸர்வேஶ்வரனுக்கு வரும் ஏற்றமேது? என்ன (யஸ்ய ஸா இத்யாதி). (திருவடி) பெரியதிருவடி. (நல்தரிக்க) பொருந்தி; கருடமாக என்றபடி. பிராட்டியையும் திருவடியையும் சொன்னது த்ருஷ்டாந்தார்த்தம். "நாங்கள், இப்போது, கூறுதும்" என்கையாலே, முன்பு பரிவில்லையென்று தோற்றுமிறே; ததநுகுணமாகத் தாத்பர்யம் (அத்தசையிலே இத்யாதி வாக்யத்வயமும்). "ஆழி வல்லானுக்கு" என்று, இப்படி ஆழ்வானை நிரூபகமாகச் சொல்லுகையாலே, இவனுடைய வீரஸ்ரீக்கும் மங்களாசாஸநம் பண்ணுகிறார்களென்று கருத்து. 7.

எட்டாம்பாட்டு:— (நெய்யிடை இத்யாதி) ஸங்க்ரஹேண ஸங்கதி (அண்டக்குலத்திலே இத்யாதி). இசைந்து வருகிற ப்ரகாரத்தை விஸ்தரேண உபபாதிப்பதாகத் திருவுள்ளம் பற்றி,

தந்தையிலே; ஏடுநிலத்திலழைத்த கைவல்யார்த்திகள் தாங்கள் திருந்திப்புகுந்தமை சொன்னார்கள் நீயிற்பொலிகின்றவிலே; இவர்கள், தாங்கள் க்ஷுத்ர புருஷார்த்தத்தை அபேக்ஷிக்க, அநந்ய ப்ரயோஜநர்க்கு முகங்கொடுத்தாப்போலே முகம்தந்து, அந்த ஐஶ்வர்யத்தைத் தந்த ஔதார்யத்துக்குத் தோற்று, ஐஶ்வர்யத்தை விட்டு சுத்தஸ்வபாவராய் இவ்வுதாரனை மங்களாசாஸநம் பண்ணுவோமென்று புகுருகிறார்கள். அண்டக்குலத்திலே, அண்டாத்யக்ஷத்வம் ஐஶ்வர்யத்துக்கு மேலெல்லையாகப் பேசிற்று; அவ்வைஶ்வர்யார்த்திகள் பேச்சான இந்தப்பாட்டிலே, சரீரத்துக்கு தாரகபோஷக போக்யங்களை இரந்தார்களாய், அத்தை அவன் தந்தானாகப் பேசிற்று; இதுக்கு நிபந்தநம் இன்று ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்து புகுருகிறவர்களாகையாலே அதினுடைய க்ஷுத்ரதை தோற்றப் பேசுகிறார்கள். அண்டாத்யக்ஷனை ப்ரஹ்மாவுக்கும் தாரக போஷக போக்யங்களேயிறே ப்ரயோஜநம்; அதற்கு மேற்பட்டு பகவத் விபூதியை “எனக்கு” என்கிற அபிமானத்தால் வந்த ஸ்வரூப ஹாநியேயிறே பலம்.

---

வ்ருத்தாநுவாதம் பண்ணுகிறார் (வாழாளிலித்யாதி வாக்யத்வயத்தாலே). இவர்களிருவரையும் அநுவதித்தது த்ருஷ்டாந்தார்த்தம்; கீழே அழைக்கப்பட்டவர்களே இதில் ஸங்கதராகிறார்களென்கைக்காகவுமாம். பாட்டெல்லாம் கடாக்ஷித்து இசைந்து வந்த ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி). (இவர்கள்) ஐஶ்வர்யார்த்திகள். (இவர்கள்) என்றத்தை (புகுருகிறார்கள்) என்றத்தோடே அந்வயிப்பது. (தாங்கள்) என்றத்தை, (அபேக்ஷிக்க) என்றத்தோடே அந்வயிப்பது. தோற்றது, அர்த்தாத்ஸித்தம். “அண்டக்குலம்” என்கிற பாட்டுக்கும் இப்பாட்டுக்கும் அர்த்தவைஷம்யமிருக்க, அவர்கள் வந்தபடியாகச் சொல்லும்படியெங்ஙனே? என்ன; (அண்டக்குலத்திலேயித்யாதி, பேசுகிறார்கள் என்னுமளவும்). (பேசுகிறார்கள்) என்ற அநந்தரம், ஆகுகையென்று அத்யாஹரித்து (நிபந்தநம்) என்றத்தோடே அந்வயிப்பது. இத்தால் ஸ்வரூபஜ்ஞாநமே நிபந்தநமென்றதாயிற்று. யத்வா, மேலான ஐஶ்வர்யத்தை ஆசைப்பட்டவர்கள் சோறு முதலானவற்றைக் கொடுத்தானாகச் சொல்லுகிறதுக்கு ஹேதுவென்னது? என்கிற ப்ரஶ்நத்தை அநுவதிக்கிறார் (அண்டக்குலத்திலேயித்யாதி). இப்பக்ஷத்தில், இதுக்கு நிபந்தநமென்?

வ்யா:— (நெய்யிடை) "இடை" என்று நிறையாய், நெய்யோடொத்த சோறென்னுதல். "இடை" என்று நடுவாய், நெய்யினிடையிலே சிலசோறுமுண்டென்னுதல். இத்தால், போஷகப்ராகாமான தாரகத்ரவ்யத்தைத் தருமென்கை. (நல்லதோர் சோறும்) சோற்றுக்கு நன்மையாவது, இட்டவன் "இட்டோம்" என்றிருத்தல், உண்ணவன் "இதுக்கென்செய்வோம்?" என்றிருத்தல் செய்யாத சோறு. அதாவது, தாய் இட, புத்ரனுண்ணும் சோற்றுக்கு இவ்விரண்டுமில்லையிறே. (ஓர்சோறு) இப்பாவசுத்தியையன்றிக்கே, விலக்ஷண ரஸோபேதமாயிருக்கை. அங்ஙனன்றிக்கே, சேஷபூதன் சேஷிக்கு இடும் சோறுபோலேயிருக்கை. அதாகிறது, அஹங்காரோபேதமன்றிக்கே பக்த்யுபஹ்ருதமாயிருக்கை. ஈஶ்வரனும், 69 "भक्तानां" (பக்தாநாம்) என்கிற நினைவாலேயும் வத்ஸலனாயுமிறே இடுவது. அநந்யப்ரயோஜநன் ஸ்வாமி விஷயத்திலிடும் சோறு எங்ஙனே இருக்கும்? என்னில்; 70. "विदुरान्नानि बुभुजे शुचीनि गुणवन्ति च" (விதுராந்நாநி புபுஜே ஶுசீநி குணவந்தி ச) என்னும்படி பாவநமுமாய் போக்யமுமாயிருக்கை. "ஶுசீநி" என்றது, சுத்தங்களாயிருக்கை. சோற்றுக்கு சுத்தியாவது, துர்யோதநன், தன் ஐஶ்வர்யத்தைப் பற்ற அபிமாநித்தான். பீஷ்மன், ஜ்ஞாதிகனென்று அபிமாநித்தான்; த்ரோணன், வர்ணத்தாலதிகனென்று அபிமாநித்தான்; இவையொன்றுமின்றிக்கே பக்த்யுபஹ்ருதமாயிருக்கை.

---

என்னில் என்று சேஷம். உத்தரம் (இன்று ஸ்வரூபேத்யாதி) என்று யோஜிக்கவுமாம். (அதினுடைய) அண்டாதிபத்யத்தினுடைய. க்ஷுத்ரதை தோற்றச் சொன்னமாத்ரமேயன்றிக்கே, நிரூபித்தால் தானும் சொல்லுவதிவ்வளவே என்கிறார் (அண்டாத்யக்ஷேத்யாதி). அவ்வளவே ப்ரயோஜநமாவானென்? என்ன, (அதுக்கு மேற்பட்டித்யாதி). அண்டாதிபத்யத்தை, "நெய்-சோறு" என்றாப்போலே, அத்யல்பமாகச் சொல்லலாமோ? என்ன, (அண்டாத்யக்ஷனை இத்யாதி) என்று கீழுக்கு உபபாதகமுமாம்.

"இடை" என்றதுக்கு இரண்டர்த்தம்; அதில், "நெய்-சோறு" என்றத்தை உபலக்ஷணமாக்கி, இரண்டாமர்த்தத்தால் பலிதம் (இத்தாலித்யாதி). இப்படிப்பட்ட சோறுண்டோ? என்ன, (தாயித்யாதி). "ஓர்" என்றதுக்கு இரண்டர்த்தம்: ரஸோபேத

(நியதமும்) அதாகிறது, ஐஶ்வர்யம் ஈஶ்வரனே கொடுக்கிலும் அஸ்த்திரமாயிருக்கக்கடவது; அது அழிந்தவன்றும் அவ்வைஶ்வர்யத்தை ஸமாதாநம் பண்ணிக்கொடுக்குமவனாகையாலே "நியதமும்" என்கிறது. இத்தாலேயிறே "அர்த்தார்த்தி" என்றும், "ஆர்த்தன்" என்றும் ஐஶ்வர்யத்துக்கு இரண்டு வகை சொல்லிற்று. அங்ஙனன்றிக்கே, தேவதாந்தரங்களைப்பற்றி ஈஶ்வரனை இல்லை செய்யுமன்றும் தன்முகேந சோறிடுமவனென்கை. ஸர்வேஶ்வரனிட்ட சோற்றைத் தின்று அவனை இல்லைசெய்யும் க்ருதக்நரிறே ஸம்ஸாரிகள்; தன்னை இல்லை செய்யுமன்றும் ரக்ஷிக்கும் உதாரனிறே ஸர்வேஶ்வரன். (அத்தாணிச் சேவகமும்) "அத்தாணி" என்று, பிரியாமை; "சேவகம்" என்று, ஸேவை. ஐஶ்வர்யார்த்திக்கும் அநவரதபாவனையும், அந்திமஸ்ம்ருதி

---

மாதல், தாயிட்ட சோற்றிலும் விலக்ஷணமென்னுதல். இரண்டாமர்த்தத்தை விவரிக்கிறார் (அதாகிறதித்யாதி). தாயிட்டாப்போலவும் சேஷபூதனிட்டாப்போலவும் ஸர்வேஶ்வரனிடுமோ? என்ன, வ்யுத்க்ரமேண அருளிச்செய்கிறார் (ஈஶ்வரனுமித்யாதி). "ஓர்" என்றதற்கு இரண்டாமர்த்தமான "அங்ஙனன்றிக்கே" என்கிற வாக்யத்தை விஸ்தரேண உபபாதிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, தத்விஷய ஶங்கையை உத்க்ஷேபிக்கிறார் (அநந்யேத்யாதி). ஶங்கித்வமாவது, அபிஜந வித்யா வ்ருத்தங்களால் வந்த அபிமாந ஶூந்யராலே இடப்படுகையென்று விவக்ஷித்து உபபாதிக்கிறார் (சோற்றுக்கித்யாதி).

"நியதமும்" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம்; ஐஶ்வர்யத்தை நியதமாக்குகையென்றும், அவனுக்கு எப்போதும் கொடுக்கையே நியதமென்றும். அதாகிறது எத்தாலே என்கிறது? என்னில் என்று கூட்டுவது. (ஸமாதாநம் பண்ணி) என்றது, போனத்தை ஒக்கப் பண்ணி என்கை. (இத்தாலே) என்றது, இப்படி புந: கொடுக்கையாலே என்றபடி. (சொல்லிற்று) ஸ்ரீகீதையில் இதி சேஷ:. இரண்டாமர்த்தம் (அங்ஙனன்றிக்கே இத்யாதி). தன்முகேந இவனே யிடுகிறானாகில், அவனை இல்லை செய்வானென்? என்ன, (ஸர்வேஶ்வரனித்யாதி). க்ருதக்நருக்கு அவன் கொடுக்கக்காரணமேது? என்ன, (தன்னை இத்யாதி). பிரியாதஸேவையாவது, அநவரதபாவனையன்றோ, இதுவுமிவனுக்கு வேணுமோ? என்ன (ஐஶ்வர்யார்த்திக்குமித்யாதி). (அநந்யப்ரயோஜநன்) உபாஸகன். ஸாதநத்வ

யும் அநந்யப்ரயோஜநனேபாதி கர்த்தவ்யமிறே. ஆனல் ஐஶ்வர்ய ஸாதநத்தையும், "தந்து" † என்று ப்ரயோஜநத்தோடொக்கச் சொல்லுவானென்? என்னில்; வெள்ளுயிரான பின்பு சொல்லு கிறார்களாகையாலே அந்த ஸாதநமும் ஸ்வயம் ப்ரயோஜநமாயிறே இருப்பது. அநந்யப்ரயோஜநருக்கு ஸ்வயம் ப்ரயோஜநமான ஸேவை ஸாதநமாகக்கிடீர் க்ஷுத்ரமான ஐஶ்வர்யத்தைத் தந்தசெதன்கை.

(கையடைக்காயும்) தாரக போஷகங்கள் கீழே சொல்லிற்றாய், மேல், போக்ய பதார்த்தங்களைத் தந்தபடி சொல்லுகிறது. திருக் கையாலே இட்ட வெற்றிலைப்பாக்கென்று இவர்கள் பக்கல் கௌரவத் தாலே இட்ட சீர்மையைச் சொல்லுகிறது. சேஷபூதன் சேஷியைக் குறித்து இடும் ப்ரகாரத்தாலேயிறே சேஷியானவன் சேஷபூதனுக்கு இடுவது. (கழுத்துக்குப் பூணோடு காதுக்குக் குண்டலமும்) தேஹத்தை உத்தேஶ்யம் என்றிருக்குமவனாகையாலே தன்னுடம்பை அலங்கரித்து, அத்தை அநுபவித்திருக்குமவனிறே ஐஶ்வர்யார்த்தி; பகவத்பானுய் ஈஶ்வரனை அலங்கரித்து, ஸதாதர்சநம் பண்ணியிருக்

பலங்களோடே சேர்த்துச் சொல்லுவானென்? என்கிற ஶங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் (ஆனலித்யாதி). தந்தென்கிற ப்ரயோஜநமாவது தந்தென்று சொல்லுகைக் குறப்பான ப்ரயோஜந மென்றபடி. "சேவகமும்" என்று ஈடுபடுவானென்? என்ன, (அநந்யேத்யாதி). அங்ஙனன்றிக்கே, ஸாதநத்தையும் பலகோடியிலே பரிகணித்ததுக்கு அநந்யப்ரயோஜநருடைய புத்த்யாவென்று தாத்பர்ய மாகவுமாம். (அநந்யப்ரயோஜநர்) ப்ரபந்நர்.

வ்ருத்தாநுவாதபூர்வகமாக, "கையடைக்காயும்" என்று தொடங்கி, "தந்து" என்னுமளவுக்கும் பாவம் (தாரகேத்யாதி). அடை—வெற்றிலை. காய்—பாக்கு. "கை" என்று விசேஷிப்பா னென்? என்ன, (திருக்கையாலே இத்யாதி). (பாக்கு) என்றதுக்கு (சொல்லுகிறது) என்றத்தோடே ஸம்பந்தம். சேஷபூதனைப்போலே சேஷி கௌரவமாக இடக்கூடுமோ? என்ன, (சேஷபூதனித்யாதி). தேஹதாரணார்த்தயாகச் சில தாரகாதிகளை அபேக்ஷித்தானாகில்

† மூலகோசங்களில் யதாஶ்ருத பாடம் காண்கிறது. அரும்பதத்தில், என்கிற என்று பாடம்.

கிறானல்லனே? ஸ்வரூபத்தை உணர்ந்து ஜ்ஞாநவைராக்யபக்திகளை ஸ்வரூபத்துக்கு ஆபரணமாக நினைத்திருக்கிறானல்லனே? "கழுத்துக்குப் பூணோடு காதுக்குக் குண்டலமும்" என்று விசேஷிப்பானென்? என்னில்; தன் கண்ணுக்கு அவிஷயமாய், நாட்டார் கொண்டாடுமதுவே தனக்கு ப்ரயோஜநமாயிருக்கையாலே. அவயவாந்தரங்களில் அங்குளீயகாத்யாபரணங்கள் தன் கண்ணுக்கு விஷயமாயிருக்குமிறே. பெருமாள் மீண்டெழுந்தருளினவளவிலே இந்த்ரன் வரக்காட்டின ஹாரத்தைப் பிராட்டியும் தாமுமிருந்து திருவடிக்குப் பூட்டினாப்போலே, ஈஶ்வரன் பரிந்து "இது கழுத்துக்காம், இது காதுக்காம்" என்று திருக்கையாலே பூட்டின ஆபரணமும். 71. "**प्रदेहि सुभगे हारं यस्य तुष्टासि भामिनि**" (ப்ரதேஹி ஸுபகே ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பாமிநி) என்கிறபடியே இந்த்ரன் கொடுத்து வரக்காட்டின ஹாரத்தைப் பெருமாள் வாங்கிப் பார்த்தருளி, பிராட்டிக்குக் கொடுக்கிறபோது, அத்தை வாங்குகிறவள், பெருமாளை ஒரு திருக்கண்ணாலும் திருவடியை ஒரு திருக்கண்ணாலும் பார்த்து வாங்கினாள். 72. "**प्रेक्षितज्ञास्तु कोसलाः**" (ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலா:) என்று,

---

யுக்தம், தன்னை அலங்கரிக்கக்கூடுமோ? என்ன, (தேஹேத்யாதி). உக்தார்த்தத்தை இரண்டு வகையாக வ்யதிரேகமுகேந த்ருடீகரிக்கிறார் (பகவதித்யாதி வாக்யத்வயத்தாலே). "பூண்" கண்டிகை. "பூணும், குண்டலமும்" என்ன அமைந்திருக்க, "கழுத்து" என்றும் "காது" என்றும் விசேஷித்துச் சொல்லுவானென்? என்கிற சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் (கழுத்துக்கித்யாதி). கேவலபராநுபாவ்யத்வம் ஸூசிதமாயிற்று. பராநுபாவ்யமாகாதே சிலவுண்டோ? என்ன, (அவயவாந்தரங்களிலித்யாதி). "கழுத்துக்கு-காதுக்கு" என்று விசேஷித்ததுக்கு இவன் நினைவாலே என்று ஒரு பரிஹாரம் மேழருளிச்செய்து, ஈஶ்வரன் நினைவாலே என்று பரிஹாராந்தரம் அருளிச்செய்கிறார் (மீண்டு இத்யாதி). (மீண்டு) என்றதுக்கு முன்னே, திருவயோத்யைக்கு என்று சேஷம். இப்படி ஸத்ருஷ்டாந்தமாகச் சொன்ன அர்த்தத்தை ப்ரமாணமுகேந விஸ்தரித்தருளிச்செய்கிறார் (ப்ரதேஹி என்று தொடங்கி, பூட்டிற்றும் என்னுமளவும்). * "முக்தா ஹாரம் நரேந்த்ராய ததௌ ஶக்ரப்ரசோதித:" என்றும்,

---

* ராமா-யுத். (131-71).

பார்வையில் கருத்தறியுமவராகையாலே, அவனுக்குக் கொடுக்கலாகாதோ? என்றருளினர். "ஸுபகே" அடியாரேற்றமறிந்து கொண்டாடுகைக் கீடான ஸௌபாக்யமுள்ளது உனக்கேயன்றோ? என்ன; "உம்முடைய திருவுள்ளத்தாலேயன்றோ நான் கொடுக்கிறது" என்று பிராட்டி விண்ணபஞ்செய்ய; நான் முற்பாடனாகப் பெறாமையாலே, உன்னுடைய உகப்பின் கார்யத்தைக் கொடுக்கலாகாதோ? என்றார். இப்படி அநந்யப்ரயோஜநனுக்கு ஆதரித்துப் பூட்டினாப்போலேயாய்த்து க்ஷுத்ரனை என்னை ஆதரித்துப் பூட்டிற்றும்.

(மெய்யிட) திருவடிகளில் ருசிபிறந்த பின்பாகையாலே "உடம்பு த்யாஜ்யம்" என்கிற நினைவு தோன்ற குத்ஸித்துச் சொல்லுகிறபடி. (நல்லதோர் சாந்தமும்) சாந்துதான் இதுக்குத் தர்மமாகப் பெற்றதோ? 73. "सर्वगन्धः" (ஸர்வகந்த:) என்கிற

† "ஸீதாயை ப்ரததௌ ராம:" என்றும், ‡ "அவேக்ஷமாணா வைதேஹீ ப்ரதாதும் வாயுஸூநவே" என்றும் சொல்லுகிற வசநங்களையுட்கொண்டு, "ப்ரதேஹி" என்றதுக்கு ப்ரஸக்திமுகேந அர்த்தமருளிச்செய்கிறார் (இந்த்ராணித்யாதி). ஸ்ரீராமாயணத்தில், § "அவைக்ஷத ஹரீந் ஸர்வாந்" என்று மேலாயிருக்கையாலே முற்சொன்ன "அவேக்ஷமாணா" என்றதுக்கு ஆதாநகாலத்தில் பார்வையைச் சொல்லவேணுமென்று திருவுள்ளம் பற்றி, இப்பதத்தில் வர்த்தமாந நிர்த்தேசத்தாலே பலித்ததை அருளிச்செய்கிறார் என்று (அத்தை வாங்குகிறவள்) என்கிற வாக்யத்துக்குத் தாத்பர்யம். "ஸுபகே" என்ற ப்ரதீகம் "யஸ்ய த்வஷ்டாஸி பாமிநி" என்றதுக்கும் உபலக்ஷணம். இப்பதங்களுக்கெல்லாம் உத்தர ப்ரத்யுத்தர ரூபேண பாவம் (அடியாரித்யாதி) உக்தார்த்தத்தை ப்ரக்ருதத்திலே ஏறிட்டுக் காட்டுகிறார் (இப்படி இத்யாதி).

"மெய்யிட" என்று சொன்னதுக்கு ஹார்த்த தாத்பர்யம் (திருவடிகளிலித்யாதி). மேலே "நல்லதோர்" என்றதுக்கு ப்ரதிகோடித்வேந, "மெய்" என்றதுக்கு ஜுகுப்ஸையிலே தாத்பர்யம்.

† ராமா-யுத். (131-78). ‡ ராமா-யுத். (131-79). § ராமா-யுத். (131-80).

வடிவுக்கு ஸத்ருசமாக, குப்ஜை ஆதரித்துச் சாத்தின சாந்துபோலே இருக்கும் சாந்தையன்றோ எனக்கிட்டது! 74. "सुगन्धमेतत्" (ஸுகந்தமேதத்) குப்ஜை கம்ஸனுக்குப் பரணியோடே சாந்து கொண்டு போகா நிற்க, "வாரீர் பெண்பிள்ளாய்! நமக்கும் நம்மண்ணற்கும் சாந்திடவல்லீரோ?" என்ன; அவ்வடிவையும் விருப்பையும் கண்டு, ஸ்த்ரீத்வப்ரயுக்தமான சாபல்யத்தாலே மறுக்க மாட்டிற்றிலள்; "இவர்கள் இடைப்பிள்ளைகள், சாந்தின் வாசியறிய மாட்டார்கள்" என்று ஆக்கனையிருப்பதொன்றை இட்டாள்; அத்தைப் பார்த்து, "நாற்றம் கொளுத்தினபடி அழகியது, தளமழகிதன்று" என்ன; அதுக்கு மேலே ஒரு சாந்தையிட, 74. "राजार्हं" (ராஜார்ஹம்) இது கம்ஸனுக்குச் செருக்கிலே பூசலாமித்தனை, வாசியறிந்து பூசுவார்க்கு ஸத்ருசமல்ல; அன்றியே, வழக்கனான சாந்தென்னவுமாம். 74. "रुचिरं" (ருசிரம்) ஸௌகந்த்யம் கிடக்க, நிறமழகியதாயிருந்ததென்ன; "இவர்கள் இடைப்பிள்ளைகள் என்றிருந்தோம், சாந்தின் வாசியறிந்தபடியென்!" என்று ஆதரித்துப்பார்க்க,

---

"நல்லதோர்" என்றதுக்குக் கருத்து (சாந்தித்யாதி). (தாமாக) அநுரூபமாக. சாந்தினது நன்மையை த்ருஷ்டாந்தமுகேந அருளிச் செய்கிறார் (ஸர்வகந்த: இத்யாதி). குப்ஜை ஆதரித்துச்சாத்தின சாந்தின்படியேது? என்ன (ஸுகந்தமித்யாதி). ஶ்லோகார்த்தம் அருளிச்செய்வதாகப் பீடிகையிடுகிறார் (குப்ஜை இத்யாதி). காந்த பதத்தையும், "தீயதாம்" என்ற பதத்தையும் கடாக்ஷித்து, (அவ்வடிவையும் விருப்பையும்) என்றது. (மறுக்கமாட்டிற்றிலள்) என்றது, ஆக்கனை சாந்தையிட்டாளாக மேற்சொல்லுகையாலே, ஸுகந்தமென்றதுக்கு ஔபாதிக கந்தவத்தான சாந்தென்று திருவுள்ளம் பற்றி. இத்தையிடுகைக்கு ப்ரஸக்தி சொல்லிக்கொண்டு, அர்த்தமருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி). (ஆக்கனை) என்றது, ஆக்கப்பட்டதாய்; ஆரோபிதகந்தமான என்றபடி. இப்படி அர்த்தம் சொல்லாதபோது ஸுகந்தியென்று சொல்லவேணும். * "கந்தஸ்யேத் உத்பூதி ஸுஸுரபிப்ய:" என்று ஸூத்ரமும், "கந்தஸ்யேத்வே தேதகாந்த க்ரஹணம்" என்று வார்த்திகமுமாகையாலே. இப் பதத்தைத் தொட்டுக்கொண்டு மேற்பதத்துக்கு அவதாரிகை (அத்தை

---

* பாணினி ஸூத்ரம். (5-4-135).

74. "रुचिरानने" (ருசிராநநே) உன் முகத்திலாதரத்துக்கு ஸத்ருசமாயிருக்கவேண்டாவோ நீயிடும் சாந்தும் என்ன; அவளும் தலையான சாந்தையிட, 74. "आवयोर्गात्रसदृशं" (ஆவயோர்க்காத்ர ஸத்ருஶம்) எங்களுடம்புக்கு ஸத்ருசமான மேதகவஸ்துவையிட்டு மர்த்தித்துத்தா என்றான். அதாவது, *"பூசும் சாந்து" என்கிறபடியே உன்னுடைய ஆதரத்தாலே ஸம்ஸ்க்ருதமாக்கித்தா என்றபடி. இப்படி இவள் ஆதரித்துச் சாத்தின ‡மாளிகைச் சாந்தை கிடீர் தம் திருக்கையாலே என்னுடம்பிலே பூசிற்று.

(தந்து) தந்தபோதைத் திருமுகத்தில் கௌரவத்திலும் ஔதார்யத்திலும் தோற்று ஐஶ்வர்யத்தை விட்டு, அவன்றானே அமையுமென்னும்படியாய்த்துத் தந்தது. (என்னை வெள்ளுயிராக்கவல்ல) 75. "चोरेणात्मापहारिणा" (சோரேணாத்மாபஹாரிணா) என்கிறபடியே ஆத்மாபஹாரம் பண்ணி, அதினாலே க்ஷுத்ரப்ரயோஜநகாமனாய் ஸம்ஸாரியாய்ப் போந்தவென்னை. (வெள்ளுயிராக்கவல்ல) முன்பு

இத்யாதி). (கொளுத்தினபடி) ஊட்டினபடி. (தளம்) கந்தாஶ்ரயம்; சாந்தென்றபடி. ராஜசப்தத்தை விசேஷபரமாகவும் ஸாமாந்யபரமாகவும் திருவுள்ளம் பற்றி, அருளிச்செய்கிறார், (அதுக்கு மேலே இத்யாதி வாக்யத்வயத்தாலே). தோஷோக்தி சபளிதமாகையாலே, (செருக்கிலே) என்றது அர்த்தஸித்தம். (வழக்கனான) செலவுக்கானான. காந்திமத் என்று ருசிரபதத்துக்கர்த்தம் அருளிச்செய்துகொண்டு, மேற்பதத்துக்கவதாரிகை (ஸௌகந்த்யமித்யாதி). (தலையான) ஶ்ரேஷ்டமான. "ஸத்ருஶமநுலேபநம் தீயதாம்" என்றதுக்கு அர்த்தம் (எங்களுடம்புக்கித்யாதி). (மேதகவஸ்து) கஸ்தூர்யாதிகள். (என்றான்) க்ருஷ்ணன் என்று சேஷம். ப்ரக்ருதத்தில் மேதகவஸ்துவேது? என்ன, (அதாகிறதித்யாதி). இந்த ஶ்லோகத்திலே, "ஏதத் ஸுகந்தம், ஏதத் ராஜார்ஹம், ஏதத் ருசிரம், ஹே ருசிராநநே" என்று ஸம்போதிக்கக் கூடாமையாலும், ஸுகந்தமென்று, ஆரோபிதகந்தாஶ்ரயத்துக்கு †"ஸாக்ஷாந்மந்மத மந்மத:" என்கிற திவ்ய காத்ராநுரூப்யம் கூடாமையாலும், சாந்தைக் கொள்வதற்கு முன்பு ஏதச்சப்த நிர்த்தேசம் சேராமையாலும்,

* திருவாய். (4-3-2). ‡ கோயிற்சாந்தென்று அருப்பதம். † பாகவதம். (10-31-2).

க்ஷேத்ரனைப் போந்தாரொருவன் சுத்தஸ்வபாவனானென்று தெரியாதபடி "அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரிலே ஒருவன்" என்னலாம்படியாய்த்து விஷயீகரித்தது. (வல்ல) தன்னதொரு ஸ்வபாவ விசேஷத்தாலே வஸ்துவை வஸ்த்வந்தரமாக்க சக்தனென்கை.

(பையுடையித்யாதி) மங்களாசாஸநத்துக்கு விஷயமேது? என்ன, அவ்விஷயத்தைச் சொல்லுகிறார். தன்னோட்டை ஸ்பர்ஶஸுகத்தாலே விகஸ்வர பணமான நாகத்தினுடைய பகையுண்டு, பெரியதிருவடி, அவனைக்கொடியாக உடையவனுக்கு. அநந்தசாயியாய் கருடத்வஜனானவனுக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறேனென்கை. தகட்டிலழுந்தின மாணிக்கம்போலே திருவநந்தாழ்வானோட்டைச் சேர்த்தியால் வரும் அழகு நித்யஸ்ரீயாகவேணுமென்றும், ஏதேனுமொன்றை அபேக்ஷித்து வந்தவர்களையும் எனக்காக்கிக்கொள்ளவல்லேன் என்று கொடிகட்டியிருக்கிற சக்தி நித்யஸ்ரீயாய்ச் செல்லவேணுமென்றும் திருப்பல்லாண்டு பாடுகிறேனென்கிறார். அநந்யப்ரயோஜநரும் கைவல்யார்த்திகளும் ஸங்கதராகிறவிடத்தில் ஸமூஹமாகப்பேசினார்; இதில் ஐஶ்வர்யார்த்தியை ஏகவசநத்தாலே பேசுவானென்? என்னில்; அவர்கள் திரள் பரிச்சின்னமாய், ஐஶ்வர்யார்த்திகள் திரள் அபரிச்சிந்நமாகையாலே ஒரூருக்கு ஒருத்தன் வார்த்தை சொல்லுமாபோலே சொல்லுகிறார். 8.

---

"ராஜார்ஹம்" என்று வழக்கான சாந்துக்கு திவ்ய காத்ராநுகுண்யமில்லாமையாலும். "ருசிரம்" என்று கேவலரூப ப்ரதாநத்துக்கும் அது சொல்லப்போராமையாலும் ஏகவாக்யதயா அந்வயங்கொள்ளப் போகாது; ராஜார்ஹமென்றதுக்கு அதிஶ்லாக்யமென்று அர்த்தங் கொள்ளுமளவில், "ஸுகந்தம்" என்றது சேராது, அதிஶ்லாக்யமென்றபோதே ஸகலாதிசயம் ஸித்திக்கையாலே விசேஷணாந்தர வையர்த்யம் ப்ரஸங்கிக்கும். உக்தத்தை ப்ரக்ருதத்திலே உபஸம்ஹரிக்கிறார் (இப்படி இத்யாதி). (கோயிற்சாந்து) தேவார்ஹமான சாந்து. "கையடைக்காயும்" என்றதில் "கை" என்றதை அநுஷங்கித்து, (திருக்கையாலே) என்றது.

"வெள்ளுயிராக்கவல்ல" என்ற பதத்தைக் கடாக்ஷித்து, ஐஶ்வர்யத்தைத் தந்து வெள்ளுயிராக்கக் கூடாமையாலே, தகுநுதுணையாக,

9. உடுத்துக்களைந்தநின்பீதகவாடையுடுத்துக்கலத்ததுண்டு
தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தனசூடுமித்தொண்டர்களோம்
விடுத்ததிசைக்கருமம்திருத்தித்திருவோணத்திருவிழவில்
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப்பல்லாண்டுகூறுதமே.

பதவுரை:— உடுத்து —திருவரையில் உடுத்து, களைந்த—கழித்த, நின்—(ஸ்வாமியான) உன்னுடைய, பீதக ஆடை—திருப் பீதாம் பரத்தை, உடுத்து—உடுத்தும், கலத்தது—(நீ அமுது செய்த) கலத் தில் மிகுந்திருப்பதை, உண்டு—உண்டும், சூடிக்களைந்தன—(உன்னால்) சூட்டிக்கொள்ளப்பட்டு களையப்பட்டதும், தொடுத்த—(உன்னுடைய அடியாரான எங்களால்) தொடுக்கப்பட்டதுமான, துழாய் மலர்— திருத்துழாய் மலர்களை, சூடும்—சூட்டிக்கொள்ளும், இத்தொண்டர் களோம்— இப்படிப்பட்ட அடியார்களாயிருக்கிறோம் நாங்கள்;

---

"தந்து" என்றதுக்குத் தாத்பர்யம் (தந்தபோதை இத்யாதி). "வெள்ளுயிராக்கவல்ல" என்றதுக்கநுகுணமாக, "என்னை" என்றதுக்கு ஹார்த்தபாவம் (சோரேண இத்யாதி). "வெள்ளுயிர்" என்ற பதவாஸனை (முன்பு இத்யாதி). "வல்ல" என்றதின் கருத்து (தன்னது இத்யாதி).

மேலுக்கவதாரிகை (மங்களாசாஸநத்துக்கித்யாதி). சப்தார்த்தம் (தன்னோட்டை இத்யாதி). கருடக்கொடியென்னாதே "நாகப்பகை கொடி" என்றதுக்கு ஹார்த்தபாவம் (அநந்தேத்யாதி). "பையுடை" என்றதுக்கு ஸ்வஸ்பர்சத்தால் விகஸிதபணத்வம் சொன்னத்தாலே அநந்தசாயித்வம் பலிதம். இப்படி இருவரையும் சொல்லி மங்களா சாஸநம் பண்ணுவானென்? என்ன, அருளிச்செய்கிறார் (தகட்டி லித்யாதி வாக்யத்வயத்தாலே). (பாடுகிறேன் என்கிறார்) ஆழ்வா ரென்றபடி. "பாடுதும்" என்றும், "கூறுதும்" என்றும், கீழ்ப் பாட்டுக்களிலிருக்க, இப்பாட்டில் "கூறுவன்" என்று சொல்லுவா னென்? என்கிற சங்காநுவாதம் பண்ணி, பரிஹரிக்கிறார், (அநந் யேத்யாதி). ஒருருக்கு ஒருத்தர் வார்த்தை சொல்லுகையாவது, மிகவும் திரளாகையாலே, எல்லாரும் சொல்லும்போது தெரியாமை யாலே, தனித்தனியே சொல்லக்கூடாமையாலே, எல்லாருக்குமாக ஒருவன் சொல்லுகை. (சொல்லுகிறார்) என்றது, அவன் வார்த்தை யாக ஆழ்வாரருளிச்செய்கையாலே என்றபடி.

விடுத்த—ஏவின, திசைக் கருமம்—திக்கிலுள்ள காரியங்களை, திருத்தி—நன்றாகச் செய்து, படுத்த—படுக்கப்பட்டு, பை—(அதனாலே) பணைத்த படங்களையுடைய, நாக அணை—திருவனந்தாழ் வானாகிற படுக்கையிலே, பள்ளி கொண்டானுக்கு—திருக்கண்வளர்ந் தருளுகிற உனக்கு, திருவோணத் திருவிழவில்—திருவோண மென்னும் திருநாளிலே, பல்லாண்டு கூறுதும்—திருப்பல்லாண்டு பாடுவோம்.

அவ:— ஒன்பதாம் பாட்டு. (உடுத்தித்யாதி) வாழாளிலே அழைத்து எந்தை தந்தையிலே வந்து கூடின அநந்யப்ரயோஜநர் பாசுரத்தாலே அவர்களோடே கூடித் திருப்பல்லாண்டு பாடுகிறாரிதில்.

வ்யா:— (உடுத்து) திருவரையில் ஸுஸங்கதமாகச் சாத்துகை யாலும் திருவரையிலே முசிக்கையாலும் தத்ஸம்பந்தம் தோற்றும்படி ஒற்றுமஞ்சளாலும் மாளிகைச் சாந்தாலும் ஸிஹ்நிதமாம்படி உடுத்து.

---

ஒன்பதாம் பாட்டு. (உடுத்துக்களைந்த இத்யாதி). "வந்து மண்ணும் மணமுங் கொண்மின்" என்றத்தையும், "வந்து வழிவழி யாட் செய்கின்றோம்" என்றத்தையும் இப்பாட்டில் "நின் பீதக வாடை" என்று எம்பெருமானை முன்னிலையாக்கி மங்களாசாஸநம் பண்ணுகிறபடியையும் திருவுள்ளம் பற்றி, ஸங்கதி கதநமுகேந அவதாரிகை (வாழாளிலே இத்யாதி). (அழைத்து) என்றது, அழைக்கப்பட்டு என்றபடி.

"களைந்தநின் பீதகவாடை" என்ன அமைந்திருக்க, "உடுத்து" என்று சொல்லுகிறவர்களுடைய உட்கருத்து (திருவரையிலே இத்யாதி). (முசிக்கை) கலங்கப்பண்ணுகை. (முசிக்கையும்) என்ற அநந்தரம் உண்டாம்படி என்று சேஷம். (தத்ஸம்பந்தம்) கடிஸம்பந்தம். (ஒற்று மஞ்சள்) என்றது, * "மஞ்சளும் செங்கழுநீரும்" என்கிற படியே திருமஞ்ஜன காலத்தில் சாத்தின மஞ்சள். (மாளிகைச்சாந்து) என்றது, கோயிற்சாந்து என்றபடி; அதாவது, தேவார்ஹமான சாந்து என்றபடி. (ஸிஹ்நிதமாம்படியும்) என்று சகாரம் அத்யாஹார் யம். இப்படி சில ப்ரகாரங்கள் தோற்றச்சொல்லுவானென்? என்ன, "இத்தொண்டர்களோம்" என்றத்தைக் கடாக்ஷித்து, அருளி

---

* பெரியாழ்-திரு. (2-4-4).

றிவை இத்தனையும் ப்ரார்த்தநீயமாம்படி இருப்பார் சிலர் நாங்கள். சேஷிக்கு மங்களாவஹமாகையும் தத்ஸம்பந்தங்கள் தோற்றின சிஹ்நங்களை உடைத்தாகையும் சேஷபூதனுக்கு ஸ்ம்ருதி விஷயமாய்க் கொண்டு ஸர்வகாலமும் ப்ரியகரமாயிறே இருப்பது. (களைந்த) ஆஸநபேதத்திலே கழித்தால் பொகடும் ஸ்த்தலம் தங்கள் தலையாம்படி இருக்கை. இதுவும் சேஷபூதனுக்கு ப்ரார்த்தநீயமிறே.

இங்ஙன் ப்ரார்த்தநீயமாக வேண்டுகிறதுக்கு ஹேது சொல்லுகிறது மேல். (நின் பீதகவாடை) வகுத்த சேஷியதாகையாலே சாத்தும் திருப்பரியட்டமடையத் திருப்பீதாப்பரத்தினுடைய

---

செய்கிறார் (இவை இத்யாதி). இவையித்தனையும் ப்ரார்த்தநீயமாவானென்? என்ன, (சேஷிக்கு இத்யாதி). சேஷிக்கு மங்களாவஹமாகையாலே என்றபடி. (ஸ்ம்ருதிவிஷயமாய்) என்றது, ஜ்ஞாந விஷயமாய் என்றபடி. (ஸர்வகாலமும்) திருவரையிலிருக்கும்போதும், தங்கள் பக்கல் வந்தபோதும். "உடுத்து நின்பீதகவாடை" என்றால் போராதோ? "களைந்த" என்றதுக்குக் கருத்தேது? என்ன, சிரஸாவஹிக்கும்படி உத்தேஶ்யமாயிருக்கை என்று அருளிச்செய்கிறார் (ஆஸநேத்யாதி). (ஆஸநபேதம்) மந்த்ராஸநாதிகள். அந்த உத்தேஶ்யத்வத்தை உபபாதிக்கிறார் (இதுவுமித்யாதி). உடுத்துக் களைகை முதலானவை வகுத்தஸ்வாமியதாகையாலே ப்ரார்த்தநீயங்கள் என்று கருத்து.

ஆஸநபேதத்திலே சாத்தின திருப்பரியட்டங்களெல்லாவற்றையும் "பீதகவாடை" என்கிறதென்? என்ன, (வகுத்த இத்யாதி). ஆவேசாவதாரமென்கைக்குச் சேதநராக வேணுமே? என்ன, ப்ரமாணம் காட்டுவதாக ப்ரதீகம் (நின் பீதகவாடை) என்றது. "ஶ்ரக்வஸ்த்ராபரணைர்யுக்தம் ஸ்வாநுரூபைரநூபமை: | சிந்மயைஸ் ஸ்வப்ரகாஶைஶ்ச அந்யோந்ய ருசிரஞ்ஜிதை: ||" இதில் "சிந்மயை:" என்றதிலே திருவுள்ளம். "சிந்மயை:" சேதநஸ்வரூபை:. இது ஜ்ஞாநாபிவ்ருத்தியைப்பற்ற. ப்ராக்ருத வஸ்துக்களிலே சேதநருண்டாகிலும், ஜ்ஞாநாபிவ்ருத்தி இல்லாமையாலே, சிந்மயத்வம் கூடாது; சிரஸாவஹிக்குமித்தனையொழிய உடுக்கக்கூடுமோ? அவனுக்கு சேஷமாகாததையன்றோ உடுக்கப்படுவது? என்ன, அநந்யப்ரயோஜநனுக்குத் தச்சேஷமானதையொழிய வேறொன்று

ஆவேசாவதாரமாகை. (நின் பீதகவாடை) 76. "स्रग्वस्त्राभरणैर्युक्तं स्वानुरूपैरनुपमैः । चिन्मयैस्स्वप्रकाशैश्च अन्योन्यरुचिरञ्जितैः ॥" (ஸ்ரக்வஸ்த்ராபரணைர்யுக்தம் ஸ்வாநுரூபைரநூபமை: । சிந்மயைஸ் ஸ்வப்ரகாஸைஸ்ச அந்யோந்ய ருசிரஞ்ஜிதை: ॥) என்று சேதநகோடியிலேயிறே திருப்பீதாம்பரத்தைச் சொல்லுகிறது. (உடுத்து) இதிறே அநந்யப்ரயோஜநர்க்கு ஆபரணம். அங்ஙனன்றிக்கே 69. "भक्तानां" (பக்தாநாம்) என்றிருக்குமவனுகையாலே இதுதான் சேஷியளவிலே வந்தவாறே ப்ரதிபத்தி வேறுபட்டிருக்கும். ராஜாக்களுக்கு இரட்டை பிடித்துக் கொடுக்குமவர்கள் வாக்காகப் பிடித்துத் தங்களரையிலே உடுத்திருந்து போக்யமாம்படி பண்ணிக் கொடுப்பார்கள்; அதுவாய்த்து இவனுக்கு நினைவு.

(கலத்ததுண்டு) அமுதுசெய்து கைவாங்கின தளிகை மாற்றினால் ப்ரஸாதம் போஜ்யம். 77. "त्वदीयभुक्तोज्झितशेषभोजिना" (த்வதீயபுக்தோஜ்ஜித சேஷபோஜிநா) என்னக்கடவதிறே. ப்ரஸாதமே தாரகமா

---

அபேக்ஷிக்கக்கூடாமையாலே, இதுவே இவனுக்கு உத்கர்ஷாவஹமென்று ஸித்தவத்கரித்து, அருளிச்செய்கிறூர் (இதிறே இத்யாதி). (ஆபரணம்) என்றது, சோபாவஹமென்றபடி. இவர்கள் தங்கள் ஸ்வரூபாநுரூபமாக இப்படி ப்ரார்த்தித்திருந்தார்களே ஆகிலும், அவன் இவர்களை அலங்கரித்துக் காணுமவனுகையாலே, முசிந்ததைக் கொடானே, இவர்களுக்கிது ஸித்திக்கும்படியேது? என்ன, அவன் நினைவு வேறுகையாலே ஸித்திக்குமென்று பரிஹரிக்கிறூர் (பக்தாநாம் என்று தொடங்கி, இவனுக்கு நினைவு என்னுமளவும்). (இதுதான்) உடுக்கைதான். அந்த ப்ரதிபத்தியை உபபாதிக்கிறூர் (ராஜாக்களுக்கித்யாதி). (இரட்டை) த்விபடி; அதாவது துப்படி. (வாக்காக) தங்கும்படியாக. ஈஶ்வரன் சேஷித்வத்தால் வந்த செருக்காலே கொடுத்துவிடுகையும், இவர்கள் சேஷபூதராகேணுமென்று வைதமாய் பரிக்ரஹிக்கையுமன்றிக்கே, ராகப்ராப்தமாக அவனுக்குக் கொடுக்கையும், அத்தை இவர்களுடுக்கையுமென்றிருக்கும் ப்ரதிபத்திகளென்று தாத்பர்யம்.

"கலத்தது" பாத்ரத்திலுள்ளது என்று சப்தார்த்தம். கீழும் மேலும் "உடுத்துக்களைந்த" "சூடிக்களைந்தன" என்று புக்தோஜ்ஜிதம் சொல்லியிருக்கையாலே, தநுருசிதமாக, உண்டுவிட்ட

யிருப்பார் சிலர் நாங்கள். 78. "गुरोरुच्छिष्टं भुञ्जीत" (குரோருச்சிஷ்டம் புஞ்ஜீத) என்று விதிப்ரேரிதராய்க் கொண்டு ப்ரதிபத்தி பண்ணுவர்கள் ஸ்வரூபஜ்ஞாநமில்லாதார்; ஸ்வரூபஜ்ஞாநமுடையார், தத்ஸித்யர்த்தமாக ப்ரதிபத்தி பண்ணுவர்கள்; பகவத்ப்ரேமயுக்தர், ஸ்வயம் ப்ரயோஜநமென்றிருப்பர்கள். இச்சேஷத்வ காஷ்ட்டையான ததீயருடைய ப்ரஸாதம் * "தருவரேல்" என்கிறபடியே அதிக்ருதாதிகாரமாயிருக்கும், ஸர்வஸாதாரணதாகையாலே, ப்ரயோஜநாந்தரபரனுக்கும் யோக்யமாயிறே பகவத் ப்ரஸாதமிருப்பது.

---

கலத்தது உண்டென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார், (அமுதுசெய்து இத்யாதி). யத்வா, (அது) என்றது, புத்திஸ்த்த பராமர்ஶியாகையாலே, சேஷ சேஷிகளுக்கு போஜநதேசகாலபேதம் வ்யவஸ்த்திதமாகையாலே, பிந்நதேசகால விசிஷ்டமாக பாத்ரத்தில் ப்ரஸாதம் தோற்றுகிறதென்று அருளிச்செய்கிறார் (அமுது இத்யாதி). (கைவாங்கின) என்கையாலே காலபேதமும், (மாற்றினால்) என்றத்தாலே தேசபேதமும் தோற்றுகிறது. அதவா, "தொண்டர்கள்" என்றத்தைக் கடாக்ஷித்து, "கலத்தது" என்றத்தை முழுச்சொல்லாக்கி, கலத்தை நிரூபகமாகச் சொல்லுகையாலே பாத்ராவசிஷ்டமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (அமுதித்யாதி) என்னவுமாம். அமுதுசெய்த ஸ்த்தலத்திலே தொண்டருக்குண்ணக்கூடாதென்று கருத்து. யாற்றினால் அதில் ப்ரஸாதமென்று கூட்டுவது. அநந்யப்ரயோஜநரில் புக்தோஜ்ஜிதத்தையே புஜித்தார்களுண்டோ? என்ன, நித்யஸூரிகளில் தலைவரான சேஷாசநரன்றோ இப்படி இருந்தாரென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார் (த்வதீய இத்யாதி). "போஜிநா" என்ற இடத்தில், தாச்சீல்யே ணிநிப்ரத்யயத்தாலே, புக்தசிஷ்டாஶநமே ஸ்வபாவமென்று தோற்றுகிறது. இத்தால் பலிதம் (ப்ரஸாதமே இத்யாதி). என்னென்றாலும் விதிப்ரேரிதராகவாதல், சேஷத்வஸ்வரூப ஸித்யர்த்தமாகவாதல், ஸக்ருத் ஸேவ்யமாயன்றோ லோகத்தில் நடப்பது; இதுவே தாரகமாயிருக்கைக்கு ஹேதுவேது? என்ன, அருளிச்செய்கிறார் (குரோரித்யாதி வாக்யத்ரயத்தாலே). "புஞ்ஜீத" என்று சொன்னாற்போலே என்று சேஷம். (தத்ஸித்யர்த்தமாக) என்றது, ஸ்வரூபஸித்யர்த்த

---

* திருமாலை. (41).

(தொடுத்தவித்யாதி) திருத்துழாய் பறிக்கும்போதும் தொடுக்கும் போதும் "அவன் சாத்தியருளப்புகுகிறான்" என்னும் ஆதரத்தாலே ஸம்ஸ்க்ருதமாய், சாத்திக்கழித்தால் சூடுமது எங்களுக்கு உத்தேஶ்யம். சுவடர் பூச்சூடும்போது புழுகிலேதோய்த்துச் சூடுமாபோலே தத்ஸ்பர்ஶத்தாலே விலக்ஷணமாயிருக்குமென்கை. அவன்றானும், சிலர் சூடிக்கொடுத்த மாலையின் சுவடறியுமவனாகையாலே சூடிக் கொடுக்கிறானிறே. (இத்தொண்டர்களோம்) இப்படிப்பட்ட அடியார்களிறே நாங்கள். எமக்கென்று உடுத்தல் ஜீவித்தல் சூடுதல் செய்யுமவர்களன்றிக்கே, அவன் கழித்தவை கொண்டு தேஹயாத்ரையாம் படி இருக்குமவர்களிறே நாங்கள்.

ஸ்வரூபஸித்யர்த்தமாக அத்தலையில் உச்சிஷ்டங்களை ஆகாங்க்ஷித்து, "புனையிலுண்பன்" என்றிருக்குமத்தனையோ? என்னில்;

---

மாக என்றபடி. பகவச்சேஷத்வந்தான் பாகவத சேஷத்வபர்யந்தமல்லது நில்லாமையாலே, இந்த ப்ரஸாத ப்ரதிபத்திதான் காஷ்ட்டாபர்யந்தம் நடவாதொழியில் ஸித்தியாமையாலே, அவ்வளவும் நடக்கவேணுமே? என்ன, (இச்சேஷத்வேத்யாதி). (காஷ்ட்டையான) என்றது, ததீயப்ரஸாதம் சேஷத்வகாஷ்ட்டா ஸம்பாதகமாகையாலே, அதிக்ருதாதிகாரம்; ஆகையால் இங்கும் அநந்யப்ரயோஜநரைச் சொல்லுமிடத்தில், ததீயபுக்தசேஷபர்யந்தமென்று கருத்து. பகவத்ப்ரஸாதமோ? என்ன (ஸர்வேத்யாதி). (ப்ரயோஜநாந்தரபரர்க்கும்) என்ற ஸமுச்சயத்தாலே, அநந்யப்ரயோஜநர்களுக்குக் கேட்கவேணுமோவென்று தோற்றுகிறது.

சூடுகிறபோதே தொடுத்திருக்குமே, "தொடுத்த" என்று சொல்லுவானென்? என்ன, ஆதரம் தோற்றுகைக்காக என்கிறார் (திருத்துழாய் இத்யாதி). ஸம்ஸ்க்ருதமாயிருக்கிற திருமாலையை என்று சேஷம். அதுவே உத்தேஶ்யமாயிருக்கிறதோ? என்ன (சுவடரித்யாதி). சுவடர்—ரஸிகர். அவன்றான் பரமரஸிகனாயிருக்க, இவர்களைப்போலே † சூடினதைச் சூட்டாதே, தான் சூடிக்கொப்பானென்? என்ன, அச்சுவட்டை அறிகையாலேதான் இவர்களிடத்தில் ப்ரீதியாலே சூடிக்கொடுக்கிறானென்கிறார், (அவன்றானுமித்யாதி).

---

† "சூட்டினதைச் சூடாதே" என்றிருக்கலாம்.

(விடுத்தவித்யாதி) ஸ்வாமி ஸந்தேசகாரிகளாய்க்கொண்டு, இப்படி தேஹயாத்ரை நடத்துமவர்களிறே நாங்கள். (விடுத்ததிசைக் கருமம் திருத்தி) 79. "क्रियतां" (க்ரியதாம்) என்கிற ஸந்தேசமே தாரகமாக ஏவின கார்யத்தைச் செய்து தலைகட்டுகை. திசைக்கருமம் திருத்துகையாவது, அத்திக்குக்கு வேறொருவரை ஏவவேண்டாதபடி செய்து தலைக்கட்டுகை. ஸ்வாமி ஏவின கார்யத்தைக் குறையச் செய்யுமவன் அதமன்; அத்தைக் குறையாமல் தலைக்கட்டுமவன் மத்யமன்; அதுக்கு மேலே, அதுக்கு அவிருத்தமான கார்யங்களையும் விசாரித்துச் செய்து தலைக்கட்டுமவன் உத்தமன். 80. "कार्ये कर्मणि निर्दिष्टे यो बहून्यपि साधयेत्। पूर्वकार्याऽविरोधेन स कार्यं कर्तुमर्हति॥" (கார்யே கர்மணி நிர்த்திஷ்டே யோ பஹூந்யபி ஸாதயேத் । பூர்வகார்யாऽவிரோதேந ஸகார்யம் கர்த்துமர்ஹதி ॥) என்கிற திருவடியிறே அவனுகிறான். "பிராட்டியிருந்தவிடமறிந்து வா" என்றுவிட, இருந்தவிடமுமறிந்து, "அவன் பலமிருந்தபடியென்?" என்று பெருமாள் கேட்டருளினுல், "அறிந்திலேன் என்னவொண்ணுது" என்று அத்தலையில் பலபரீக்ஷையும் பண்ணி ஊரிலரணையும் தலையழித்து, மூலையடியே

---

இத்தால் ஸ்ரீகோதாதேவி அவனுக்காக அவன் நெஞ்சறிந்து தான் சூடிக்கொடுத்தாற்போலே, அவனும் இவர்கள் நெஞ்சறிந்து தான் சூடிக்கொடுக்கிறுனென்றதாயிற்று. கீழ்வாக்ய விவரணம், (எமக்கென்று உடுத்தலித்யாதி).

மேற்பதத்துக்கவதாரிகை, (ஸ்வரூபேத்யாதி). விடுத்ததிசைக் கருமம் திருத்தாதபோது, கீழ்ச்சொன்னவை எல்லாம் ப்ரேமகார்யமாகத் தோற்றுமையாலே, ததநுகுணமாக இப்படி ஶங்கை உதிக்குமென்று திருவுள்ளம். (புகையில்) என்றது, பொகடில் என்றுய், ப்ரஸாதிக்கில் என்றபடி. அன்றிக்கே, புகையில் என்றது, புகையெழுப்பில், அதைக்கண்டு ஊணத்யாயப்படிக்கை என்றுமாம். மேலெல்லாம் கடாக்ஷித்துத் தாத்பர்யம் (ஸ்வாமி இத்யாதி). ப்ரமாணபூர்வகமாக ஶப்தார்த்தம் (க்ரியதாமித்யாதி). "கருமந்திருத்தி" என்றுல் போராதோ? "திசை" என்பானென்? என்ன, (அத்திக்கித்யாதி). "விடுத்ததிசை" என்று, திக்ப்ரதர்ஶநம் பண்ணினமாத்ரத்தில், கார்யங்களெல்லாம் அஸஹாயமாகத் தலைக்கட்டக்கூடுமோ? என்ன, அப்படி செய்தவன் திருவடியன்றோ என்பாராக,

(விடுத்தவித்யாதி) ஸ்வாமி ஸந்தேசகாரிகளாய்க்கொண்டு, இப்படி தேஹயாத்ரை நடத்துமவர்களிறே நாங்கள். (விடுத்ததிசைக் கருமம் திருத்தி) 79. "क्रियतां" (க்ரியதாம்) என்கிற ஸந்தேசமே தாரகமாக ஏவின கார்யத்தைச் செய்து தலைகட்டுகை. திசைக்கருமம் திருத்துகை யாவது, அத்திக்குக்கு வேறொருவரை ஏவவேண்டாதபடி செய்து தலைக்கட்டுகை. ஸ்வாமி ஏவின கார்யத்தைக் குறையச் செய்யுமவன் அதமன்; அத்தைக் குறையாமல் தலைக்கட்டுமவன் மத்யமன்; அதுக்கு மேலே, அதுக்கு அவிருத்தமான கார்யங்களையும் விசாரித்துச் செய்து தலைக்கட்டுமவன் உத்தமன். 80. "कार्ये कर्मणि निर्दिष्टे यो बह्न्यपि साधयेत्। पूर्वकार्याऽविरोधेन स कार्यं कर्तुमर्हति॥" (கார்யே கர்மணி நிர்த்திஷ்டே யோ பஹ்வ்ந்யபி ஸாதயேத் I பூர்வகார்யாऽவிரோதேந ஸகார்யம் கர்த்துமர்ஹதி II) என்கிற திருவடியிறே அவனுகிறான். "பிராட்டியிருந்தவிடமறிந்து வா" என்றுவிட, இருந்தவிடமு மறிந்து, "அவன் பலமிருந்தபடியென்?" என்று பெருமாள் கேட்டருளினால், "அறிந்திலேன் என்னவொண்ணாது" என்று அத்தலையில் பலபரீக்ஷையும் பண்ணி ஊரிலரணையும் தலையழித்து, மூலையடியே

---

இத்தால் ஸ்ரீகோதாதேவி அவனுக்காக அவன் நெஞ்சறிந்து தான் சூடிக்கொடுத்தாற்போலே, அவனும் இவர்கள் நெஞ்சறிந்து தான் சூடிக்கொடுக்கிறானென்றதாயிற்று. கீழ்வாக்ய விவரணம், (எமக்கென்று உடுத்தலித்யாதி).

மேற்பதத்துக்கவதாரிகை, (ஸ்வரூபேத்யாதி). விடுத்ததிசைக் கருமம் திருத்தாதபோது, கீழ்ச்சொன்னவை எல்லாம் ப்ரேமகார்யமாகத் தோற்றாமையாலே, ததநுகுணமாக இப்படி ஶங்கை உதிக்குமென்று திருவுள்ளம். (புகையில்) என்றது, பொகடில் என்றாய், ப்ரஸாதிக்கில் என்றபடி. அன்றிக்கே, புகையில் என்றது, புகையெழுப்பில், அதைக்கண்டு ஊணத்யாயப்படிக்கை என்றுமாம். மேழெல்லாம் கடாக்ஷித்துத் தாத்பர்யம் (ஸ்வாமி இத்யாதி). ப்ரமாண பூர்வகமாக ஶப்தார்த்தம் (க்ரியதாமித்யாதி). "கருமந்திருத்தி" என்றால் போராதோ? "திசை" என்பானென்? என்ன, (அத்திக்கித்யாதி). "விடுத்ததிசை" என்று, திக்ப்ரதர்ஶநம் பண்ணின மாத்ரத்தில், கார்யங்களெல்லாம் அஸஹாயமாகத் தலைக்கட்டக் கூடுமோ? என்ன, அப்படி செய்தவன் திருவடியன்றோ என்பாராக,

போம்படி பண்ணிவந்தானிறே. (திருவோணத்திருவிழவில்) ஏவின கார்யத்தைக் குறையறச் செய்தவளவிலும் பர்யாப்தி பிறவாமையாலே, திருவவதரித்தருளின திருவோணமாகிற மங்களதிவஸத்திலே என்ன தீங்கு வருகிறதோ! என்று மங்களாசாஸநம் பண்ணி வர்த்திக்குமவர்கள்.

(படுத்தவித்யாதி) அத்தாலும் பர்யாப்தி பிறவாமையாலே திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்தபோதை அழகுக்குக் கண்ணெச்சில் வாராமைக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறார்கள். படுக்கப்பட்டு ஸ்வஸம்ஶ்லேஷத்தாலே விகஸிதமாகாநின்றுள்ள பணத்தையுடையனாய், மென்மை, குளிர்த்தி, நாற்றம் என்கிறவற்றை ப்ரக்ருதியாகவுடைய திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே கண் வளர்ந்தருளுகிற அழகுக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறோம். ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனையும் மயங்கப்பண்ணும் படுக்கை. அவன் ஸ்வஸ்பர்சத்தாலே விக்ருதனாகப் பண்ணும். இவனுடைய வடிவும் அவனுடைய வடிவும், * "கிடந்ததோர் கிடக்கை" என்கிறபடியே பரிச்சேதிக்கவொண்ணாத அழகிலே, கண்வளர்ந்தருளுகிறபோதையழகு ஒரு வெள்ளிமலையிலே காளமேகம் சாய்ந்தாற்போலே. கண்வளர்ந்தருளுகிறபோதை பரபாக ‡ (ரஸ)த்தை அநுஸந்தித்தால் மங்களாசாஸநமொழியச் செல்லுமோ? என்கிறார்கள். 9.

---

கிங்கர தாரதம்யத்தை அருளிச்செய்கிறார், (ஸ்வாமி ஏவின இத்யாதி). அப்படி உத்தமாதிகாரி ஆர்? என்ன, (கார்யேத்யாதி). (கார்யே கர்மணி) என்றது, அவஶ்ய கர்த்தவ்யமான வ்யாபாரம். திருவடி பஹுகார்யங்களைச் செய்தபடியை அருளிச்செய்கிறார், (பிராட்டி இத்யாதி). (அரணையும்) மதிளையும். (தலையழித்து) நன்றாக அழித்து என்றபடி. (மூலையடியேபோம்படி) சுட்டுப்பொகட்டால் சுட்டசுவராமே, அப்போது மூலையாகப்போகலாமே, அத்தைப்பற்றச் சொல்லுகிறது. "திருவோணத்திருவிழவில்—பல்லாண்டு கூறுதும்" என்று கூட்டி, கீழைக் கடாக்ஷித்துக்கொண்டு, அர்த்தமருளிச்செய்கிறார், (ஏவின இத்யாதி).

"படுத்த" இத்யாதிக்குத் தாத்பர்யம், (அத்தாலுமித்யாதி) (கண்ணெச்சில்) த்ருஷ்டிதோஷம். தாத்பர்யார்த்த கதநமுகே...

---

* திருமாலை (23). ‡ குண்டலீதாக்ஷரங்கள் அரும்பதத்தில் பாடமில்லை.

10. எந்நாளேம்பெருமானுன்றனக்கடியோமென்றெழுத்துப்பட்ட
அந்நாளேயடியோங்களடிக்குடில்வீடுபெற்றுய்ந்ததுகாண்
செந்நாள்தோற்றித்திருமதுரையுள்சிலைகுனித்தைந்தலைய
பைந்நாகத்தலைப்பாய்ந்தவனேஉன்னைப்பல்லாண்டுகூறுதுமே.

பதவுரை:— எம்பெருமான்—எங்களுக்கு ஸ்வாமியானவனே !, உன் தனக்கு—(ஸர்வசேஷியான) உனக்கு, அடியோமென்று— 'அடிமைப்பட்டவர்கள் நாங்கள்' என்று, எழுத்துப்பட்ட—அடிமை ஓலை எழுதிக்கொடுத்த, எந்நாள்—நாள் எதுவோ, அந்நாளே—அந்த நாளே, அடியோங்கள்—சேஷபூதர்களான எங்களுடைய, குடில்—வீட்டிலுள்ள புத்ரபௌத்ராதிகளெல்லாம், அடி—அடிமைப்பட்டதாய், வீடு பெற்று—கைவல்யமோக்ஷத்திலிருந்து விடுதலை பெற்று, உய்ந்தது—உஜ்ஜீவித்தது; செம் நாள்—அழகியதான திருநாளிலே, தோற்றி—திருவவதாரம் செய்து, திரு மதுரையுள்—அழகிய வடமதுரையில், சிலை குனித்து—(கம்ஸனுடைய ஆயுதசாலையில்) வில்லை முறித்து, ஐந்தலைய—ஐந்து தலைகளை உடையதாய், பை—பரந்த படங்களையுமுடையதான, நாகம்—காளியனென்னும் நாகத்தின், தலை—தலையின்மேல், பாய்ந்தவனே—ஏறிக் குதித்தருளின ஸர்வேச்வரனே !, உன்னை—உனக்கு, பல்லாண்டு கூறுதும்—மங்களாசாஸனம் பண்ணக்கடவோம்.

அவ:— பத்தாம்பாட்டு. (எந்நாளித்யாதி). கீழ்ப்பாட்டில் புகுந்த அநந்யப்ரயோஜநர், தேஹயாத்ரையிலும் தங்கள் பாரதந்த்ர்யமே

---

வாக்யார்த்தம் (படுக்கப்பட்டு இத்யாதி). அவன் ஸர்வஜ்ஞனாயிருக்க, திருவநந்தாழ்வான் தானும் பரிவனாயிருக்க அச்சேர்த்திக்குப் பரிய வேண்டும்படியென் ? என்ன (ஸ்வத: இத்யாதி). (அவன்) ஈஶ்வரன். அச்சேர்த்திக்குக் கண்ணெச்சில் வருகைக்கு ப்ரஸக்தியேது ? என்ன, (இவனுடைய இத்யாதி). கீழ்வாக்யத்தை விவரித்துக்கொண்டு, "பல்லாண்டு கூறுதுமே" என்கிற நிர்த்தாரணத்தைக் காட்டுகிறார், (கண்வளர்ந்தருளுகிறபோதை இத்யாதி). சாய்ந்தாற்போலே இருப்ப தொன்றாகையாலே என்று கூட்டுவது. (பரபாகத்தை) வர்ணேத் கர்ஷத்தை.



பத்தாம்பாட்டு. (எந்நாளித்யாதி) கீழ்ப்பாட்டில் அநந்யப்ரயோ ஜநர் பாசுரமென்றீர், அதுக்கும், இப்பாட்டு ப்ரயோஜநாந்தரபரர்

ஸ்வரூபமாயிருக்கிற ஏற்றத்தைச் சொல்லிக்கொண்டு புகுந்தார்கள்; இதில், ப்ரயோஜநாந்தரபரர் புகுருகிறார்களாகையாலே, தங்கள் பக்கல் அங்ஙனிருப்பதோரேற்றங்காண விரகில்லாமையாலே, பகவத்ப்ரபாவத்தால் தங்களுக்குப் பிறந்த ஏற்றத்தைச் சொல்லிக்கொண்டு வந்து புகுருகிறார்கள். ஐஶ்வர்யார்த்தியும் ஸங்கதனாகிறபோது "சாந்தமும் தந்தென்னை வெள்ளுயிராக்கவல்ல" என்று பகவத்ப்ரபாவத்தைச் சொல்லிக்கொண்டு வந்திறே புகுந்தது. அவன்றான் நானபேக்ஷித்த க்ஷுத்ர புருஷார்த்தத்தைத் தந்துவைத்து என்னை சுத்தஸ்வபாவனாக்கினானென்று ஆஶ்சர்யப்பட்டான்; கைவல்யார்த்தி

---

பாசுரமாகைக்கும் ஸூசகம் ஏது? என்ன, அருளிச்செய்கிறார் (கீழிற்பாட்டிலித்யாதி வாக்யத்வயத்தாலே). தேஹயாத்ரையிலும் பாரதந்த்ர்யமே ஸ்வரூபமாகச் சொல்லுகையாலும், பகவத்ப்ரபாவத்தாலே தங்களுக்கு தாத்காலிகாதிஶயம் வந்ததாகச் சொல்லுகையாலும், ஸூசகங்களுண்டு; ஆகையாலே, அநந்யப்ரயோஜநர் பாசுரம் அது, இது ப்ரயோஜநாந்தரபரர் பாசுரம் என்று கருத்து. (தேஹயாத்ரையிலும்) என்ற ஸமுச்சயம், ஆத்மயாத்ரையில் கிம்புநர்ந்யாயத்தை ஸூசிப்பிக்கிறது. மங்களாஶாஸநம் பண்ணப்புகுந்தார்களாகையாலே அவர்களோடே திருப்பல்லாண்டு பாடினார் என்று கூட்டுவது. (ப்ரயோஜநாந்தரபரர்) என்றதுக்குக் கேவலரென்று கருத்து. (அங்ஙனிப்பது) என்றது, பரதந்த்ரனாயிருப்பதென்றபடி. (புகுருகிறார்கள்) மங்களாஶாஸநம் பண்ணப் புகுருகிறார்கள்; அவர்கள் பாசுரத்தாலே திருப்பல்லாண்டு பாடுகிறாரென்று இங்கு கூட்டுவது. ப்ரயோஜநாந்தரபரரானால், பகவத்ப்ரபாவத்தைச் சொல்ல வேணுமோ? என்ன, (ஐஶ்வர்யார்த்தியுமித்யாதி). ஐஶ்வர்யார்த்தியைப்போலே ஸங்கதராகிற "தீயிற்பொலிகின்ற" என்றதிலே சொல்லாதே, இப்பாட்டிலே இத்தைச்சொல்லி ஆஶ்சர்யப்பட வேண்டுகிறபடி என்? என்ன, அருளிச்செய்கிறார் (அவனித்யாதி வாக்யத்வயத்தாலே). ஈஶ்வரன் தந்து வெள்ளுயிராக்கினானென்கையாலே, அவனை முன்னிலையாகக் கண்ட வாஸநையாலே, அவன் வைலக்ஷண்யம் நெஞ்சில் பட்டு, அந்தப்பாட்டிலேகொண்டாடினார்கள் ஐஶ்வர்யார்த்திகள்; கேவலர் உபாஸநதசையில் அவனை முன்னிலையாகக் காணாமையாலே, ஆழ்வாராலே திருந்தி, அவனைக்கண்டு

கள், தங்கள் க்ஷுத்ரபுருஷார்த்த ஸம்பந்தம் யாவதாத்மபாவி விநாச்ரமாகையாலே ஆச்ரயண வேளையிலே மீட்ட ஆச்சர்யத்தைக் கொண்டாடுகிறார்கள்.

வ்யா— (எந்நாள்) "அந்நாள்" என்னவமைந்திருக்க, "எந்நாள்" என்கிறது, வகுத்தசேஷிபக்கலிலே க்ஷுத்ரபுருஷார்த்தத்தை அபேக்ஷித்த காலமாயிருக்கச்செய்தேயும், 81. "सुप्रभाता च मे निशा" (ஸுப்ரபாதா ச மே நிசா) என்கிறபடியே மங்களாசாஸநம் பண்ணுகைக்கு யோக்யமாம்படி புகுர நிறுத்தின திவஸமென்று அந்நாளைக் கொண்டாடுகிறார்கள். பகவத்ப்ரபாவந்தான், விஷயீகரித்த திவஸத்தையும் கொண்டாடும்படியாயிருக்குமிறே. அவதாரத்திலேற்றம் சொல்லுகிறவளவில் தஜ்ஜந்மதிவஸமென்று அந்நாளும் கொண்டாடப்பட்டதிறே.

---

மங்களாசாஸநம் பண்ணுகிற இந்தப்பாட்டில் கொண்டாடினார்கள் என்று கருத்து. (கொண்டாடுகிறார்கள்) என்ற அநந்தரம் இப்பாட்டில் என்று கூட்டுவது.

மேலே "அந்நாள்" என்று சொல்லியிருக்க, அது அமையாதோ? "எந்நாள்" என்று சொல்லுவானென்? என்கிற சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் (அந்நாளித்யாதி). எந்நாள் என்கிறதென்? என்னில் என்று சேஷம். கொண்டாடுகிறார்களாகையாலே, "எந்நாள்" என்கிறது என்று கூட்டுவது. வேணுமாகில் பகவானைக் கொண்டாடுகிறார்கள், நாளைக்கொண்டாடுவானென்? என்ன, (பகவதித்யாதி). இப்படி நாளைக்கொண்டாடினதுண்டோ? என்ன, ராமக்ருஷ்ணாதிரூபேண அவதரித்த காலத்தில் அதிசயத்தைச் சொல்லவந்து, அந்த திவஸத்தை "ராமஜயந்தி" "க்ருஷ்ணஜயந்தி" "நரஸிம்ஹஜயந்தி" என்று சாஸ்த்ரங்களால் கொண்டாடப்பட்டதென்கிறார் (அவதாரத்திலித்யாதி).

"எம்பெருமான்" இத்யாதிக்கவதாரிகை (ப்ரயோஜநேத்யாதி). எம்பெருமானாகையாலே, உய்ந்தது காண் என்று திருவுள்ளம் பற்றி அருளிச்செய்கிறார் (க்ஷுத்ரேத்யாதி). "அடியோங்கள்" இத்யாதிக்கவதாரிகை (வகுத்த இத்யாதி). (வகுத்த) ப்ராப்தமான. (எழுத்து) வர்ணாத்மகமான சப்தம்; அதாவது, ப்ரணவமாதல், நமச்சப்த

ப்ரயோஜநாந்தரத்தை அபேக்ஷித்து வந்தவன், அது ஒழிந்து அநந்யப்ரயோஜநனுகைக்கு அடியென்? என்னில், (எம்பெருமான்) க்ஷுத்ரப்ரயோஜநத்தை அபேக்ஷித்து நிருபாதிக சேஷியான உன் பக்கலிலே வருகையாலே ஸ்வரூப ப்ராப்தமாய் வந்த சேஷத்வமே பலித்துவிட்டது. வகுத்த சேஷியானாலும் அபேக்ஷிதங்களையொழிய புருஷார்த்தாந்தரங்களைக் கொடுக்கும்போது, அர்த்தி பக்கலிலே ஒரு கைம்முதல் வேண்டாவோ? என்னில், (உன்றனக்கடியோமென்றெழுத்துப்பட்ட) "அடியோம்" என்கிற அர்த்தத்துக்கு வாசகமான சப்தத்திலே எங்களுக்கு அந்வயமுண்டு; நெஞ்சிலின்றிக்கே இருக்கிலும் வாயிலுண்டான மாத்ரங்கொண்டு தரவல்ல சக்தியுண்டிறே உனக்கு. அடிமைக்கு வாசகமான சப்தம் கைவல்யார்த்தியுடைய உபாஸநத்திலே உண்டிறே. 82. "ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन्" (ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந்) என்னக்கடவதிறே. அதவா, ஆரேனும் பக்கலிலே ஏதேனுமொன்றை வேண்டிச் செல்லிலும் நமஸ்ஸப்தப்ரயோகம் பண்ணக்கடவதாயிறே

---

மாதல். (எழுத்துப் படுகை) உச்சரிக்கை. முந்தின அர்த்தத்திலே நோக்காக அருளிச்செய்கிறார் (அடியோமென்கிற இத்யாதி). (வாசகமான சப்தம்) என்றது, ப்ரணவம்; இது "அடியோம்" என்கிற அர்த்தத்தைச் சொல்லுகையாவது: "அடியோம்" என்கிற பதம் ப்ரதியோகிஸாபேக்ஷமாகையாலே அகாரார்த்தத்தையும், "ஸர்வம்வாக்யம் ஸாவதாரணம்" என்கிற ந்யாயத்தாலே உகாரார்த்தத்தையும், இதுக்கு ப்ரவ்ருத்திநிமித்தம் தாஸ்யமாகையாலே சதுர்த்யர்த்தத்தையும், அஸ்மச்சப்த பர்யாயதயா ப்ரத்யகர்த்த போதகமாகையாலே மகாரார்த்தத்தையும், இதில் பஹுவசநத்தாலே அதில் ஜாத்யபிப்ராயகத்வத்தையும் காட்டக்கடவதாயிருக்கை. வாசகமென்றது, ப்ரணவத்துக்கு ஜீவப்ராதாந்யம் சாப்தமாகையாலே. வேறொன்றை அபேக்ஷித்து, மற்றொன்றுக்கு வாசகசப்தம் சொன்னால் போருமோ? என்ன, "உன்றனக்கு" என்றதிலே நோக்காக அருளிச்செய்கிறார் (நெஞ்சிலித்யாதி). கைவல்யார்த்திக்கு இந்த சப்த ப்ரயோகப்ரஸங்கமென்? என்ன, (அடிமைக்கித்யாதி). எங்ஙனே? என்ன, (ஓமித்யாதி). இந்த ப்ரமாணம் ஐச்வர்யார்த்தி விஷயமான அண்டக்குலத்திலும் எடுத்தருளினார், இங்குமெடுக்கையாலே உபாஸந

இருப்பது; அதுவும் ஆத்மயாதாத்ம்ய வாசகமிறே. அதுவே எங்கள் பக்கல் கைமுதலென்கிறார்கள். "எம்பெருமான்" என்கிற ப்ராப்தியாலும், "உன்றனக்கு" என்கிற சக்தியாலும், "எழுத்துப்பட்ட" என்கிற சப்தமாத்ரத்தாலும் பலிக்கக்கண்டோமென்கிறார்கள். "பட்ட" என்கிறது, "முத்துப்பட்ட" என்கிறாப்போலே. "வாழாட்பட்டு" என்கிறவிடத்திலே அர்த்தத்தினுடைய துர்லபத்வம் சொல்லிற்று; வாசகசப்தத்தினுடைய துர்லபத்வம் சொல்லுகிறது இங்கு. அஹங்கார க்ரஸ்தமான ஸம்ஸாரத்துக்குள்ளே தாஸ்ய ப்ரகாசம் அலப்யலாபமானாற்போலே, பஹுஜல்பம் பண்ணிப் போருகிறவாயிலே நமஸ்ஸப்தமுண்டாகை அலப்யலாபமிறே. (அந்நாள்) "எம்பெருமான் உன்றனக்கடியோமென்று எழுத்துப்பட்ட நாள், எந்நாள்-அந்நாள்" என்றந்வயம், "அந்நாளே" என்கிற அவதாரணத்தாலே, அதொழிய எங்கள் பக்கல் ஆநுகூல்யலேசமுமில்லை என்று கருத்து.

அத்தால் பெற்றதென்? என்ன; தாங்கள் பெற்ற ப்ரயோஜந பரம்பரைகளைச் சொல்லுகிறார்கள். (அடியோங்களித்யாதி)

---

மாத்ரத்துக்கெல்லாம் இது வேணுமென்று திருவுள்ளம். இரண்டாம் அர்த்தத்தை அருளிச்செய்கிறார் (அதவா இத்யாதி). (நம:ப்ரயோகம்) என்றது, நமஸ்ஸப்த ப்ரயோகமென்றபடி. ஆனால் இது "அடியோம்" என்றதாமோ? என்ன (அதுவுமித்யாதி). யாதாத்ம்யவாசகமாகையாலே தத்வாசகத்வம் ஸித்தமென்று கருத்து. இந்த அர்த்தத்திலும் ப்ராக்ருதஶங்கைக்கு உத்தரங்காட்டுகிறார், (அதுவே எங்களித்யாதி). கீழ்ச்சொன்ன அர்த்தத்தை நிகமிக்கிறார் (எம்பெருமானித்யாதி). "கூழாட்பட்டு" என்ற இடத்திற்போலே ஆகாமைக்காக அருளிச்செய்கிறார் (பட்டவென்கிறதித்யாதி). வேணுமாகில், இதில் அர்த்தாநுஷ்டாநம் துர்லபமாகையாலே இப்படி சொல்லலாம், ஸுலபமாக ஶப்தத்தை ப்ரயோகிக்கை அருமையாமோ? என்ன, அருளிச்செய்கிறார் (வாழாளித்யாதி வாக்யத்வயத்தாலே). அர்த்தம் என்றது, தாஸ்யம். கீழ்ச்சொன்ன சப்ததௌர்லப்யத்தை ஸத்ருஷ்டாந்தமாக உபபாதிக்கிறார், (அஹங்காரேத்யாதி). "எந்நாள்" என்றதுக்கு விஶேஷ்யாகாங்க்ஷையில் "நாள்" என்கிற பதத்தை அத்யாஹரித்து, அந்வயம் காட்டுகிறார் (எம்பெருமானித்யாதி). (அதுவொழிய) எம்பெருமானுக்கென்றெழுத்துப்பட்ட நாளொழிய.

அடியோங்களாகப் பெற்றோம்; உஜ்ஜீவிக்கப்பெற்றோம். குடியும் அடிக்குடிலாகப்பெற்றது; வீட்டை லபிக்கப்பெற்றோம்; உஜ்ஜீவிக்கப் பெற்றோம். (அடியோங்கள்) என்கிறார்கள்,— அஹங்காரக்ரஸ்தராய் ததநுகூலமான க்ஷுத்ர புருஷார்த்தத்தை அபேக்ஷித்து உன் திருவடிகளிலே வந்து ஒதுங்கின நாங்கள், அதுபோய் தாஸ்யைகரஸராகப் பெற்றோம். (அடிக்குடில்) "குடில்" என்று க்ருஹம். அத்தாலே, க்ருஹஸ்த்தரான புத்ரபௌத்ராதிகளும் அடியாராகப் பெற்றோம். * "நல்லபதத்தால் மனைவாழ்வர்" என்னக்கடவதிறே. எழுதப்பட்டது தங்களளவிலேயாகில் புத்ரபௌத்ராதிகளளவில் ஸ்வரூப ஜ்ஞாநம் பிறந்தபடியென்? என்னில்; முத்துப்பட்ட துறையைக் காவலிடுமவன் அசல்துறையையும் காவலிடுமாபோலே, ஸம்பந்தி ஸம்பந்திகளையும் அஹங்கார மமகாரங்கள் புகுராதபடி விஷயீகரித்தானென்கை. இவர்கள் ஸங்கதராகிற பாட்டிலும், "குடிகுடி

மேலுக்கவதாரிகை (அத்தாலித்யாதி). அத்தாலென்றது, அந்நாளென்றபடி. பரம்பரை தன்னைக் காட்டுகிறார் (அடியோங்களாக இத்யாதி). (குடியும்) குடீரமும். (அடிக்குடிலாக) என்றது, அடிமையுடைத்தான குடிலென்றபடி. (அடியோங்கள்) என்றது, நாங்களென்றபடி. இந்நாலு ப்ரயோஜநங்களையும் அவர்களுடைய ஹார்த்தாபிப்ராயாநுகுணமாக விவரிக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றி, "அடியோங்களாகப் பெற்றோம்" என்றதுக்கு பூர்வதசா கதநபூர்வக விவரணம், (அஹங்காரேத்யாதி). (க்ருஹஸ்த்தரான) க்ருஹத்திலிருக்கிற. "குடில்" என்றத்தாலே தத்ரத்யரை லக்ஷணயா சொல்லுகிறதென்று திருவுள்ளம். இதுக்கு ப்ரமாணம் (நல்ல இத்யாதி). (நல்லபதம்) அநுகூலதாம்பத்யம். இந்த ப்ரமாணத்தில் "கொண்டபெண்டிர் மக்கள்" என்ற பர்யந்தம் திருவுள்ளம். எழுத்துப்பட்டவர்களுடைய ஸம்பந்தமே ஹேதுவாக ப்ரதிபந்தகத்தைப் போக்கி, ஜ்ஞாநத்தை உண்டாக்கினானென்று பரிஹரிக்கிறார் (முத்துப்பட்ட இத்யாதி). "அடிக்குடில்" என்றதுக்குச் சொன்ன அர்த்தத்திலே ஸம்வாதங்காட்டுகிறார் (இவர்கள் ஸங்கதரித்யாதி). மனையென்னாதே குடில் சப்தத்தாலே சொல்லுவானென்? என்ன, (லோகஷி இத்யாதி). (குடில்வாக்க) என்றது, லோகவ்யவஹாரத்தை

* திருவாய். (8-10-11).

யாட்செய்கின்றோம்" என்றார்களிறே. சேஷிஸந்நிதியிலே சேஷபூதர் க்ருஹத்தை "குடில்வளைக்க" என்று சொல்லக்கடவதிறே. (வீடுபெற்று) வீட்டை லபித்து. அதாகிறது:— அஹங்கார மமகார கார்யமான ஐஶ்வர்ய கைவல்யங்களாகிற த்யாஜ்யங்களை விடப்பெற்று. ப்ராப்யஸித்தியோபாதி த்யாகஸித்தியும் ப்ராப்யாந்தர்க்கதமிறே. (உய்ந்ததுகாண்) தாஸ்யம் என்றும் உஜ்ஜீவநம் என்றும் பர்யாயம் போலே காணும். "உய்ந்ததுகாண்" என்று அறியாதாரை அறிவிப்பாரைப்போலே சொல்லுகிற இதுக்குக் கருத்தென்? என்னில்; உபகரித்து விஸ்மரித்துப்போவது நீ; நீ பண்ணின உபகாரம் நாங்களுபதேசிக்கக் கேளாயென்கிறார்கள்.

(செந்நாளித்யாதி) ப்ரயோஜநாந்தரங்களைக் கைவிட்டு அநந்ய ப்ரயோஜநராணிகோளாகில் இனி க்ருத்யமென்? என்னில்; உனக்கு

---

காட்டினபடி. வீடு:— பரமபதமென்றால் மங்களாசாஸந வேளையிலே சொல்லக்கூடாமையாலே, "வீடு" என்றத்தை விடுகையாக விவரிக்கிறார், (அதாகிறதித்யாதி). இப்பாட்டு கேவலருடைய பாசுரமாயிருக்க, ஐஶ்வர்யகைவல்யங்களென்று கூட்டியருளிச்செய்தது, அத்தை விட்டுப் பின்பும் ப்ரக்ருதிஸம்பந்தத்தாலே இதுக்கு வர ப்ரஸக்தி உண்டென்னுங்கருத்தாலே. அபிமதஸித்தியொழிய த்யாக ஸித்தி பேறோ? என்ன, (ப்ராப்யேத்யாதி). உஜ்ஜீவநமாவதேது? என்ன, (தாஸ்யமென்றும் இத்யாதி). (பர்யாயம்) என்றது, விஶேஷ்யபர்யவஸாநவ்ருத்யா. ஸர்வஜ்ஞனுக்கு, "காண்" என்று, காட்டவேணுமோ? என்கிற ஶங்கையை அநுவதித்து, பரமோதாரனைகயாலே வேணுமென்று பரிஹரிக்கிறார், (உய்ந்ததித்யாதி).

உத்தரார்த்தத்துக்கெல்லாம் பாவம் (ப்ரயோஜநாந்தரேத்யாதி). "பாய்ந்தவனே" என்னுமளவுக்கும் அவதாரிகை (விஷயமேதென்ன) என்றது. நாளுக்குச் செவ்வையேது? என்ன, (அவதாரத்துக் இத்யாதி). "தோற்றி" என்றதுக்கு வாஸனை (அதீந்த்ரியேத்யாதி). "படுவுரை" என்றத்தைக் கடாக்ஷித்து (உகவாதார் கண்ணுக்கும்) என்றது. வ்யாவர்த்யகதந பூர்வகமாகத் தாத்பர்யம் (அதுதானு மித்யாதி). சிலை—வில், குனிக்கை—வளைக்கை; அத்தாலே முறிக்கையைச் சொல்லுகிறதாய், கீழ்பதத்தையும் சேர்த்துத் தாத்பர்யம் (அவ்வூரிலித்யாதி). (முறித்தும்) புநரபீத்யர்த்த:. (பூசல்விளைத்தாய்)

மங்களாசாஸநம் பண்ணுகையே க்ருத்யமென்கிறார்கள்; விஷயமேது? என்ன, (செம்நாள்) அவதாரத்துக்கு ஏகாந்தமான நாளாகையாலே, அழகிய நாளென்கிறார்கள். (தோற்றி) அதீந்த்ரியமான விக்ரஹத்தை
83. "सकलमनुजनयनविषयताङ्गतः" (ஸகலமநுஜநயநவிஷயதாங்கத:) என்கிறபடியே உகவாதார் கண்ணுக்கும் விஷயமாம்படி தோற்றுவித்து. (திருமதுரையுள்) அதுதானும் நிர்ப்பயமான அயோத்யையிலன்றிக்கே, சத்ருவான கம்ஸன் வர்த்திக்கிற ஊரிலே. (சிலைகுனித்து) அவ்வூரில் தங்கவொண்ணாமையாலே திருவாய்ப்பாடியிலே போய் மறைய வளருகிற நீ, மறித்தும் அவ்வூரிலே புகுந்து கம்ஸனுடைய ஆயுதசாலையிலே புக்கு வில்லை முறித்துப் பூசலை விளைத்தாய். அநுகூலரடைய "என்வருகிறதோ!" என்று வயிறுபிடிக்கவேண்டும்படியான தசையிலே கம்ஸனுக்கும் மறம்பிறக்கும்படி சிலுகு படுத்துவதே!.

(ஐந்தலையவித்யாதி) அதுகிடக்க, நிர்ப்பயமாய் வர்த்திக்கிற காலத்திலே பிறந்த ப்ரமாதமே போராதோ வயிறெரிகைக்கு? என்கிறார்கள். (ஐந்தலைய பைந்நாகத்தலைப்பாய்ந்தவனே!) கடிக்கைக்கு அஞ்சு வாயையுடைத்தாய், க்ரோதத்தாலே விஸ்த்ருதமான பணத்தை

---

என்றது, அர்த்தஸித்தம். (இவ்வபதாநத்தைச் சொன்னவர்களுடைய உட்கருத்தை அருளிச்செய்கிறார் (அநுகூலரித்யாதி). (வயிறு பிடிக்க வேண்டும்படியான தசை) என்றது, ஒளித்து வளருகையாலே. (மறம்) கோபம். (சிலுகு படுத்துகை) சண்டையுண்டாக்குகை.

திருமதுரை கம்ஸனதாகையாலே, அங்கே அவதரித்ததும் பூசலை விளைத்ததுந்தான் பயஹேதுவாயிற்று, பரிவாருள்ள திருவாய்ப்பாடியிலேதான் நிர்ப்பயமாக வளரப்பெற்றதோ? என்று, "ஐந்தலைய" இத்யாதிக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (அது கிடக்க இத்யாதி) இவ்வபதாநங்களை முன்பின்னாக அருளிச்செய்கையாலே, இவ்வர்த்தம் பஸிதமென்று திருவுள்ளம். (நிர்ப்பயமாய் வர்த்திக்கிற காலம்) என்றது, ஸ்ரீப்ருந்தாவநத்திலே திரிகிற காலமென்றபடி. கம்ஸனில்லாத ஸ்த்தலமாகையாலே நிர்ப்பயமென்றது. காளியனை இங்கே வர்ணிக்கைக்குத் தாத்பர்யம் (கடிக்கைக்கித்யாதி). "பை" என்றது விஸ்தாரமும், படமுமாகையாலே, இரண்டையும் தந்த்ரேண அருளிச்செய்கிறார் (விஸ்த்ருதமான பணத்தை) என்று

உடைத்தான ஸர்ப்பாஸ்யத்திலேயன்றே புக்கது. 84. "एकदा तु विनारामं कृष्णो वृन्दावनं ययौ" (ஏகதா து விநாராமம் க்ருஷ்ணோ ப்ருந்தாவநம் யயௌ) என்று, தமயன் ஒருநாள் பேரநிற்க பாம்பின் வாயிலே புகும்படியிறே தீம்பு. "க்ருஷ்ணவதாரமென்றால், ஆழ்வார்களெல்லாரும் ஒக்கப்பரிவராயிருப்பர்கள், இதுக்கடியென்?" என்று ஜீயர் பட்டரைக் கேட்க; "ராமாவதாரத்தில் பிள்ளைகள் தாங்கள் மிடுக்கராய், குணநிகருமாய், பிதா சப்பராந்தகனுமாய், மந்த்ரிகள் வஸிஷ்டாதிகளுமாய், ஊர் அயோத்யையுமாய், காலம் நல்லகாலமுமாயிருக்கையாலே அங்குத்தைக்கு ஒரு பயமுமில்லை; இங்கு, வந்து பிறந்த இடம் சத்ருக்ருஹமாய், கம்ஸன் இடம் பார்த்து நலியும் துஷ்ப்ரக்ருதிகளை வரக்காட்டும் க்ரூரனுமாய், தமப்பன் இடையனுமாய், ஊர் இடைச்சேரியுமாய், பிள்ளைகள் தாங்கள் தீம்பருமாய், காலம் கலிகாலத்தோடு தோள்தீண்டியாயிருக்கையாலே என் வருகிறதோ! என்று பரிகைக்கு ஆழ்வார்களல்லதில்லைகாணும்!" என்றருளிச்செய்தார். (உன்னைப் பல்லாண்டு கூறுதுமே) இப்படிப்பட்ட உன்னை அநுஸந்தித்தால் மங்களாசாஸநமொழியத் தரிக்கவிரகுண்டோ? என்கிறார்கள். 10.

"பாய்ந்தவனே" என்று ஸம்போதிக்கிறவர்களுடைய உட்கருத்து, (ஏகதேத்யாதி). (தீம்பு) தௌஷ்ட்யம். முதற்பாட்டில், "மல்லாண்டதிண்டோள்" என்றும், ஏழாம்பாட்டில் "வாணனை ஆயிரந்தோளும்" என்றும், இப்பாட்டிலும் க்ருஷ்ணவதார ப்ரஸங்கம் வருகையாலே, மிகவுமிவ்விஷயத்தைப் பரிகைக்கு ஹேதுவைப் பலபடியாக ஆப்தஸம்வாதமுகேந தர்சிப்பிக்கிறார் (க்ருஷ்ணவதாரமென்றாலித்யாதி). (ஆழ்வார்களெல்லோரும்) என்றது, * "பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" என்ற ஆழ்வாரும், ‡ "கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்" என்று பாண்பெருமாளும், மற்றை திவ்யப்ரபந்தங்களில் ஆழ்வார்களும் எங்கும் கண்ணனையே விரும்புகையாலே, பட்டர்தாம் ராமாவதாரத்தில் மிகவும் பக்ஷபதித்திருக்குமவராகையாலே, "ஆழ்வார்கள் ராமபக்ஷபாதிகளென்றதில்லை" என்று ஜீயருக்குக் கருத்தாகக் கருதி, அவ்வவதாரத்துக்கும் இவ்வவதாரத்துக்குமுள்ள விசேஷங்களையும் அருளிச்செய்கிறார் (ராமாவதாரத்திலேயித்யாதி).

* திருவாய். (5-10-1). ‡ அமலனாதிபிரான். (10).

11. அல்வழக்கொன்றுமில்லாவணிகோட்டியர்கோனபிமானதுங்கன்
செல்வனைப்போலத்திருமாலேநானுமுனக்குப்பழவடியேன்
நல்வகையால்நமோநாராயணாவென்றுநாமம்பலபரவிப்
பல்வகையாலும்பவித்திரனேஉன்னைப்பல்லாண்டுகூறுவனே.

பதவுரை:— திருமாலே—லக்ஷ்மீநாதனே!, அல்வழக்கு—தவறான வழக்குகளில், ஒன்றும் இல்லா—சிறிதும் இல்லாதவராய், அணி—(ஸம்ஸாரத்துக்கு) ஆபரணமான, கோட்டியர்—திருக்கோட்டியூரிலுள்ளவர்களுக்கு, கோன்—தலைவராய், அபிமான துங்கன்—"நான் எம்பெருமானுக்கு அடியேன்" என்னும் அபிமானத்தில் உயர்ந்தவராயுள்ள, செல்வனைப்போல—செல்வநம்பியைப்போல, நானும்—அடியேனும், உனக்கு—ஸ்வாமியான உனக்கு, பழ அடியேன்—பழமையான அடிமையாயிருக்கிறேன்; பல்வகையாலும் பவித்திரனே—(ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி முதலிய) எல்லாவற்றாலும் பாபத்தைப் போக்குபவனே!, நல் வகையால்—அழகிய வகையில், நமோ நாராயணா என்று—திருமந்திரத்தை அநுஸந்தித்து, பல நாமம்—உன்னுடைய பல திருநாமங்களையும், பரவி—க்ரமமில்லாமல் சொல்லி, உன்னைப் பல்லாண்டு கூறுவன்—உனக்கு மங்களாசாஸனம் செய்வேன்.

அவ:— பதினோராம்பாட்டு. (அல்வழக்கித்யாதி) அண்டக்குலத்திலே ஆஹ்ருதராய், "நெய்யிடை" என்கிற பாட்டிலே ஸங்கதரான ஐஸ்வர்யார்த்திகள் பாசுரத்தாலே திருப்பல்லாண்டு பாடுகிறார்.

---

(ராமாவதாரத்தில்) என்றது, ராமாவதாரம் பண்ணினபோதென்றபடி. (பிள்ளைகள்) என்றது, மேல் பிதாவென்று சக்ரவர்த்தியைச் சொல்லுகையாலே. (மந்த்ரிகள்) என்றது, வஸிஷ்டாதிகளும் கார்யவிசாரதக்ஷராகையாலே. (அயோத்யை) என்றதுக்கு யோகார்த்தத்திலே திருவுள்ளம். (அங்குத்தைக்கு) அவ்விஷயத்துக்கு. (இங்கு) க்ருஷ்ணாவதாரத்திலே என்றபடி. "உன்னை" என்றதுக்கும், "கூறுதுமே" என்கிற ஸ்வரத்துக்கும் வாஸனை (இப்படிப்பட்ட இத்யாதி). (இப்படிப்பட்ட) என்றது, இப்படி தீம்பனை என்றபடி.



பதினோராம்பாட்டு. (அல்வழக்கித்யாதி). "பழவடியேன்" என்கையாலே, இப்பாட்டு அநந்யப்ரயோஜநர் பாசுரமாயிருக்

வ்யா:— (அல்வழக்கொன்றுமில்லா) வழக்கல்லாதவை அநேக மிறே; தேஹத்தில் ஆத்மபுத்தி பண்ணுகை வழக்கல்ல; ப்ரக்ருதே:பர மான ஆத்மவஸ்துவை ஸ்வதந்த்ரமென்று அநுஸந்திக்கை வழக்கல்ல; தேவதாந்தரங்களில் பரத்வபுத்தி பண்ணுகை வழக்கல்ல; பகவத் பஜநத்துக்கு பலம் ப்ரயோஜநாந்தரமென்றிருக்கை வழக்கல்ல; அநந்யப்ரயோஜநனானாலும் உபாயாந்தர ஸாத்யமென்றிருக்கை வழக்கல்ல; பகவதநுபவத்தை "மமேதம்" என்றிருக்கை வழக்கல்ல; இனி, வழக்காவது, சேஷிக்கு மங்களாசாஸநம் பண்ணுகை என்றிறே இவரிருப்பது. (அணிகோட்டியர்கோன்) இவை ஒன்றுமின்றிருக்கே, "அத்தலைக்கு மங்களாசாஸநம் பண்ணுமதொன்றுமே வழக்கு" என்றாய்த்து அவ்வூரிலுள்ளாரிருப்பது. இதுக்கடி இவர் என்று தங்களுக்கு நிர்வாஹகராகவாய்த்து நினைத்திருப்பது. "அணி" என்று, ஆபரணமாய், ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான ஊரென்கை.

(அபிமானதுங்கன்) அபிமாநம் சேஷத்வ விரோதியாயிருக்க,

---

இன்று திருந்தின ஐஶ்வர்யார்த்தி பாசுரமாம்படி எங்ஙனே? என்கிற ஶங்கையைப் பரிஹரிக்கைக்காக ஸங்கதிமுகேந அவதாரிகை (அண்டக்குலத்திலே இத்யாதி). ஆழ்வாரக்ரமத்தால் பல்லாண்டு பாடுகை மற்றவரிடத்திலும் காண்கையாலே இப்பாட்டு ஐஶ்வர் யார்த்தி பாசுரமென்னத் தட்டில்லை. "பழவடியேன்" என்கிறதும் இதுக்கநுகூலமாகச் சொல்லவேணுமென்று கருத்து.

"ஒன்றுமில்லா" என்கைக்கு, அநேகமுண்டோ? என்ன, (வழக்கல்லாதவை இத்யாதி). இத்தை உபபாதிக்கிறார் (தேஹத்தில் என்று தொடங்கி ஆறு வாக்யத்தாலே) வழக்காவது-ந்யாயம். இவை யெல்லாம் அல்லாத வழக்கானால், வழக்கொன்றுண்டாக வேணுமே இவருக்கு? என்ன, "கோன்" என்ற பதத்துக்கு விஶேஷணமாக்கி அருளிச்செய்கிறார் (இனி இத்யாதி). (இவர்) என்றது; செல்வ நம்பியை. கோட்டியர்-திருக்கோட்டியூரில் ஸ்ரீவைஷ்ணவர்கள். கோன் பததாத்பர்யம் (இவை இத்யாதி). (இவர்) செல்வநம்பி. இன்னதுக்கணியென்று சொல்லவேணுமே; அத்தை அருளிச்செய் கிறார் (அணி இத்யாதி).

"துங்கன்" ஶ்ரேஷ்ட்டன். அபிமாநஶப்தம் ஸாமாந்யஶப்த மாகையாலே, விஶேஷபர்யவஸாநம் பண்ணுவதாக நினைத்து,

அத்தால் மிக்கிருப்பரென்பானென்? என்னில்; கர்மத்தால் வந்த தர்மாநமாய்த்து த்யாஜ்யம்; "தாஸோஹம்" என்கிற வைஷ்ணவாபிமாநம் உபாதேயமாகையாலே அத்தால் பூர்ணராயிருப்பரென்கிறது. அதாகிறது:— உகந்தருளின நிலங்களிலுண்டான குறைவு நிறைவுகளும், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய தேஹயாத்ரையில் குறைவு நிறைவுகளும் தம்மதாயிருக்கை. "செல்வன்" என்று ஸ்வரூபப்ராப்தமான ஐஶ்வர்யத்தால் குறைவற்றவரென்கை. அதாகிறது:— ஜ்ஞாந பக்தி வைராக்யங்களால் குறைவற்றிருப்பரென்கையும், 85. "**लक्ष्मणो लक्ष्मिसंपन्नः**" (லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:) என்கிறபடியே 86. "**अहं सर्वं करिष्यामि**" (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்றிருக்கையும். (போல) 87. "**उपमानमशेषाणां साधूनां**" (உபமாநமஶேஷாணாம் ஸாதூநாம்) என்கிறபடியே ஸாத்விகர்க்கு உபமாநபூமியாயிருக்குமவர். இவரை த்ருஷ்டாந்தமாக்கிக்கொண்டு, "பழவடியேன்" என்று, முன்பு ஐஶ்வர்யார்த்தியாய் இன்று ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தவன்

---

தத்விஷயஶங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் (அபிமாந மித்யாதி வாக்யத்ரயத்தாலே). வைஷ்ணவாபிமாநந்தான் ‡ வைஷ்ணவாபிமானமென்றும், வைஷ்ணவ விஷயாபிமாநமென்றும் த்விவிதமாக்கிப் பரிஹரிக்கிறார் (அதாகிறதித்யாதி). "செல்வன்" என்று, தநவான். இத்தையும் விசேஷபர்யவஸாநம் பண்ணுகிறார் (செல்வனென்றித்யாதி). இத்தையும் த்விவிதமாக விவரிக்கிறார் (அதாகிறதித்யாதி). "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்றது செல்வநம்பி உக்தியாக்கி அருளிச்செய்கிறாரென்று கண்டுகொள்வது. இவர் த்ருஷ்டாந்தீகரிக்கைக்குத் தகுந்தபடி இருப்பரோ? என்ன; ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப்போலே ஸர்வோபமாந பூமியாயிருப்பரென்கிறார் (உபமாநமித்யாதி). இப்பாட்டுக்கு அவதாரிகையிலே "ஐஶ்வர்யார்த்திகள் பாசுரத்தாலே" என்னாநின்றீர்; இப்படிப்பட்ட செல்வநம்பியை த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகிறதும், மேலே "பழவடியேன்" என்கிறதும் சேராதே? என்கிற ஶங்கையை அநுவதித்து, ஸத்தாநிபந்தநமாகவும், பகவதபிப்ராயத்தாலே என்றும் பரிஹரிக்கிறார் (இவரை இத்யாதி வாக்யத்ரயத்தாலே).

---

‡ வைஷ்ணவ இத்யபிமாந:.

சொல்லுகை அநுபபந்நமன்றோ? என்னில்; கர்மத்தால் வந்த அஹங்காரம் போனால் தாஸ்யம் ஸர்வாத்மாக்களுக்கும் ஸத்தாப்ர யுக்தமாகையாலே சொல்லுகிறார்கள். அதவா, நைஸர்க்கிகமான ஜ்ஞாநமுடையார்க்கும் இன்று ஆஶ்ரயிக்குமவனுக்கும் வாசிவையாதே விஷயீகரிக்கும் ஈஶ்வராபிப்ராயத்தாலே சொல்லவுமாம்.

(திருமாலே) "இவ்வாத்மவஸ்து ஒரு மிதுநசேஷம்." என்று சேஷத்வப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிறார்கள். இத்தால், மாதா பித்ருசேஷத்வமும் தேவதாந்தர சேஷத்வமும் கர்மோபாதிக மென்கை. அதவா, தேவரீருக்குப் பிராட்டி நிரூபகபூதையாயிருக் கிறாப்போலே, எங்களுக்கும் தாஸ்யம் நிரூபகமென்கிறார்கள் என்றுமாம்.

(நானும்) ப்ரயோஜநாந்தரபரதையாலே அநாதிகாலம் அந்யார் ஹனாய்ப்போந்த நானும். சேஷிபக்கலிலே ப்ரயோஜநாந்தரத்தை அபேக்ஷிக்கையாவது,— பதிவ்ரதை பர்த்தாவின் பக்கலிலே வ்யபிசாரத்தை அபேக்ஷித்தவோபாதியிறே. (உனக்குப் பழவடியேன்) உனக்கு சேஷித்வம் அநாதியானவோபாதி எனக்கும் சேஷத்வம் அநாதியென்கை. (உனக்கு) ப்ரயோஜநாந்தரத்தை அபேக்ஷித்துத்

---

(கர்மத்தால்) இத்யாதிக்குக் கருத்து:— ப்ரதிபந்தகமான அஹங்கா ரம் போனால் அநாதிஸித்தமான அடிமை ப்ரகாஶிக்கையாலே சொல்லுகிறார்களென்று. (நைஸர்க்கிகமான) ஸ்வாபாவிகமான.

"பழவடியேன்" என்றத்தைக் கடாக்ஷித்து, "திருமாலே" என்றதுக்கு பாவம் (இவ்வாத்மவஸ்து இத்யாதி). பலிதம் (இத்தா லித்யாதி). இப்பதப்ரயோகம் த்ருஷ்டாந்தார்த்தமுமாம் என்கிறார் (அதவா இத்யாதி).

"நானும்" என்றதுக்கு ஹார்த்தபாவம் (ப்ரயோஜநேத்யாதி). (அந்யார்ஹனாய்) என்றது, நான் எனக்குறப்பாய் என்றபடி. ஈஶ்வரன் பக்கலிலேயன்றோ ப்ரயோஜநத்தை அபேக்ஷித்தது? இது அந்யார்ஹனாகையாமோ? என்ன, (ஶேஷிபக்கலிலே இத்யாதி). "உனக்குப் பழவடியேன்" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம், ஸ்வரூபப்ரயுக்த தாஸ்யமாதல், குணக்ருத தாஸ்யமாதல் உடையவ னென்று. முந்தினது (உனக்கித்யாதி). இரண்டாவது (ப்ரயோஜ

திருவடிகளிலே கிட்டினதுவே ஹேதுவாக அநந்யப்ரயோஜநனுக்க வல்ல உனக்கு.

இந்த ஸ்வரூபஜ்ஞாநம் எவ்வழியாலே பிறந்தது? என்னில்' ஸகல வேதாந்ததாத்பர்யமான மந்த்ர ரஹஸ்யத்தாலே பிறந்த தென்கிறார் மேல். (நல்வகையால் நமோ நாராயணாவென்று) நாராயணனுக்கே உரியேன், எனக்குரியேனல்லேன் என்கை. (நல்வகையால்) முன்பு அர்த்தவிதுரமாக ஜபஹோமாதி முகத்தாலே பிறந்த அந்வயமடையத் தீவகை என்றிருக்கிறார்கள்; இதுதான் ஸர்வார்த்த ஸாதகமிறே; 88. "नमो नारायणायेति मन्त्रस्सर्वार्थसाधकः" (நமோ நாராயணாயேதி மந்த்ரஸ் ஸர்வார்த்தஸாதக:) என்னக்கடவதிறே. (நாமம் பலபரவி) இவர் இவர்களை அழைக்கிறபோது, * "அடிதொழு தாயிரநாமம் சொல்லி" என்றாரிறே; அத்தையிறே இவர்களும் சொல்லுகிறது. (பரவி) அக்ரமமாகச் சொல்லி. ஸாதநமான போதிறே க்ரமாபேக்ஷையுள்ளது. முன்பு "மமேதம்" என்றிருந்தவர்களுக்கு மங்களாசாஸந யோக்யராம்படி புகுர நிற்கைக்கு இசைவே வேண்டுவது.

---

நாந்தரேத்யாதி).

மேலுக்கவதாரிகை (இந்த ஸ்வரூபேத்யாதி). "நாராயணா" என்றதுக்கர்த்தம் (நாராயணனுக்கே) என்றது. நமஶ்ஶப்தார்த்தம் (எனக்குரியேனல்லேன்) என்றது. "நல்வகை" என்றதுக்குத் தாத்பர்யம் (முன்பு இத்யாதி). (அர்த்தவிதுரமாக) அர்த்தஜ்ஞாந ரஹிதமாக. (அந்வயம்) ஸம்பந்தம். (தீவகை)—துஷ்ப்ரகாரம். மந்த்ரம் மோக்ஷஸாதநமன்றோ? ப்ரயோஜநாந்தரத்துக்கும் ஸாதநமோ? என்ன (இதுதான் இத்யாதி). இதுக்கு ப்ரமாணம் (நம இத்யாதி). இதில் ஐஶ்வர்யார்த்திகள் என்கிறதை ஶோதலிக்கிறார் (இவரிவர்களை இத்யாதி வாக்யத்வயத்தாலே). வ்யாவர்த்யம் (ஸாதநம் இத்யாதி). க்ரமாபேக்ஷை வேண்டாமையாலே பலிதத்தை அருளிச்செய்கிறார் (முன்பு இத்யாதி). இசைவே வேண்டுவது வேறொரு நியதி வேண்டாவென்று கருத்து.

"நாமம்பலபரவி" என்றத்தையும் "நமோநாராயணா" என்றத்தையும், "உனக்குப்பழவடியேன்" என்றத்தையும் கடாக்ஷித்து,

---

* பல்லா. (5).

(பல்வகையாலும் பவித்திரனே) ப்ரயோஜநாந்தர பரனை அசுத்தியைப்போக்கி, அதுக்கடியான அஹங்கார மமகாரங்களாகிற அசுத்தியைப்போக்கி, சேஷத்வந் தன்னிலும், மாதாபித்ரு சேஷத்வமென்ன, தேவதாந்தர சேஷத்வமென்ன, இவ்வோ அசுத்தியைப் போக்கிப் புகுர நிறுத்தினவனே! ஸ்வரூபரூபகுண விபூதிகளைப் பார்த்தாலும் பாபஹரனென்னவுமாம். (உன்னைப்பல்லாண்டு கூறுவனே) ஸௌந்தர்யாதி குணயுக்தனான உன்னை மங்களாசாஸநம் பண்ணுகிறேன். ஏகவசநத்தாலே, கீழ்ச்சொன்ன புருஷார்த்திகள் மூவர் முகத்தாலும் தாமே திருப்பல்லாண்டு பாடுகிறாரென்னுமிடம் தோற்றுகிறது. ஐஶ்வர்யார்த்தி ஸங்கதனாகிறவளவிலும் ஏகவசநமாகையாலே இங்கும் அதுவேயாகிறதென்னவுமாம். 11.

12. பல்லாண்டென்றுபவித்திரனைப்பரமேட்டியைச்சார்ங்கமென்னும்
வில்லாண்டான்றன்னைவில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல்
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார்நமோநாராயணாயவென்று
பல்லாண்டும்பரமாத்மனைச்சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே.

---

“பல்வகையாலும் பவித்திரனே” என்றதுக்குத் தாத்பர்யம் (ப்ரயோஜநாந்தரபரனை இத்யாதி). பல்வகைக்கு அர்த்தாந்தரம் (ஸ்வரூபேத்யாதி). “பவித்திரனே” என்று ஸம்போதித்திருக்கச் செய்தேயும், “உன்னை” என்று விஶேஷித்ததுக்கு ப்ரபந்தப்ரவர்த்தக ஸௌந்தர்யாதி வைஶிஷ்ட்யம் தோன்ற அர்த்தமருளிச்செய்கிறார் (ஸௌந்தர்யேத்யாதி). ஐஶ்வர்யார்த்திகள் அநேகராகையாலே “கூறுவன்” என்கிற ஏகவசநம் சேரும்படி எங்ஙனே? என்ன, இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் (ஏகவசநத்தாலேயித்யாதி). ஆழ்வார் தம்மிடத்தில் ஐஶ்வர்யார்த்தித்வத்தை ஆரோபித்து, தாமே மங்களாஶாஸநம் பண்ணுகிறாராகையாலே, இவ்வேகவசநம் ஆழ்வாரையே சொல்லுகிறது; இத்தால் கீழ் இருவரும் மங்களாசாஸநம் பண்ணுகிற பாட்டுக்களில் அநந்யப்ரயோஜநத்வம் தமக்கிருக்கையாலே தத்பஹுத்வமாத்ரத்தையும், கைவல்யார்த்தித்வத்தையும் தத்பஹுத்வத்தையும், ஆரோபித்துக்கொண்டு, தாமே மங்களாசாஸநம் பண்ணுகிறாரென்று கொள்ளவேணும், இவ்வுத்தமபுருஷைகவசநபஹுவசநங்களாலே என்று ப்ரதமத்துக்குக் கருத்து. 11.

பதவுரை:— பவித்திரனை— (இயற்கையாகவே) பரிசுத்தனாய், பரமேட்டியை—மேலான ஸ்தானமான வைகுண்டத்தில் எழுந்தருளியிருப்பவனாய், சார்ங்கம் என்னும்—சார்ங்கமென்று திருநாமத்தை உடைய, வில்—வில்லை, ஆண்டான் தன்னை—ஆளும் எம்பெருமானைக் குறித்து, வில்லிபுத்தூர்—ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த, விட்டுசித்தன்—விஷ்ணுசித்தன் என்ற திருநாமத்தையுடைய பெரியாழ்வார், பல்லாண்டென்று—'நித்யமாய் மங்களமுண்டாகவேண்டும்' என்று, விரும்பிய—விருப்பத்துடன் அருளிச்செய்த, சொல்—ஸ்ரீஸூக்தியை, நல் ஆண்டு என்று—(பல்லாண்டு பாடத்தக்க) நல்ல காலம் (நேர்படுவதே!) என்று, நவின்று உரைப்பார்—இடைவிடாமல் சொல்லுமவர்கள், நமோ நாராயணாய என்று—திருமந்திரத்தை அனுஸந்தித்து, பரமாத்மனை—பரமாத்மாவான நாராயணனை, சூழ்ந்து இருந்து—சுற்றிலும் இருந்து, பல் ஆண்டும்—கணக்கற்ற காலங்கள், பல்லாண்டு ஏத்துவர்—பல்லாண்டு பாடுவார்கள்.

அவ:— நிகமம் (பல்லாண்டென்றித்யாதி) இப்ரபந்தத்தை அதிகரித்தார்க்கு பலம் சொல்லுகிறதாய், ப்ரேமபரவசராய்க்கொண்டு மங்களாசாஸநம் பண்ணுகிறார். அநந்யப்ரயோஜநர்க்கும் தம்மோபாதி

---

அரு:— பன்னிரண்டாம் பாட்டு. (பல்லாண்டென்றித்யாதி). இவ்வாழ்வார் தாம் மங்களாஶாஸநமொழியச் செல்லாதவராகையாலே, பலகதநமுகேந மங்களாசாஸநம் பண்ணுகிறாரென்று அவதாரிகை (இப்ரபந்தத்தை இத்யாதி). (சொல்லுகிறதாய்) என்றது, சொல்லுகிறாராய் என்றபடி. "சூழ்ந்திருந்தேத்துவர்" என்கையாலே "மங்களாசாஸநம் பண்ணுகிறார்" என்கிறார். அதாவது, "ஏத்துவர்" என்றது, ஏத்தக்கடவர்கள் என்றாய், பகவத்விஷயத்தில் மங்களாஶாஸநபரரை ப்ரார்த்திக்கையாலே, இப்பாட்டிலும் மங்களாசாஸநம் பண்ணுகிறாரென்றபடி. அநந்யப்ரயோஜநரையும், ப்ரயோஜநாந்தரபரரையும் அழைத்தவோபாதி ஸம்ஸாரிகளையும் அழைத்துத்திருத்தாதே தலைக்கட்டக்கூடுமோ? என்ன அருளிச்செய்கிறார் (அநந்யேத்யாதி). (அவ்வளவும்) அம்மாத்ரமும். அதாவது:— ப்ரயோஜநாந்தரத்துக்காகவாகிலும்

பகவத்ப்ரத்யாஸத்தி உண்டாகையாலே அவர்களை அழைத்தார்; ஐஶ்வர்ய கைவல்யங்களைப்பற்றி ஆஶ்ரயித்தவர்களும் பகவத்ப்ரபாவத்தாலே மங்களாசாஸநத்துக்காளாவரென்று அவர்களை அழைத்தார்; அவ்வளவுமில்லாத ஸம்ஸாரிகளும் தம்முடைய பாசுரத்திலே இழியவே யாவதாத்மபாவி மங்களாசாஸநார்ஹராவர்களென்று இப்ரபந்தத்தின் வைபவத்தை அருளிச்செய்கிறார்.

வ்யா:— (பவித்திரனை) ஒருபாதியாலன்றிக்கே ஸ்வதஶ்ஶுத்தனானவனை. 89. “शाश्वतं शिवं” (ஶாஶ்வதம் ஶிவம்) என்னக்கடவதிறே. இத்தால் அஶுசி பதார்த்த ஸம்யோகத்தாலே தத்கததோஷை: அஸம்ஸ்ப்ருஷ்டனானவனையும், ஸ்வஸம்பந்தத்தாலே அசுத்தன் சுத்தனாகையுமாகிற பரமபாவநத்வம் சொல்லுகிறது. அதாகிறது:— சேதநாசேதநங்களில் வ்யாபித்தாலும் தத்கததோஷம் ஸ்பர்சியாதொழிகையும், நிர்ஹேதுகமாக நித்யஸம்ஸாரியை நித்யஸூரிகளோடே ஒரு கோவையாக்குகையும். (பரமேட்டியை) பரமேஸ்த்தானே ஸ்த்திதனானவனை.

---

பகவத்ப்ரஸாத விஷயீக்ருதராகை. இவ்விடத்தில், “முதற்சொன்ன மூவரும் நிக்ரஹத்துக்கிலக்கு; மற்றை இருவரும் அநுக்ரஹத்துக்கிலக்கு” என்கிற ஸ்ரீவசநபூஷணவாக்யம் அநுஸந்தேயம். ஆக ஸம்ஸாரிகளும் இப்ரபந்தத்தில் இழிந்தார்களாகில் திருந்தக்கடவர்களென்று கருத்து.

“பவித்திரனை” என்று இத்தை நிரூபமாகச் சொல்லுகையாலே ஸ்வாபாவிக பவித்ரனென்று அருளிச்செய்கிறார் (ஒருபாதியால் இத்யாதி). இதுக்கு ப்ரமாணம் (ஶாஶ்வதமித்யாதி). * “யோவஶ்ஶிவதமோரஸ:” என்றும், † “யச்சௌச நிஸ்ஸ்ருத ஸரித்ப்ரவரோதகேந தீர்த்தேந மூர்த்ந்யதிகதேந ஶிவஶ்ஶிவோபூத்” என்றும் சொல்லுகையாலே, பாவநத்வம் ஶிவத்வமென்று திருவுள்ளம். “அக்ஷரம், அச்யுதம்” என்று விஶேஷ்ய நித்யத்வம் சொல்லுகையாலே, ஶாஶ்வதத்வம் ஶிவத்வரூபவிஶேஷணத்திலே என்று கருத்து. “ஸ்வதஶ்ஶுத்தன்” என்றத்தால் பலிதம் (இத்தால் இத்யாதி). விவரணம் (அதாகிறதித்யாதி). (கோவை) சேர்த்தி.

---

* யஜு:. † பாகவதம்.

(சார்ங்கமென்னுமித்யாதி) இது மஹிஷீ பூஷண ஆயுத பரிஜநங்களுக்கும் உபலக்ஷணம். அங்குள்ளாரையிட்டுத் தன்னை நிரூபிக்க வேண்டும்படியிறே அவர்களுக்குத் தன்னோடுண்டான ப்ரத்யாஸத்தி. (சார்ங்கமென்னும் வில்லாண்டான் றன்னை) சார்ங்கமென்னும் வில்லென்றேயாய்த்து அதுக்கு ப்ரஸித்தி; மத்தகஜத்தை ஆளுபவனென்னுமாபோலே, அத்தை ஆளுமவனென்றாய்த்து இவனுக்

மற்றொருவரையும் ஆளவில்லையா? "சார்ங்கமென்னும் வில்லாண்டான்" என்கிறதென்? என்ன, (இது மஹிஷீ இத்யாதி). ஆனால் இவர்களையிட்டு அறியும்படி அப்ரஸித்தனோ? என்ன; (அங்குள்ளாரை இத்யாதி). ஆனால் "சார்ங்கவில்லாண்டான்" என்றால் போராதோ, "என்னும்" என்பானென்? என்ன; (சார்ங்கமென்னும் இத்யாதி). வில்லுடையவன் என்னாதே "ஆண்டான்" என்பானென்? என்ன, (மத்தகஜத்தை இத்யாதி). இப்படிச்சொல்லுகைக்குப் பெருமையென்? என்ன; ப்ரமாணம் (ஆலிகந்தமித்யாதி). உபக்ரமோபஸம்ஹாரங்களொத்திருக்க வேண்டுகையாலே அருளிச்செய்கிறார் (இத்தால் இத்யாதி வாக்யதவயத்தாலே). (இத்தால்) என்றது, அஶுசிபதார்த்த ஸம்யோகத்தால் தத்கததோஷரஸம் ஸ்பருஷ்டனானையும், நிர்ஹேதுகமாக நித்யஸம்ஸாரியை நித்யஸூரியாக்குகையும் ஆகிற இத்தால் என்றபடி "மல்லாண்டதிண்டோள்" என்கிற இத்தை ஸர்வ விரோதி நிவ்ருத்திக்கும் உபலக்ஷணமாக்கி, இத்தாலே நித்யஸம்ஸாரியை நித்யஸூரியாக்குகிற பவித்ரதையைச் சொல்லுகிறதென்றும், "மணிவண்ணா" என்கிற இத்தை மணிபோன்ற ஸ்வபாவனென்றாக்கி, மணிக்கு அஶுசிபதார்த்த ஸ்பர்ஶத்தாலே தோஷம் வாராமையாலே, தாத்ருஶஸ்வபாவத்தாலே வந்த பவித்ரதையைச் சொல்லுகிறதென்றும் விவக்ஷித்து உபக்ரமோபஸம்ஹாரைகரூப்யம் சொல்லுகிறாரென்று கண்டு கொள்வது. * "மாவாய்பிளந்து" † "மல்லரைக்கொன்று" ‡ "மதுசூதன்" இத்யாதி பதப்ரயோகங்களுக்கெல்லாம் ஸ்வவிரோதி நிவ்ருத்திபரமாக வ்யாக்யானங்களில் உண்டாகையாலே, இங்கும் "மல்லாண்ட"

* திருவாய். (2-1-10). † பெரிய திருமொழி. (3-3-1). ‡ திருவாய். (2-7-6).

கேற்றம். 90. आलिखन्तमिवाकाशमवष्टभ्य महत्तनुः" (ஆலிகந்தமிவாகாஶமவஷ்டப்ய மஹத்தநு:) என்னக்கடவதிறே. இத்தால்,— "மல்லாண்டதிண்டோள் மணிவண்ணா" என்கிறவிடத்திலே பவித்ரதையை நினைத்து "பரமேட்டியை" இத்யாதியாலே இரண்டாம்பாட்டிற்சொன்ன நித்யவிபூதியோகத்தை நினைக்கிறது.

(வில்லிபுத்தூர் விட்டுசித்தன்—பல்லாண்டென்று—விரும்பிய சொல்) இப்போது, பகவத்ப்ராப்திகாமர், ப்ரயோஜநாந்தரபரர் என்று அடைவடைவே வந்து நின்றாரில்லையிறே; அவ்வவருடைய பாசுரங்களாலே தாமே அருளிச்செய்தாரென்னுமிடம் தோற்றுகிற

---

என்றதுக்கு இப்படி விவக்ஷிதமென்னக் குறையில்லை. "மணி" என்று கருடப் பச்சைக்கும் உபலக்ஷணமாய், அது ஸ்வதோ நிர்த்துஷ்டமுமாய்,ஸ்வஸம்பந்தத்தாலே அந்யத்ர ஸர்ப்பாதிவிஷஹரமுமாயிருக்கையாலே, உபய வித பவித்ரதையும் விவக்ஷிதையாக யோஜிக்கவுமாம். இவ்வர்த்தம் ப்ரதமகாதா வ்யாக்யாநத்தில் அருளிச்செய்யாதிருந்தாலும், இங்கு இப்படி அருளிச் செய்கையாலே அங்கு விவக்ஷிதமென்று கொள்ளவேணும்; இப்படிக் கொள்ளுகைக்கு ஸூசகம், ப்ரதமாவதாரிகையிலே "ஸௌந்தர்யாதி" என்று ஆதிஶப்தப்பிரயோகம் பண்ணியிருக்குமது. இதிலே இந்த பவித்ரதையும் அந்தர்பூதமென்று கண்டுகொள்வது. "இடத்திலே" என்ற அநந்தரம் சொன்ன என்று ஶேஷம். இரண்டாம் பாட்டின் அவதாரிகையிலே "உபயவிபூதியோகத்தைச் சொல்லுகிறது" என்றிருந்ததேயாகிலும், இங்கே நித்ய விபூதி யோகத்தைச் சொன்னது ஶதேபஞ்சாஶந்ந்யாயத்தாலேயென்று கொள்ளவேணும்.

அந்வயித்து ப்ரதீகம் (வில்லிபுத்தூர் இத்யாதி). முதலிரண்டு பாட்டாலே தாம் மங்களாஶாஸநம் பண்ணுகிறதாகவும், மேல் ஒன்பதுபாட்டாலும் தாம் சிலரை அழைக்கிறதாகவும், அவர்கள் ஸங்கதராகிறதாகவும் அவர்களோடே மங்களாஶாஸநம் பண்ணுகிறதாகவுமாய்ச் செல்லாநின்றதே, இங்கே இவர் சொல்லாக நிகமிக்கக் கூடுமோ? என்ன, (இப்போது இத்யாதி). (இப்போது) என்றது, ஆனைமேலே திருவீதி வலம் வருகிறபோது என்றபடி. (அடைவடைவே வந்து நின்றாரில்லையிறே) என்றது, உக்திப்ரத்யுக்தி முகத்தாலே வந்து

திறே, தம்முடைய வார்த்தையாகத் தாம் தலைக்கட்டுகையாலே. அவர்கள் பாசுரமாக அங்கு சொல்லிற்று,— ப்ரயோஜநாந்தரபரர்க்கும் பகவத்ப்ரபாவத்தாலே மங்களாஶாஸநம் பண்ணுகைக்கு யோக்யதையுண்டென்னுமிவ்வர்த்தத்தினுடைய ஸ்த்தைர்யத்துக்காகவும், மங்களாசாஸநத்தில் தமக்குண்டான ஆதராதிசயம் தோற்றுகைக்காகவும். (வில்லிபுத்தூர் விட்டுசித்தன்) அவ்வூரில் பிறப்பாலேயாய்த்து பகவத்ப்ரத்யாஸத்தி; பகவத்ப்ரத்யாஸத்தியாலேயாய்த்து மங்களாசாஸந யோக்யமான ப்ரேமாதிசயம். "விட்டுசித்தன்" என்கிற திருநாமமுண்டாய்த்து, ஆழ்வார்விடிலும் தான் விடமாட்டாதே தன்பேறாக இவர் திருவுள்ளத்தை விடமாட்டாமையாலே. * "விட்டுசித்தன் மனத்தே கோயில் கொண்ட கோவலன்" என்னக்கடவதிறே.

(நல்லாண்டென்று) இப்பாசுரம் சொல்லுகைக்கு ஏகாந்தமான காலமென்று காலத்தைக் கொண்டாடி 91. "अद्य मे सफलं जन्म" (அத்ய மே ஸபலம் ஜந்ம) என்னக்கடவதிறே. கண்டதடைய "மமேதம்" என்று போந்த அநாதிகாலம்போலன்றிக்கே பகவத் ஸம்ருத்திக்கு மங்களாசாஸநம் பண்ணக்கடவதாப்படி வந்ததொரு

இவர் முன்னே நின்றாரில்லை யென்றபடி. இதுக்கு நியாமகம் (அவ்வவர் இத்யாதி). ஆனால் கீழ் அப்படி அழைக்கிறதாகவும் வந்ததாகவும் சொன்னது எத்தாலே? என்ன; (அவர்கள் பாசுரம் இத்யாதி). (தோற்றுகைக்காகவும்) என்றது, நமக்கெல்லார்க்கும் தோற்றுகைக்காகவுமென்றபடி. "வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய" என்ற ஸமபிவ்யாஹார தாத்பர்யம் (அவ்வூரிலித்யாதி வாக்யத்வயமும்). "விஷ்ணு: சித்தே யஸ்ய ஸ:" என்று விக்ரஹமாக்கித் தாத்பர்யம் (விட்டுசித்தனித்யாதி). திருவுள்ளத்தை விடமாட்டாமையாலே) என்றது, திருவுள்ளத்திலிருக்கையாலே என்றபடி. இதுக்கு ப்ரமாணம் (விட்டுசித்தனித்யாதி).

(இப்பாசுரம் என்றது, இப்ரபந்தமென்றபடி, காலத்தைக் கொண்டாடினபேருண்டோ? என்ன (அத்யேத்யாதி). இப்படி கொண்டாடுகைக்கு உபபத்தியருளிச் செய்கிறார் (கண்டதித்யாதி).

* பெரியாழ்-திரு. (5-4-11).

காலம் சேதநனுக்கு ஸுதுர்லபமிறே. (நவின்றுரைப்பார்) நவிலுகை:— பயிலுகை; இடைவிடாதேயுரைக்கை.

(நமோநாராயணாயவென்று) அநாதிகாலம் "மமேதம்" என்றத்தைத் தவிருகையும், "தவேதம்" என்கையும். இத்தால், மங்களாசாஸந யோக்யதை சொல்லுகிறது. (பல்லாண்டும்) காலமெல்லாம். யாவதாத்மபாவியென்கிறது. காலக்ருதபரிணாமமில்லாத தேசத்தில் ஆண்டையிட்டுச் சொல்லுகிறது, அந்த பரிணாமமுள்ள தேசத்தில் வர்த்திக்கிறவராகையாலே. (பரமாத்மனை) தனக்கு மேலின்றிக்கே, தன்னையொழிந்தாரடங்க ஸ்வாதீநமாம்படி இருக்கிறவனை. இத்தால் அமங்களங்களுக்கு அவகாசமின்றிக்கே இருக்கையாலே, ஒருவனுடைய மங்களாசாஸநத்தால் ஓரேற்றமுண்டாக வேண்டாதேயிருக்குமவனை.

(சூழ்ந்திருந்தேத்துவர்) 92. "नमः पुरस्तादथपृष्ठतस्ते नमोस्तु ते" (நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே நமோஸ்து தே) என்கிறபடியே, முன்பே நில்லா முறுவலை அநுபவித்து அதிலே ஈடுபடும்; பின்பே நில்லா பின்னும் பிறகு வாளியுமான அழகை அநுபவித்து அதிலே ஈடுபடும்; இப்படிச் சுழியாறுபடாநிற்கச்செய்தே, கால்வாங்க

---

நமப்பதார்த்தம் (அநாதிகாலம் மமேதமென்றத்தைத் தவிருகையும்) என்றது. "நாராயணாய" என்றதுக்கர்த்தம் (தவேதமென்கையும்) என்றது. உபயத்தாலும் பலிதம் (இத்தாலித்யாதி). விவரணம் (யாவதித்யாதி). (பரமேட்டியை) என்ற பதத்தைக் கடாக்ஷித்து, "ஆண்டு" என்று சொல்லக்கூடுமோ? என்ற சங்கையைத் திருவுள்ளம் பற்றிப் பரிஹாரம் (காலக்ருதேத்யாதி). பரமசப்தார்த்தம் (தனக்கு மேலின்றிக்கே) என்றது. ஆத்மசப்ததாத்பர்யம் (தன்னையித்யாதி). இப்பதப்ரயோகதாத்பர்யம் (இத்தாலித்யாதி).

"சூழ்ந்திருந்து" என்றதுக்கு ப்ரமாண பூர்வகமாக ப்ரஸக்தியும் ஸம்பாதியா நின்றுகொண்டு, "ஏத்துவர்" என்றதுக்கு இத்தை ஹேதுவாக்கி அருளிச் செய்கிறார் (நம இத்யாதி). (முறுவல்) ஸ்மிதம். (ஈடுபடுகை) வித்தராகை. (நில்லா) நிற்கச் செய்தே. (பின்னும்) அஸ்த்ரவாளம் முதலான பின்னழகும். (பிறகு வாளியாவது) தண்டிகைக் கொம்புபோலே வளைந்து திருப்பிடரியிலே

வொண்ணாத வடிவழகு அதிஶங்கையை விளைத்து மங்களாசாஸநத்திலே மூட்டுமென்கை.

“பவித்திரனைப் பரமேட்டியைச் சார்ங்கமென்னும் வில்லாண்டான்தன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன், பல்லாண்டென்று விரும்பியசொல் நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோநாராயணாயவென்று, பரமாத்மனைச் சூழ்ந்திருந்து பல்லாண்டும், பல்லாண்டென்று ஏத்துவர்” என்றந்வயம். 12

—[திருப்பல்லாண்டு வ்யாக்யானம் முற்றிற்று.]—

பெரியாழ்வார் திருவடிகளே ஶரணம்.

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே ஶரணம்.

———

தொங்குகிற அஸாதாரணமான ஆபரணவிசேஷம். வாஹநபரிஷ்காரமாகவுமாம். (சுழியாறுபடுகை) ஆற்றில் சுழிபடுகையென்றாய், சுழலுகையைச் சொல்லுகிறது. (கால் வாங்குகை) பின்வாங்குகை. (விளைத்து) ஸம்பாதித்து.

இப்பாட்டுக்கு அந்வயம் தர்சிப்பிக்கிறார் (பவித்திரனையித்யாதி). (பல்லாண்டென்று ஏத்துவர்) என்றது, அத்யாஹ்ருதபதமாதல், அநுஷங்காத் ஆகதபதமாதல். 12.

திருப்பல்லாண்டு அரும்பதம் முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

———

# பிழை திருத்தம்.

(பக்கம் 5) (மின்னுர் தடமதிள் அவதாரிகை) இதில், ஸ்ரீவில்லி புத்தூர் பட்டர்பிரானுன பெரியாழ்வார் அவதரண ஸ்தலத்தை அநுஸந்திப்பார் திருவடிகளைத் தொழுகையிலுண்டான ப்ரீதியையும், அவர் செயலைச் சொல்லுகையாலுண்டான விரோதி நிவ்ருத்யாதிகளிலே த்ருப்தியையும் மனஸ்ஸோடே சொல்லி உலாவுகிறதாயிருக்கிறது.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 8 | 11 | என்றபோது, கிட்டி ஊத என்றபடி | என்றபோது, சங்கத்தை எடுத்து வாயாலே ஊதவென்றபடி; (அடுத்தூத) என்றபோது, கிட்டி ஊத என்றபடி. |
| 13 | 9 | தத் உபப்ரும்ஹணமான | தது பப்ரும்ஹணமான |
| 16 | 21 | ஹேதோர் இஹ | ஹேதோரிஹ |
| 19 | 13 | விஶ்மரித்து | விஸ்மரித்து |
| 20 | 17&18 | விக்ரஹமென்று........ இவ்வடியை | விக்ரஹமென்றும்........ இவ்வடிவை |
| 24 | 1 | அவச்சேதங்களை | அவச்சேதகங்களை |
| 24,27,59 | 7,13,12 | அஸக்யாத | அஸங்க்யாத |
| 28 | 25 | அஸக்யேய | அஸங்க்யேய |
| 31 | 5 | பயப்படுகை உக்தம். | பயப்படுகை யுக்தம். |
| 36 | 12 & 27 | கர்மௌபாதிக | கர்மோபாதிக |
| 37 | 15 | तत्देजो | तत्तेजो |
| 38 | 4 & 5 | ப்ராங்ய | ப்ராதாங்ய |
| 38 | 12 | யோக்யதை | போக்யதை |
| 43 | 5 | பகவச்சரணார்த்திகள் | கைவல்யபகவச் சரணார்த்திகள் |
| 47 | 19 | அநங்ய | அங்ய |
| 47 | 25 | அபஹரிக்க | அஹங்கரிக்க |
| 52 | 8 | அழைக்கிறதென் ? | அழைக்கிறது ? |
| 59 | 7 | அண்டாதிபத்யத்தாலே | அண்டாதிபத்யத்திலே |
| 61 | 20 | ஸ்வமோ ? | ஸ்வரஸம் அஸுரர் என்ருல் போராதோ? இராக்கதர் என்று சொல்ல வேணுமோ ? |

| | | | |
|---|---|---|---|
| 71 | 20 | ஒற்றுண்டு | ஒற்றுண்டு நின்று |
| 72 | 30 | ப்ராகாசத்வமென்று | ப்ரகாசகத்வமென்று |
| 75 | 26 | கிளப்பி | கிளம்பி |
| 78 | 18 | அழைக்கப்பட்டவர்களே இதில் | அழைக்கப்பட்டவர்களே ஸங்கதராஞர்களாகை யாலே, பாரிசேஷ்யாத் ஐஶ்வர்யார்த்திகளே இதில் |
| 89 | 14 | உடுத்து | உடுத்த |
| 89 | 31 | உடுக்கப்படுவது ? | உடுக்கவடுப்பது ? |
| 90 | 27 | அவனுக்கு | அவனுடுத்து |
| 100 | 8 | எழுதப்பட்டது | எழுத்துப்பட்டது |
| 100 | 15 | அந்நாளௌவறபடி | அந்நாளாலென்றபடி |

## திருப்பல்லாண்டுவ்யாக்யாந ப்ரமாண அநுக்ரமணிகை.


அ

அங்குல்யக்ரேண 29
அண்டாநாந்து 55
அத்யமே 81
அத்யர்க்கா 64
அநாதிர்பக 27
அப்ரமேயம்ஹி 33
அவஜாநந்தி 12
அஹமபிநமம 52
அஹம்ஸர்வம் 86

ஆ

ஆயுராஶாஸ்தே 32
ஆலிகந்த 89

உ

உதாரா: 54
உபமாந 87
உபஸம்ஹார 25

ஏ

ஏகாந்தாதிநா 84
ஏகஸ்ஸ்வாது 41

ஓ

ஓமித்யேகாக்ஷர 53

க (क)

கார்யேகர்மணி 80
க்வயௌவந 30
க்ரியதாம் 4

ग

கச்சதா 10
கரீயாந் 58
குரோருச்சிஷ்ட 78

ச (च)

சக்ராங்கிதா: 66
சக்ராதி 67
சதுர்விதா 40
சோரேண 75

ஜ (ज)

ஜராமரண 51
ஜாதோSஸி 24

த (त)

தத்ஸர்வம்தர்ம 16
தமீஶ்வர 2
தஸ்யபாஸா 65
தேதம்ஸோம 21
த்வதீயபுக்தோ 77

द

தஶபூர்வாந் 46
தாஸபூதா: 6
தாஸோSஹம் 5

ध

தந்யோSஹம் 13
தர்மஜ்ஞஸமய: 15

ந (न)

நநமேயம் 47
நம:புரஸ்தாத் 90
நமோநாராய 88
நஸமம்யுத்த 31
நாரஸிம்ஹ 68

ப (प)

பதிர்விஶ்வ 1
பதிஸம்மாநிதா 22

பங்காஶந 56
பரஞ்ஜ்யோதி 26
பரவாநஸ்மி 4
பரஸ்பரநீச 50
பஶ்யேம 62
பிதரம்மாதர 59
பிதுர்வசந 8
பிஶாசாந் 29
புருஷம்க்ருஷ்ணை 37
புநர்ஜாதம் 19
பூர்வாம்திஶம் 23
ப்ரதேஹி 71
ப்ரேக்ஷிதஜ்ஞ 72
ப்ரஸாதபரமௌ 13

भ

பத்ராநாம் 69

ம (म)

மத்யேவிரிஞ்ச 14

ய

யத்யதாசர 11
யந்மங்களம் 20
யஸ்யநாதேந 39
யஸ்யவேதஶ்ச 60
யஸ்யாஸ்மி 3
யாமோஷதிம் 28
யுவதிஶ்ச 35
யுவாகுமார: 36

ர

ராகவார்த்தே 49
ராஜ்யஞ்ச 9

ல

லக்ஷ்மணோலக்ஷ்மி 85

வ

விதுராந்நாநி 70
வ்யாஹரந் 53

ஶ

ஶாந்தி: 61
ஶமஶாந 48
ஶ்ரத்தயா 34

ஸ

ஸகலமநுஜ 83
ஸகோஷோ 38
ஸபுத்ரபௌத்ர 68
ஸப்தஸப்தச 45
ஸமஹாத்மா 44
ஸர்வகந்த: 73
ஸர்வம்பரவஶ 42
ஸஹிவித்யா 57
ஸுகந்தமேதத் 74
ஸுப்ரபாதா 81
ஸேவாஶ்வ வ்ருத்தி: 43
ஸ்த்ரியோவ்ருத் 17
ஸ்ரக்வஸ்த்ரா 7

ஹ

ஹார்த்தம் 7

ஜ்ஞ (क्ष)

க்ஷத்ரரோக்ஷா 18


ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருப்பல்லாண்டு

## வ்யாக்யாந ப்ரமாணத் திரட்டு

1. பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம் ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்

[உலகிற்குப் பதியாகவும், தனக்குத்தானே ஈஶ்வரனாகவும், நித்யனாகவும், மங்களகரனாகவும், அடியவர்களை நழுவவிடாதவனாகவு மிருப்பவன் நாராயணனே]

1. தை-நா-11.

2. தமீஸ்வராணும் பரமம் மஹேஸ்வரம், தம் தேவதாநாம் பரமஞ்ச தைவதம் ।

[ஈச்வரர்களுக்கும் மேலான மஹேச்வரனும், தேவதைகளுக்கும் மேலான தேவதையுமான அவனே.]

3. யஸ்யாऽஸ்மி ந தமந்தரேமி

[எவனுக்கு நான் தாஸனாயிருக்கிறேனோ, அவனை விட்டு வேறொருவனிடம் செல்லமாட்டேன்.]

4. பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்திதே ।
ஸ்வயம் து ருசிரே தேஶே க்ரியதாமிதி மாம் வத ॥

[ககுத்ஸ்த வம்சத்தில் பிறந்தவரே! நீர் இருக்கையில் எப்போதும் நான் (உமக்கு) அடிமையாயிருக்கிறேன். நீராகவே "அழகிய தேசத்தில் பர்ணசாலை கட்டப்படட்டும்" என்று என்னை ஆஜ்ஞையிடுவீராக.]

5. தாஸோऽஹம் வாஸுதேவஸ்ய தேவதேவஸ்ய ஶார்ங்கிண: ।
ஶங்கசக்ரகதாபாணேஸ் த்ரைலோக்யஸ்யைகசக்ஷுஷ: ॥

[தேவதேவனும், சார்ங்கமென்னும் வில்லையுடையவனும், சங்கம், சக்கரம், கதை, இவைகளைக் கையிலே உடையவனும், மூவுலகிற்கும் ஓர் கண்ணாயிருப்பவனுமான வாஸுதேவனுக்கு நான் அடிமை.]

6. தாஸபூதா: ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: ।

[பரமாத்மாவுக்கு, எல்லா ஆத்மாக்களும் இயற்கையாகவே அடிமைப் பட்டவர்களன்றோ.]

7. ஹர்த்தும் தமஸ் ஸதஸதீ ச விவேக்துமீஶோ
மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி ।
தேநாவலோக்ய க்ருதிந: பரிபுஞ்ஜதே தம்
தத்ரைவ கேऽபி சபலா: ஶலபீபவந்தி ॥

[கருணைக்கடலான எம்பெருமான் (அஜ்ஞானமாகிற) இருளை நீக்கிக் கொள்ளவும், நன்மை தீமைகளை ஆராய்ந்து அறிவதற்கும், (இருட்டைப் போக்கடிப்பதற்கும், உள்ளவற்றையும், இல்லாதவற்றையும் ஆராய்ந்தறிவதற்கும் ஸாதனமான) விளக்கைப் போன்ற வேதத்தைக் கொடுக்கிறான். பாக்யவான்கள், அந்தத் திருவிளக்கைக்

---

2. ஶ்வே (6-7). 3. யஜு-அஷ்ட-3-ப்ர-7. 4. ரா-ஆர (15-7). 5. புண்டரீகஸம்வாதம்; நாரதவாக்யம். 6. ஹாரீதஸ்ம்ருதி; ஈஶ்வர ஸம்ஹிதை-சிவவாக்யம். 7. ரங்கராஜஸ்தவம் (2-1).

கொண்டு, அந்த ஸர்வேச்வரனைக் கண்டு அநுபவிக்கிறார்கள்; சில சபலர்கள் அந்த விளக்கிலேயே விட்டில் பூச்சியைப் போல் விழுந்து மடிகிறார்கள்.]

8. ஸ ஜகாம வநம் வீர: ப்ரதிஜ்ஞாமநுபாலயந் ।
பிதுர் வசநநிர்தேசாத் கைகேய்யா: ப்ரியகாரணாத் ॥........
சித்ரகூடமநுப்ராப்ய பரத்வாஜஸ்ய சாஸநாத் ।
ரம்யமாவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய: ॥

[வீரரான அந்த ராமர் ப்ரதிஜ்ஞையைப் பரிபாலித்துக்கொண்டு, பிதாவினுடைய ஆஜ்ஞையாலும், கைகேயிக்கு ப்ரியமாயிருக்கையாலும் வனத்திற்குச் சென்றார்.........பரத்வாஜருடைய ஆஜ்ஞைப்படி சித்ரகூடத்தை அடைந்து (அங்கு) அழகிய பர்ணசாலையைக் கட்டிக்கொண்டு அம்மூவரும் வநத்தில் ரமித்தார்கள்.]

9. கதம் தசரதாஜ்ஜாதோ பவேத் ராஜ்யாபஹாரக: ।
ராஜ்யம் சாஹஞ்ச ராமஸ்ய தர்மம் வக்துமிஹார்ஹஸி ॥

[தசரதனிடமிருந்து பிறந்தவன் எப்படி ராஜ்யத்தை அபஹரிப்பவனாவான்? ராஜ்யமும் நானும் ராமனுடையவை. நீர் இவ்விஷயத்தில் தர்மத்தைச் சொல்லவேண்டும்.]

10. கச்சதா மாதுலகுலம் பரதேந ததாऽநக: ।
சத்ருக்நோ நித்யசத்ருக்நோ நீத: ப்ரீதிபுரஸ்க்ருத: ॥

[பாபமற்றவனும், நித்யசத்ருவான இந்த்ரியங்களை ஜயித்தவனும், அன்பினால் தூண்டப்பட்டவனுமான சத்ருக்னன் மாமன் வீட்டுக்குச் செல்லும் பரதனால் அழைத்துச் செல்லப்பட்டான்.]

11. யத் யதாசரதி ச்ரேஷ்டஸ் தத் ததேவேதரோ ஜந: ।
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ் தததநுவர்த்ததே ॥

[ஜ்ஞானியானவன் எந்தெந்த கர்மங்களை அநுஷ்டிக்கிறானோ, அந்தந்த கர்மங்களையே (ஜ்ஞானமற்ற) மற்ற மனிதனும் அநுஷ்டிக்கிறான்; அந்த ஜ்ஞானி கர்மங்களை எந்த அங்கத்துடன் கூடியதாக அநுஷ்டிக்கிறானோ, அந்த அங்கத்துடன் கூடிய கர்மத்தையே லோகமும் அநுஷ்டிக்கிறது.]

12. அவஜாநந்தி மாம் மூடா மாநுஷீம் தநுமாச்ரிதம் ।
பரம் பாவமஜாநந்தோ மம பூதமஹேச்வரம் ॥

---

8. ரா-பா (1-24 & 31). 9. ரா-அ (82-12). 10. ரா-அ (1-1). 11. கீதை. (3-21). 12. கீதை (9-11).

[மூடர்கள், என்னுடைய மேலான நிலைமையை அறியாமல், பூதங்களுக்கு மேலான ஈச்வரனும், மனுஷ்ய தேஹத்தை எடுத்துக் கொண்டிருப்பவனுமான என்னை அவமதிக்கிறார்கள்.]

13. ப்ரஸாதபரமௌ நாதௌ மம கேஹமுபாகதௌ ।
தந்யோऽஹமர்ச்சயிஷ்யாமீத்யாஹ மால்யோபஜீவந: ॥

["மேலான அருளை உடையவர்களும், ஸ்வாமியாயிருப்பவர்களுமான இந்த ராமக்ருஷ்ணர்கள் என்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறார்கள்; நான் தன்யனானேன்; (அவர்களைப்) பூஜிக்கிறேன்" என்று மாலாகாரர் சொன்னார்.]

14. மத்யேவிரிஞ்சகிரிஶம் ப்ரதமாவதார:
தத்ஸாம்யதஸ் ஸ்தகயிதும் தவ சேத் ஸ்வரூபம் ।
கிம் தே பரத்வபிஶுநைரிஹ ரங்கதாமந் !
ஸத்வ ப்ரவர்த்தநக்ருபாபரிபாலநாத்யை: ॥

[ஸ்ரீரங்கநாதரே! பிரமருத்திரர்களின் நடுவில் உமக்கேற்பட்ட முதல் அவதாரம், அவ்விருவருடன் ஒன்றாயிருப்பதைக் காட்டி உம்முடைய ஸ்வரூபத்தை மறைத்துக் கொள்வதற்காகவாகில், ஸத்வ குணத்தை நிர்வஹிப்பதென்ன, க்ருபையாலே (பிரமன் ருத்ரன் முதலியவர்களை) ரக்ஷிப்பதென்ன இவை முதலான மேன்மையைக் காட்டும் காரியங்களால் உமக்கு என்ன ப்ரயோஜனம்?]

15. தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாஶ்ச

[தர்மத்தை அறிந்தவர்களுடைய ஆசாரம் (முக்கியமான) ப்ரமாணம்; வேதங்களும் ப்ரமாணம்.]

16. ஹஸிதம் பாஷிதம் சைவ கதிர் யா யச்ச சேஷ்டிதம் ।
தத்ஸர்வம் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ரபஶ்யதி ॥

[(ராமன், லக்ஷ்மணன் முதலியவர்களுடைய) சிரிப்பு, பேச்சு, நடை, செயல், இவையெல்லாவற்றையும் (வால்மீகி) தர்மமாகிற வீர்யத்தினால் உள்ளபடி பார்க்கிறார்.]

17. ஸ்த்ரியோ வ்ருத்தாஸ் தருண்யஶ்ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா: ।
ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யஶஸ்விந: ॥

13. வி-பு-(5-19-21). 14. ரங்கராஜஸ்தவம் (2-51). 15. ஆபஸ்தம்ப ஸூத்ரம். 16. ரா-பா-(3-4). 17. ரா-அயோ (2-52).

[கீர்த்தியுடையவர்களான ஸ்த்ரீகளும், வ்ருத்தர்களும், பெண்களும், காலையும் மாலையும் கூடியிருந்து ராமனுக்காக எல்லா தேவர்களையும் நமஸ்கரிக்கிறார்கள்.]

18. க்ஷத்ரரோஷாத் ப்ரஶாந்தஸ் த்வம் ப்ராஹ்மணஶ்ச மஹாயஶா: ।
பாலாநாம் மம புத்ராணா மபயம் தாதுமர்ஹஸி ॥

[பெருங்கீர்த்தியை உடைய ப்ராஹ்மணரான நீர் க்ஷத்ரிய ஸ்வபாவமான கோபத்திலிருந்து சாந்தி யடைந்தவராய், பாலர்களான என் புத்திரர்களுக்கு அபயமளிக்கவேண்டும்.]

19. கதோ ராம இதி ஶ்ருத்வா ஹ்ருஷ்ட: ப்ரமுதிதோ ந்ருப: ।
புநர் ஜாதம் ததா மேநே ஸுதாநாத்மாநமேவ ச ॥

['பரசுராமன் போயினன்' என்று கேட்டு உகந்து, ஆநந்தித்த தசரதசக்கரவர்த்தி, அப்போது தன்னையும், பிள்ளைகளையும் மறுபடி பிறந்ததாக எண்ணினான்.]

20. யந்மங்களம் ஸுபர்ணஸ்ய விநதாऽகல்பயத் புரா ।
அம்ருதம் ப்ரார்த்தயாநஸ்ய தத்தே பவது மங்களம் ॥

[முன் அமிருதத்தைத் தேடும் கருடனுக்கு யாதொரு மங்களத்தை வேண்டினாளோ, அந்த மங்களம் உனக்கு உண்டாகட்டும்.]

21. தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்மசாரிண: ।
மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா: ॥

[தருமமுறை தவறாது நடப்பவர்களும், த்ருடமான விரதத்தையுடையவர்களுமான அந்த ருஷிகள், உதிக்கும் சந்திரனைப் போன்ற அந்த ராமபிரானைப் பார்த்து மங்களாசாஸனம் செய்துகொண்டு வரவேற்றார்கள்.]

22. பதிஸம்மாநிதா ஸீதா பர்த்தாரமஸிதேக்ஷணா ।
ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந்யபிதத்யுஷீ ॥

[கணவனான ராமனால் கௌரவிக்கப்பட்டவளும், கருத்த கண்களை உடையவளுமான ஸீதை, மங்களாசாஸனம் செய்துகொண்டு கணவனை வாயில் வரையில் பின் தொடர்ந்தாள்.]

23. பூர்வாம் திஶம் வஜ்ரதரோ தக்ஷிணாம் பாது தே யம: ।
வருண: பஶ்சிமாமாஶாம் தநேஶஸ் தூத்தராம் திஶம் ॥

---

18. ரா-பா. (75-6). 19. ரா-பா (77-5). 20. ரா. அயோ (25-33).
21. ரா-ஆர (1-11). 22. ரா-அயோ (16-21). 23. ரா-அயோ (16-24).

உம்முடைய கிழ் திக்கில் இந்திரனும், தெற்கில் யமனும், மேற்கு திக்கில் வருணனும், வடக்கு திக்கில் குபேரனும் காப்பாற்றட்டும்.]

24. ஜாதோऽஸி தேவதேவேஶ! ஶங்கசக்ரகதாதர! ।
திவ்யரூபமிதம் தேவ! ப்ரஸாதேநோபஸம்ஹர ॥

[தேவர்களுக்கும் தேவர்களான நித்யஸூரிகளையும் நியமிப்பவனே! சங்கசக்ர கதைகளை தரிப்பவனே! தேவனே! நீயன்றோ பிறந்திருக்கிறாய்! இந்த திவ்ய ரூபத்தை அருள் கூர்ந்து மறைத்துக் கொள்வாயாக.]

25. உபஸம்ஹர ஸர்வாத்மந்! ரூபமேதச்சதுர்புஜம் ।
ஜாநாது மாऽவதாரந்தே கம்ஸோऽயம் திதிஜந்மஜ: ॥

[ஸர்வாந்தர்யாமியே! நான்கு திருக்கைகளையுடைய இந்த ரூபத்தை மறைத்துக்கொள்வாயாக. அஸுரனான இந்தக் கம்ஸன் உன்னுடைய அவதாரத்தை அறியவேண்டாம்.]

26. ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச் சரீராத் ஸமுத்தாய பரம்
ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே ।

[இந்த ஜீவன், இந்த சரீரத்திலிருந்து கிளம்பி, பரஞ்சோதியான நாராயணனை அடைந்து, ஸ்வரூபப்ராப்தியடைகிறான்.]

27. அநாதிர் பகவாந் காலோ நாந்தோऽஸ்ய த்விஜ வித்யதே ।

[ப்ராஹ்மணரே! பெருமை பொருந்தியதான காலம் அநாதியானது. இதற்கு முடிவும் கிடையாது.]

28. யாமோஷதிமிவாயுஷ்மந்! அந்வேஷஸி மஹாவநே ।
ஸா தேவீ மம ச ப்ராணா ராவணேநோபயம் ஹ்ருதம் ॥

[தீர்காயுளை உடையவனே! எந்த ஸீதாதேவியை ஓஷதியைப் போல் இப்பெருங்காட்டில் தேடுகிறாயோ, அந்த தேவி என்னுடைய ப்ராணன் ஆகிய இரண்டும் ராவணனாலே கைப்பற்றப்பட்டது.]

29. பிஶாசாந் தாநவாந் யக்ஷாந் ப்ருதிவ்யாம் சைவ ராக்ஷஸாந் ।
அங்குல்யக்ரேண தாந் ஹந்யாமிச்சந் ஹரிகணேஶ்வர ॥

[வாநரஸமூஹத்துக்கு அரசனே! பிசாசங்களையும், அஸுரர்களையும், யக்ஷர்களையும், உலகிலுள்ள ராக்ஷஸர்களையும், நான் விரும்பினேனாகில் என் விரல் நுனியாலே கொல்லுவேன்.]

---

24. வி-பு (5-3-10). 25. வி-பு (5-3-13). 26. சாந்தோ-(8-12-2). 27. வி-பு (1-2-26). 28. ரா-ஆர (67-15). 29. ரா-யு (18-23).

30. த்வ யௌவநோந்முகீபூதஸுகுமாரதநுர் ஹரி: ।
க்வ வஜ்ரகடிநாऽऽபோகஶரீரோऽயம் மஹாऽஸுர: ॥

[யௌவனத்தை நெருங்கும் ஸௌகுமார்யத்தையுடைய தேஹத்தையுடைய ஹரி எங்கே? வஜ்ரம்போல் கடினமானதும், விசாலமானதுமான சரீரத்தையுடைய இந்த மஹாஸுரனெங்கெ?]

31. பூமௌ ஸ்திதஸ்ய ராமஸ்ய ரதஸ்தஸ்ய ச ரக்ஷஸ: ।
ந ஸமம் யுத்தமித்யாஹுர் தேவகந்தர்வதாநவா: ॥

['பூமியிலிருக்கும் ராமனுக்கும், ரதத்திலிருக்கும் ராக்ஷஸனுக்கும் யுத்தம் ஸமமானதல்ல' என்று தேவர்களும், கந்தர்வர்களும், அஸுரர்களும் சொன்னார்கள்.]

32. ஆயுராஶாஸ்தே

[ஆயுளை ப்ரார்த்திக்கிறான்.]

33. அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா ।
ந த்வம் ஸமர்த்தஸ் தாம் ஹர்த்தும் ராமசாபாஶ்ரயாம் வநே ॥

[யாதொரு ராமபிரானிடத்தில் ஜனககுமாரியான ஸீதை யிருக்கிறாளோ அந்த ராமபிரானுடைய தேஜஸ் அளவற்றதன்றோ. காட்டில் ராமனுடைய வில்லை ஆச்ரயித்திருக்கும் அவளை அபஹரிக்க நீ ஸமர்த்தனல்ல.]

34. ஶ்ரத்தயா தேவோ தேவத்வமஶ்நுதே ।

[பிரகாசித்தல் முதலான கல்யாணகுணங்களையுடைய ஸர்வேச்வரன், ஈச்வரனாயிருக்கும் தன்மையை 'ஶ்ரத்தை' என்னும் பெயரையுடைய மஹாலக்ஷ்மியால் அடைகிறான்.]

35. யுவதிஶ்ச குமாரிணீ

[யுவதியாகவும், இளம்பெண்ணாகவும் இருப்பவள் (பிராட்டி).]

36. யுவா குமார:

[வாலிபனாகவும், பாலனாகவுமிருப்பவன் (எம்பெருமான்).]

37. ருதம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்களம் ।
ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விஶ்வரூபாய வை நம: ॥

[ஸர்வவ்யாபியாயும், விகாரமற்றவனாகவும், பரப்ரஹ்மமாகவும், புருஷனென்ற பெயரையுடையவனாகவும், கறுப்பும், மஞ்சளும் கலந்த

30. வி-பு (5-20-60). 31. ரா-யு (103-5). 32. யஜு-அஷ்ட-3-ப்ர-5.
33. ரா-ஆர (37-18). 34. காடகம் (3-11). 35. ருக்-அஷ்ட (2-8-25).
37. தைத்-நா-12.

வர்ணத்தையுடையவனாகவும், உயர்ந்த வீர்யத்தை உடையவனாகவும், மாறுபட்ட குணங்களையுடைய கண்களையுடையவனாகவும், உலகை உருவாகக்கொண்டவனாகவுமிருக்கும் பரமாத்மாவின் பொருட்டு நமஸ்காரம்.]

38. ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயானி வ்யதாரயத் ।

[அந்த சங்கநாதம் த்ருதராஷ்ட்ரபுத்ரர்களுடைய ஹ்ருதயங்களைப் பிளந்தது.]

39. யஸ்ய நாதேந தைத்யாநாம் பலஹாநிரஜாயத ।
தேவாநாம் வவ்ருதே தேஜோ யாத்யதர்மஶ்ச ஸங்க்ஷயம் ॥

[எந்தப் பாஞ்சஜந்யத்தின் ஒலியினால் அஸுரர்களுக்கு பலக் குறைவு ஏற்பட்டதோ, தேவர்களுடைய தேஜஸ் விருத்தியடைந்ததோ, அதர்மம் நாசமடைந்ததோ.....]

40. சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோऽர்ஜுந ।
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப ॥

[அர்ஜுனா! பரதச்ரேஷ்டனே! 'ஆர்த்தன் (இழந்த செல்வத்தை அடையவிரும்புபவன்), அர்த்தார்த்தி (புதிய செல்வத்தைப் பெற விரும்புபவன்), ஜிஜ்ஞாஸு (ஆத்மப்ராப்தியை விரும்புபவன்), ஜ்ஞாநி (பகவானை அடைய விரும்புபவன்) என்று நான்கு விதமான புண்ணியவான்கள் என்னை ஆச்ரயிக்கிறார்கள்.]

41. ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத ஏகஶ்சார்த்தம் ந சிந்தயேத் ।
ஏகோ ந கச்சேதத்வாநம் நைகஸ் ஸுப்தேஷு ஜாக்ருயாத் ॥

[நல்ல பதார்த்தத்தை ஒருவனாகப் புசிக்கலாகாது; அர்த்தத்தை ஒருவனாகச் சிந்திக்கக்கூடாது; வழிப்பாதையில் ஒருவனாக நடக்கலாகாது; (பலர்) தூங்குகையில் ஒருவன் விழித்திருக்கக்கூடாது.]

42. ஸர்வம் பரவஶம் து:க்கம் ஸர்வமாத்மவஶம் ஸுகம் ।
ஏதத் வித்யாத் ஸமாஸேந லக்ஷணம் ஸுகது:க்கயோ: ॥

[பிறனுக்கு வசப்பட்டிருக்கை முழுவதும் துக்கரூபமானது. தனக்குத் தானே வசப்பட்டிருக்கை முழுவதும் ஸுகரூபமானது. ஸுகதுக்கங்களுக்குச் சுருக்கமான லக்ஷணமான இதை அறிய வேண்டும்.]

43. ஸேவா ஶ்வவ்ருத்திர் வ்யாக்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத் ।

---

38. கீதை (1-19). 39. வி-பு (5-21-29). 40. கீதை (7-16). 41. பார-உத்யோ-(32-53). 42. மநு-(4-160). 43. மநு-(4-6).

[அடிமை செய்வது நாயின் தொழிலாகச் சொல்லப்படுகிறது. அதனால் அதை விலக்கவேண்டும்.]

44. பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே ।
வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ॥

[பல ஜன்மங்களுக்குப் பின் ஜ்ஞானியானவன் "வாஸுதேவனே (எனக்கு) எல்லாம், என்று என்னை உபாஸிக்கிறான். அப்படிப்பட்ட மஹாத்மா மிகவும் கிடைத்தற்கரியவன்.]

45. ஏகாஹமபி கௌந்தேய பூமிஸ்த்தமுதகம் குரு ।
குலம் தாரயதே தாத ! ஸப்த ஸப்த ச ஸப்த ச ॥

[தர்மபுத்ர ! ஒரு நாளாவது ஜலத்தை பூமியிலிருப்பதாகச் செய். குழந்தாய் ! மூவேழு தலைமுறை வம்சத்தைத் தாண்டுவிக்கிறாய்.]

46. ப்ராஹ்மணாந் ஸம்பூஜ்யாசிஷோ வாசயித்வா யதாசக்தி தக்ஷிணாம் ததாதி । தசபூர்வாந் தசாபராநாத்மாநஞ்சைகவிம்சதிம் பங்க்திஞ்ச புநாதி ॥

[ப்ராஹ்மணர்களைப் பூஜித்து, ஆசீர்வாதம் செய்வித்து, இயன்ற வரையில் தக்ஷிணையைக் கொடுக்கிறான்; (அதனால்) தனக்கு முன் பதின்மரையும், தனக்குப் பின் பதின்மரையும், தன்னையும், ஆக இருபத்தொரு தலைமுறையையும் பரிசுத்தப்படுத்துகிறான்.]

47. த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயந்து கஸ்யசித் ।
ஏஷ மே ஸஹஜோ தோஷ: ஸ்வபாவோ துரதிக்ரம: ॥

[இரண்டாகப் பிளந்துபோவேனேயொழிய, இம்மாதிரி ஒருவனுக்கு வணங்கமாட்டேன். இது எனக்கு இயற்கையிலேற்பட்ட தோஷம். ஸ்வபாவம் தாண்டமுடியாததன்றோ.]

48. சிதாதூமாகுலபதா க்ருத்ரமண்டலஸங்குலா ।
அசிரேண து லங்கேயம் ச்மசாநஸத்ருசீ பவேத் ॥

[சிதைகளின் புகையினால் கலங்கின மார்க்கங்களையுடையதும், கழுகுக்கூட்டங்களினால் கலங்கினதுமான இந்த லங்கை வெகு சீக்கிரம் சுடுகாட்டைப்போல் ஆகும்.]

49. தாம்ஸ்து தே஽ஹம் ப்ரவக்ஷ்யாமி ப்ரேக்ஷமாணஸ்ய யூதபாந் ।
ராகவார்த்தே பராக்ராந்தா யே ந ரக்ஷந்தி ஜீவிதம் ॥

---

44. கீதை (7-19). 45. பாரதம்; பீஷ்மவாக்யம். 46. பௌதாயநதர்மம். 47. ரா-யு (36-11). 48. ரா-ஸு (26-24). 49. ரா-யு (27-1).

[எவர்கள் ராகவனுக்காகத் தம் சக்தியைக் காட்ட நினைத்து பிராணனையும் ரக்ஷித்துக்கொள்ளமாட்டார்களோ, அந்த ஸேநாபதிகளைப் பார்க்கிற உமக்கு நான் எடுத்துச் சொல்லுகிறேன்.]

50. கைங்கர்யநித்யநிரதைர் பவதேகபோகை:
நித்யைரநுக்ஷணநவீநரஸார்த்ரபாவை: ।
நித்யாபிவாஞ்சிதபரஸ்பரநீசபாவைர்
மத்தைவதை: பரிஜநைஸ்தவ ஸங்கஸீய ॥

[கைங்கர்யத்திலேயே எப்போதும் ஈடுபட்டிருப்பவர்களும், உன்னையே போகமாகக்கொண்டிருப்பவர்களும், க்ஷணந்தோறும் புதிது புதிதான ரஸங்களாலே நெஞ்சுருகுபவர்களும், எப்போதும், ஒருவருக்கொருவர் அடிமையாயிருப்பதை ஆசைப்படுபவர்களும் எனக்குப் பூஜிக்கத்தக்கவர்களும், உன்னுடைய பரிஜனங்களுமான நித்யர்களுடன் கூடப்பெறுவேனாக.]

51. ஜராமரணமோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தி யே ।
தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்நமத்யாத்மம் கர்ம சாகிலம் ॥

[கிழத்தனம், மரணம் என்பவை நீங்கி ஆத்மஸ்வரூபத்தைக் காண்பதற்காக எவர்கள் என்னையடைந்து முயற்சிக்கிறார்களோ, அவர்கள் 'ப்ரஹ்மம்' எனப்படும் ஆத்மஸ்வரூபத்தையும், 'அத்யாத்மம்' எனப்படும் ப்ரக்ருதி முழுவதையும், ப்ரஜோத்பத்தியாகிற கர்மம் முழுவதையும் அறிகிறார்கள்.]

52. அஹமபி ந மம । பகவத ஏவாஹமஸ்மீத்யேவமமமதாம்
யோஜயத்யதோ நம இதி ॥

["நானும் எனக்குரியேனல்லேன்; பகவானுக்கே அடியனாகிறேன்." என்று இம்மாதிரியாக மமகாரமில்லாமையைத் தருவதால் 'நம:' எனப்படுகிறது.]

53. ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந் ।
ய: ப்ரயாதி த்யஜந் தேஹம் ஸ யாதி பரமாம் கதிம் ॥

[ப்ரஹ்மத்திற்கு வாசகமான 'ஓம்' என்ற ஓரெழுத்தை உச்சரித்துக்கொண்டும், என்னை நினைத்துக்கொண்டும் தேஹத்தை எவன் விட்டுச் செல்கிறானோ, அவன் மேலான கதியான ஆத்மஸ்வரூபத்தை அடைகிறான்.]

---

50. ஸ்ரீவைகுண்டஸ்தவம்-77. 51. கீதை (7-29). 52. யஜு:.
53. கீதை (8-13).

54. உதாராஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் ।
ஆஸ்தித்தஸ் ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமம் கதிம் ॥

[இந்த நான்கு விதமான பக்தர்களும் உதாரர்களே; ஞானியோவெனில் எனக்கே தாரகனென்பது என் நினைவு. அவன் என்னை அடைவதிலேயே விருப்பமுள்ளவனாய், என்னையே மேலான ப்ராப்யமாகக் கொண்டவனாயிருப்பவனன்றோ.]

55. அண்டாநாந்து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச ।
ஈத்ருஶாநாம் ததா தத்ர கோடிகோடிஶதாநி ச ॥

['அந்த ப்ரக்ருதியில் இம்மாதிரியான பலகோடி நூறாயிரம் அண்டங்கள் இருக்கின்றன' என்பது ஸாரார்த்தம்.]

56. பந்நகாஶநமாகாஶே பதந்தம் பக்ஷிஸேவிதே ।
வைநதேயமஹம் ஶக்த: பரிகந்தும் ஸஹஸ்ரஶ: ॥

[பக்ஷிகள் ஸஞ்சரிக்கும் ஆகாசத்தில் பறப்பவனும், பாம்புகளை உணவாகக் கொள்ளுபவனுமான கருடனை நான் ஆயிரந்தடவை வலம் வர வல்லவன்.]

57. ஸ ஹி வித்யாதஸ் தம் ஜநயதி । தச்ச்ரேஷ்டம் ஜந்ம ॥

[ஆசாரியனன்றோ வித்யையினால் சிஷ்யனைப் பிறப்பிக்கிறான்; அது மேலான ஜன்மம்.]

58. உத்பாதகப்ரஹ்மபித்ரோர் கரீயாந் ப்ரஹ்மத: பிதா ।
ப்ரஹ்மஜந்ம ஹி விப்ரஸ்ய ப்ரேத்ய சேஹ ச ஶாஶ்வதம் ॥

[பிறப்பித்தவன், வேதாத்யயனம் செய்வித்த ஆசார்யன் ஆகிய இரு தந்தைகளுள் வேதமோதுவித்த தந்தை மேலானவன். ப்ராஹ்மணனுக்கு வேதாத்யயனத்தினாலேற்படும் பிறப்பு இங்கும், இறந்த பின்பும் நித்யபலத்தைத் தருவது.]

59. பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந் ।
ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணி ச க்ருஹாணி ச ॥
ஸர்வதர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந் ।
லோகவிக்ராந்தசரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபோ ॥

[பகவானே! தந்தையையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், உறவினரையும், நண்பர்களையும், ஆசாரியர்களையும், ரத்னங்களையும், தனதான்யங்களையும், வயல்களையும், வீடுகளையும், எல்லா

---

54. கீதை (7-18). 55. வி-பு (2-7-27). 56. ரா-கிஷ் (67-14).
57. ஆப-ஸூ (1-1-6). 58. மநு (2-146). 59. விஹகே-22.

உபாயங்களையும், கைவல்யமுள்ளிட்ட எல்லா ப்ராப்யங்களையும், வாஸனையுடன் விட்டு, திருவுல்களந்தருளின உன் திருவடிகளை சரணமடைகிறேன்.]

60. யஸ்ய வேதஶ்ச வேதீ ச விஞ்சித்யேதே த்ரிபூருஷம் ।
ஸ வை துர்ப்ராஹ்மணோ ஜ்ஞேயஸ் ஸர்வகர்மபஹிஷ்க்ருத: ॥

[எவனுக்கு வேதமும், யாகவேதியும் மூன்று தலைமுறை விட்டுப் போகின்றனவோ அவன் எல்லாக் கர்மங்களுக்கும் அநர்ஹனான கெட்ட ப்ராஹ்மணனென்று அறியத்தக்கவன்.]

61. ஶாந்திஶ் ஶாந்திர் ஶாந்தி:

[சாந்தி (ஏற்படட்டும்); சாந்தி (ஏற்படட்டும்); சாந்தி (ஏற்படட்டும்).]

62. பஶ்யேம ஶரதஶ் ஶதம்

[நூறு வருஷங்கள் பார்க்கக் கடவோம்.]

63. நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந்

[நரங்கலந்த சிங்க வடிவையுடையவன்; அதிமநோஹரமான திவ்யரூபத்தை உடையவன்.]

64. அத்யர்க்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: ।
ஸ்வயைவ ப்ரபயா ராஜந் ! துஷ்ப்ரேக்ஷம் தேவதாநவை: ॥

மஹாத்மாவான விஷ்ணுவினுடைய அந்த ஸ்தானம் ஸூர்யனுடையவும், அக்னியுடையவும் ஒளியை விஞ்சிய ஒளியையுடையது. அரசனே! தன்னுடைய ஒளியினாலேயே தேவர்களாலும், அஸுரர்களாலும் காண அரியது.]

65. ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோऽயமக்நி: ।
தமேவ பாந்தமநுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥

[அந்தப் பரமபுருஷனிடத்தில் ஸூர்யனும் பிரகாசிக்கிறதில்லை; சந்த்ரநக்ஷத்திரங்களும் பிரகாசிக்கிறதில்லை; மின்னல்களும் பிரகாசிக்கிறதில்லை; இந்த அக்னியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? பிரகாசிக்கும்படியான அவனைப் பின்பற்றியே எல்லாம் பிரகாசிக்கிறது; அவனுடைய ஒளியினாலே இவையெல்லாம் ஒளிவிடுகின்றன.]

---

61. தை-ஶீக்ஷா-1. 62. மாத்யாஹ்நிகமந்த்ரம். 63. விஷ்ணுஸஹஸ்ரநாமம். 64. பார-ஆர (136-18). 65. கடோப-(2-5).

66. சக்ராங்கிதா: ப்ரவேஷ்டவ்யா யாவதாகமநம் மம ||
நாமுத்ரிதா: ப்ரவேஷ்டவ்யா யாவதாகமநம் மம |
[சக்கரத்தாலே அடையாளம் செய்யப்பட்டவர்களே நான் வரும் வரையில் உட்புகத் தகுந்தவர்கள். நான் வரும் வரையில் சக்ரமுத்ரையில்லாதவர்கள் உட்புகத் தக்கவரல்லர்.]

67. சக்ராதிதாரணம் பும்ஸாம் பரஸம்பந்தவேதநம் |
பதிவ்ரதா நிமித்தம் ஹி வளயாதிவிபூஷணம் ||
[சக்கரம் முதலியவைகளை தரிப்பது பராமாத்மஸம்பந்தத்தைக் காட்டுகிறது. வளை முதலிய ஆபரணங்கள் பதிவ்ரதைக்கு அடையாளங்களன்றோ.]

68. ஏததாக்யாநமாயுஷ்யம் படந் ராமாயணம் நர: |
ஸபுத்ரபௌத்ர: ஸகண: ப்ரேத்ய ஸ்வர்க்கே மஹீயதே ||
[ஆயுளை விருத்தி செய்யும் இந்த ராமாயணமாகிய இதிஹாஸத்தைப் படிக்கும் மனிதன், இறந்தவுடன் புத்ரபௌத்ரர்களுடன் கூடியவனாய், உறவினர்களுடன் கூடியவனாய் ஸ்வர்க்கத்தில் சிறப்புறுகிறான்.]

69. ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம் |
ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே ||
[உன்னுடைய திவ்யாத்மஸ்வரூபமானது உனக்காக இராது; திவ்யமங்களவிக்ரஹமும் உனக்காயிராது; திவ்யாயுதங்களும் உனக்காயிருக்கவில்லை; இருப்பிடமான வைகுண்டம் முதலியவைகளும் உனக்காயிருக்கவில்லை. (இவையெல்லாம் உன்னடியார்களுக்காயிருக்கும் என்று பொருள்.) இப்படி ஆஸ்ரிதபரதந்த்ரமான ஸ்வரூபரூபகுணவிபூதிகளை உடையவனாயிருந்தபோதிலும், புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்ட ஸர்வாதிகனாயிருக்கும் தன்மையுடன் பக்தர்களுக்காக நீ பிரகாசிக்கிறாய்.]

70. விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச |
[பரிசுத்தமானவையும், இனியவையுமான விதுரனுடைய அன்னங்களை (க்ருஷ்ணன்) புஜித்தான்.]

71. தாமிங்கிதஜ்ஞ: ஸம்ப்ரேக்ஷ்ய பபாஷே ஜநகாத்மஜாம் |
ப்ரதேஹி ஸுபகே ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பாமிநி ||

66. ஹரி-பவிஷ் (27-24). 67. கூர்ம. 68. ரா-பா (1-99). 70. பார-உத்யோ-(74). 71. ரா-யு (131-80).

[இங்கிதத்தை அறிபவனான ராமன் ஜனககுமாரியைப் பார்த்து "ஸௌபாக்யவதியே! பாமினி! எவனிடத்தில் பஹுமானத்தை யுடையவளாயிருக்கிறாயோ அவனுக்கு இந்த ஹாரத்தைத் தருவாயாக" என்று சொன்னார்.]

72. ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலா:

[கோஸலதேசத்தவர்கள் கண்ணோக்கிலிருந்தே கருத்தை அறிபவர்கள்.]

73. ஸர்வகந்தஸ் ஸர்வரஸ:

[(பரமாத்மா) எல்லா கந்தங்களையுமுடையவன்; எல்லா ரஸங்களையுமுடையவன்-]

74. ஸுகந்தமேதத் ராஜார்ஹம் ருசிரம் ருசிராநநே।
ஆவயோர் காத்ரஸத்ருஶம் தீயதாமநுலேபநம்॥

[இது நல்ல வாசனையை மட்டும் உடையது; இது அரசனாகிற கம்ஸனுக்கே தகுந்தது; இது பார்ப்பதற்கே அழகியதாயிருக்கிறது; அழகிய முகத்தையுடையவளே! எங்களுடம்புக்குத் தகுந்த சந்தனத்தைத் தருவாயாக.]

75. யோऽந்யதா ஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்யதே।
கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா॥

[பகவானுக்கு உடைமையாயிருக்கும் ஆத்மாவை, எவனொருவன் தனக்குச் சொந்தமாக நினைக்கிறானோ, ஆத்மாவை அபஹரிப்பவனான அந்தத் திருடனால் செய்யப்படாத பாபம் எது?]

76. ஸ்ரக்வஸ்த்ராபரணைர் யுக்தம் ஸ்வாநுரூபைரநூபமை:।
சிந்மயை: ஸ்வப்ரகாஶைஶ்ச அந்யோந்யருசிரஞ்ஜிதை:॥

[தனக்குத் தகுந்தவையும், ஒப்பற்றவையும், ஞானமயமாயிருப்பவையும், ஸ்வயம்ப்ரகாசமானவையும், ஒன்றுக்கொன்று (சேர்த்தியினாலுண்டான) காந்தியினால் அழகாயிருப்பவையுமான மாலைகளினாலும், வஸ்த்ரங்களினாலும், ஆபரணங்களினாலும் கூடியிருப்பது பரப்ரஹ்மம்.]

77. த்வதீயபுக்தோஜ்ஜித ஶேஷபோஜிநா த்வயா
நிஸ்ருஷ்டாத்மபரேண யத் யதா।

73. சாந்தோ (3-14-2). 74. வி-பு (5-20-6). 75. பார-உத்யோ (42-35).
76. பௌஷ்கரஸம்ஹிதை. 77. ஸ்தோ-ர-42.

ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி தத்
தததாऽநுஜாநந்தமுதாரவீக்ஷணை: ||

[உன்னுடைய உண்டு மிகுந்த சேஷத்தை உண்பவனும், உன்னாலே வைக்கப்பட்ட உன்னுடைய (உபயவிபூதி நிர்வாஹரூபமான) பாரத்தையுடையவனும், (எல்லாருக்கும்) அன்பனுமான விஷ்வக்ஸேனராலே எந்தக் காரியம் எம்மாதிரி விண்ணப்பம் செய்யப்பட்டதோ, அருள் நிரம்பிய கடாக்ஷங்களாலே அந்தக் காரியத்தை அம்மாதிரியே (செய்வதென்று) நியமித்தருளும் (உன்னை).]

78. குரோருச்சிஷ்டம் புஞ்ஜீத
[குருவுடைய உச்சிஷ்டத்தைப் புசிக்கக்கடவன்.]

79. 4-வது ப்ரமாணத்தைப் பார்க்கவும்.

80. கார்யே கர்மணி நிர்திஷ்டே யோ பஹூந்யபி ஸாதயேத் ।
பூர்வகார்யாவிரோதேந ஸ கார்யம் கர்த்துமர்ஹதி ||

[செய்யவேண்டிய காரியத்தைக் காட்டினவுடன், அந்தக் காரியத்திற்கு விரோதமில்லா பல காரியங்களையும் எவன் ஸாதிக்கிறானோ, அவனே காரியம் செய்யத் தகுந்தவன்.]

81. அத்ய மே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா ச மே நிஶா ।
யதுந்நித்ராப்ஜபத்ராக்ஷம் விஷ்ணோர் த்ரக்ஷ்யாம்யஹம் முகம் ||

[இன்றே என் ஜன்மம் ஸபலமாயிற்று; இன்றே என் இரவு நன்றாக விடிந்தது; மலர்ந்த தாமரையிதழ் போன்ற கண்ணையுடைய விஷ்ணுவின் முகத்தை நான் காணப்போகிறேனன்றோ.]

82. 53-வது ப்ரமாணத்தைப் பார்க்கவும்.

83. ஸகலமநுஜநயநவிஷயதாம் கத:
[எல்லா மனிதர்களுடைய கண்ணுக்கும் விஷயமானவனை எம்பெருமான்.]

84. ஏகதா து விநா ராமம் க்ருஷ்ணோ ப்ருந்தாவநம் யயௌ ।
[ஒரு தடவை பலராமனில்லாமல் க்ருஷ்ணன் ப்ருந்தாவனம் சென்றான்.]

85. ஸர்வப்ரியகரஸ்தஸ்ய ராமஸ்யாபி ஶரீரத: ।
லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நோ பஹி: ப்ராண இவாபர: ||

---

80. ரா-ஸு (41-5). 81. வி-பு (5-17-3). 83. கீதாபாஷ்யப்ரவேசம்.
84. வி-பு (5-7.1). 85. ரா-பா (18-28).

[கைங்கர்யலக்ஷ்மியையுடைய லக்ஷ்மணன், ராமனுக்கு சரீரத்தைக்காட்டிலும் எல்லாப் பிரியத்தையும் செய்பவனாயும், வெளியிலிருக்கும் மற்றொரு ப்ராணன் போலவும் விளங்கினான்.]

86. பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே ।
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதஶ்ச தே ॥

[நீர் வைதேஹியுடன் கூட மலைத்தாழ்வரைகளில் விளையாடுவீர்; அடியேன் நீர் விழித்துக்கொண்டிருக்கும்போதும், தூங்கும்போதும் உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேன்.]

87. உபமாநமஶேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாऽபவத் ।

[எந்த ப்ரஹ்லாதாழ்வான், எப்போதும் எல்லா ஸாதுக்களுக்கும் உபமானமாக ஆயினனோ.....]

88. கிம் தத்ர பஹுபிர் மந்த்ரை: கிம் தத்ர பஹுபிர் வ்ரதை: ।
நமோ நாராயணாயேதி மந்த்ரஸ் ஸர்வார்த்தஸாதக: ॥

[பிரயோஜனத்தைப் பெறுவதற்கு அநேக மந்திரங்களால் என்ன பயன்? அநேக வ்ரதங்களால் என்ன பயன்? 'நமோ நாராயணாய' என்னும் மந்த்ரம் எல்லாப் பலன்களையும் ஸாதித்துத் தரும்.]

89. ஸ ததர்ஶ ததோ ராமம் திஷ்டந்தமபராஜிதம் ।....
ஆலிகந்தமிவாகாஶமவஷ்டப்ய மஹத்தநு: ॥

[ஜயிக்கப்படாதவனும், ஆகாசத்தை அளாவிநிற்கும் பெருவில்லை அழுத்திப்பிடித்துக்கொண்டிருப்பவனுமான ராமனை அவன் அருகில் பார்த்தான்.]

90. நமோ நமஸ் தேऽஸ்து ஸஹஸ்ரக்ருத்வ:
புநஶ்ச பூயோऽபி நமோ நமஸ்தே ।
நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே
நமோऽஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ ॥

[உனக்கு ஆயிரந்தடவை நமஸ்காரம்; மறுபடியும், மறுபடியும் உனக்கு நமஸ்காரம்; எல்லாமாயிருப்பவனே! உனக்கு முன்னும் பின்னும் நமஸ்காரம்; உனக்கு எல்லாவிடத்திலும் நமஸ்காரம்.]

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே ஶரணம்.

திருப்பல்லாண்டு வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.

---

86. ரா-அ (31-25). 87. வி-பு (1-15-157). 88. நாரதீயம (1-41).
89. ரா-யு (100-12). 90. கீதை (11-39).

---

Edited, Printed & Published by K. Srinivasa Iyengar, at Srinivasam Press, No. 8, Puthur Agraharam, Tiruchirapally

ஸ்ரீ:

# திவ்யப்பிரபந்த அருஞ்சொல் அகராதி

## பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு
## பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த வியாக்யானம்

### அவதாரிகை.

(தொகுத்தவர் : புத்தூர் அட்வகேட் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
ஆசிரியர் ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்)

1. ஸர்வ நியந்தாவாக – அனைத்தையும் நியமிப்பவனாக.
2. ஸ்வரூபாநுரூபமான – [எம்பெருமானுக்கு அடிமைப் பட்டிருக்கும்] ஜீவாத்மஸ்வரூபத்திற்குத்தக்கதான.
3. ஜ்ஞாநாநுரூபமான – [ஶேஷத்வ] ஜ்ஞானத்திற்குத்தக்கதான.
4. ஸம்ஸர்கத்தால் - தொடர்பால்.
5. அசித்ப்ரத்யாஸத்தியாலே – அசித்தான தேஹத்தோடுள்ள நெருக்க மான தொடர்பாலே.
6. மமதா புத்தியை – என்னுடையவர் என்னும் அபிமானத்தை.
7. பாரதந்த்ர்யம் – [எம்பெருமானுக்கு]வசப்பட்டிருக்கை
8. விமுகராய் – ஈடுபாடற்றவராய்,
9. அபிபூதராய் – ஆக்ரமிக்கப்பட்டவராய்
10. வாஸநாதூஷிதமாகையாலே அகிஞ்சித்கரமாக – [ஜீவர்களுக்குப்] பல ஜன்மங்களில் [ஶப்₃த₃ாதி₃ விஷயங்களில் விளையும்] வாஸனையெனப்படும் பற்றுதலாலே பயனற்றுப் போகையாலே.
11. ஸ்வாமித்வநியந்த்ருத்வங்களை – இறைவனுடைய தன்மையான தலைமை, ஆளுமை.
12. அநீஶ்வரத்வம் – பரம்பொருளல்லாமலிருக்கை.
13. ஆவிஷ்கரித்து – ஏறிட்டு.
14. ஸஹஜதாஸ்யம் – இயல்பான அடிமைத்தன்மை.
15. கிஞ்சித்கரித்து – கைங்கர்யம் [தொண்டு] செய்து.
16. காலக்ஷேபம் – போதுபோக்கு.
17. கர்த்தவ்யம் – செய்யத்தக்கது.
18. கடகாகப்பற்றி – தஞ்சமாகப் பற்றி.

19. அதிக்ருதாதிகாரம் - சிலர்க்கே கற்கத்தகுதியுடையவை.
20. ததுப்பரும்ஹணம் - அந்த வேதத்தை விளக்குவது
21. உபக்ரமம் - ஆரம்பம்.
22. உபஸம்ஹாரம் - முடிவு.
23. ஸாம்யம் - ஒத்தவராயிருக்கும் தன்மை
24. ஸஜாதீயனாய் - ஒரே சாதியை உடையவனாய்
25. ஸமாநாதிகரிக்கை - ஒரே வேற்றுமையில் வழங்குகை, ஸமாநாதிகரண்யம் என்றும் சொல்லப்படும்.
26. நிபந்தநம் - காரணம்.
27. ப்ருதக்ஸ்த்தித்யுபலப்தி இல்லாத - பிரிந்து இருக்கையும், பிரிந்து தோன்றுகையும் இல்லாத.
28. ஸுக்ரஹமாக - எளிதில் அறியலாம்படி.
29. வித்யாசுல்கம் - பண்டிதர்க்குரிய பரிசு.
30. ஆஹ்வாநம் - அழைப்பு.
31. அதிக்ஷேபிக்க - செய்தகாரியம் தவறு என்று மறுத்து உரைக்க.
32. அநுவர்த்தித்த - ஆமோதித்துக்கொண்டாடிய.
33. விஸ்மிதராய் - வியப்புற்றவராய்.
34. ஸபரிகரனாய் - பரிவாரங்களோடு கூடியவனாய்
35. ஸந்நிஹிதனாக - நேரேதோன்ற.
36. பரிகரபூதர் - எம்பெருமானுக்கு தாஸனாய் இருப்பவர்கள்.
37. நிரவதிகபக்தியை - எல்லையற்ற பரிவுடன் கூடிய அன்பை.
38. சக்ஷுர் விஷயமாவதே - கண்ணுக்கு இலக்காவதே!
39. அவாப்தஸமஸ்த காமன் - எல்லா விருப்பங்களும் நிறைவேறப்பெற்றவன்.
40. ஆசாஸிக்கை - வேண்டுகை.
41. அஸங்கதம் - பொருந்தாதது.
42. பகவத் ப்ரஸாத லப்தம் - எம்பெருமானுடைய அருளாலே பெற்றது.
43. ஸங்கதம் - பொருந்தும்
44. தத்ப்ராப்தி - பகவானை அடைதல்
45. திவாராத்ர விபாகமற - இரவுபகல் வேற்றுமையில்லாமல்

46.நிரஸனம் – வெற்றிகொண்டது.
47.தலைநீர்ப்பாட்டிலே – முதல் மடையில் வயல் போலே நெருங்கியிருந்து.
48.ப்ரேமாந்த்யத்தாலே – பரிவினால் உண்டான அறிவுக் கலக்கத்தாலே.
49.ஸுரக்ஷிதம் – நன்கு பாதுகாக்கப்பட்டது.
50.பாஷாணங்கள் – கற்கள்
51.ரக்ஷ்யரக்ஷகபாவம் – ஜீவன் ரக்ஷிக்கப்படுபவன், பரமன் ரக்ஷிப்பவன் என்னும் நிலை
52.த்யாஜ்யம் – கைவிடத்தக்கது
53.வைலக்ஷண்யம் – சிறப்பு.
54.சேஷசேஷிபாவஜ்ஞானம் - ஜீவன் அடிமைப்பட்டவன், பரமன் அடிமைகொள்பவன் என்னும் அறிவு.
55.சைதந்யக்ருத்யம் – அறிவினால் விளைவது.
56.காஷ்ட்டை – எல்லை.
57.பர்யாப்தி – திருப்தி
58.ஆஹூதரானவர்கள் – அழைக்கப்பட்டவர்கள்
59.ஸங்கதராகிறார்கள் – சேர்கிறார்கள்

## திருப்பல்லாண்டு - முதல்பாட்டு

60.காலாதீநமான – காலத்துக்கு வசப்பட்ட
61.இச்செவ்விமாறாதே – இவ்வழகு மாறாமல்
62.அவச்சேதங்களை ஒழிய – கால அளவீடுகளைத்தவிர்த்து
63.பர்யாயம் – ஒரேபொருளையுடையசொல்
64.பெரியஉடையார் – ஜடாயு
65.பஹுவசநம் – பன்மை
67.அஸங்க்யாதத்வம் – எண்ணிக்கையற்றிருக்கை
68.உத்க்ருஷ்டனாயிருப்பான் ஒருவன் – உயர்ந்தவனாயிருக்கும் ஒருவன்
69.அபக்ருஷ்டன் – தாழ்ந்தவன்
70.நிகர்ஷம் – தாழ்வு
71.வைஷம்யம் – வேற்றுமை
72.ஸ்வரூப ப்ரயுக்தம் – ஜீவபரஸ்வரூப இயல்பால் உண்டானது

73.ப்ரவ்ருத்தி நிமித்தபேதம் – தனித்தன்மைகளின்வேறு பாடு
74.விழுக்காட்டில் – விளைவை ஆராயும் போது
75.ஆத்மஸ்பர்சியாய் – ஆத்மாவின்இயல்பைச்சொல்லுவதாய்
76.மேலெழுத்திடுமவன் – இசைவைத்தெரிவிப்பவன்
77.நிவ்ருத்தஸ்வாதந்த்ர்யன் – சுதந்திரத்தன்மை நீங்கப் பெற்றவன்
78.வ்யவஹாரம் – வழக்கு
79.ஸ்வரூபாநுபந்தி – ஸ்வரூபத்தோடு தொடர்பு
80.ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாய் – இயல்பாகவே எல்லாமறிந்தவனாய்
81.புநருக்தி – கூறியது கூறல்
82.ஸர்வஜ்ஞத்வம் – எல்லாமறிந்தவனாயிருக்கை
83.ஆதராதிசயம் – ஆர்வத்தின் மிகுதி
84.த்ருஷார்த்தனானவன் – தாகத்தால் வருந்தியவன்
85.ஸூரியபரிஸ்பந்தாதிகள் – ஸூர்யகிரணங்களின் வெளிப்பாடுகள்
86.அவச்சேத்யம் – அளவிடப்படும் காலம்
87.அவச் சேதகங்கள் – காலத்தை அளவிடுபவை
88.க்ஷணலவாதிகள் – கணம், லவம் முதலான காலப் பகுதிகள்
89.புலிகிடந்த தூற்றுக்கு அஞ்சிக்காவல் தேடுவாரைப்போலே – புலிபதுங்கியிருக்கும் புதருக்கு அதற்குக்கேடுவராமலிருப்பதற்காகக்காவலிடுவாரைப் போலே
90.ராவணாநுஜன் – ராவணனுடைய தம்பி [இங்கு] விபீஷணன்
91.ஹிம்ஸகர் – நலிபவர்
92.அவாந்தரபிதை – வெவ்வேறு கூட்டங்கள்
93.அத்யுஜ்ஜ்வலமாய் – மிகவும் ஒளி வீசுவதாய்
94.குடில ஹ்ருதயர்க்கும் – வஞ்சநெஞ்சினர்க்கும்
95.பரபாகம் – வர்ணச்சேர்த்தியழகு
96.பரிச்சிந்நமான – அளவுபட்ட
97.உத்கர்ஷமுடையாரை – ஏற்றமுடையாரை
98.அபர்யாப்தி – அதிருப்தி

## இரண்டாம் பாட்டு

99. விக்ரஹயோகம் – திருமேனிச்சேர்த்தி
100. குணயோகம் – குணச்சேர்த்தி
101. ஸாத்யம் – ஸாதிக்கப்படுவது
102. ஸாதநாநுஷ்ட்டாநம் – ஸாத$_4$னத்தை அனுஷ்டித்தல்
103. வ்யாவ்ருத்தமான – வேறுபட்ட; சிறந்த
104. மௌக்$_3$த்$_4$யம் – இளம்பருவம்
105. போகஸ்ரோதஸ் – அநுபவத்தின் தொடர்ச்சி
106. மஹிஷ்யந்தரம் – பூமி முதலான மற்ற நாச்சிமார்
107. பரோக்ஷநிர்த்தேசம் – கண்ணெதிரில் இல்லாமலிருப்பதைக் குறிப்பது.

## மூன்றாம் பாட்டு

108. நிரதிசய ஸுகரூபமான – ஒப்பற்ற இன்பமாய் இருப்பதான
109. வ்யதிரிக்த விஷயம் – எம்பெருமானைக்காட்டிலும் வேறுபட்ட விஷயம்
110. அடிமை துராராதம் – அடிமை கொள்பவர்கள் திருப்தி செய்விக்க அரியவர்.
111. துஷ்கரமாகை – அடிமை செய்தற்கு அரிது
112. ஸாதநாந்தரம் – மற்ற ஸாதனங்கள்
113. வாயு பரவசமாய்த்திரிகிற த்ருணம் – காற்றால் அடிக்கப்பட்டுத் திரிகின்ற புல்
114. தேட்டமாயிறே இருப்பது – ஆள் தேட வேண்டியல்லவோ இருக்கிறது
115. இந்த யதிசப்தம் – 'உள்ளீரேல்' என்பதில் உள்ள 'ஏல்' என்ற சொல்
116. அங்குரார்ப்பணம் – விழாவைத் தொடங்கும் சடங்கு– திருமுளை எனப்படும்
117. ஈஶ்வரத்வப் பிடார் – ஈஶ்வரனுடைய முதன்மையைக் காட்டும் தன்மை

## நான்காம் பாட்டு

118. ப்ரத்யாஸந்நர் - அருகிலிருப்பவர்கள்
119. புரஶ்சரணம் - பெறுவதற்குச் செய்ய வேண்டிய சடங்குகள்
120. வைஶ்ரவணன் - குபேரன்
121. பகவத் ப்ரத்யாஸத்தி - எம்பெருமானோடு நெருக்கம்
122. அநுகூல வ்ருத்தி - அநுகூலமான செயல் ;இங்கு, கைங்கர்யம்.

## ஐந்தாம் பாட்டு

123. அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தன் - ஸம்ஸாரத்தின் வாசனை தொடப் பெறாதவன்–இங்கு எம்பெருமான்
124. பராநர்த்தம் - பிறர்க்குத் தீங்கு
125. ந்யஸ்தபரர் - பொறுப்பைஎம்பெருமானிடம் ஒப் படைத்தவர்கள் [சரணாகதியின் ஆறுவகைகளில் ஒன்றான பரந்யா ஸம் செய்தவர்கள்]
126. 'மமேதம்' - இது என்னுடையது என்னும் மமகாரம்
127. அபிஸந்தி - தவறான எண்ணம்
128. விஸ்மரித்து - மறந்து
129. பகவத் ப்ரமேயுக்தர் - பகவானிடம் அன்புடையவர்கள்
130. ஸந்தாநம்போலே - குலம்போலே
131. 'தவேதம்' - இந்த ஆத்மவஸ்து ஸ்வாமியாகிய உன்னுடையது
132. த்விஜந்மா - இருபிறப்பாளர்

## ஆறாம் பாட்டு

133. சமிக்கைக்காக - [பயம்] நீங்குதற்காக
134. அநுபாஷிக்கிறது - திருப்பச்சொல்லுகிறது
135. யோநிஸந்தாநம் - உடல் உறவால் தொடர்புடைய பரம்பரை
136. வித்யாஸந்தாநம் - ஞானத்தால் தொடர்புடைய பரம் பரை
137. விச்சேதம் - விடுபடுதல்
138. யாஜ்ஞிக ஸந்தாநம் - யஜ்ஞம் செய்பவர்கள் பரம்பரை
139. த்ரிபுருஷ விச்சித்தி - மூன்று தலைமுறை யாகம் செய்யா மல் விட்டுப்போதல்
140. அபிசரிப்பர் - தீங்கு இழைக்கும் சடங்கு செய்வர்
141. திவஸம் - தினம்
142. அபதாநம் - சேஷ்டிதம் –இங்கு நரஸிம்ஹ னாக அவதரித்த செயல்
143. அனுக்கம் - குழந்தைகளுக்கு வரும் நோய்.

## ஏழாம் பாட்டு

144. ஸங்கதராகிறார் - கூடுகிறார்
145. த்யாகோபாதாநங்கள் - அவைஷ்ணவர்கள் கைவிடுகையும், வைஷ்ணவர்கள்கைக்கொள்கையும்
146. காளமேக நிபஶ்யமானவடிவு - கார்மேகம் போல் கறுத்த திருமேனி
147. பரபாகம் - வர்ணச் சேர்த்தி
148. இட்டளம் - நெருங்கின இடம்
149. நிஶ்ஶங்கமாக - சந்தேகிப்பதற்கு இடமில்லாமல்
150. பாவ பரீக்ஷை - நினைவை ஆராய்வது [கருத்தை]
151. நிர்ப்பரனாய் - தன்னைக் காத்துக்கொள்ளும் சுமை நீங்கப் பெற்றவனாய்
152. அபதாநம் - முன் நடந்த அவதாரச்செயல்
153. பித்ரு ஹீநை - தந்தையை இழந்தவள்
154. தேவதாந்தரபஜநம் பண்ணுபவர்கள் - மற்றதெய்வங்களிடம் பக்தி செய்பவர்.
155. மச்சம் - (அவர்கள் அடையும் பலத்திற்கு அடையாளம்.
156. மோக்ஷாந்தரம் - கைவல்யம்

## எட்டாம் பாட்டு

157. நிபந்தநம் - காரணம்
158. க்ஷுத்ரதை - தாழ்வு
159. பக்த்யுபஹ்ருதமாயிருக்கை - அன்புடன் அளிக்கப்பட்டது
160. ஜ்ஞாநாதிகன் - அறிவில் மிக்கவன்
161. வ்யுத்க்ரமேண - எதிர் வரிசையில்
162. ஶுசித்வம் - பரிசுத்தத்தன்மை
163. அபிஜநவித்யாவ்ருத்தம் - நற்குடிப்பிறப்பு கல்வி ஒழுக்கம்
164. அங்குளீயகாத்யாபரணங்கள் - மோதிரம் முதலான அணிகலன்கள்
165. குத்ஸித்து - நிந்தித்து
166. குப்ஜை - (கிருஷ்ணாவதாரத்தில்) கூனி
167. பரணியோடே சாந்து - சந்தனம் வைக்கும் பாத்திரத்திலிருக்கும் சந்தனம்.
168. ஆக்கனாய் இருப்பது - செயற்கை மணமுடையது
169. மேதக வஸ்து - கஸ்தூரிமுதலானநறுமணப்பொருள்
170. ஸம்ஸ்க்ருதமாக்குதல் - சிறப்புடையதாக்குதல்
171. அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தர் - ஸம்சாரத்தின் வாஸனையும் தொடப் பெறாதவர்

172. வஸ்த்வந்தரமாக்க சக்தன் - ஒரு பொருளை மற்றொரு பொருளாக்க வல்லவன்

## ஒன்பதாம் பாட்டு

173. ஸுஸங்கதமாக - நன்கு பொருந்தும்படி
174. முசிக்கை - கசங்குகை
175. மங்களாவஹம் - மங்களத்தை அளிப்பது
176. ப்ரார்த்தநீயம் - வேண்டத்தக்கது
177. போஜ்யம் - உண்ணத்தகுந்தது
178. விதிப் ப்ரேரிதராய் - சாத்திரத்தின் கட்டளையால் தூண்டப்பட்டவராய்
179. தத்ஸித்யர்த்தமாக - அதுகிடைப்பதற்காக
180. அதிக்ருதாதிகாரம் - சிலருக்கே கிடைக்கக் கூடியது
181. உச்சிஷ்டம் - ஸ்வாமி அனுபவித்துக் கொடுத்த உணவு ஆடை மலர் முதலானவை
182. ஆகாங்க்ஷித்து - எதிர்பார்த்து
183. ஸந்தேசகாரிகளாய் - ஆணையை நிறைவேற்றுபவர்களாய்

## பத்தாம் பாட்டு

184. பகவத் ப்ரபாவம் - எம்பொருமானுடைய பெருமை
185. ஸங்கதராகிறார் - சேர்கிறார்
186. யாவதாத்மபாவி - ஆத்மா உள்ள வரை இருப்பது; நித்யமானது
187. தஜ்ஜந்மதிவஸம் - அவதாரம் நிகழ்ந்த நாள்
188. நிருபாதிகசேஷி - இயல்பான ஸ்வாமி
189. ஆத்மயாதாத்ம்ய - ஆத்மாவின் உண்மை இயல்பு
190. அலப்யலாபம் - பெறாப்பேறு
191. பஹுஜல்பம் - கண்டதைப் பிதற்றுதால்

## பதினோராம் பாட்டு

192. நைஸர்க்கிகமான ஞானம் - இயல்பான அறிவு
193. நிரூபகபூதை - எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை நிரூபித்துத்தருமவள்
194. வ்யபிசாரம் - தகாத உடலுறவு

## பனிரெண்டாம் பாட்டு

195. பரமே ஸ்தாநேஸ்திதன் - மேல்லான இருப்பிடத்தில் இருப்பவன்
196. நித்ய விபூதியோகம் - பரமபதத்தோடு சேர்த்தி
197. 'தவேதம்' - இந்த ஆத்மவஸ்து உன்னுடையது

திருப்பல்லாண்டு : அருஞ்சொல் விளக்கம் முடிவுற்றது.

மிது2நே ஸ்வாதிஜம் விஷ்ணோ ரதா2ம்ஶம் த4ந்விந :புரே ।
ப்ரபத்3யே ஶ்வஶுரம் விஷ்ணோ : விஷ்ணுசித்தம் புரஶ்ஶிக2ம் ॥

(ஆனிமாதம் ஸ்வாதீ நக்ஷத்திரத்தில், ஸ்ரீவில்லிபுத்தூரில், விஷ்ணுவின் வாஹனமான க3ருடனின் அம்ஶமாய், பூர்வஶிக2, ஸ்ரீவைஷ்ணவ ப்3ராஹ்மண குலத்தில் அவதரித்தவராய், ரங்க3 நாத2னுக்கு மாமனாரான விஷ்ணுசித்தரென்னும் பெரியாழ்வாரை ஶரணடைகிறேன்.)

தாதா3த்விக ப்ரதிப2லத்3ப4க3 வத்பரத்வம்
விஸ்தீர்ய பாண்ட்3யகத2கேந்த்3ரஜயீ க3ஜேந ।
க3ச்ச2ந் ப்ரியாது3பக3தே க3ருடே3ந நாதே2
ப்ரேம்ணாSSஶிஷம் ரசயதிஸ்ம நமோSஸ்து தஸ்மை ॥

(அப்போதே (பரமபுருஷனுடைய நிர்ஹேதுககிருபையால்) நெஞ்சில் தோன்றிய ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்துவத்தை விரியவுரைத்து வாத3ம் செய்து, பாண்டிய தே3ஶத்தில் கூடிய வாதம் வல்லவர்களை வெற்றி கொண்டவராய், யானை மேலேறி ஊர்வலம் வந்த எந்தப் பெரியாழ்வார், (அப்போது) உகந்து க3ருட3ன் மேலேறி ஸேவை ஸாதித்த ஸ்ரீமந்நாராயணன் விஷயத்தில் பொங்கும் பரிவாலே பல்லாண்டு பாடினாரோ அவருக்கு நமஸ்காரம்).

தத்வாப்3த3ாபக3மே கலேளயுக3வரே ஸம்வத்ஸரே க்ரோத4நே
சண்ட3ாம்ஶௌள் மிது2நங்க3 தேSஹ்நி நவமே பக்ஷே வளர்க்ஷேSபி ச ।
ஸ்வாத்யாம் ப4ாஸ்கரவாஸரே ஶுப4தித2ாவேகாத3ஶீநாமநி
ஸ்ரீமாநாவிரபூ4த3சிந்த்யமஹிமா ஸ்ரீவிஷ்ணுசித்தோSநக4: ॥

((பொங்கும் பரிவாகிற) செல்வத்தையுடையவராய், எவராலும் அளவிடமுடியாத பெருமையையுடையவராய், குற்றமற்றவரான பெரியாழ்வார் யுக3ங்களினுள் (அல்பஶ்ரமத்திற்கு அதி4க ப2லனைத்தரும்) சிறப்புடைய கலியுக3த்தில் 'தத்வ' என்னும் எழுத்துக்களினால் (கடபாயாதி3ஸங்க்2யைப்படி) 46 வருடங்கள் கடந்தபின் 'க்ரோத4ந' என்கிற வருடத்தில், சூரியன் மிதுன ராசியை அடையும் ஆனிமாதத்தில் ஒன்பதாம் தேதியில் சுக்ல பக்ஷ ஏகாத3ஶியில் ஞாயிற்றுக்கிழமையில் ஸ்வாதீநக்ஷத்திரத்தில் அவதரித்தருளினார்.)